www.padippakam.com

புதிய

# கோடாங்கி

ஆகஸ்ட்
2004
ரூ.15





# DALITS UNDER ATTACK

படிப்பகம்

www.padippakam.com

# கதை சொல்லும் காளப்பட்டி...

■ விழி.பா. இதயவேந்தன்

கோவை - காளப்பட்டி
சாகடிக்கப்பட்ட சமூக நீதியோடு
மயானம் போல்
மற்றொருக் காட்சி.
தேர்தல் முடிந்து
பதவிப்போட்டி நடக்க
வாக்குப்போட மறுத்ததால்
வந்தது இங்கு விபரீதம்.
தேனாய்க் குழைந்து பேசியதெல்லாம்
தேர்தலுக்கப்புறம் வன்முறையாச்சு.

யாரும் கேட்க ஆளின்றி
பாரும் இங்கு அழுகையிலே
ஊரும் உலகமும் உறங்கிப்போக
சேரிச்சனங்கள் குமுறுதிங்கே.

வக்கிரப்புத்திக்காரனுக்கு
வழக்கம்போல்
மனித உயிர்மேல் விளையாட்டு.

நாற்காலி ஆசைக்காய்
நத்திப் பிழைக்க
பதவி மோகத்தில்
புளகாங்கிதம் கொள்ள
ஏழை அருந்ததி வீடுகள்
கொள்ளை, தீ வைப்பு...
இன்னும் இன்னும்.

கொழுத்துப்போன ஆதிக்கத்தில்
மலிவாகிப்போனது
மனித உயிர்கள்.

வெண்மணியும், விழுப்புரமும்
வெந்து மடிந்த கையோடு
மீண்டும் புதுப்பிக்கிறது
காளப்பட்டியில் சாதிவெறி.

வெட்கங்கெட்ட சாதிவெறியன்
விட்டு வைக்கவில்லை எதனையும்
மனித உயிர்கள் மட்டுமின்றி
ஆடு, மாடுகள் கூட
இல்லை பாக்கி.

அருந்ததியன் என்ன
இன்னும்
அறியாதவனா என்ன?
கேள்விகள் கேட்கும்
அருந்ததி இனம்.

எத்தனை நாள் பொறுப்பான்
திமிர் போக்குத் தொடர
இன்னும்
எத்தனை நாள்தான் அனுமதிப்பான்
வன்கொடுமை நிகழ.

மேலே செய்யும் ஆதிக்கத்தை
எதிர்த்துக் கேட்கத் துணிவற்று
கீழே உதைக்குது, எரிக்குது...
சூத்திரக்கூட்டம்
காளப்பட்டியில்.

வேண்டாப் பெண்டாட்டியின்
கைகால் பட்டதுபோல்
வேண்டுமென்றே கால்பட்டதாய்
விபரீதமாச்சு அங்கு.

சேரிச்சனங்கள் ஒன்றிரண்டு - நல்ல
சேலை, சுடிதார்... உடுத்திப்
படிக்கப் போகையில்
கேலிச்சிரிப்பால் இழிவாக்கி
கேளிக்கைச் செய்யும்
சதி வெறிக்கூட்டம்.

வாடிக்கை இதுதானென
வேடிக்கைப் பார்க்கும்
வேறொருக் கூட்டம்
வலம் வருதல் கண்டீரோ.
பாசிசத்தின் விழுதுகள்
ஊன்றும் முன்
வேரொடு வெட்டிச் சாய்க்கும்
வீரம் செறிந்த
அருந்ததி இனம்.

நேற்றயத் தோல்விகள்
இன்றைய வெற்றிகள்
அறியாமல் போகுமா
அருந்ததியர் வரலாறு?

கைகட்டி நின்றதும்
வேடிக்கைப் பார்த்ததும்
காலங்கள் முடிந்தது.

விடுதலைப்போரை
முன்னின்று நகர்த்த
இனி
கலங்கி நிற்கப்போவதில்லை
காளப்பட்டி.

கண்ணெதிரேத் திரண்டு
வீறுகொண்டு எழ
கூடி நிற்கிறது
தலித் இனமாய்.

செந்நீர் சிந்திய
காளப்பட்டிகள்
கண்ணீரைச் சுமப்பது கிடையாது.

வரலாற்றுச் சுவடிகளில்
ஆழப் பதிந்து
விடியல் என்பதாய்
முன் நிற்கும்!

படிப்பகம்

www.padippakam.com

புதிய
கோடாங்கி

மலர் 4 - இதழ் 2
ஆகஸ்ட் - 2004

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்.-ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் US $ 2
ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204
Kodangi@hotmail.com

## தலையங்கம்

தங்கள் தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு இணை உலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இணை உலகங்களுக்கு ஆதரவாகவும் முரணாகவும் அவ்வப்போதைய நிகழ்வுகளை அடிப்படை அடிப்படையாகக் கொண்டு அவை சேர்வதும் பிரிவதும் தொடராக நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு உலகமும் இன்னொன்றை விழுங்கி கபளீகரம் செய்யும் பேரா வலுடன் விசையுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

பார்ப்பனிய இயக்கங்கள் (உலகங்கள்) பத்திரிக்கை, மதம், அரசு இவற்றில் ஊடுருவி இன்னமும் மிகப்பெரிய சக்தியாக விளங்கி வருகின்றன.

பார்ப்பனர் தவிர்த்த திராவிட பார்ப்பனிய இயக்கங்களும் இன்று பத்திரிக்கை,தொலைக்காட்சி, சினிமா ஆகிய வெகுஜன ஊடகங்களில் ஆளுமையுடன் விளங்கி, அரசு-தனியார் துறைகளைக் கைப்பற்றி மொழி, திராவிடம் என்ற பெயரில் எதிர் சக்தியாக விளங்குகின்றன.

இப்பெரிய இயக்கங்களின் முக்கிய நோக்கம் அதிகாரத்தைத் தங்களுக்குள்ளாகப் பங்கீடு செய்து கொள்வதே அன்றி, உலகத்தை அனைவருக்குமான மகிழ்வுக்குரிய வாழ்விடமாக மாற்றியமைப்பதல்ல.

வர்க்க முரண்களை மோதவிட்டு புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று சூளுரைத்த இடதுசாரி இயக்கங்களும் பார்ப்பனியத்தை உள்வாங்கி தேர்தல் அரசியலில் தங்களைக் கரைத்துக் கொண்டுள்ளன.

இந்நிலையில் ஒடுக்கப்பட்டோர் இயக்கங்கள் ஸ்தல அளவிலான அதிகாரத்தைக் கைக்கொள்ள சிறுசிறு அளவில் மேற்கண்ட பெரிய இயக்கங்களுடன் சமரசம் செய்துகொண்டும், எதிர்ப்புகளை சுருக்கிக்கொண்டும் செயல்பட்டு வருகின்றன. ஒடுக்கப்பட்டோர் இயக்கம் இவ்வுலகை மாற்றியமைக்கும் கருத்தியல் என்றளவில் சக்தி வாய்ந்த இயக்கம் எனினும், எண்ணிக்கையிலும், எதிர்ப்பு அரசியலிலும் மிகச் சுருங்கிய அளவிலேயே செயல்பட்டு வருகின்றனர்.

இந்த நால்வகை இயக்கங்களுமே அதனளவில் பிளவுண்டிருப்பினும், அதிகாரப் பங்கீடு எனும்போது முதல் மூன்றும் பெருவாரியான ஒடுக்கப்பட்டோருக்கு எதிராக அணி சேர்ந்து கொள்கின்றன. வெகுஜன ஊடகங்கள் இவ்வகை அணிசேர்தலுக்கு சாதகமாக பணியாற்றி வருகின்றன.

இந்நிலையில் ஒடுக்கப்பட்டோர் செய்ய வேண்டியதென்ன எனும் கேள்வி எழுகிறது.

- முரண் கருத்துக்கள் அதிக அளவில் மோதிக்கொள்ளும் தளங்களை முனைந்து உருவாக்க வேண்டியுள்ளது.
- மனக்கசப்பு உண்டாகும் என்றாலும் வலுவுடன் நமது வாதத்தை முன்வைக்க வேண்டியுள்ளது. சட்டமன்றமாகட்டும், பாராளுமன்றமாகட்டும் ஒடுக்கப்பட்டோர் பிரதிநிதிகள் துணிச்சலுடன் போராட வேண்டும். ஆனால் இம்மன்றங்கள் சுயநலம் காரணமாக இவ்வாறாக பயன்படுத்தப் படவில்லை.
- அடுத்து நமது பாடத்திட்டங்கள் : ஒடுக்கப்பட்டோர் வரலாறு, அம்பேத்கர் சிந்தனைகள், தற்போதைய தலித்துகள் நிலை பள்ளிகளில் பாடத் திட்டமாக வைத்திருக்கப் பெறுதல் வேண்டும். ஆனால் இன்று ஒரு சில பல்கலைக்கழகங்களில் போக்கிடமற்ற ஆய்வு மாணவர்களின் விருப்பத் தேர்வாகவே இருந்து வருகின்றன. இந்நிலை மாற, இதைக் கட்டாயப் பாடமாக்க ஒடுக்கப்பட்டோர் பெருமளவில் போராட்டம் நடத்த வேண்டும்.
- ஒடுக்கப்பட்டோர் வாழ்நிலையில் முன்னேற்றம் : துரதிருஷ்டவசமாக ஒடுக்கப்பட்டோர் இதை வெறும் இடஒதுக்கீடு அளவிலேயே சுருக்கி விட்டனர். அரசுத் துறையிலேயே இட ஒதுக்கீடு சரியான அளவில்

www.padippakam.com

அமல்படுத்தப்படாத நிலையில் தனியார் துறையில் இடஒதுக்கீட்டை கேட்டு நிற்கின்றனர். பஞ்சமி நிலப் போராட்டம், நிலப்பங்கீடு, மாநிலங்களின் பட்ஜெட்டில் ஒடுக்கப்பட்டோர் சதவிகிதத்திற்கொப்ப நிதிஒதுக்கீடு, கிராம அளவில் ஒவ்வொரு தலித் கிராமமும் பயன்பெறும் வகையில் தனிப் பஞ்சாயத்து இவற்றையே முதன்மைப்படுத்தவேண்டும். இவற்றினடிப்படையில் பெருவாரியான மக்களை ஒன்று திரட்டும் வகையில் கருத்துப்பரவல் பணிகளை மேற் கொள்ள வேண்டியுள்ளது.

- ஒடுக்கப்பட்டோருக்கான நாளிதழையும், தொலைக் காட்சியையும் உருவாக்கி கருத்து முரண்களைக் கூர்மைப் படுத்தும் செயல்பாட்டில் இறங்க வேண்டும்.
- ஸ்தல வேறுபாடுகளை உள்ளடக்கிய ஒட்டுமொத்த தலித் அணி உருவாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இவர்களுக்கிடையேயான ஒற்றுமை அரங்குகளை உருவாக்கி விவாதங்களை அனுமதிக்க வேண்டும்.
- படித்தவர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து தொடர்ந்து இடஒதுக்கீடு ஒன்றையே முன்னிறுத்துவது பெருவாரியான மக்களுக்கு பயனளிக்காது என்பதினால் கூலி விவசாயிகள், சிறு உழவர்கள் இவர்கள் பிரச்சினைகளை முதன்மைப்படுத்த வேண்டும். இவர்களுக்கான அரசு சட்டங்களை அமல்படுத்துவதில் மாற்றுப் பொருளாதார வழிகளை மேற்கொள்வதில் திட்டமிடுதல் அவசியமாகும்.

---

■ தேவதேவன்

# குறைப் பிறவியினரும் கோயில்களும்

குறைப் பிறவியும் குறைப் பிறவியும்
கூடிப் பிறந்தது
குறைவிலாததோர் மாணிக்கமாய்
உதித்ததெப்படி?

தாயிடமிருந்து அம் மாமணிச் செல்வத்தை
திருடிக் கொண்டு சென்று
அதை ஒரு குறைப் பிறவியாகவே
சிதைத்துக் கொண்டு வந்து நிற்பது யார்?
ஏன்?

அதிர்ந்து நிற்கவைத்துவிடும்
மானுடத் துயர் அறியாத நிலையில்
சுகம் தேடிச் சுகம் தேடிச்
சதா அலையும் காமுகர்களாகி விடுவது தவிர
வேறு வழியேது? சுகம் நிலைக்க
இயற்கை மீதும் எளியவர் மீதும்
குதிரை ஏறிக் கொடிகட்டிப் பறக்கும்
ஈனப் பிறவிகளாவது தவிர
வேறு வழியேது?

தீயினிற் புழுவாய் வதங்கும்
இக்குறைப் பிறவிகளிடமும் தோன்றும்
இயற்கையுந்தல்கள் மற்றும்
வாழ்வினிமைகள் காணுங்கால்
இளக்காரமின்றிக்
கசியும் மனமெங்கே?

பரிவும் ஞானமும் கொண்ட பாவனையில்
சில்லறைகளை எறிந்துகொண்டு
பரிதாபமாய் வீற்றிருக்கும்
இக்கோயில்களைக் கட்டியதும்
எத்தகைய குறைப்பிறவியினர் கை?

துயரழிக்கும்
மானுடப் பொறுப்பு தீண்டா நிலையில்
இக்கோயில்கள் கொண்டாட்டங்கள் திருவிழாக்கள்
மாளாச் சடங்குகள் கலைகள் மற்றும்
இலக்கியங்கள் அனைத்துமே
ஈனச் சுகம் தரும்
போகப் பொழுது போக்குகளன்றி வேறென்ன?

பெரிய பெரிய கோயில் ஸ்தலங்களின்
பாதை படிக்கட்டுகள் எங்கும்
இக்குறைப் பிறவியினர்
கூட்டம் கூட்டமாய் வந்து
குழுமி நிற்பதன் பொருள்தான் என்ன?

www.padippakam.com

# உள்ளே...

கேலிக் கூத்தாகும் மனித உரிமைகள் ........ ஆ. ஏனோக் 4
உடல்(ல்) - கவிதை ........ ஜனா சுகிர்தன் 7
திராவிட மாயை ........ கோமதி நாயகம் 8
தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு ........ நிகழ் அய்க்கண் 14
என் சாவும் தனியார் மயமா - கவிதை ........ பெ. தமிழினியன் 16
வெண்மணி குடந்தை - கவிதை ........ ஆலயம் 16
அப்னா பஞ்சாயத்து - ஆய்வரங்க நிகழ்வுப் பதிவு ........ ப்ரியங்கா முத்து 17
சாம்பல் பாட்டு - கவிதை ........ கார்க்கிராசன் 19
அப்னா பஞ்சாயத்து ........ இரா. கிருத்துதாசு காந்தி 20
கனவுகளைக் கடந்தவர்கள் - கவிதை ........ பாரதி நிவேதன் 22
தகர்வுறும் வாழ்வு ........ கோபு 23
சித்திரமும் கைப்பழக்கம் ........ முனிமா 26
நீ - கவிதை ........ வி. சுந்தரலிங்கம் 28
வேய்ந்திருக்கும் கூரைகளும் வெந்து மடிந்தோர் குரல்களும் ........ கே.ஏ. குணசேகரன் 29
விண்ணிலிருந்து விரைந்து வா - கவிதை ........ செல்வகாந்தன் 30
கேள்வி-பதில் ........ முனிமா 34
தமிழ் தேசியமும் தலித் தேசியமும் ........ வி. ஏழுமலை 37
சென்னை நகர அரவாணிகள் ........ வை. ராமகிருஷ்ணன் 39
நானும்தான் பார்த்தேன் வேலை ........ செந்தில் 42
இரத்த உறவுகள் - கவிதை ........ புதிய மாதவி 43
அம்மாசி - சிறுகதை ........ வலம்புரி ஜான் 44
அநாதி காலம் - நூல் விமர்சனம் ........ பொன். குமார் 46
உடல்மொழி - தொடர் ........ சிவகாமி 48
எருது - கவிதை ........ தேவதேவன் 50
பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும் - தொடர் ........ பு. ஜார்ஜ் 51
மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் ........ குடியரசன் 56
தலித் தேசியம் - தொடர் ........ கௌதம சன்னா 61
முகத்தில் முகம் ........ 63

படிப்பகம்

www.padippakam.com

# கேலிக்கூத்தாகும் மனித உரிமைகள்

"உங்களை அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை. யாரையும் அடிமையாக நடத்த உங்களுக்கும் உரிமை இல்லை."

- உலகளாவிய மனித உரிமை பிரகடனம், 1948-பிரிவு : 4

■ ஆ. ஏனோக்

மனிதர்கள் பிறப்பிலேயே சமமான கௌரவம் மற்றும் உரிமைகள் உடையவர்கள். மனிதனாகப் பிறந்த ஒரே காரணத்தால் மனிதருக்கு மறுவிக்க வியலாத பிரிக்க முடியாத சில இயல்பான உரிமைகள் கிடைக்கின்றன. இவை மனித உரிமைகள் என்ற பெயரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமுதாயமும் தமக்குரிய சட்டமியற்றும் வழிமுறைக்கேற்ப இந்த உரிமைகளுக்கு சட்ட வடிவம் கொடுக்கிறது. தேசிய அளவிலும் உலகளவிலும் இது நடைபெறுகிறது. இந்த சட்டங்களால் ஆளப்படுபவர்கள் இவற்றுக்கு சம்மதம் அளிப்பதுதான் இந்த சட்டங்களுக்கு அடிப்படை ஆகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, அதாவது 1920 மற்றும் 1930-களில் நிறுவப்பட்ட சர்வாதிகார அரசுகள் தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளிலேயே மோசமான முறைகளில் மனித உரிமைகளை மீறியுள்ளன. இரண்டாவது உலகப் போரின் போது மனித உயிர் மற்றும் கௌரவம் அதிக அளவில் பாதிக்கப்பட்டது. மேலும் இன மத அடிப் படையில் சில சமுதாயங்களையே அழித்தொழிக்கும் முயற்சிகளும் தோன்றின. இதன் மூலம் உலக அமைதிக்கும் வளர்ச்சிக்கும் மனித உரிமைகளே அடிப்படை என்ற உணர்விற்கு சட்ட வடிவம் கொடுத்து அவற்றை பாதுகாப்பது அவசியம் என்ற கருத்தும் உருவானது.

இதன் அடிப்படையில் 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் நாள் ஐக்கிய நாடுகள் பொதுக்குழுவால் "உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம்" (Universal Declaration of Human Rights) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன் முக்கிய அம்சம் என்னவென்றால் எல்லா மக்களும், எல்லா நாடுகளும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான மனித உரிமை தரத்தை இப்பிரகடனம் நிர்ணயிக்கிறது.

உலக அளவில் மனித உரிமைகள் - ஓர் அலசல்

மனித உரிமை பிரகடனத்தை உருவாக்க அமைக்கப்பட்ட அக்குழுவின் தலைவராக திருமதி. எலினார் ரூஸ்வல்ட் நியமிக்கப்பட்டார். இவர் மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு அமெரிக்கரான ரெனே காசின், சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். இவர் ஒட்டுமொத்த மனித உரிமை பிரகடனத்தை வடிவமைத்தவர். இவரே உண்மையான மனித உரிமையின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

இத்தனை சிரத்தையோடு மனித உரிமை பிரகடனத்தை அமெரிக்கா ஏன் தயாரிக்க வேண்டும். அமெரிக்க அறிஞர் திரு. ஜான் லோக்கே "ஆதியில் உலகம் முழுமையும் அமெரிக்காவாக இருந்தது" என்று கிண்டலாக கூறியுள்ளார்.

"போர் - அமெரிக்காவின் வர்த்தகம்" (America's Business) என்று டெக்ஸாஸ் பல்கலைக் கழக தத்துவப் பேராசிரியர் ராபர்ட் நெல்சன் வரையறுத்துள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் 1931-இல் வர்த்தகம்தான் அமெரிக்காவின் பிரதான தொழில் - போரைக் கூட நமக்கு நல்ல தொழிலாக கொண்டுள்ளோம் என்று சொன்னார்.

1898-இல் ஜனாதிபதி வில்லியம் மெகின்லே, "இறைவன் நம்மை உலக நாகரீகத்தின் அறங்காவலர் (டிரஸ்டி) ஆக்கியுள்ளார்" என்று பிரகடனப்படுத்தினார்.

விர்ஜினியாவின் ஆரம்பகட்ட வரலாற்றை எழுதிய எட்மண்ட் மார்கன் அமெரிக்க அடிமை, அமெரிக்க சுதந்திரம் என்ற தனது நூலில் எழுதியுள்ளது என்ன வெனில், "ஆங்கிலேயர்கள் சமாதான விரும்பிகள் என்று இந்தியர்களை நம்ப வைப்பார்கள். பிறகு அவர்கள் உழுது, விதைத்து பயிர்களை கண்காணித்த பிறகு அறுவடைக்குமுன் அவர்களைத் தாக்கிக் கொன்று குவித்து அறுவடைப் பயிர்களை தீ வைத்து எரித்து அழித்துவிட்டு அந்த நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்கின்ற வழிமுறையை கையாண்டவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

சமாதான விரும்பிகள் என்று கூறிக்கொண்டு அவர்கள் ஐக்கிய நாடுகளின் பொதுக் குழுவால் "உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம்" ஏற்படுத்தி விட்டு ஈராக் விடுதலை நடவடிக்கை என்று பெயரிட்டு 2003 மார்ச் 20-ஆம் நாள் ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. இதற்கு ஒது புது விளக்கமும் அமெரிக்காவால் தரப்பட்டது. அதாவது "ஈராக் சர்வாதிகாரி சதாம் உசேனால் அமெரிக்காவிற்கு ஆபத்து, இந்த ஆபத்து வெடிப்பதற்கு முன்பே இதைத் தடுத்திட முன்கூட்டி தாக்குதல் நடத்தி ஈராக் மக்களுக்கு விடுதலையும் உலகிற்கு பாதுகாப்பும் அளிக்க இந்தப் படையெடுப்பு அவசியம்" என்று அமெரிக்கா பிரகடனப்படுத்தியது.

இது சர்வதேச அரசியலிலும் மனித உரிமையிலும் ஒரு புதிய கோட்பாட்டையே உருவாக்கிவிட்டது.

பிறரால் நமக்கு அளிக்கப்படும் உரிமை என்பது நம் உரிமை ஆகாது. அது பிறருடைய உரிமையே யாகும். அந்த உரிமையை அவர்கள் எப்போது வேண்டு மானாலும் திரும்ப பறித்துக்கொள்ளலாம். 1948 டிசம்பர் 10-இல் அமெரிக்காவால் ஐக்கிய நாடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பின நாடுகளின் உரிமைகள் ஆகிவிட முடியாது. உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தில் பரிந்துரைத் துள்ள உரிமைகளை அமெரிக்கா தேவையானபோது திரும்பப் பறித்துக்கொள்கின்ற இத்தகைய செயல்பாடு களே இன்று ஈராக்கிலும், ஆப்கானிலும் நடைபெறு கின்றன.

உலக நாடுகளின் அமைதியை கருத்தில் கொண்டு ஏற்படுத்தப்பட்ட நாடுகளுக்கு இடையேயான பிரச் சினைகளுக்கு இறுதி முடிவெடுக்கின்ற விட்டோ (VETO) அமைப்பின் நிரந்தர உறுப்பினர் நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா, சைனா மனித உரிமை மீறல்களை தங்களது நாடுகளில் மட்டுமின்றி பிற நாடுகளின் மீது படையெடுத்தும் இனப் படுகொலையை நடத்தி வருகின்றன.

ஐக்கிய நாடுகள் பேரவை டிசம்பர் 1948-இல் "இனப்படுகொலைத் தடுப்பு மற்றும் தண்டிப்பு" உடன்படிக்கையை நிறைவேற்றியது. இது 1951-இல் நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்படிக்கையில் இனப்படுகொலை என்பது ஒரு தேசிய இன இல்லது சமயம் சார்ந்த மக்கள் தொகையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செயல்படுவது என்று கூறப்படுகிறது. சர்வதேசச் சட்டப்படி இனப்படுகொலை போரின்போது நிகழ்ந் தால்கூட மனித இனத்துக்கு எதிரான குற்றமாகும்.

இனப்படுகொலை புரிந்தவர்மீது, இந்தக் குற்றம் எந்த நாட்டில் நிகழ்ந்ததோ அந்த நாட்டு நீதிமன்றத்தில் உடன்படிக்கையின் பிரிவு 6-இன் கீழ் வழக்கு நடத்த லாம் அல்லது சம்பந்தப்பட்ட நாடுகளின் ஒப்புதலோடு பன்னாட்டு நீதிபதிகளின் குழுவும் இவர்மீது வழக்கு தொடரலாம். இனப்படுகொலை குறித்து தொடரப் படும் மனுக்களை அல்லது நிகழ்வுகளை கண்காணிக்க

**அடிப்படையில் நாட்டின் பண்பாடு, நாகரீகம், சமயம் மற்றும் தத்துவப் பாரம்பரியங்கள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு ஒவ்வொரு சமுதாயமும் தமக்குரிய சட்டமியற்றும் வழிமுறைக்கேற்ப அந்த நாட்டு மக்களின் உரிமைகளுக்கு சட்ட வடிவம் கொடுக்கிறது**

இன அடிப்படையிலான ஓரவஞ்சனை ஒழிப்புக்குழு என்று 18 நடுநிலை நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட அரசுகள் உடன்படிக்கையைப் பின்பற்றுகின்றனவா என்று மேற்பார்வை செய்கிறது.

இத்தகைய உடன்படிக்கைகள், கண்காணிப்புக் குழுக்கள் ஆகியன செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் விட்டோ (VETO) அமைப்பில் உள்ள நாடுகளும் ஐ.நா. உறுப்பின நாடுகளும் இனம், சமயம் சார்ந்த படு கொலைகளை உலகறிய நடத்தும்போது மனித உரிமை என்பது வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளை தன் கட்டுக்குள் வைத்திருக்க ஒரு ஆயுதமாக பயன் படுத்துகிறது என்பது தெளிவாகிறது. வளர்ந்த நாடுகள் மனித உரிமையை மீறும்போது வெளிப்படையாக எதிர்த்துக் குரல் கொடுக்க எந்த நாட்டு அரசும் முன் வருவதில்லை.

தேசிய அளவில் மனித உரிமைகள் -
ஓர் மாறுபட்ட பார்வை

இந்தியா போன்ற வளரும் நாடுகள், வளர்ந்த நாடுகளிடம் இருந்து பொருளாதார உதவிகள் பெறு வதற்காக போலித் தத்துவங்கள் பேசி, வளர்ந்த நாடு களின் அத்துமீறிய செயல்களை நியாயப்படுத்து கின்றன. இந்திய அரசு போலித் தத்துவங்கள் பேசி மனிதநேயமற்ற செயல்பாடுகளுக்கு இசைந்து போவ தோடு நின்று விடாமல் ஒருபடி மேலே சென்று வளர்ந்த நாடுகளிடம் விசுவாசத்தை நிரூபிக்க "பயங்கர வாத தடுப்புச் சட்டம் பொடா - 2002" என்கின்ற மக்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டத்தை நிறை வேற்றியுள்ளது. பொடா சட்டத்தை குறித்து இந்திய சமூக நிறுவனத்தில் மார்ச் 13, 14 - 2004இல் "பொடா வின் மீதான மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணை" நடைபெற்றது. இத்தீர்ப்பாயத்தின் நடுவர்களில் ஒருவ ராக பி.ஜே.பி. அரசின் முன்னாள் சட்ட அமைச்சரும் புகழ்பெற்ற வழக்கறிஞருமான திரு. ராம்ஜெத்மலானி பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குமூலங்களை கேட்டு மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக பேசும் போது "பொடா சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு நான் முக்கிய காரணமாக இருந்தேன். காங்கிரஸ் கட்சி கொண்டு வந்த தடா சட்டத்தை எதிர்த்தவன் நான். செப்டம்பர் 11-இல் அமெரிக்காவில் நடந்த பயங்கர வாதத் தாக்குதலைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விடுத்த வேண்டுகோளை ஏற்று பொடா



படிப்பகம்

www.padippakam.com

சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டம் மிகவும் மோசமாகப் பயன்பட்டுள்ளதை இங்கு நடைபெற்ற விசாரணையில் உணர்ந்தேன். இந்த சட்டத்தைக் கொண்டுவரக் காரணமானவன் என்ற முறையில் நான் வருந்துகிறேன், மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன், பொடா சட்டம் முழுமையாக துடைத்தெறியப்பட்டு சட்டப் புத்தகத்திலிருந்து தூக்கி வீசப்பட வேண்டும்" என்று கூறினார்.

அமெரிக்க அரசின் மறைமுக ஆளுகைக்குட்பட்ட ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் இந்திய நாட்டில் சட்டம் கொண்டுவர தீர்மானிக்கிறது. உலக அமைதியையும், பாதுகாப்பையும் உள்ளடக்கியதே மனித உரிமை கோட்பாடாகும். இதனை நிலைநிறுத்த உள்நாட்டு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் உள்நாட்டு விவகாரங்களில் பிறநாடுகள் குறுக்கிடாமை, தலையிடாமை போன்ற கருத்துக்கள் ஆக்கப்பூர்வமாகப் பொருள் கொள்ளப்படுகின்றன. ஆனால் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களாகிய சட்டம் இயற்றும் உரிமையை அமெரிக்காவின் மறைமுக ஆளுகைக்குட்பட்ட ஐ.நா. தலையிட்டு முடிவெடுக்கிறது. அரசியல் மாற்றம் ஏற்பட்டவுடன் பொடா சட்டம் நீக்கப்பட்டுவிட்டது. எனவே இது நாட்டை காக்கின்ற சட்டம் இல்லை. வளர்ந்த நாடுகளின் உறவினை கட்டிக்காத்த சட்டம் என்பது விளங்குகிறது.

அடிப்படையில் நாட்டின் பண்பாடு, நாகரீகம், சமயம் மற்றும் தத்துவப் பாரம்பரியங்கள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு ஒவ்வொரு சமுதாயமும் தமக்குரிய சட்டமியற்றும் வழிமுறைக்கேற்ப அந்த நாட்டு மக்களின் உரிமைகளுக்கு சட்ட வடிவம் கொடுக்கிறது. இத்தகைய கருத்துக்களை உள்வாங்காமல் கொண்டுவரப்பட்ட பொடா சட்டம் நிலைத்து நிற்கவில்லை என்பது உண்மை.

### மாநில அளவில் மனித உரிமைகள் ஓர் மாறுபட்ட கண்ணோட்டம்

குற்ற நீதி அமைப்புகளில் முக்கியமானதாக காவல் துறை, நீதித்துறை, சிறைத்துறை, அரசு வழக்காடுதுறை மற்றும் மக்கள் என்பனவற்றை கூறலாம். இந்த சமூக அங்கங்கள் அனைத்தும் மனித உரிமையை நிலை நாட்ட அமைக்கப்பட்டனவே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதில் மக்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பது காவல்துறையே. மேலும் காவல் துறையும் மனித உரிமையை மீறும் அமைப்பு அல்ல. சட்டத்தை முறைப்படி செயல்படுத்தும் அரசு இயந்திரமே ஆகும். இந்த அரசு இயந்திரங்களை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசு எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதைப் பொறுத்தே அரசு இயந்திரங்கள் செயல்படும். இந்தியாவில் 1861-இல் காவல் துறை சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் அன்றைய முக்கிய நோக்கம் பிரிட்டிஷ் அரசின் ஆட்சி முறையை தக்கவைத்துக் கொள்ளவும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளவும் ஏற்படுத்தப்பட்டதாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் பல்வேறு ஆட்சிகள் மாறின. ஆனால் காவல்துறையின் சட்டங்கள் மாறவில்லை, காவல் துறையின் நோக்கங்களும் மாறவில்லை. சுதந்திரம் பெற்ற இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளும், பிரிட்டிஷ் அரசைப்போல காவல் துறையை மக்களை ஒடுக்குவதற்கும் பயமுறுத்துவதற்கும் பயன்படுத்துகின்றனவே தவிர காவல்துறை சமுதாயத்தில் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அங்கம் என்ற எண்ணத்தை உருவாக்க மறுக்கின்றன.

இன்று காவல் நிலையங்களில் பால், இனம், நிறம், பாரம்பரியம், தேசியம், சமயம், சாதி, வர்க்கம் போன்ற பல்வேறு அடிப்படைகளில் ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் ஓரவஞ்சனைகள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இது ஒட்டுமொத்த சமூகத்தின் பிரதிபலிப்பேயாகும். காவல்துறை சமுதாயத்தின் ஒரு அங்கம். எனவே சமுதாயத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள், ஓரவஞ்சனைகள் இந்தத் துறையிலும் பிரதிபலிக்கும்.

சமூகத்தில் அனைவரும் உயிர், உரிமை மற்றும் சுயபாதுகாப்பிற்கு பாத்தியப்பட்டவர்கள் என்ற உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தின் உரிமைகளை காப்பது அரசின் பொறுப்பு என்றாலும், உலகின் பல பகுதிகளில் அரசாங்கங்களே தொடர்ந்து இந்த உரிமைகளை மீறி வருகின்றன. அண்மைக்காலத்தில் காவலில் இருக்கும்போது மரணம் மற்றும் காரணம் காட்டமுடியாமல் காணாமல் போனது போன்ற சம்பவங்கள் பரவலாக நிகழ்ந்து வருகின்றன.

சமுதாயத்தில் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு மக்கள் மற்றும் மக்கள் அரசு நிர்பந்தத்தால்தான் இன்னும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 என்பது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பிற்காகவும் சமூகத்தில் இவர்கள் சமத்துவத்தை அடையவேண்டும் என்ற நோக்குடனும் கொண்டுவரப்பட்டது. ஆனால் வன்கொடுமைகளுக்குள்ளாகும் எந்த நபரின் புகாரும் இந்த சட்டத்தின் கீழ் பெரும்பாலும் காவல்நிலையங்கள் பதிவு செய்வதில்லை. இந்த சட்டத்தை நிலைநாட்ட திறப்பு வாயிலாக அமைந்துள்ள காவல் துறையை மாறுபட்ட சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய கட்டாயப்படுத்தும், நிர்பந்தப்படுத்தும் சமுதாயம் உள்ளவரை சமத்துவம் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக வேரூன்றி இருக்கும் பால், இனம், நிறம், பாரம்பரியம், தேசியம், சமயம், சாதி, வர்க்கம் போன்ற பல்வேறு அடிப்படையிலான ஓரவஞ்சனை மற்றும் ஏற்றத்தாழ்வுகளை ஒட்டுமொத்தமாக களைய வேண்டும். இத்தகைய சமுதாய மாற்றம் நிகழும்பொழுது சமுதாயத்தின் ஒரு அங்கமாகிய குற்ற நீதி அமைப்பு (காவல்துறை, நீதித்துறை, சிறைத்துறை, அரசு வழக்காடு துறை) மற்றும் இதர அரசு அங்கங்களும் சமத்துவத்தையும், ஏற்றத்தாழ்வுகளற்ற நிலையையும் கடைபிடிக்கும் என்பதில் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயத்தில் மக்கள் அரசின் எதிர்பார்ப்புகள், சமூகத்தின் ஒரு அங்கமாகிய அரசு இயந்திரங்களின் செயல்பாடுகளாகின்றன என்பதை கருத்தில்கொண்டு அனைவரும் சமத்துவ கோட்பாடுகளை பின்பற்றி சிந்தித்து செயல்படுவது மனித உரிமையை நிலை நாட்ட உரமாக இருக்கும் என்பது நம்பிக்கை. இதைத் தவிர்த்து அரசு இயந்திரங்களை கண்காணிப்பது மற்றும் தண்டிப்பதன் மூலம் மட்டுமே மனித உரிமையை நிலைநாட்டுவது என்பது அரிது. உலக ளாவிய மனித உரிமை பிரகடனத்தின் பிரிவு 1-இன் படி மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாக பிறந்தவர்கள். சம உரிமை மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் காரணமாக வாழ்நாள் முழுவதும் சுதந்திரம் என்கின்ற உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. ஒருவருடைய சுதந்திரம் மற்றவர்களின் சுதந்திரமின்மையின் அடிப்படையில் அமைய முடியாது. ஆனால் உலகளவிலும், தேசியள விலும் சுதந்திரம் என்பது பிறருடைய சுதந்திரத்தை பறிப்பதாகவே அமைந்துள்ளது என்பதை ஆப்கான், ஈராக் மீது வளர்ந்த நாடுகள் (அமெரிக்கா, பிரிட்டன்) போர் தொடுத்ததை வைத்து அறியலாம்.

ஐ.நா. பேரவை 1995-ஆம் ஆண்டினை "ஐ.நா.வின் சகிப்புத் தன்மை ஆண்டு" என அறிவித்தது. சகிப்புத் தன்மை என்றால் மற்றவரை உணர்ந்து பாராட்டுதல், இணைந்து வாழ்தல், ஏனையோரின் கருத்தை செவி மடுத்தல் எனவும், இந்த சகிப்புத் தன்மைதான் நாகரீகமான சமுதாயத்திற்கும், அமைதிக்கும் அடிப் படை என்று பேரவை குறிப்பிடுகிறது. மேலும் மனித உரிமை பிரகடனத்தின் பிரிவு 1-ன் படி ஒவ்வொருவரும் மற்றவரை சம உரிமையுடனும், கௌரவத்துடனும் நடத்த வேண்டும் போன்ற கருத்துக்களை ஏற்க மறுக் கின்ற நம் மக்களும், அரசும் அதற்கு மாறாக சமூக மற் றும் மக்கள் பிரிவுகள் சமம் இல்லாதவை என்ற போலிக் கருத்துக்களை கூறுகின்றன. இந்த ஓரவஞ்ச னைக்கு எந்த அறிவியல் ஆதாரமும் கிடையாது.

இந்திய சமூகத்தை ஓரவஞ்சனை மற்றும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சகிப்புத் தன்மை கொண்ட சமுதாயமாக மாற்ற அரசு சார்ரா தொண்டு நிறுவனங் களும், அரசும் தொடர்ந்து பாடுபடுமேயானால் அனைத்து மனித உரிமைகளும் தானாகக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

துணைநின்ற நூல்கள்


1. வி. லெவின், (2000) மனித உரிமைகள் நேஷ்னல் புக் டிரஸ்ட் இந்தியா, 2000
2. S. சம்பந்தம், மாநில மனித உரிமை ஆணையம், மனித உரிமைகள் சட்டம் - 1993 ஒரு கையேடு, 2002
3. டி. ஞானையா, அமெரிக்க பயங்கரவாதம் வரலாற்று தடங்கள், 2003
4. மனித உரிமைக் கங்காணி, இரு திங்களிதழ் மக்கள் கண்காணிப்பகம் வெளியீடு, மதுரை - ஏப்ரல் 2004.


■ ஜனாசுகிர்தன்

# உடல் (ல்)

காலையில் சேவல் கூவல்
எனக்கு ஒருபோதுமே கேட்டதில்லை
பக்கத்து அறைப்பெண் கத்துவாள்
நான் எழுந்துவிடுவேன்

அவளோடு நான் பேசியதில்லை
என்னோடும் அவள் அப்படியே

அவளோடு நான் பேசத் துடித்தேன்
அவளும் துடித்தாளா என்னோடு பேசுவதற்கு?
அது எனக்குத் தெரியாது.

தூக்கத்தில் நானும் கத்துவதுண்டு
எனது சத்தம் அவளுக்குக் கேட்டதா?

இந்த சத்தங்கள் மீது
நாங்கள் பேசிக்கொண்டதில்லை

இருளின் கவிதைகளைப்
பகலில் தேடும்

இந்தப் பாதம்

எங்கே அந்த விழிகள்?

அந்த உடல்களை எனக்கு மறைக்கும்
பொந்துகள் உள்ள வீதிகள் எங்கே?

பகலே!
ஏன் எனக்கு
இருளின் கவிதைகளை ஒளிக்கின்றாய்?

இரவின் நிறங்கள்
ஏன் பகலின்
நிறங்களாக மாற மறுக்கின்றன?

காலம்
கணத்துக்குக் கணம்
சரிந்து விழும்போதும்
நிமிர மறுக்காத அந்த உடல்கள்
எங்கே?

பகலும்
எனது பாதங்களும்

மூடப்பட்ட விழிகள் முன்கூடப் பகல்கள்

இருள் எங்கே?
அங்கே எனது உடல்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# திராவிட மாயை

■ கோமதி நாயகம்

முன்னுரை

ஆரிய மாயையால் அறிவை இழந்தோம். சுயசிந்தனையை இழந்தோம். சுயசார்பு நிலையை மறந்தோம். இன்னொருவரின் பின்னால் சென்று அடிமைபோல் வாழ்ந்து இழக்கக் கூடாதது எல்லாம் இழந்தோம். இன்னும் சிலர் இழந்து கொண்டிருக்கிறார்கள். ஆரிய மாயையிலிருந்து விடுபட்டவர்களில் சிலர், ஏன் பெரும்பாலோர் (பெரும்பாலானோர்) திராவிட மாயையில் சிக்கித் தவிக்கிறார்களா? திராவிட மாயை என்று தெரிந்து, பிழைப்பிற்காக தான் பெற்ற சுகத்தை இழக்க முடியாமல், பெற்ற சுகத்தைத் தொடர்ந்து பெறுவதற்காக திராவிடப் போர்வை போர்த்திக் கொண்டுள்ளார்களா? என்றெல்லாம் சிந்திக்க வேண்டி யுள்ளது. இந்த நிலையில்தான் தமிழினத்தைத் திராவிட மாயை எப்படிச் சீரழிக்கிறது, எப்படித் திசை மாற்றுகிறது? எப்படி இனங்கெட்ட உயிரிகளாக சிலர் வாழ்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தித் திராவிடப் போர்வையைக் கிழித்து தமிழனின் இனம் 'தமிழினம்' என்று தெளிவுபடுத்த வேண்டிய நிலையில்தான் திராவிட மாயை பற்றி விளக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

கால்டுவேலரும் திராவிடமும்

வெள்ளையர் ஆட்சியின் காலத்தில் கிறிஸ்தவ மதப் பணிக்கு வந்த கால்டுவேல் அவர்கள் தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து "திராவிட மொழி ஒப்பிலக்கணம்" என்னும் நூலை எழுதினார். உலக மக்களுக்கு அவர் 'திராவிட' என்னும் சொல்லை வெளிப்படுத்தி, மொழி இனம் ஆகியவற்றில் திராவிட என்பதைச் சேர்த்து முன்னொட்டாக - அடைமொழியாகச் சேர்த்து திராவிடமொழி, திராவிட இனம் என்பதை அடையாளப்படுத்தினார். உலகமொழி இனங்களில் திராவிடமொழி இனம் என்பது ஒரு பகுதி. ஒரு மொழி வளரக்கூடியது என்னும் அடிப்படையிலும், மாறக்கூடியது என்னும் அடிப்படையிலும் ஒரு மொழியிலிருந்து பல மொழிகள் தோன்றின. அத்தகைய மொழிகளுக்கு முதன்மையானது தமிழ் ஆகும். தமிழிலிருந்து சிதைந்து, வேறு மொழியோடு கலந்து புதிய மொழிகள் தோன்றலாயின. அவைகள் தாம் மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம் போன்றவைகள். அப்படித் தோன்றிய மொழிகளை 'திராவிடக் குடும்ப மொழிகள்' என்று அவர் வழங்கினார் - அழைத்தார். மொழிகளின் இனத்தைக் குறிக்க வந்தது திராவிடயின மொழிகள் என்று அடையாளப்படுத்தப் பட்டது என்பது எப்படி ஒரு மொழி பேசுவோரின் மொழிக்கு இனமாகும் என்பதுதான் சிக்கலாக சிலருக்கு உள்ளது.

மூத்த மொழி தமிழ் என்கின்ற மொழி, அதிலிருந்து கிளைத்த மொழிகளைத் தமிழின மொழி என்று சொல்லியிருந்தால்கூட, அது எந்த அளவிற்கு ஏற்புடையது என்பது ஐயந்தான். மனித இனத்தின் வகையில் திராவிட இனம், ஆரிய இனம், யூத இனம் என்பன போன்றவை மனித இனத்தை உடலியல் அடிப்படையில் பகுத்த பழமையான பாகுபாடு, எப்படி இந்தப் புதிய உலகத்திற்கு (நவீன உலகத்திற்கு) ஒரு தனிமொழி பேசும் தமிழினத்திற்கு எப்படிப் பொருந்தும் என்கிற வினா எழும்பியக் காரணத்தால்தான் சிலருக்குத் தெளிவு ஏற்பட இதனை விளக்கி யெழுத வேண்டியுள்ளது. திராவிட இனம், மனித இனப்பாகுபாட்டில் வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாமேயொழிய, மொழிவழி இனப்பிரிவிற்கு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையும் ஒத்துவராத நிலையும்தான் உள்ளன.

கால்டுவேல் அவர்கள்கூட தமிழிலிருந்து சிதைந்த மொழிகள் என்று பட்டியலிட்டுள்ள அனைத்து மொழி பேசுகின்ற அனைவரும் தங்களை திராவிடர் என்றும், தங்கள் இனம் திராவிட இனம் என்றும் சொல்லிக்கொண்டதாக, அடையாளப்படுத்திக் கொண்டதாக தெரியவில்லை. இந்த நிலையில் தமிழர்களில் சிலர் மட்டும் தங்களை இன்னும் திராவிட இனம் என்று அடையாளப்படுத்திக் கொள்வது எதைக் காட்டுகிறது? அவர்கள் ஏதோ ஓர் உண்மையை வெளிப்படுத்த ஆணித்தரமாக உள்ளார்களா? தமிழ் இனத்தை ஆரிய இனம் ஏமாற்றியது போல், ஆரிய மாயையால் தமிழன் தடம்புரண்ட வரலாற்றின் போக்குபோல், திராவிட மாயையால் தமிழினம் அழிக்கவும் அதன்மூலம் ஆதாயம் (நன்மை) தேடவும் ஆரியர் போல் திராவிட மாயை தமிழினத்தில் பரப்பிக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்களா? என்ற ஐயம் தோன்றுகிறது. ஆரிய மாயையை அறிந்தவர்கள், அதன் சூத்திரத்தையே ஏற்றுக்கொண்டு தமிழின மக்களைத் தாழ்த்தவும், ஒடுக்கவும், தங்கள் நிலையை மேம்படுத்திக் கொள்ளவும், தக்கவைத்துக்கொள்ளவும் திராவிட மாயையைக் கைக்கொண்டுள்ளார்களா? என்பதை ஆராயவும் தெளிவுபடுத்தவும் ஒரு தமிழனின் கடமை என்னும் உணர்வில்தான் இது எழுதப் படுகிறது. இந்த நிலையில், இவ்வமையத்தில் கால்டுவேல் அவர்கள் 'திராவிட' என்னும் சொல்லை மனித இனப்பாகு பாட்டில் 'திராவிட இனப் பாகுபாடு' ஒன்று என்ற அடிப்படையில்தான் பயன்படுத்தினாரே ஒழிய மொழி அடிப்படையில் ஒரு இனப் பார்வைக்கு எடுத்தாளவில்லை என்பதைச் சிலருக்குச் சொல்லியாக வேண்டும். கால்டுவேல் அவர்களின் பார்வை வேறு,



படிப்பகம்

www.padippakam.com

திராவிடர் என்று சொல்லிக் கொள்பவரின் பார்வை வேறு என்பதைப் பகுத்தாய்ந்து உணர வேண்டும்.

யார் திராவிடன்?

மாந்த மெய்யினத்தை (Race) பல்வேறு இனமாக மாந்தவியலார் பிரிக்கின்றபொழுது திராவிட மெய் யினம் என்று பிரித்தார்கள். ஆரிய இனம், யூத இனம், மங்கோலியர் இனம் போன்றவைகள் உடல் அமைப்பு நோக்கில் பிரிக்கப்பட்டவையே ஒழிய மொழி அடிப் படையில் பிரிக்கப்பட்டவை அல்ல.

உடல் அமைப்பு அவரவர் வாழும் பூ உலகத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப அமைகிறது என்பது உலக உண்மை யாகும். அந்த இனப்பாகுபாடு, மொழி அடிப்படையில் பகுக்கும் இனத்திற்கு எப்படிப் பொருந்தும் என்று சிந்திக்காமல், தமிழ்மொழி பேசுகின்றவர்கள் தமிழி னமே தவிர திராவிட இனம் அல்ல என்று தெளிய வேண்டும். திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தெலுங்கரோ கன்னடியரோ மலையாளியோ ஒருவர் தன்னைத் 'திராவிடன்' என்று சொல்லிக் கொள்கிறார் களா என்று ஏன் தமிழர்களில் சிலர் சிந்திக்கவில்லை. யாரும் தனித்து தன்னை 'திராவிடன்' என்று அடை யாளப்படுத்திக் கொள்வது, வரலாற்றியல் நோக்கில் பார்க்கும்பொழுது உண்மைக்கு, நடைமுறைக்குப் புறம்பானது ஆகும். முன்பு சொன்னதுபோல் உட லியல் அமைப்பை அடிப்படை யில் மாந்த இனத்தை, மெய்யியல் (Race) அடிப்படை யில் திராவிட இனம் என்று பயன்படுகிறதே ஒழிய ஒருவரைத் தான் திராவி டர் என்று அடையாளப்படுத்திக் கொள்வது வரலாற் றுப் பிழையாகும். அது ஒரு வகையான பிழைப்பு வாதமாகும். வரலாற்று மோசடியின் ஒட்டுமொத்த அடையாளமாகும். 'திராவிடன்' என்று சொல்லிக் கொள்பவர்கள் வெளிப் படையாக இரண்டகர் ஆவார்கள். அவர்களை எந்தச் சூழலிலும் நம்பக் கூடாது. அவர்களைச் சரியாக அடையாளங் கண்டு கொண்டால்தான் தமிழினம் தழைக்கும் என்பது உறுதி.

எது திராவிடம்? திராவிட நாடு எது?

திராவிட மொழிக் குடும்பங்களின் மொழி பேசப் படுகின்ற இடம் என்னும் அடிப்படையில்தான் திராவிட நாடு என்ற கருத்து உருவானது. அதற் கென்று திட்டவட்டமான எல்லை எந்தக் காலத்திலும் யாராலும் வரையறுக்கப்பட்டதாக வரலாறு கிடை யாது. வெள்ளையர் இந்தியாவை ஆண்ட பொழுது தான் 'இந்தியா' என்ற சொல்லே உருவானது. இந்தி யாவும் உருவானது. அதற்குமுன் இந்தியா பல்வேறு பட்ட பகுதிகளாக அமைந்திருந்தது. வெள்ளையர் ஆட்சியில் தான் தமிழ்நாட்டையும் சேர்த்து இந்தியா வோடு இணைத்து ஆளுகின்ற நிலை உருவானது.

வெள்ளையர் ஆட்சியில் சென்னை மாகாணம் என்ற ஒரு ஆட்சிப்பகுதியில் இப்பொழுதுள்ள தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் போன்ற பகுதிகள் அமைந்திருந்தன. அரசியல் செய்வதற்கு ஓர் அரசியலமைப்பு தேவைப்பட்டது. பல்வேறுபட்ட மொழிகள் பேசுபவர்களை ஒருங்கிணைக்க அரசியல் அடிப்படையில் 'திராவிடர் கழகம்' என்று பெயர் வைத்து இயக்கம் நடத்தினார்கள். அது காலத்தின் கட்டாயம், காலத்தின் தேவை. அந்தச் சூழலுக்கு அது ஏற்புடையதாக இருந்தது.

ஆங்கில ஆட்சி அகற்றப்பட்ட பிறகும் சென்னை மாகாணம் என்று தொடர்ந்தது. அதுவரைக்கும் அது பொருத்தப்பாடாக அமைந்திருந்தது. மொழிவழி மாநிலம் பிரிந்த பிறகு மலையாள மொழியின் அடிப் படையில் கேரளமும், தெலுங்கு மொழி அடிப்படை யில் ஆந்திரமும், கன்னடமொழி அடிப்படையில் கர்நாடகமும், தமிழ்மொழி அடிப்படையில் சென்னை மாநிலமும் பிரிந்தன. அதன் பிறகுதான் சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க திரு. சங்கரலிங்கனார் உயிர் நீத்தார். அரசியல் வளர்ச்சியில் சென்னை மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப் பட்டாலும் திராவிடன் என்பதைத் தமிழ்நாட்டில் தமிழன் என்று மாற்றிக் கொள்வது என்னும் நிலைப் பாட்டில் யாரும் தயார் நிலையில் (அணியமாக) இல்லை. இதற்கு என்ன காரணம்?

மொழி அடிப்படையில் மாநிலங்கள் தோன்றிய பிறகு, அந்த மொழி பேசுகின்றவர்கள் பெருவாரியாக வாழ்கின்ற நிலப்பகுதியில், அம்மொழியை அடிப் படையாகக் கொண்டு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல், ஒரு காலத்தில், ஒரு காரணத்திற்காக ஏற்றுக்கொண்ட ஒரு சொல்லையே தன்னை அடை யாளப்படுத்திக் கொள்கிறார்கள் என்றால் அவர்கள் மீது ஐயம்தான் தோன்றுகிறது. வாழ்கின்ற வாழ்விடத் தால், பேசுகின்ற மொழியால், பண்பாட்டால் அனைத் தாலும் அவர்கள் தமிழுக்கு உரியவர்கள் என்றால், அவர்கள் ஏன் (அவர்கள்) தங்களை இன்னும் திராவி டன் என்று அடையாளப்படுத்திக் கொள்ள வேண் டும்? இதில் ஏதோ ஒரு கமுக்க வேலையிருக்க வேண் டும். தான் ஒரு தமிழனாக இல்லாமல், தமிழ்பேசுகின்ற மண்ணில் வாழ்வதால், தன்னைத் தமிழன் என்று சொல்லிக்கொள்ள தகுதியில்லாமல் தகுதியின்மையை மறைப்பதற்கு இல்லாத ஒன்றைத் தன்மீது போர்த்திக் கொண்டு தமிழ்நாட்டு மக்களை தமிழர்களை ஏமாற்று கிறார்களோ என்று ஐயப்பட வேண்டியுள்ளது.

இந்தியா விடுதலை பெறுவதற்கு என்று இருந்த சூழலில் வேண்டுமானால், பலவேறு மொழி பேசுகின்ற மக்களை ஒருங்கிணைக்க திராவிடன் என்னும் சொல் ஏற்புடையதாக இருந்திருக்கலாம். ஆனால், மொழி வழி மாநிலம் தோன்றிய பிறகும் திராவிடன் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டால் அவர் களின் அடிப்படையில் ஐயம் தோன்றாமல் இருக்க முடியாது. இந்தியாவில் இப்பொழுது திராவிடம் இல்லை. அதனைச் சார்ந்து திராவிடனும் இல்லை.

இன்னுமா திராவிடன்

சென்னை மாகாணத்தில் இருந்து பிரிந்துபோன கேரளக்காரனோ, ஆந்திரக்காரனோ, கருநாடகக் காரனோ தன்னைத் திராவிடன் என்று எந்தச் சூழலி லும் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளாமல்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும்பொழுது தமிழ்நாட்டில் வாழுகின்ற சிலர் மட்டும், குரங்குப் பிடியாகத் திராவிடன் என்னும் சொல்லைப் பிடித்துக் கொண்டிருப்பது அவர்களின் குரங்குத் தனத்தைக் காட்டுவதை விட குளறுபடி தனத்தைக் காட்டுகிறது. ஏன் குளறுபடி செய்ய வேண்டும்? உண்மைத் தமிழராக இருந்தால் அவர்கள் ஏன் குளறுபடி செய்ய வேண்டும்? தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர், வாழ்விடச் சூழலால் தமிழ்மண்ணில் வாழ வேண்டிய நெருக்கடியாலும் தாங்கள் பேசுகின்ற தாய்மொழியின் இனத்தைச் சொல்லிக்கொள்ள முடியாமையாலும், மூடு மந்திரமாகத் தங்களைத் திராவிடன் என்று அழைத்துக்கொள்கிறார் என்கிற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

சிறிதும் (சற்றும்) உணர்ச்சி வயப்படாமல் நிதானமாகச் சிந்தித்தால் சில உண்மைகளை உணரமுடியும். அரசியல் காரணங்களால் இந்தியாவில் வங்காளம் - மேற்குவங்காளம், கிழக்கு வங்காளம் என்று பிரிக்கப்பட்டு, கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டு கிழக்குப் பாகிஸ்தான் என்று அழைக்கப்பட்டது. இரண்டு பாகிஸ்தானுக்கும் இடையே போர் வந்து (போர் ஏற்பட்டு) கிழக்குப் பாகிஸ்தான் தனி நாடாக உருவாகிய பொழுது மொழியின் அடிப்படையில் வங்காளதேசமென்றுதான் ஆனது. அங்குள்ளவர்கள் மதத்தால் இஸ்லாம். ஆனால் இனத்தால் வங்காளிகள் என்ற உணர்வு உள்ளது. மொழியைத்தான் அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் சிலரின் போக்கு ஏன் அப்படி அமைந்துள்ளது? ஐயம் தோன்றும்படி ஏன் நடந்து கொள்கிறார்கள்? ஒரு தேசிய இனத்தில், மற்றொரு தேசிய இனம் இருக்கலாம். ஆனால் வாழ்கிற தேசியத்திற்கு இரண்டகம் செய்துகொண்டு, வரலாற்றைக் குழப்பிக் கொண்டு, தங்கள் சுய இலாபத்திற்கு, எந்த பித்தலாட்டமும் செய்யக்கூடாது. தமிழன் உணர்வு பரந்துபட்டது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று வாழ்கின்ற இனத்திற்குத் துரோகம் (இரண்டகம்) செய்யக் கூடாது. இந்தப் போக்கு இனியும் தொடர்ந்தால் துரோகிகளின் அடையாளங்கள், முகவரிகள் ஆகியவற்றை மக்கள் அறிவிக்க வேண்டிய அவசியம் தமிழனுக்கு ஏற்பட்டுவிடும். தங்களின் உண்மையான முகவரியைக் காட்டிக் கொள்ளாதவர்கள் எதிரிகள் அல்லர்; துரோகிகள். எதிரிகளை விடத் துரோகிகள் பயங்கரமானவர்கள். இதற்கு மேலும் தமிழர்கள் பெரும்போக்காக வாழக் கூடாது. துரோகிகள் யார்? எதிரிகள் யார்? என்று இனம் காண வேண்டும்.

### ஆரிய மாயையால் இழந்தது

முதல்குடி, மூத்தகுடி என்றெல்லாம் பாராட்டுதற்குச் சொந்தக்காரனாய் வாழ்ந்த தமிழர்களின் வரலாற்றில், ஆரியக் கலப்பிற்குப் பிறகு தமிழ் மன்னர்கள் எப்படியெல்லாம் மனித நேயம்கெட்டு, மடமைத்தனம் கொண்டு ஆட்சி அதிகாரத்தில் ஆரியரை, ஆரியர் ஆலோசனையை, ஆரியர் பண்பாட்டைக் கலந்து, தமிழின் மாட்சியும், தமிழர்களின் மாண்பும் சிதைக்கப்பட்டு சின்னா பின்னமாகி சீரழிந்த வரலாற்றை இங்கு விவரிக்கப் போவதில்லை; அதை ஒரே வரியில் கூறவேண்டுமானால் ஆரியத்தால் தமிழன் கெட்டான்; தமிழ் கெட்டது; தமிழினம் கெட்டொழிந் தது எனலாம். காலப்போக்கில் ஆரியத்தின் தாக்கத் தால் ஏற்பட்ட அழிவைத் தமிழன் உணரத் தொடங்கியதே, அவன் மேலும் வாழ, உயர மேன்மைப் படுத்திக் கொள்ள அடிப்படையாக அமைந்தது. ஆரிய மாயையைத் தமிழர்கள் சிலர் நன்றாக அறிந்துள்ளார்கள் என்ற மன நிறைவு தமிழ் வீரர்களுக்கு (வீரர்கள் சிலருக்கு) உள்ளன. என்றாலும் ஆரியத்தின் மாயை அடியோடு ஒழிந்துவிட்டதாகக் கொள்ளக் கூடாது. ஆரியம் அதன் இயல்பிலிருந்து எள்ளளவும் மாறாமல், மாற்று இனத்தை மயக்குவதிலும் மாற்றுவதிலும் அதன் அடையாளங்கள் இல்லாமல் ஒழிப்பதிலும் முனைப்பாக உள்ளது. ஆரியத்தை வென்றுவிட்டதுபோல் பலருக்குத் தோன்றுகிறது. அதை இன்னும் தமிழன் வெல்லவில்லை. முன்னிலும் கேடாக ஆரிய மாயையில் அடிப்பட்டுச் சிக்குண்டு தங்கள் அடையாளத்தையே இழந்து வாழ்கின்ற நிலைதான் இன்னும் தமிழகத்தில் நிலவுகிறது.

நாடாண்ட மன்னர் வழித்தோன்றல்கள் (பரம்பரைகள்) இன்று நாடோடிகளாக உலகின் பல பகுதிகளிலும் வாழ்கின்றார்கள் என்றால் அது ஆரியத்தின் அடிப்படைச் செயல்கள் மட்டுமல்லாமல், தமிழர்களின் மயக்க புத்தியும்தான். உடலில் ஓர் உறுப்பு கெட்டால், அந்த உறுப்பு செய்யும் வேலை மட்டும் தான் பாதிக்கும். மற்ற வேலைக்கு அது இடையூறாக இராது. மூளை கெட்டால் அவன் செய்யும் எல்லா வேலையும் கெட்டுவிடும். இந்த உண்மையை உணர்ந்த ஆரியர்; தமிழர்களின் மூளையை இந்துமதம் என்ற பெயரால், சடங்குகள் என்ற பெயரால் கெடுத்த வரலாற்றுச் செய்திகளைப் பார்த்தால், தமிழர்களின் தடுமாற்றத்தையும் தரந் தாழ்ந்த செயல்களையும் நன்கு உணரமுடிகிறது.

தமிழர்கள் சாதி இந்துக்களாய், சாதியற்ற பஞ்சமராய்ப் பிரித்து, சாதி இந்துக்களில் உழைப்பவரைச் 'சூத்திரர்' என்று ஒடுக்கியும் பஞ்சமரை ஒடுக்கியும் ஒதுக்கியும் பிரித்து ஆரியம் தாண்டவம் ஆடுகிறது. ஆதித் தமிழனும் பழந்தமிழனும் பஞ்சமராய்ப் பரிதவிக்கும் அவலநிலைதான் மிஞ்சியது.

வரலாற்று அடிப்படையில், ஆரியத்தின் போக்கையும் செயலையும் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. எதிரியின் கொள்கை, கோட்பாடு, செயல் திட்டம், செயல்திறன் எல்லாம் தெரிந்து விட்டது. 'தமிழனின் வரலாற்று எதிரி ஆரியன்' என்று அடையாளம் கண்டுகொண்டு விட்டோம். எதிரி யார் என்று உணர்ந்து விட்டாலே, இழப்பின் செம்பாதியை குறைத்துவிடலாம் என்பதை உணர்ந்த நிலை, செயல்திட்டம் வடிக்க வேண்டும்.

இயற்கையோடு வாழ்ந்து, இயற்கையிலிருந்து எவ்வளவோ கற்ற தமிழன், மனித நேயத்தை உலகிற்குப் பறைசாற்றியவன், மனிதப் பண்பை மண்ணிற்கு அடை



படிப்பகம்

www.padippakam.com

யாளப் படுத்திய தமிழன், ஆரிய மாயையால் அனைத்தையும் இழந்தான்; அடையாளத்தையும் இழந்தான். அதை உணர்ந்த நிலைக்கு தமிழன் வளர்ந்துவிட்டான். இனித் தமிழனைத் தாழ்த்த வேறு ஒரு சக்தி உருவாக வேண்டும். அதற்குத் தமிழன் இடங்கொடுக்காமல், சங்ககால வாழ்வு, மனித நேய மாண்பு தமிழரிடத்தில் தழைக்க வேண்டும். தன்னலப் பேய்கள், தன் குடும்பம் என்றுள்ள தருக்கர்கள், தன் சுகம் என்ற தற்குறிகள் தமிழரிடையே இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆரியம் எந்த வடிவத்தில் வந்து தமிழனைக் கெடுக்கும் என்று மிகத் தெளிவாக, விழிப்பாக இருந்து இனத்தைக் காப்பாற்ற வேண்டும். இனநலம் எல்லாப் புகழும் தரும்; தன்னலம் எல்லா இழிவையும் நல்கும்.

தமிழினத்தோடு எந்த இனமும் இணைந்து வாழலாம். இனக்கேட்டுச் சிந்தனை இல்லாத யாராக இருந்தாலும் தமிழினம் அவர்களை நேசிக்கும்; இணைந்து வாழ இசைந்து கொடுக்கும். ஓர் இனத்தை மற்றொரு இனம் விழுங்கும் மீன் வாழ்க்கை வாழாது. இனியும் சின்ன மீனாக வாழவும் விரும்பாது. ஆரியத்தால் தமிழன் முடியாட்சியை இழந்தான்; இனத்தை மறந்தான்; இனம் கெட்டான் என்பது வரலாறு.

திராவிட மாயையால் இழந்தது

ஆரிய இனம் என்று ஒன்று உள்ளது. அது தமிழினத்தை எப்படிச் சீரழித்தது என்பது வரலாறு. ஆனால், திராவிட இனமென்று ஒன்று இல்லை. இல்லாத ஓர் இனம், இருக்கின்ற ஓர் இனத்தைப் படுத்துகின்ற பாடு, பாழ்படுத்தும் நிலை, தமிழினத்தை அழிக்கின்ற நிலை ஆகிய இவைகளை எண்ணும் பொழுது, ஆரிய எதிரி தாழ்வில்லை என்று எண்ணத் தோன்றுகின்ற அளவிற்கு திராவிடத்தால், திராவிட மாயையால் தமிழன் இடர்பட்டுக் கொண்டு உள்ளான். துரோகியைவிட எதிரி தேவலாம் - (எதிரியை நம்பலாம்) என்பார்கள். அப்படிப்பட்ட துரோகிகள்தான் திராவிடர்கள். இந்தத் திராவிடக் கொள்கையால் தமிழனுக்கு, தமிழ்மொழிக்கு எள்ளவும் பயனுண்டா? போலி இனப் போர்வையால் தன் குடும்பம், தன்னைச் சார்ந்தவர்கள், தன் பேச்சைக் கேட்பவர்கள் இவர்களின் நலத்தையே பேணுகின்ற - நலத்தையே செயல் திட்டமாகக் கொண்டவர்களுக்கு இந்த மண்ணில் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும். இருப்பினும் பிழைக்க வேண்டும். அதுவும் இன்னொரு இனத்தின் மீது சவாரி செய்து உல்லாச வாழ்வும், உல்லாசப் பயணமும் செய்ய வேண்டும் என்ற கொள்கையால், தன் தாய்மொழிப் பற்றில்லாமல், தன் இனப் பார்வையில்லாமல், வேறொரு இனத்தை அழித்துக்கொண்டு வாழ்கின்ற வாழ்க்கை என்ன வாழ்க்கை. (அது எலி வாழ்க்கையாகும். ) எந்த நாட்டிலாவது இப்படிப்பட்ட கும்பல் உண்டா? இல்லையே.

ஆந்திராவில், கருநாடகத்தில், கேரளாவில் இந்தத் திராவிட இனம் தலைகாட்ட முடியுமா? முடியாது. பிழைக்க வந்த இடத்திலே கிடைத்த சுகம். அச்சுகத்தை விட முடியாதவர்கள் தன் தாய்மொழியை மறைத்து தன் இனத்தை மறைத்து போலியாக வாழ்கிறார்கள் என்றால் அது தமிழ்நாட்டில்தான் முடியும். தமிழன் அந்த அளவிற்கு விசாலப்பார்வை (அகன்ற பார்வை) பார்ப்பவன் என்னும் நல்ல நோக்கையே நயவஞ்சகர் பயன்படுத்திக்கொள்ளும் குள்ளநரித் தந்திரமாக்கிக் கொண்டனர்.

அவர்கள் ஆரிய மாயையை உணர்ந்தவர்கள். ஏன் நன்கு உணர்ந்தவர்கள். ஆரியர்களை எதிர்த்தார்கள். ஆரியர்களை எதிர்ப்பது என்ற அடிப்படையில் அல்ல. நாங்கள், உங்கள் வேலையைச் செய்ய இருக்கின்றோம். ஆகவே, உங்களுக்கு இங்கு வேலை இல்லை என்னும் கொள்கையை வகுத்துக்கொண்டு ஆரியத்தை எதிர்த்தார்கள். இன்றும் எதிர்ப்பது போல் நடித்துக் கொண்டுள்ளார்கள். ஆனால், ஆரியத்தின் செயல் திட்டத்தின் வடிவமும் செயல்முறையும் மாறியுள்ளதே ஒழிய, தமிழனின் அழிவில் உறுதிப்பாடு உள்ளது என்பதில் மாற்றமில்லை. இதுதான் திராவிடத்தின் போக்கு. இதைத் தமிழன் உணரவேண்டும். உணர்ந்தவர்கள் பலர் உள்ளனர். ஆரியத்தை அடையாளங்கண்டு கொள்வதைவிடத் திராவிடத்தை அடையாளங் காண்பது சற்று இடரான, சிக்கலான செயலாகும். அதையும் தமிழன் உணர்ந்த, உணருகின்ற நிலை வந்துவிட்டது.

ஆற்றல் உள்ளவன் தமிழன், பண்பாளன் தமிழன் என்பது எப்படி வரலாற்று உண்மையோ, அதைப் போலவே, தமிழன் ஆரிய மாயையாலும் அதன்பின் திராவிட மாயையாலும் மயங்கினான்; மடைமையாளனானான்; பின் தெளிந்தான் என்னும் உண்மையையும் பதிய வேண்டிய காலம் நேர்ந்ததற்கு வருந்த வேண்டியதில்லை; திருந்த வேண்டியது நமது கடமை ஆகும்.

திராவிடத்தால் தமிழன் மண்ணை இழந்தான்; மக்களாட்சித் தலையை அடியோடு இழந்தான்; மொழியை இழந்தான்; தன் இன அடையாளம் தெரியாமல் இன்னும் வந்தேறிகளின் வாய்ச் சொல்லே பெரிதென்று சுயசிந்தனையை இழந்து, சுயமரியாதை (தன்மதிப்பு) என்றால் என்ன என்று தெரியாமல், சுயசார்பின்றிப் பிறரைச் சார்ந்து வாழ்கின்ற சாருண்ணியாய் வழ்கின்ற நிலையில் இன்னும் சிலர் இருக்கிறார்கள் என்பதுதான் திராவிட மாயையின் அடையாளமாக உள்ளது.

இந்தியா பல தேசிய இனங்கள் வாழ்கின்ற ஒரு நாடு. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான் தமிழ்த் தேசிய உணர்வில்லாமல், திராவிடன் என்னும் உணர்வில் இருக்கிறான் என்றால் இது எதனால் உண்டான மாயை? அது ஆரியத்தை உள்வாங்கிக் கொண்டு, திராவிடப் போர்வையில் உள்ள தமிழினத் துரோகக் கும்பல் என்பதைத் தமிழர்கள் நன்றாக உணர்தல் வேண்டும்; உணருகின்ற காலம் வந்து விட்டது; உணர்த்த வேண்டிய கடமையும் பணியும் பலருக்கு உள்ளது.

தமிழனின் தடுமாற்றம்

தமிழன், எதையும் நன்றியுணர்வோடு பார்க்கின்ற



படிப்பகம்

www.padippakam.com

பார்வையால் அவனிடம் சில தடுமாற்றங்கள் ஏற்படு கின்றன. தமிழகத்தில் தமிழ் மன்னர் ஆண்டாலும் தமிழ்மொழி கோலோச்சாது, ஆரியமே கோலோச்சியது. ஆரியத்தின் மதக் கொள்கை, சாதிப் பாகுபாடு போன்ற அழிவுக் கொள்கையால் தமிழன் எப்படி எப்படி எல்லாம் அழிந்து வந்துள்ளான் என்று அறிவித்து, தமிழினத்தைத் தெளிவு செய்தது திராவிட இயக்கம்தானே. அந்தத் திராவிட இயக்கமா தமிழனுக்குத் தீங்கு இழைக்கும் என்று நன்றியுணர்வோடு, பாசவுணர்வோடு இன்னும் எத்தனையோ உள்ளங்கள் எண்ணிக்கொண்டு இருக்கின்றன. இந்த எண்ணம் எல்லோருக்கும் தொடக்கக் காலத்தில் இருக்கத்தான் செய்யும். வரலாற்றுப் போக்கைப் பாருங்கள். ஆரியத்தை எதிர்த்தவர்கள் எப்படி ஆரியத்திற்கு வெண்சாமரம் வீசுகிறார்கள் என்று ஆய்ந்து பார்த்தால், அங்கு ஏதோவொரு இனத் துரோகம் (இரண்டகம்) உள்ளடங்கி இருக்கிறது என்பதை உணர இயலும்.

ஒருவன் ஒரு நன்மை செய்தான் என்பதற்காக, அவன் செய்கின்ற தீமைகளை எல்லாம் நன்மை பயக்கும் என்று எப்படிச் சொல்வது? இந்த நன்றியுணர்வு எப்படி மனித குணமாகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நன்றியுள்ளது நாய் என்பார்கள். அதே நாய்க்கு, அதற்குப் பிடிக்காத, ஒத்துவராத ஒன்றைச் செய்து பாருங்கள். தன் எதிர்ப்பைக் காட்டாமலா உள்ளது? காட்டத்தானே செய்கிறது. தீமையை உணர்ந்த நாம், தவறு என்று சொல்லிச் சுட்டிக்காட்டாமல், வெறும் நன்றி உணர்வை மட்டும் கொண்டு நாவாரப் போற்றுவது, எதற்கெடுத்தாலும் வாலை ஆட்டுவது, ஆமாம் போடுவது சுயசிந்தனை உள்ள மானிடப் பண்பாகுமா? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

பெற்ற தந்தையே தனக்கு உதவாத, உகந்த கருத்துக்களை, கொள்கைகளைச் சொன்னால் கேட்க மறுக்கின்ற தமிழன்தான், தமிழ் மகன்தான், ஏதோ நன்றியுணர்வால் நாயினும் கீழாக வேண்டிய அவசியமென்ன? உன்னை ஆரியம் அடிமைப்படுத்தியதைவிட, போலித்திராவிட உணர்வு உன்னை எப்படிப் பாழடிக்கிறது, பாழாக்கியுள்ளது என்பதைத் தடுமாற்றம் இல்லாமல் சிந்தித்துப் பார்!

உன் நன்றியுணர்வால், அதன் செயலால் நீ அழிந்தால் அதை வேண்டுமானால் ஏதோ ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளலாம். அதே போலி உணர்வால் ஓர் இனமே, கேடுற்று, கெட்டழிந்து இனத்தின் அடையாளம் தெரியாமல் இனத்திற்கே இரண்டகம் செய்கின்ற நிலையை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்? ஒரு தனிமனிதனின் அழிவு நடக்கத்தான் செய்யும். ஆனால் ஓர் இனத்தின் அழிவு நடக்கத்தான் செய்யும் என்று வரலாற்று அடிப்படையிலாவது சொல்லியுள்ளார்கள். ஓர் இனம் அழியாது; ஆனால் அழிக்கப் படும். அது திட்டமிட்ட செயலாக இருக்கலாம் அல்லது சுயநலத்தின் பெயரால் இன அழிவு தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஒருபோதும் இனம் அழியாது; அழிக்கப்படும். உன் அறியாமை, நன்றியுணர்வு உன் இனத்தை அழிக்கப் பயன்படுகிறது என்றால், எப்படி ஓர் இனம் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்

தமிழா உனக்குத் தடுமாற்றம் இனியும் வேண்டாம். ஆரியர்கள் இல்லாத ஒன்றான மோட்சத்தைக் கட்டினார்கள். திராவிடர்கள் இல்லாத ஒன்றான திராவிட இனத்தைக் காட்டுகிறார்கள். இரண்டு பேரும் மோசடிக்காரர்கள். இதில் ஆரியன் எதிரி; ஆனால் திராவிடன் துரோகி. துரோகி என்பவன், நம்முடன் இருந்து, நமக்காகவே வாழ்வதாகக் காட்டிக் கொண்டு நம்மை அழிப்பதற்கு அதலபாதாளத்தைத் தோண்டுபவன் ஆவான்.

தமிழா உன் எதிரி யார்? துரோகி யார்? என்று உணர்ந்த பிறகு உன் செயல் திட்டம் தெளிவு, இனச் சேர்க்கை, இன முன்னேற்றம் என்கிற அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள். கடந்த காலத்தில் ஏற்பட்ட சறுக்கல்கள் இனி ஏற்படாமல் காத்துக் கொள்ள கவனமாக இருக்க வேண்டும்.

தமிழனின் இனம் தமிழினமே

எந்த நாட்டு வரலாற்றை நீ புரட்டிப் பார்த்தாலும், அங்குள்ள மக்களின் மொழியின் அடிப்படையை முதன்மையாகக் கொண்டுதான் தேசிய இனங்கள் அமைந்துள்ளன. அந்த அடிப்படையில் பார்த்தால் தமிழனுக்கு இனம் என்று கூறுவது போலி, பித்தலாட்டம், ஏமாற்று, வரலாற்றுப் பிழை, மோசடி என்றெல்லாம் சொல்லத் தகும். ஏமாந்தது போதும்; இனியும் ஏமாற வேண்டாம். தமிழனுக்கு இனம் தமிழினமே ஆகும்.

தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட மொழிபேசுகின்ற மக்கள் வாழ்கிறார்கள். தமிழ் மண்ணை ஆண்ட பல்வேறுபட்ட மொழியுடைய மன்னர்கள் அவரவர் காலத்தில் குடியேறிய மொழியினர் இருக்கின்றனர். மொழி அடிப்படையில் மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட வேண்டும். இன்னும் தமிழ் நாட்டில் ஒரு பகல் மோசடி நடந்து கொண்டுள்ளது. வீட்டிலும் வெளியிலும் தமிழைப் பேசாதவர்கள் மக்கள்தொகை கணக்கெடுப்பின்பொழுது தங்கள் மொழி தாய்மொழி என்று பதிந்து கொள்கிறார்கள். தற்பொழுது சில தமிழர் அல்லாத சாதியினர் தங்கள் தாய்மொழி தமிழ் இல்லை என்று வெளிப்படையாக அறிவிக்கின்ற காலத் தில் வாழ்கிறோம்.

மொழியின் அடிப்படையில் மக்கள் தொகையைக் கணக்கெடுத்து, மக்கள் தொகையின் அடிப்படையில் வேலை வாய்ப்பையும் மற்றும் பல அரசு பலன்களையும் பகிர்ந்து கொள்ளலாம். மாற்று மொழியினருக்குத் தமிழ்நாட்டில் கொடுக்கின்ற வாய்ப்பு, தமிழர் வாழ்கின்ற மற்ற மொழியினப் பகுதியில் தமிழர்களுக்குக் கட்டாயம் வழங்க வேண்டும். அவரவர் இனத்தை எந்தச் சூழலிலும் அடையாளப்படுத்திக்கொண்டு, இனக்கேடு சிந்தனையில்லாமல், ஏமாற்றாமல் இணைந்து வாழ்வதில் எந்தத் தமிழனுக்கும் மாறுபட்ட கருத்து இருக்கக் கூடாது.

சாதிகள் ஒழிக்கின்ற வரைக்கும் சாதி அடிப்படையில் தற்காலிகமாக சலுகைகள் வழங்கலாம். சாதிகள்



படிப்பகம்

www.padippakam.com

ஒழிந்து மொழி அடிப்படையில் இனங்கள் நிற்கும். இனங்கள் அடிப்படையில் உரிமையும் சலுகையும் வழங்கலாம். இனங்கள் அழியாது; அழிக்கவும் கூடாது. ஆனால், இணைந்து இயைந்து வாழலாம்.

கால ஓட்டத்தில் உற்பத்தி உறவு முறையில் இரண்டு பெரும் வகுப்புகள் தோன்றும். ஒன்று உழைக்கும் வகுப்பு. மற்றொன்று உழைப்பைச் சுரண்டும் வகுப்பு. இவைகள் அன்றும் இருந்தன; இப்பொழுதும் இருக்கின்றன. நாம் இன்னும், சாதி யென்ற சாக்கடையிலிருந்து வெளியேற முடியாமல் தவிக்கின்றவர் பல கோடிப் பேர் ஆவர். சாதியைத் தாண்டி இனத்திற்கு வந்தாலும் மாற்று இனப் போராட்டம். இனப் போராட்டத்தில் தெளிவு ஏற்பட்ட பிறகுதான், இனத்தில் வகுப்புப் போராட்டம் சிலருக்குப் புலப்படுகிறது.

அனைத்துப் போராட்டங்களுக்கும் இந்த வகுப்புப் போராட்டத்தின் அகக் காரணம்தான் அடிப்படைக் காரணம். இந்த வகுப்புப் போராட்டத்தை நசுக்கவும், மறைக்கவும் வந்ததுதான் சாதிய அமைப்பு முறை என்பதையும் தமிழினம் மறக்கக் கூடாது. தமிழினத்தை (அதைக்) காக்க வேண்டும். இனத் தெளிவு வேண்டும். வகுப்புப் போராட்டம் தொடக்க காலம், உற்பத்திக் காலம் தொடங்கிய பொழுது, உற்பத்திப் பொருள் யாருக்குச் சொந்தம் என்று பார்க்கின்ற காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. இந்தப் போராட்டத்தை உணர்ந்துவிட்டால் சாதிகள் மறையும்; இனப்பூசல் இராது (இருக்காது) என்று வரலாற்று நோக்கில் உணர வேண்டும்.

வகுப்புப் போராட்டம் ஒழிந்தால் நிலைப்பது இனம். தேசிய இனம் என்பது வரலாற்று உண்மை. இன உணர்வோடு மற்ற இனத்தோடு இணைந்து இருப்போம்.

இனத்தை எக்காரணம் கொண்டும் இழக்க மாட்டோம். ஆரிய மாயையும் திராவிட மாயையும் தமிழினத்தை இனி ஒன்றும் செய்யவிடமாட்டோம். ஆரிய மாயையால் மனம் கெட்டோம்; திராவிட மாயையால் இனம் கெட்டோம். மாறுவது மனம்; சேருவது இனம். மனநலம் மண்ணுயிர்க்கு ஆக்கம்; இனநலம் எல்லாப் புகழும் தரும்.

வாழ்ந்த இனம் வாழும். வழ்க தமிழ்! வளர்க தமிழினம்.

---

■ ஜனாசுகிர்தன்

## எங்கே எனது கிணறுகள்?

வருதல்
எப்போதும் வருதல்
போதல் எப்போதாம்?
வருதலுக்குள்
போதல்
காலமான கதையை
எனது ஆச்சியும் அறியாள்
அப்புவும் அறியார்.

அங்கே ஆச்சி வயலில்
அப்பு சந்தையில்
ஈ மொய்க்கும்
பிலாப்பழத் துண்டுகளோடு

எனது சுவைகள் அங்கே
எனது இனிப்பு அங்கே
இங்கே எனது கிணறின் பெயர்
போத்தல்
பிளாஸ்ட்டிக் போத்தல்

இங்கும்
மனிதக் குரல்களை
நான் கேட்கின்றேன்.
இங்கிருந்தும்
அங்கிருந்து கடைசிக் குரல்கள்
எனக்குக் கேட்கின்றன.

வழி அங்கும் உள்ளது
இங்கும் உள்ளது
எனது ஆச்சியின் விழிக்குள்
தாண்டு கிடக்கும் வழியை...
எங்கு காண்பதாம்?

எனது அப்புவின் விழிகள்
சேமித்த கவிதைகள்
எனது வாசிப்பிற்கு
எப்போதாவது கிடைக்குமா?

நான் நடந்த வழியில்
பல நிழல்களைக் கண்டேன்
நான் நடந்த வழியில்
பல எல்லைகளைக் கண்டேன்
நான் நடந்த வழியில்
பல நிறங்களைக் கண்டேன்
நான் நடந்த வழியில்
பல சிறைகளைக் கண்டேன்

தண்ணீரை மட்டும்
நான் எனது வழியில் காணவில்லை

நான் வந்துவிட்டேன்

போதல்!

அங்கே கிணறுகள் இருக்குமா?



படிப்பகம்

www.padippakam.com

தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு

# "தகுதி–திறமை" என்பது சாதியின் அடையாளம்

■ நிகழ் அய்க்கண்

- பி.ஜே.பி அரசில் நியமிக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் பின்னணி கொண்ட கவர்னர்கள் டிஸ்மிஸ்.
- பி.ஜே.பி அரசில் என்.சி.இ.ஆர்.டி மூலம் பாட நூல்களில் திணிக்கப்பட்ட இந்துத்துவ வரலாற்றுத் திரிபுகளை ஆராய குழு
- கோத்ரா இரயில் எரிப்புச் சம்பவம் மறு விசாரணைக்கு உத்தரவு.

அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு ஊடகங்களில் பி.ஜே.பி அரசால் கட்டமைக்கப் பட்ட இந்துத்துவாவின் புனிதக் கருத்துக்கள் கரைய ஆரம்பித்திருக்கிறது. அதற்குள் தேசிய ஜனநாயக கூட்டணி/பி.ஜே.பி கட்சியினர் தங்களுடைய அதி காரம் நிலை நிறுத்தப்படவும், நிலவும் கட்சி உட்பூசல் களை மறைக்கவும் ஆளும் கட்சியினர்கள் மீது உடனடிப் போருக்குத் தயாராகிவிட்டனர். பசுவதைத் தடைச்சட்டம், அயோத்தி ராமர் கோவில் குறித்து மீண்டும் சூடுபடுத்த ஆரம்பமாகியிருக்கிறது. மேலும் ஆளும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சி களுக்கு இடையே உள்முரண்களை கிளறிவிடும் பணியிலும் தேசிய ஜனநாயக கூட்டணியினர் மற்றும் பி.ஜே.பி-யினர் ஈடுபட்டிருக்கின்றனர். (பீகாரில் லாலு-பஸ்வான்; ஆந்திரத்தில் தெலுங்கானா-காங்கிரஸ்; தமிழகத்தில் திமுக-பாமக /மதிமுக; மகாராஷ்டிராவில் காங்கிரஸ்-என்.சி.பி) பல வெகுஜன பத்திரிக்கைகளுக் கும், தொலைக்காட்சி ஊடகங்களுக்கும் இதில் கணிச மான பங்கு உண்டு. எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பலரும் (இந்த அரசு கவிழும் என்கிற) யூகங்களின் மூலம் ஜோசியர்களாகி விட்டனர்.

இந்துத்துவ வேதங்களையும், புராணங்களையும் ஆய்ந்தால் தனக்குத்தானே முரண்படும் பல செய்தி களைக் கொண்டுள்ளதும், கூறிய பல கருத்துக்களை திரும்பத் திரும்ப கூறுவதையும் அறியலாம். இவ்வகைச் சநாதனச் சிந்தனைப் போக்குடைய இந்துத்துவ வாதிகளின் அரசியல் இயக்கமான பி.ஜே.பி-யின் தலைவர்கள் பலரும் பலவாறாக பத்திரிக்கையாளர்கள் சந்திப்பிலும் வீட்டிலும் ஓய்வெடுக்கும்போதும் செயற்குழு கூட்டங்களிலும் கூறியதையே திரும்பத் திரும்ப கூறி வருவதை அறியலாம். 'மோடி'-விவகாரமே இதற்குச் சாட்சியாகக் கொள்ளலாம். இந்துத்துவவாதிகள், தொலைக்காட்சித் தொடர் களில் ஆபாசக் காட்சிகள் இடம் பெறுவதாகக் கூறி கோஷம் எழுப்புவார்கள். ஆனால் வன்செயலும், ஆபாசமும் நிறைந்த மேலைநாட்டுத் திரைப்படங் களுக்கு அனுமதியளிப்பார்கள். ஓரினச் சேர்க்கையை இந்தியச் சமூகம் ஏற்காது என்பார்கள். ஆனால் இந்துத்துவ சாஸ்திரங்களும் புராணக்கதைகளும் எழுத முடியாத அளவுக்கு ஆபாசங்களையும், வன் முறைகளையும் கொண்டுள்ளது பற்றி வாய்திறக்க மறுப்பார்கள். கேட்டால், சநாதனம் என்பார்கள். சாதி யும், தீண்டாமையும் மனிதகுல இழிவாக இருப்பதை இந்து மதத்திற்குப் பலம் என எண்ணுகிறவர்கள் இவர்கள்தான்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியும், பி.ஜே.பி-யும் தயாரித்துள்ள மே 2004 நாடாளுமன்றத் தேர்தலுக் கான தேர்தல் அறிக்கையில் தலித் மக்களுக்கு தனியார் துறையில் இட ஒதுக்கீடு தருவது குறித்து பதிவு செய் திருப்பதை ஆய்ந்தால்.

பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் அறிக்கை

"தனியார் துறையில் தாழ்த்தப்பட்டவர்கள் - பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஊக்கு விப்புகள் தரப்பட வேண்டும்" என்கிறது.

தேசிய ஜனநாயக் கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் அறிக்கை

"இட ஒதுக்கீட்டுக் கொள்கை கண்டிப்புடன் அமல் படுத்தப்படும். எஸ்.சி/எஸ்.டி-யினருக்கான காலியிடங்கள் மற்றும் பதவி உயர்வுகள் உடனடியாக நிரப்பப்படும்" என்கிறது.

இவ்வாக்கியங்களை கவனமாக வாசித்தால், தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு குறித்து கவனமாக புறக்கணிக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு குறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதால், இந்துத்துவ வாதிகளின், இந்தியத் தொழிற் கூட்டமைப்பினரின், பன்னாட்டுக் கம்பெனிகளின் இந்தியக் கிளைத் தலைவர்களின் கண்களை வெகுவாக உறுத்தியிருக் கிறது.



படிப்பகம்

www.padippakam.com

பி.ஜே.பி - யின் அருண் சோரி

"தனியார் துறையில் இடஒதுக்கீடு, முதலீடு வாய்ப்பை வெகுவாகப் பாதிக்கும்" என்கிறார். அது மட்டுமின்றி, "தகுதி-திறமையின் அடிப்படையில் தான் வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் தொழில் உற்பத்தி பெருகி வளர்ச்சி யடைய இயலும்" என்கிறார்.

இந்தியத் தொழிற் கூட்டமைப்பின் தலைவர்

"தனியார் துறை வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு முறையை அமல்படுத்த வேண்டும் என்ற யோசனையை எதிர்க்கிறோம். இதற்குப் பதிலாக சமூகத்தின் நலி வடைந்த பிரிவினரின் திறனை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு அவர்களை உகந்தவர்களாக தயார்படுத்தலாம். திறமை அடிப் படையில்தான் வேலை. இதை விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை" என்கிறார்.

பன்னாட்டு கம்ப்யூட்டர் நிறுவனங்களில் ஒன் றான 'இன்போசிஸ்' நிறுவன இந்தியத் தலைவரும் தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்தை முன்வைக்கிறார்.

வெகுஜன பத்திரிக்கைகளும் தொலைக்காட்சி ஊடகங்களும் தலித்துகளை தங்கள் நிறுவனங்களில் அனுமதிக்காதது ஊரறிந்த விஷயம். இவைகளும் ஒதுக்கீட்டுக்கு எதிரான விஷயங்களை கட்டமைத்து வருகின்றன. இந்தியாவில் பன்னாட்டுக் கம்பெனிகள் தொழில் தொடங்க அரசின் அனைத்துவகை சலுகை களையும் பெற்றுக்கொண்டு, மக்கள் தொகையில் நான்கில் ஒருவராய் இருக்கும் தலித் மக்களை 'தகுதி-திறமை'-யைக் காட்டி தட்டிக்கழிப்பது, அரசாங்கத் தைப் பொறுப்பாளியாக்கி, தலித் மக்களை ஒதுக்கி வைக்க முயலுவதானது 'சாதி'யின் வெளிப்பாடே யாகும்.

தலித்துகளுக்கு தகுதி-திறமையிருந்தும் தனியார் நிறுவனங்களில் வாய்ப்பளிக்காத எண்ணற்ற நிறு வனங்கள் இந்தியாவில் இருப்பதை யாவரும் அறிவர். தகுதி-திறமையற்ற எண்ணற்ற ஆதிக்கச் சாதியினர் தனியார் துறையில் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றிருப்பது சாதியினால் மட்டுமே.

தலித் மக்களும் இத்தேசத்தின் வளர்ச்சிக்காகவும், நலத் திட்டங்களுக்காகவும், பாதுகாப்புக்காகவும் வரி செலுத்துகிறார்கள். அந்த வரியில் கணிசமான பங்கு சலுகைகளாக பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் போய்ச் சேருகிறது.

'தகுதி-திறமை' என்பதே பார்ப்பனர்களை முன் னிலைப்படுத்துவதற்குப் பின்னப்பட்ட சொல்லாடல் ஆகும். இந்தியாவில் தொழில் தொடங்கியுள்ள பல பன்னாட்டு நிறுவனங்கள் தத்தம் நாடுகளில் சமூக அரசியல் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள இனத்தவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் பன்மைத் துவத்தை கடைபிடித்து வளர்ச்சியுற்றிருக்கின்றன. அருண்சோரி கூறுவது போல, தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு கொடுப்பதினால், அந்நிய நாட்டு முதலீடு வாய்ப்பைப் பாதிக்கும் என்பது அப்பட்டமான 'பார்ப்பனியமே'

மூன்று ஆண்டுகளுக்கு முன் தென்னாப்பிரிக்கா விலுள்ள டர்பனில் நடந்த சர்வதேச நிறவெறி/ இனவெறிக்கு எதிரான மாநாட்டில், இந்தியாவில் நிற வேற்றுமையோ, இன வேற்றுமையோ கடைப்பிடிக் கப்படுவதில்லை எனவும் இது இந்தியாவின் உள் விவகாரம் என்றும் மூடி மறைக்க முயன்றார்கள். அரசி யல் சட்ட காலத்திலும் 'தகுதி-திறமை'யை காட்டி (என்றும் மாறாத நிலைப்பாட்டுடன்) ஒரு சமூகத் தையே புறக்கணிக்க முயலுகிறார்கள்.

பன்னாட்டு நிறுவனங்களும், தனியார் துறை முதலாளிகளும் அரசாங்கத்திடம் வரி ஏய்ப்பதும் வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன்வாங்கி திருப்பிச் செலுத்தாமல் விடுவதும், கருப்புப் பணமாக மாறு வதும், வெளிநாட்டுக்கு மறைமுகமாக ஏற்றுமதி யாவதும் எண்ணிலடங்கா கோடிகளாகும். தகுதி-திறமை இதற்குப் பொருந்துமா?

பங்குச் சந்தைகளில் கொள்ளையடித்தது - கொள்ளையடிப்பது, யூ.டி.ஐ கொள்ளை, இராணுவ ரகசியங்களை விற்பனை செய்வது, லஞ்சமாகப் பெறு வது, வெளிநாட்டிற்கு உளவு, அரசின் சலுகைகளைப் பெற்று அயல் நாட்டில் படித்து அங்கேயே தங்கிவிடு வது. இதில் ஒளிந்திருக்கும் தகுதி-திறமைகள் இதுநாள் வரை இந்திய தேசத்திற்கு கேடு விளைவித்திருப்பது பற்றி வாய் திறப்பார்களா?

இந்தியாவில் பல பொதுத்துறை நிறுவனங்கள் நல்ல லாபத்தை ஈட்டி வருகின்றன. இன்சூரன்ஸ், வங்கிகள், ஓ.என்.ஜி.சி., தொலைத்தொடர்பு, விமானப் போக்குவரத்து ஆகிய துறைகளில் இட ஒதுக்கீடு உண்டு. 'தகுதி-திறமை' இத்தகைய நிறுவனங்களை பேரழிவுக்கு இட்டுச் சென்றுள்ளதா? பல பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு குறைந்த விலைக்கு விற்றது, பொதுத்துறை நிறுவனப் பங்குகளை குறைந்த விலைக்கு விற்றதில் அருண் சோரிக்கு 'தகுதி-திறமை யின்' அளவு யாது?

அமெரிக்கா போன்ற மேலை நாடுகள் கல்வி, கலை, பண்பாடு, தகவல் தொழில்நுட்பம், வணிகம், தொழில் சார்ந்த துறைகளில் சிறுபான்மைப் பிரிவினரான கருப்பின மக்களுக்கும் உரிய பங்கினை அளித்து வருகின்றன. இந்தியாவில் தொழில் தொடங் கியுள்ள மேலை நாட்டுக் கம்பெனிகள், வேலை வாய்ப் புகளில் பன்மைத்துவத்தை தகுதி-திறமையைக் காட்டி நுழைய விடாமல் தடுக்க முயலுவது இந்தியாவிலுள்ள ஆதிக்கச் சாதியினரால் மட்டுமே.

அமெரிக்காவில் இருக்கும் தனியார் துறை நிறுவனங்கள் 'தகுதி' என்பதை கல்வி/பயிற்சி இரண் டிலும், அதிலிருந்து பணியிடங்களிலும் வாய்ப்பு கிடைப்பதுதான் 'தகுதி'யே தவிர வேறல்ல என்கிறது. இந்தியாவிலோ 'சாதியே' அனைத்து வகை தடைக ளுக்கும் ஆதாரமாய் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

உலகமய சூழலில் அரசுத்துறைகள், பொதுத்துறைகள், வங்கிகள், தபால், தொலைபேசி, இன்சூரன்ஸ், கல்வித் துறை, ஹோட்டல்கள் தனியாருக்குத் திறந்து விடப்பட்டதின் மூலம் இட ஒதுக்கீட்டிற்கான தளமும் மிகவும் சுருங்கிவிட்டது. தமிழகத்தில் கூட தலித் மக்களுக்கான பல ஆயிரம் பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே தொடர்கின்றன.

தேசத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது தலித் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுடன் சம்பந்தப்பட்டது. தலித் மக்களை ஒதுக்கிவைத்துவிட்டு 'வளர்ச்சி' என்பது அருண் சோரியின் வர்ணக் காப்புக்கே உதவும். அமைப்பு சார்ந்த அரசுத்துறை, பொதுத்துறை, தனியார் துறைகளில் வேலை வாய்ப்புகள் குறைந்து கொண்டே வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அரசுத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினை முறையாக அமல்படுத்தக் கோருவதும் - தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு வேண்டுவதும் அவசியம். அது மட்டுமின்றி அமைப்பு சாராத விவசாயம் உள்ளிட்ட தொழில்களில் தலித் மக்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களுடைய வேலைப் பாதுகாப்புக்கும், வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கும் வழிகாண முயற்சி மேற்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

'தகுதி-திறமை'யை முன்வைத்து நான்கு வர்ணத்தார்களும் தடுக்க முயலும்போது, 'தகுதி-திறமை' என்னும் அளவுகோலை தகர்த்தெறிந்து தலித் மக்கள் நிருபிக்க வேண்டியிருக்கிறது. இடைவெளியின்றி தொடர்ந்து அனைத்து தளத்திலும் போராடுவது மூலம் மட்டுமே நிரூபிக்க முடியும். தலித் எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும், தலித் அமைப்புச் சார்ந்தவர்களும் ஒருங்கிணைந்து முன்னெடுப்பது அவசியம்.

இறுதியாக வாசகர்களின் சிந்தனைக்காக

- ஊராட்சிகளுக்கு மத்திய அரசின் மூலம் நேரடியாக நிதி ஒதுக்கக் கூடாது. அது மாநிலங்களின் உரிமையை பாதிக்கும் என்றுதமிழகத்திலுள்ள திராவிட-மார்க்சிய இயக்கங்கள் கோரியுள்ளன. பாப்பாபட்டி,கீரிப்பட்டி உள்ளாட்சி தேர்தல் நடத்தவிடாமல் தடுப்பது பற்றி வாய் திறக்காதவர்கள் இதற்கு வாய் திறக்கிறார்கள்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளவேலாயுதபுரத்தில் ஒரு தலித்துக்கு அஞ்சலகத்தில் ஈ.டி-ஆக வேலை கிடைத்துஒரு வருடத்திற்கு மேலாகியும் அந்தகிராமத்தில் உள்ள ஆதிக்க சாதியினர் (இடமோ, வீடோ தராது) பணி செய்ய விடாமல் தடுத்து வருகின்றனர்.

இட ஒதுக்கீட்டின்படி ஒதுக்கப்பட்ட பாப்பாபட்டி, கீரிப்பட்டிகளில் தேர்தல் நடக்கவிடாதபடி தடுப்பது அரசு வேலை கிடைத்தும் பணி செய்ய விடாமல் தடுப்பது ஆகியவை திராவிட இயக்க பாரம்பரிய முள்ள தமிழகத்தில்தான் நடக்கிறது. மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகம் தலித்துகளுக்கான இட ஒதுக்கீட்டினை முறையாக பின்பற்றவில்லை என்பதற்காக, அப்பல்கலைக் கழகத்துக்கு அரசு தரும் நிதியினை நிறுத்தப்போவதாக அறிவித்திருக்கிறது. அரசியல் சட்டத்தின் மூலம் உறுதி செய்ய வழிகள் இருக்கிறது. இங்கு...?!

## என் சாவும் தனியார் மயமா?

■ பெ. தமிழினியன்

படிக்கப்போன
பிஞ்சுகள்
நெருப்பில் மடிந்தன.

நாம் இழந்து போனது
கலெக்டர்களையா
காவல் அதிகாரிகளையா
போராளிகளையா?

கல்வி தனியார் மயம்
எம்வீட்டுக் குழந்தைகள்
உயிர்களுமா
தனியார் மயம்?

## வெண்மணி..குடந்தை..

■ ஆலயம்

குடந்தையில்
பிஞ்சுகளின் மரண ஓலம்...
கீற்றுகளின் மேல்
வெந்து சிதைந்த தோல்கள்
ஊனையாய் இந்திய வரைபடம்
வாய்ப்பாடுகளின்
வசனமாய்... வார்த்தையாய்
வெந்த உடல்கள்

கருகிய மொட்டுக்களின்
ரத்த நரம்புகள்
சாட்டையானது
கல்விக் கூடங்களுக்கு

வெந்த பிஞ்சுகள்
அலறிய சத்தத்தில்
பதுங்கியிருந்த கடவுளர்கள்
சிலிர்த்து தெருவுக்கு வந்தார்கள்

இரக்கமற்றவனின்
பணத்தாசை 'தீ'ணி
காவு வாங்கி குவித்தது
பிஞ்சு உயிர்களை...

வெண்மணியும்
குடந்தையும் ஒன்றே
அன்று கூலிக்காக
இன்று கல்விக்காக



படிப்பகம்

www.padippakam.com

# அப்னா பஞ்சாயத்து

## ஆய்வரங்க நிகழ்வுப் பதிவு

■ ப்ரியங்கா முத்து

27. 7.6.04 ஞாயிறு மாலை 4 மணியளவில் அய்கஃப் ஹவுஸ் (லயோலா கல்லூரி எதிரில்) அரங்கத்தில் புதிய கோடாங்கியில் வெளிவந்த அப்னா பஞ்சாயத்து சாதிச் செய்திகள் கருத்தரங்கம் திரு. வேலுச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எழுத்தாளர் சன்னா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கு இரண்டு ஆய்வுகளாக நடைபெற்றது.

முதல் ஆய்வில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரான இரா. செழியன் அவர்களும், திரு. கிருத்து தாசு காந்தி அவர்களும், எழுத்தாளர் திருமதி. சிவகாமி அவர்களும் கலந்துகொண்டு அப்னா பஞ்சாயத்தின் முக்கியத்துவத்தை விளக்கிப் பேசினார்கள்.

எழுத்தாளர் திருமதி சிவகாமி அவர்கள் இவற்றை சுருக்கமாக அறிமுகப்படுத்தினார்.

1. கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு 29 துறைகளில் பணம் ஒதுக்கப்படுகிறது. இதில் 4 (அ) 5 துறைகளில் ஒதுக்கப்படும் பணம் மட்டும்தான் சேரிவாழ் மக்களுக்கு பங்கு செல்வதாக இருக்கும். ஆனால் 24 துறைகளில் ஒதுக்கப்படும் பணத்திற்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருக்காது.

2. SC/ST மக்கள் உரிமைகள் கேட்டால் மறுக்கப்படுகிறது.

3. சங்கரலிங்கபுரத்தில் ஒரு போலீஸ்காரர் (other caste) கொல்லப்பட்டதற்காக 300 தலித் மக்கள் கைது செய்யப்பட்டார்கள்.

4. அரசாங்கத்தில் உயர்மட்ட கூட்டங்கள் (High power meetings) நடைபெறுவதே கிடையாது.

5. கிராமங்களில் எப்பொழுதும் பகையுணர்வு இருந்து கொண்டேதான் இருக்கின்றது. ஒற்றுமை என்பதே கிடையாது.

6. ஆண்டான் அடிமை முறை இருந்து கொண்டே இருக்கின்றது.

7. பொது சொத்தில் சேரிவாழ் மக்கள் பங்கு கேட்டால் அதில் பங்கு கொடுப்பதே கிடையாது.

8. கிராமங்களில் பஞ்சாயத்துத் தலைவரிடம் துணைத் தலைவர் Blank Cheque-இல் கையெழுத்துப் போட்டு தந்துவிட வேண்டும்.

9. கிராம பஞ்சாயத்துத் தலைவர், கிராமப் பஞ்சாயத்தைக் கூட்டிவைப்பதே கிடையாது. எந்த ஒப்புதலும் பெறுவது கிடையாது. அவர் தன்னிச்சையாகவே செயல்படுகிறார்.

10. கிராம பஞ்சாயத்துக்களை சேரிப் பகுதிகளில் கூட்டுவதே கிடையாது.

11. அப்படி தவறி கிராம பஞ்சாயத்தைக் கூட்டினால் சேரிப்பகுதியில் இருக்கும் துணைத் தலைவருக்கு நாற்காலி கொடுப்பது கிடையாது. அவர்கள் சுயமரியாதை கேள்விக்குறியாக உள்ளது.

12. 1000 பேர்கள் கொண்ட பஞ்சாயத்துக்களில் சிறுபான்மையினராக உள்ள SC/ST களின் அனுமதி இல்லாமலேயே முடிவு எடுக்கிறார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து SC/ST மக்கள் சுயமாக, சுயமரியாதையுடன் வாழ வேண்டும், சேரிகளை மேம்படுத்த வேண்டும் என்றால்,

1. சேரிப்பகுதிகளை தனிப்பஞ்சாயத்தாக அனுமதிக்க வேண்டும்.

2. சேரிகள் என்ற எண்ணமே இவர்களுக்கு இருக்காது.

3. 29 துறைகளுக்கு ஒதுக்கப்படும் பணம் இவர்களாலேயே முழுமையாக சேரிப்பகுதிகளின் வளர்ச்சிக்கு பயன்படும்.

4. இவர்கள் கிராம சபையைக் கூட்டி ஆலோசனைகள் பெற்று பல வளர்ச்சித் திட்டங்களை மேம்படுத்தலாம்.

5. Dr. அம்பேத்கர் அவர்கள் seperate settlement கேட்டு போராடியது போல, சேரியும் seperate panchayat-ஆக பிரிந்தால் சேரிப் பகுதிகள் வளர்ச்சி அடையும். சேரிப் பகுதி மக்கள் சுயமரியாதையுடன் வாழ முடியும்.

6. அப்னா பஞ்சாயத்து என்றால் நமது பஞ்சாயத்து. ஆகவே நமது பஞ்சாயத்து நல்ல ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால், தொப்புள் கொடியை அறுத்தால்தான் தாயும், சேயும் நலமாக எப்படி வாழ முடியுமோ, அதுபோல சேரி வாழ் மக்கள் சுயமாக சுயகௌரவமாக இருக்க வேண்டும் என்றால் சேரிகளை தனிப்பஞ்சாயத்தாக பிரித்தாக வேண்டும்.

திரு. இரா. செழியன்

திரு. இரா செழியன் அவர்கள் குறிப்பிடும் பொழுது, சாதிக்குக் கட்டுப்பட்டவர்கள்தான் கீழே தள்ளப்படுகிறார்கள். தங்களுக்கு தனியாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில் அவர்களால் பஞ்சாயத்துத் தலைவர்களாக வர இயலவில்லை. இது நமக்கு வெட்கக் கேடான, தலைகுனிவான நிகழ்ச்சியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

சாதிகள் ஒழிந்தால்தான் சமுதாயம் பாதுகாக்கப்படும். இல்லை என்றால் சமுதாயம் அழிந்துவிடும்.

யார், யார் உழைக்கின்றார்களோ, பாடுபடுகின்றார்களோ அவர்கள்தான் ஏமாற்றப்பட்டார்கள், ஏழைகளாக்கப்பட்டார்கள். உழைப்புக்கு மதிப்பு தராத நாடு இந்தியாதான். 2000 ஆண்டுகளாக வேரூன்றி இருக்கும் இந்து வேதங்களை எதிர்த்து, பிராமணர்களை வெல்ல முடியாது, ஒடுக்கப்பட்ட மக்களை அரசியல் வாக்கு வங்கியாக மட்டும் பயன்படுத்துகிறார்கள். 1942-43 ஆம் ஆண்டுகளில் ஒரிசாவில் இருக்கும் பூரி ஜெகந்நாதர் கோயிலில் ஆங்கில கவர்னர் மிக மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் அவருடன் வந்த Dr. அம்பேத்கர் அவர்கள் கோவில் வெளியே தடுத்து நிறுத்தப்பட்டார். உழைக்கும் மக்களாகிய ஒடுக்கப்பட்ட மக்கள் திடீரென்று வேலைநிறுத்தம் செய்தால் இந்த நாடு தாங்காது. இந்த நாட்டில் ஜாதிகள் அறவே ஒழிக்கப்பட வேண்டும். மனிதநேயம் மலரவேண்டும், ஜனநாயகம் தழைக்க வேண்டும்.

திரு. கிருத்துதாசு காந்தி

1. திரு. கிருத்துதாசு காந்தி அவர்கள் ஆய்வுரை வழங்கும் போது எந்தெந்த நாடுகள் முன்னேறி இருக்கின்றனவோ அந்த நாடுகளில் சிறந்த பஞ்சாயத்து முறைகள் இருக்கின்றன. நம் நாட்டு பஞ்சாயத்துகள், சாதிய அதிகாரம் கொண்ட, அடிமுறையாக இருக்கின்றது.

2. பஞ்சாயத்துக்களை மூன்று வகையாகப் பிரித்து அடித்தள மக்களுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும், அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு சலுகை அதிகம் கொடுத்தால் பஞ்சாயத்துகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு ஏற்படும்.

3. கிராமங்களை அடித்தளமாக பார்க்க வேண்டும் என்றால் பள்ளர், பறையர், அருந்ததியர், பழங்குடியினர்கள் இந்த கிராமங்களை ஆளுமைத் தளமாக ஆக்கவேண்டும். கிராமங்களில் சிறந்த பஞ்சாயத்து நிர்வாகம் நடைபெறுவதற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்.

4. திரு. காந்தி அவர்கள் கிராமப் பஞ்சாயத்து முறையை விரும்பினார். ஆனால் Dr. அம்பேத்கர் அவர்கள் கிராம பஞ்சாயத்து முறையை எதிர்த்தார். கிராமங்களில் எப்பொழுதும் மேல் சாதி மக்கள்தான் அதிகாரம் செலுத்துகிறார்கள். சேரிமக்கள் எப்பொழுதும் அடிமைகளாக அதிகாரம் அற்றவர்களாக இருக்கிறார்கள்.

5. பஞ்சாயத்துகள் எப்படி செயல்படுகின்றன என்பதை மத்திய/மாநில அரசுகள் கண்காணிக்க வேண்டும். தீண்டாமை ஒழிப்புப் பொறுப்பு இப்பஞ்சாயத்துக்களுக்கு தரப்பட வேண்டும். எங்கெல்லாம் SC/ST- கள் இல்லையோ அவைகள் எல்லாம் பொதுவாகி விடுகிறது. SC/ST-களின் பட்டியல் பொது வளர்ச்சியில் இல்லை. அவைகள் புறம் தள்ளப்படுகின்றன.

தனிப்பஞ்சாயத்து

1. தனிச் சேரிகள் இருக்கலாம்

2. தனி ரோடு இருக்கலாம்

3. தனிச் சுடுகாடு இருக்கலாம், ஆனால் தனிப் பஞ்சாயத்து இருக்கக் கூடாதா? ஒரு வருடத்திற்கு 30,000 பட்டாக்கள் கொடுத்து 3000 சேரிகளை உருவாக்கும் அரசாங்கம், ஏன் 3000 பஞ்சாயத்துக்களை உருவாக்கக் கூடாது என்றார்.

சாதியச் செய்திகள்

இரண்டாவது அரங்கு சாதியச் செய்திகள் தலைப்பின் கீழ் நடைபெற்றது. இவ்வரங்கில் Out Look பத்திரிக்கையின் Chief Journalist திரு. ஆனந்த் அவர்களும், Indian Express பத்திரிக்கை Chief Journalist திருமதி. ராதா வெங்கடேசன் அவர்களும், எழுத்தாளர் குடியரசன் அவர்களும் கலந்துகொண்டு விவாதித்தனர்.

திரு. ஆனந்த்

இன்றைக்கு எல்லா மீடியாக்களும், சாதிய சிந்தனைகளோடும், தலித் மக்களுக்கு எதிராகவும் செயல்படுகின்றன. இந்தியாவில் இருக்கும், செய்தி நிறுவனங்களாக இருந்தாலும், தொலைக்காட்சிகளாக இருந்தாலும் தலித்துகளுக்கு எதிராக நடைபெறும் சாதிய, வன்கொடுமைகளை பிரசுரிப்பதே இல்லை. தலித்துகளுக்கு கொடுக்கப்படும் இட ஒதுக்கீட்டை ஆதரிக்காவிட்டாலும் பரவாயில்லை. எதிர்ப்பதிலேயே முதன்மையாக இருக்கின்றன. 1996-ஆம் ஆண்டு வெளிநாட்டு பத்திரிக்கையாளர் கணக்கெடுக்கும் பொழுது, இந்தியாவில் தலித்துகளே பத்திரிக்கைத் துறையில் இல்லை என்றார்.

இந்து பத்திரிக்கை

இந்து பத்திரிக்கை 125-வது ஆண்டு விழாவை கொண்டாடிய பொழுது, காந்தி போட்டோவை போட்டு அரைப் பக்கத்திற்கு விளம்பரம் கொடுத்தது. ஆனால் அம்பேத்கரை கண்டு கொள்ளவே இல்லை. அதே நேரத்தில் Pepsi Cola பாட்டிலில் ஒரு கரப்பான் பூச்சி இருந்ததாக முதல் பக்கத்தில் செய்திகளைப் போடுகிறார்கள்.

நான் ஒரு பிராமின் Journalist ஆக இருந்தாலும் மற்றொரு சமுதாயப் பெண்ணை திருமணம் செய்த பின்புதான் சாதியக் கொடுமைகள் எந்த அளவுக்கு கொடுமையாக இருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். ஒரு சில இந்து பிராமின்கள் நடத்தும் பத்திரிக்கைகளில்கூட தலித்துகளுக்கு இடம் கொடுப்பார்கள். ஆனால் தினத்தந்தி போன்ற பத்திரிக்கைகள் தலித்துகளை அங்கீகரிப்பதே இல்லை. அவர்களுடைய சாதியையும், தலித்துகள் இல்லாத மற்ற சாதிகளையும் சேர்ந்தவர்கள் மட்டும்தான் அவர்கள் நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள்.

பத்திரிக்கைத் துறை

தலித்துகள் எல்லா முன்னணிப் பத்திரிக்கை நிறுவனங்களிலும் Journalist-ஆக வரவேண்டும். தலித்துகளுக்கு பத்திரிக்கைத் துறையில் பிரதிநிதித்துவம்



படிப்பகம்

www.padippakam.com

தரவேண்டும். தலித்துகள் ஒற்றுமையாக இருந்து உரிமைக்கு போராட வேண்டும். அனைவரும் கல்வி கற்க வேண்டும். பத்திரிக்கைத் துறையை தலித்துகளே நடத்தி முதலாளிகளாக வரவேண்டும்.

நாம் ஆங்கிலப் பத்திரிக்கைகளை வேண்டுமானால் புறந்தள்ளலாம். ஆனால் ஆங்கிலப் பத்திரிக்கையின் கிட்டத்தட்ட தமிழாக்கமாக வரும் தினமணி போன்ற பத்திரிக்கைகளை தலித்துகள் படிக்கத்தான் செய்கின்றனர். அதனால் தலித் மக்களின் சிந்தனை திசை திரும்பத்தான் செய்கிறது. ஆனந்த் மற்றும் ராதா வெங்கடேசன் போன்றோர்களே பேசும் போது The Hindu & The New Indian Express போன்ற பத்திரிக்கைகள் பிராமணப் பத்திரிகைகள் என்றனர். நாட்டில் இரண்டு சதம் உள்ளவர்களின் நலனுக்கு அரசுப் பணம் "விளம்பரம்" மூலம் பத்திரிக்கைகளுக்கு செல்கிறது. இதை மறு ஆய்வு செய்து, அரசானது விளம்பரத்திற்கான தொகையினை 18% தலித் மக்களின் விகிதாச்சாரப்படி தலித் பத்திரிக்கைகளுக்குத் தருமேயானல், தலித் பத்திரிக்கைகள் நாளிதழ் போன்றவற்றைக் கொண்டுவர ஏதுவாக அமையும்.

எழுத்தாளர் குடியரசன்

இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், அவுட் லுக் போன்ற பத்திரிக்கைகள் வாயிலாக மட்டும்தான் செய்திகளை பிரசுரிக்க வேண்டும், தெரிந்துகொள்ள வேண்டும் என்று இல்லை. நம் எண்ணங்களை மாத/வார இதழ்களோடும் தெரிவிக்கலாம். அம்பேத்கர், பண்டிதர் போன்றோரின் எழுத்துக்கள் இன்றும் நூலாகத் தொகுக்கப்பட்டு மக்களின் தேவைக்கு வைக்கப்பட்டுள்ளது. அதுபோல, தலித்துகளுக்கான alternate media உருவாக்க வேண்டும்.

ராதா வெங்கடேசன் *(இந்தியன் எக்ஸ்பிரஸ்)*

நான் ஒரு Chief Journalist-ஆக இருக்கின்ற காரணத்தால் பல இடங்களுக்குச் சென்று செய்திகளை சேகரிக்க செல்லும்பொழுது, தலித் மக்கள் எந்த அளவுக்கு மனரீதியாக, உடல்ரீதியாக, பொருளாதார ரீதியாக, வன்கொடுமையால் பாதிக்கப்படுகிறார்கள் என்று நேரடியாகப் பார்க்கிறேன். அப்படி பாதிப்புக்கு உள்ளாகும் பொழுது அந்த செய்திகளை நாங்கள் சேகரித்துக் கொண்டு வந்து கொடுத்தால், அதை முக்கிய செய்தியாக போடுவதே கிடையாது. அதற்கு முக்கியத்துவமும் கொடுப்பது கிடையாது.

இந்திய சுதந்திர நாளன்று மதுரை அருகே ஒரு பஞ்சாயத்துத் தலைவர் தேசியக் கொடியை ஏற்றக் கூடாது என்று செருப்பால் அடித்த செய்தியை நான் கஷ்டப்பட்டு திரட்டிக் கொண்டு வந்து கொடுத்த பொழுது அதை முக்கியச் செய்தியாக முதல் பக்கத்தில் போடாமல் 5 & 6-ஆம் பக்கத்தில் போட்டார்கள். Bonded labour-களுக்கு முக்கியச் செய்தி கொடுப்பது கிடையாது. SC/ST-களுக்கு மீடியாக்களில் பிரதிநிதித்துவமே இல்லை. அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதே கிடையாது. ஒரு குறிப்பிட்ட சமுதாயமான நாடார்கள் நடத்தும் தினத்தந்தி அதிகமாக விற்பனையாகிறது. அதேபோல் அதிகமாக மக்கள் தொகை கொண்ட தலித்துகள் நாளிதழ் நடத்தக் கூடாது. தலித்துகள் பிரதிநிதித்துவம் இல்லாத செய்தித்தாள்களில் தலித்துகளுக்கு எதிராக வரும் செய்திகளை எப்படி தடுத்து நிறுத்துவது.

இங்கிலாந்து போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல் பிரச்சினைகளை முக்கியச் செய்தியாக போடுகிறார்கள். நிர்வாகம், ஊடகங்கள் போன்ற இடங்களில் உயர்சாதியினர்தான் இருக்கிறார்கள். ஊடகங்கள் எல்லாவற்றையும் Expose செய்யும் கருவியாக இருக்கின்றன. அரசாங்கம் குழுக்களை அமைத்து தலித்துகளுக்கு ஊடகங்களில் தனி பிரதிநிதித்துவம் தரவேண்டும்.

நிகழ்அய்க்கண் நன்றிகூற கூட்டம் முடிவுக்கு வந்தது.

---

# சாம்பல் பாட்டு

■ **கார்க்கிராசன்**

தீயின் நாவால்
மரணவோலை
வாசித்தது
பாடசாலை!

தாய்மையின்
கருவறை மொட்டுக்கள்
கருகின கருகின
கல்வியறையில்
கரிக்கட்டைகளாய்!

மரண பதிவேட்டில்
உயிர்களின் வருகை
தொண்ணூறு
கூட்டலா கழித்தலா
மரணம்?
சொற்களில் நிரப்பமுடியா
மனித சோகம்!
வெப்பம் சுமந்து வரும்
காற்றில்
பிஞ்சுகளின் ஓலம்
சாம்பலானது
புல்லாங்குழல்!



படிப்பகம்

www.padippakam.com

# அப்னா பஞ்சாயத்து

(27.6.2004 அன்று அய்கஃப்பில் நடந்த ஆய்வரங்கில் ஆற்றிய உரையின் கட்டுரையாக்கம்)

■ இரா. கிருத்துதாசு காந்தி

பட்டியல் இனத்தவர்க்கென்று தனியான அதிகாரப் படைப்பு என்று கோட்டால் மட்டும் இது 'பிரிவினை வாதம்', 'குடிகளைப் பிளக்கும், பொது நலனைக் குலைக்கும்' என்ற எதிர்ப்புகள் இந்த நாட்டில் சட்டெனச் சரமென வெடிக்கும். இந்த சூழலில்தான் திருமதி. சிவகாமி அவர்கள் 'அப்னா பஞ்சாயத்தில்' (புதிய கோடாங்கி...) எல்லா ஊர்களிலும் தலித்துகளுக்கென்று தனிப் பஞ்சாயத்துகளைக் கட்டமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்.

பஞ்சாயத்து ஆட்சிமுறையைப் பற்றி வெவ்வேறு பார்வைகள் உள்ளன.

- அதிகாரப் பரவலாக்கலின் ஒரு வலுவான களமாகப் பார்ப்பது ஒரு பார்வை.
- அடித்தள மக்களின் ஆளுமைத் தளமாகப் பஞ்சாயத்தைப் பார்ப்பது ஒரு பார்வை.
- ஒருமித்த மக்கள் தொகுப்பைக் (Homogenous Demographic Unit) கொண்டது என்ற எண்ணத்தில் பஞ்சாயத்தை நிர்வாக அமைப்பிற்கு ஏற்ற அலகாகப் பார்ப்பது ஒரு பார்வை.

மேலோட்டமாக அல்லது வெறுங் கோட்பாடாகப் பார்க்கும்போது இப்பார்வைகள் மூன்றும் குடியாட்சிக்கு முற்றிலும் ஏற்பான கருத்தோட்டம் கொண்டவையாகவும், நடைமுறையில் பராவிய குடி மக்களுக்கு நலம் பயக்கத்தக்கவையாகவும் தோன்றும்.

கருத்தளவில் பிற உலக நாடுகளில் மக்கள் தொகுப்பு வாழும் சமூக வாழ்க்கைச் சூழலில் இவை நடைமுறையில் சமத்துவம் படைக்கும் அதிகாரப் பகிர்வாக அமையலாம். வளர்ச்சியற்ற அனைத்து மேலை நாடுகளிலும் ஊராட்சி நிர்வாக நடைமுறையே இருந்து வருவதைக் காண முடியும். ஆனால் அதே நடைமுறை அதேவிதமான உறுபலனை, சமத்துவ ஈவை இந்தியாவில் கொண்டு வருமா என்பதற்குத்தான் இந்நாட்டில் உறுதி இல்லை.

அம்பேத்கர் எச்சரித்தது போல, எப்படி ஒரு குடியாட்சி அரசால் இந்தியாவிலுள்ள பட்டியல் இனத்தவர்க்கு 50 ஆண்டுகளுக்குப் பிறகும் முழுமையான விடுதலையைக் கொண்டுவர முடியவில்லையோ, அதேபோன்று அடித்தளங்களுக்கு ஆதாரமாக இருக்கும் என்ற திறல் படைத்த பஞ்சாயத்து ஆட்சி முறையும், பட்டியல் இனத்தவர்க்கு விடுதலையையும், தன்னாண்மையையும், மாண்பையும், முன்னேற்றத்தையும் கொண்டுவராது என்பது பட்டியல் இனத்தவரின் அச்சமாக இருக்கிறது.

அதிகாரப் பரவல் பஞ்சாயத்துக்களில் எந்த அளவு இருக்கிறது? பஞ்சாயத்து கடமைகளை விரித்தால் மேற்பார்வையிடல், விழிப்புணர்வு தரல், கருத்துரைத்தல், அமைதி காத்தல், நல்லுறவு வளர்த்தல் என்று அறநெறிச்சாரமாகத் திட்டு திட்டாகத் தெரியும். திட்டமிடல், திட்டங்களுக்கு இசைவளித்தல், அவற்றை நிறைவேற்றல், நிறுவனங்களையும் சொத்துக்களையும் நிர்வகித்தல், வரி விதித்தல், வரி வசூலித்தல் என்ற நிதி ஆதாரங்கள், அதிகாரங்கள் ஆங்காங்கே சொட்டு சொட்டாகத்தான் பஞ்சாயத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும்.

ஆகவே இன்றைய இந்திய ஊராட்சி, மேலை நாடுகளைப் போல நிதி வளமும், தன்னாண்மையும் கொண்ட இறையாண்மை மிளிரும் அதிகார மையங்களாக ஓங்கி வளரவில்லை. எனினும், பஞ்சாயத்துத் தலைமைப் பீடங்களை எய்தியவர்கள் உள்ளூரில் சமுதாய ஆட்சி ஒச்சும் வலியவராக உருவாகுகிறார்கள் என்பதை ஓரங்கட்ட முடியாது. இந்தியாவில் சமுதாய ஆட்சி சாதீய ஆட்சியே என்பதால் பஞ்சாயத்து ஆட்சி சாதீய ஆட்சிக்கு எருவிடுகிறது என்பதை நாம் உற்றுணரல் ஆகும். இந்த சாதீய உள்ளாட்சியின் வலு பட்டியல் இனத்தவர்க்கு பளுவாகிறது.

இதே போன்றுதான் பஞ்சாயத்து அமைப்பு அடித்தள மக்களுக்கு, அதாவது கிராமத்து மக்களுக்கு, அடைக்கலம் தரும் என்பது சரி எனினும், கிராமத்து மக்களிலேயே மேக்குல கீக்குல படிமத் தளங்கள் வன்கண்ணோடு இருக்கையில், எந்த அடித்தளம் பஞ்சா யத்து ஆட்சியைக் கைக்கொள்ளப் போகிறது?

அடிமையின் ஆண்டை இன்னொருவனின் அடிமையாகக் கையேந்தி இருக்க வேண்டிய நிலை இருப்பின், முழு அதிகாரம் படைத்த மேல் ஆண்டைக்கு இந்த கீழ் ஆண்டை ஓரளவு வெறி குறைந்தவனாக இருக்கலாம். கொத்தடிமை தன் ஆண்டையின் வல்லந்தங்களைத் தணிக்க இன்னொரு மேலாண்மையிடம் முறையிட ஒரு வாய்ப்பாவது இருக்கும். இதே நிலையைத்தான் அம்பேத்கர் 'பட்டியலின விடுதலையை இந்தியச் சாதிகளிடமிருந்து பெறும் முன்னர், இந்தியச் சாதிகள் ஆங்கிலேயனிடமிருந்து விடுதலை பெறுவது, மேலும் சூது சூளும் என்று படம்



படிப்பகம்

www.padippakam.com

பிடித்தார். இதே பார்வையை கிராம/பஞ்சாயத்து ஆட்சி முறையிலும் வைத்தார். பஞ்சாயத்து ஆட்சி பட்டியல் இனத்தவர் மீதான அடக்கு முறையை மேலும் வளர்க்கும் என அச்சம் கொண்டார்.'

மூன்றாவதாக இந்திய கிராமம் எனும் நிலவியல் அமைப்பு ஒருமித்த, ஒன்றிய, ஒன்றுபட்ட, ஒரே தரமான, ஒரே சமத்துவ செல்வம் அல்லது செல்வாக்கு கொண்ட மக்கள் திரட்டைக் கொண்டது என்ற கற்பனைக் கற்பிதம் காந்தியிடமிருந்து எல்.சி. ஜெயின் வரை தெரிந்தும் தெரியாதவர் போல் ஓதப்பட்டு வந்துள்ளது. இந்த மாயையைத்தான் அம்பேத்கர் பிட்டு பிட்டு உடைத்துச் சொன்னார். கிராமத்தில் ஒருமிதம் என்ற பெருமிதம் இல்லை; பொது என்ற ஏதும் இல்லை. ஊர், சேரி என்ற பிளவுதான் எங்கெங்கு காணினும் கிராமச் சக்தியாக சகதியாக இருக்கிறது என்பதை உணர்த்தினார். ஆகவே ஒருமித்த பொது ஏதும் இல்லாத பஞ்சாயத்து பொதுநலன் படைக்கும் ஒரு நிர்வாக அலகாக மிளிருவது, சாதி ஒழியுமட்டும் ஆகாது என்பதை நாம் உணர மறுக்கலாகாது.

மேலே கண்ட மூன்று பார்வைகளின் ஆய்வின் தெளிவில் ஏன் பட்டியல் இனத்தவருக்குத் தனி ஆட்சி முறைகள் அல்லது தேர்வு முறைகள் கோரப்படு கின்றன என்ற தாக்கம் விளக்கும். 'அப்னா பஞ்சாயத் தின்' நியாயம் புரிபடும்.

தனித்து கேட்கப்படும் உரிமைகள் யாவும் பிரி வினை வாதம் என்றுமாகாது; ஒற்றுமைக்கு உலை யுமாகாது; கூட்டு வலுவைக் குறைப்பதுமாகாது.

பெண்ணுரிமை ஆணைத் தகர்க்க அல்ல; கூட்டு இல்லறம் இனிக்க; கூட்டுச் சமுதாயம் வலுப்பெற.

குழந்தை உரிமை பெற்றோரைப் புறக்கணிக்க அல்ல; வளரும் சமுதாயம் வலிமையோடு துலங்க.

அதேபோல பட்டியல் இனத்தவர்க்குத் தனிப் பஞ்சாயத்து என்பது கிராமத்தில் பிளவை உருவாக்க அல்ல; உள்ள பிளவின் தினவைக் குறைக்க. கிராமத்தின் கூட்டு வலிமையைக் குறைக்க அல்ல; ஊளைச் சதைக் குவிப்புகளைக் குறைத்து மொத்த உடலைச் சீரான நிலைக்குக் கொண்டுவந்து பொது எழிலைக் கூட்ட.

இந்திய சாதீய மனத்திற்கு ஒருசாடிய நோக்கு ஒன்றுண்டு. இதில் பொது நோக்கு இல்லை; ஆனால் இவர்களுக்கெல்லாம் இது பொதுவாக இருப்பதால் சாதீயப் பொதுநோக்கு என்று இதைச் சொல்லலாம். இந்த மனத்தின் கோட்பாடாவது:

"பொது வளர்ச்சியில் பட்டியலின மேன்மை அடக்கம்; பட்டியலின வளர்ச்சியில் பொது மேன்மை நிறைவேறாது"

"பொது வளர்ச்சி பட்டியலினத்தைப் புறம்படுத் தாது; பட்டியலின வளர்ச்சி பொதுவிற்குக் குந்தக மானது"

"பொது வளர்ச்சி ஒன்றிணைப்பது; பட்டியலின வளர்ச்சி பிரிவினைப்படுத்துவது"

**தனித்து கேட்கப்படும் உரிமைகள் யாவும்**
**பிரிவினைவாதம் என்றுமாகாது;**
**ஒற்றுமைக்கு உலையுமாகாது;**
**கூட்டு வலுவைக் குறைப்பதுமாகாது.**

**பெண்ணுரிமை ஆணைத் தகர்க்க அல்ல;**
**கூட்டு இல்லறம் இனிக்க;**
**கூட்டுச் சமுதாயம் வலுப்பெற.**

**குழந்தை உரிமை பெற்றோரைப்**
**புறக்கணிக்க அல்ல;**
**வளரும் சமுதாயம் வலிமையோடு துலங்க.**

இந்த நோக்கு புரையோடியிருப்பதால்தான் செய்தியாளர்களும், அதிகாரிகளும் "பொது மக்களுக் கும் அரிசனங்களுக்கும் மோதல்"; "பொதுப்பாதையில் அரிசனர் நடக்கக்கூடாது எனத் தடுக்கப்பட்டனர்"; 'பொதுக் கிணற்றைத் தாண்டி இருப்பது அரிசனத் தெரு' 'அரிசனங்களுக்கு எதிராக ஊரார் புகார்' என்றவாறு எழுதுகின்றனர். பொதுத் தொகுதியில் பட்டியல் இனத்தவர்க்கு டிக்கெட் தரலாகாது என்பது அனைத்து அரசியல் கட்சிகளின் நடைமுறைத் தத்துவ மாக இருப்பதும் இந்தப் புரையோடிய பாடத்தால் தான்.

ஆகவேதான் கிராமங்கள் எல்லாம் பொதுவான ஒருமித்த மக்கள் தொகுப்பைக் கொண்ட அலகு என்ற நினைப்பில் பஞ்சாயத்திற்கு அதிகாரம் படைக்கப்படு கையில், அந்தப் பொதுப் பஞ்சாயத்தில் பட்டியல் இனத்தவர் புலப்படமாட்டாது நினைப்பொழிந்து போவர் என்ற உண்மை உடைத்துச் சொல்லப்படுகிறது சிவகாமியின் அப்னா பஞ்சாயத்தில்.

தனித்தொகுதி என்று கேட்பது தனி வல்லாண்மை பெற்ற தனி இனமாக வளர்வதற்கல்ல; உரிமைகளை மறுக்கும் வலியார்க்கிடையில் சமத்துவம் பெறு வதற்கே என்பதை உணரலாகும். வல்லந்தமாகப் பிறரை மேலாண்மை செய்ய அல்ல; மேலாண்மை செய்வோருக்கு ஈடாகத் தாமும் தன்னாண்மை பெற வேண்டும் என்பதற்காக என்பதை உணரவேண்டும்.

தனித்தொகுதி என்றால் மட்டும் மூச்சுவிடைப் போர் இந்த நாட்டில் பட்டியலினத்தவர்க்குச் செய் ததும், செய்து தந்ததும், செய்வதும், செய்து தருவதும் எவை எவை தெரியுமா?

தனிக் குடியிருப்புத் திட்டம், தனிப்பள்ளிகள், தனி விடுதிகள், தனி மயானங்கள், தனிப் பாதைகள், தனிக் குழாய்கள், தனிக் கோயில்கள்.

பட்டியலினத்தவர்க்குப் பொதுக் கோவில் படைக்க மனமில்லாதவர், பொதுப் பாதையைவிடத் தனிப் பாதையே மயானத்திற்கு ஏற்ற பாதை என்பவர், தனிப் பள்ளிகளையும், விடுதிகளையும் அமைக்கச் சற்றும் மனங்கலங்காதவர், அரசியல் அதிகாரம் என்று



படிப்பகம்

www.padippakam.com

வரும்போது மட்டும் தனித் தொகுதி என்றால் வயிறு கலங்கி எருவுவது ஏன்? நிதி அதிகாரம் படைக்கத் தனியாக நிதிப் பகிர்வு (சிறப்பு உட்கூறுத் திட்டம் - Special Component Plan) என்றால் மட்டும் முகஞ் சிவந்து சலிப்பதேன்?

தலைமைச் செயலரான ஒருவர் சிறப்பு உட்கூறுத் திட்டத்திற்கு ஏன் தேவையான நிதி ஒதுக்கவில்லை என்று கேட்டதற்கு "எங்களுக்கு இதைவிட முக்கிய துறைகளைப் பார்க்க வேண்டி உள்ளது (There are other higher priorities) என்றார். அவரது சாதியக் கணிப்பில் பட்டியலினம் தவிர பிற பொதுத் துறைகளெல்லாம் (வேளாண், தொழில், கல்வி, எரிசக்தி, போக்குவரத்து என்றவாறு) பொது மக்களுக்கும், பொதுநலனுக்கும் மேலான கவனங்கொண்டவை என்று அவர் கூற வருகிறார். இதைத்தான் முன்பு சொன்னோம். பட்டியலின வளர்ச்சியில் பொது நன்மையை இவரெல்லாம் காணமாட்டார் என்று சிறப்பு உட்கூறுத் திட்டம் கூறுவதெல்லாம் எல்லாத் துறைகளிலும் பட்டியல் இனத்தவர்க்கு உரிய பங்களிக்கத்தக்க வகையில் ஒவ்வொரு துறையிலும் நிதிப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் இந்தத் தலைமைச் செயலர் போன்றோரெல்லாம் ஒரு ரயில் துறையில், ஒரு விமானத் துறையில், ஒரு அறிவியல் துறையில், ஏன் ஒரு கல்வித் துறையில், ஒரு வேளாண் துறையில் கூட பட்டியல் இனத்தவர்க்கு ஒரு பங்கேற்பு இருக்க முடியும் என நம்ப இயலாதவர்; நம்பினாலும் நிதியாக்கம் தர மதியில்லாதவராக நிர்வாகத்திலும், திட்ட அமைப்புகளிலும், அரசியலிலும் இருக்கக் காண்கிறோம்.

ஒரு பொதுத் தலைமையான தலைமைச் செயலரே மறுதலிப்பாளர் என்றால் தொழில் துறைக்கான தனிச் செயலரிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்? ஆகவேதான் சிறப்பு உட்கூறுத் திட்டம் நிதிப் பகிர்வைப் பட்டியலினத்தவர்க்கென்ற தனித்துறைச் செயலரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை வைப்பது.

அதனால்தான் பொதுக் கிராமப் பஞ்சாயத்து என்றில்லாமல் தனிப் பஞ்சாயத்தாக அப்னா பஞ்சாயத்து அமைக்க வேண்டும் என்பது. •

# கனவுகளைக் கடந்தவர்கள்

**பாரதி நிவேதன் கவிதைகள்**

I

முதல் பனித்துளியை
கனாக்கலக்க வைத்திருக்க
உன்னிடம் செலுத்த வேண்டிய
வரிபற்றி அறியேன்

திரும்பா பயணத்தின் பிரக்ஞையுடன்
கிடைத்ததில் பற்றிப் பேந்துவது
இம்மட்டிலுமென ஏதுவில்லை பேச

தோல்விகளே.
பகலை இரவாக வரிப்பதன்
கவசம் பற்றி
உனக்கு அனுபவப்படுத்த

உச்சிமுகர் இழைவில்
தொடுகைப் பரவலின் திரியடக்கி
காற்று வாங்கலாம்
கடல் முகடு தொட ஏங்கலாம்

அங்கே நெளிகிறது
யாரோ தடுத்தும் மீறி
கசியும் கருணையின் ராச்சியம்

II

கண்களைச் சந்திக்காமல்
பதனப்படும் அமைதியில்
துளிர்க்கவெனவே
பட்ட மரத்திற்கான ஈரப்பாடல்

கல்வீடின் தோட்டம் தகைப்பில்
பருகிக் கொள்ள எப்பொழுதும் உன்பிற

சாலையைக் கடக்க உன் கரம்பிடிக்கவும்
தூணென்று தொட்டு கேலிக்கவும்
நாள்காத்து வெளிச்சமிக்கும் உன் மின்மினி

கீழிறங்கும் மெதுவர்னமும்
மேல் துருத்தும் மலைமுலையும்
அசையா தூரத்திரையை கலைக்கும் மைனாவும்
கீழே சாலை நெளிவும்
நீயற்றறியாது இயற்கை

குளிரூட்டி மேகத்தில் றெக்கைச் சிலுப்பி
பனைக்கு கீழான விடுதியின் முன்பாக
தனிப்பாடலைக் கைக்கோர்த்து
நனைந்து செல்லுவேன் நீயிருக்கும் இதமாகி. •



படிப்பகம்

www.padippakam.com

■ கோபு

# தகர்வுறும் வாழ்வு

## I. வியாதி

ஆதாரமற்ற பல விஷயங்கள் ஏதோ சில காரணங்களால் உண்மையென வெகுமக்களால் பலகாலம் நம்பப்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டுகளாக 'படித்தவன் தவறு செய்யமாட்டான் *(படித்தவன் தவறு செய்தால் 'ஐயோ'வென்று போவானாம்!)*, வறுமைதான் திருட்டுக்குக் காரணம் முதலியவை. மேலோட்டமாகச் சிந்தித்தால்கூட இதிலுள்ள ஓட்டைகள் பளிச்சென்று தெரியக்கூடும். நம்பிக்கைகளுக்கு மாறான நடைமுறை உண்மைகளால் ஏற்படும் அதிர்ச் சியை (1) வறுமையென்பது சமூக வாழ்வின் ஒரு அவலம்தான். (2) கல்வி என்பது தன்நலம் சார்ந்த ஒன்றுதான் என்கிற விவரங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் தாங்கிக் கொள்ளலாம்.

இக்கோடை காலத்தின் தொடக்கத்திலேயே சென்னையின் தொற்றுநோய் புள்ளி விவரங்கள் நம்மை பயமுறுத்த ஆரம்பித்தன. அய்நூறுக்கும் மேற்பட்டோர் சின்ன அம்மை (chicken fox) நோயால் பாதிக்கப்பட்டதாகவும், இந்நோய்க்கு எதிரான தடுப்பூசி ரூ. 1,500 மதிப்புடையதென்றும், இது விலையுயர்ந்த மருந்தாக இருப்பதால் ஏழை, எளியவர்களுக்கு இலவசமாக வழங்க முடியாதென்றும் மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கப்பட்டது.

நோய் போன்ற துன்பங்கள் சராசரி வாழ்வின் ஒரு பகுதி என்றானபின் அதை எங்கனமேனும் எதிர்கொள்ள நம்மைத் தயாரித்துக் கொள்ள வேண்டிய நிலையில் சுகாதாரத்துறைக்கான பெரும் ஒதுக்கீடுகளுக்கும் அப்பாற்பட்டு தர்மாஸ்பத்திரிகளின் இன்றைய நிலவரங்கள் மிகவும் கவலையளிப்பதாக உள்ளன. நோய்க்கான உண்மைக் காரணங்களைக் கண்டறியும்போது அதிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியாத நம் கையறு நிலையும், புண்ணுக்குப் புனுகு பூசும் வேலையாக மருந்துகளை நாடி ஓட வேண்டிய இச்சூழ்நிலைகளுக்கு நாம் பொறுப்பல்ல என்பதுடன் அத்தகைய மருந்துகள் நோய் நீக்கும் தன்மையைக் காட்டிலும் நோய் உண்டாக்கும் திறனுடையவை என்பதை அறிய நேரும்போது ஏற்படும் அதிர்ச்சிதான் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

ஒரு மனிதன் பிறந்து வளரும் போக்கில் தடுப்பூசி போடுவதென்பது வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு அங்கம் என்றாகிவிட்ட பின்பும் கோடை மற்றும் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் வருவது இயல்புதான் என்கிற விளக்கமும் சேர்த்தே வழங்கப்படுகிறது. கிருமிகள் நம்மைத் தாக்கும்போது நம் உடல் தானாகவே நோய் எதிர்ப்புத் திறனை ஊக்குகிறது. அத்தகைய இயல்பான நோயெதிர்த் திறன் நிலைத்த தன்மையுடையது. மேலும் பலவகையான வியாதிகளை அண்டவிடாமல் தடுக்கும் திறனுடையது. எடுத்துக்காட்டுகளாக மற்றவர்களைவிட மணல்வாரி அம்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிலவகைப் புற்றுநோய்களும், தோல்நோய்களும், எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களும் குறைவாகவே வருகின்றன. புட்டாலம்மையால் (mumps) பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஓவரியன் கேன்சர் குறைவாகவே வருகிறது.

தடுப்பூசி நோயெதிர்த் திறனை (Antibody) அதிகரிக்கும் பொருட்டு செயற்கையாக வழங்கப்படும் ஒரு வகைப் புரதம் ஆகும். இது குறைந்த காலத்திற்கே பயனளிக்கும். இத்தகைய தற்காலிக ஏற்பாடு 6 முதல் 10 வருடங்களுக்கு திறனுடன் இருக்கும். ஆனால் இத்தடுப்பூசி வைரஸ்கள் பல ஆண்டுகள் கழித்து உயிர் பெற்று நோயெதிர்த் திறனைச் சீர்க்குலைக்கும் விதமாகவும், அக்கி போன்ற நோய்களைத் தோற்றுவிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

தேர்தலில் வாக்களிக்கும் முஸ்தீபில் போலியோ போட்டுக் கொள்ள மறந்துவிட வேண்டாம் என்கிற வகையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. இவை இரண்டு விஷயங்களைச் சொல்கிறது. (1) போலியோ மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். (2) வாக்களிக்க மறக்க வேண்டாம் என்பவை. அரசுக்கு மக்கள் மேல் எவ்வளவு அக்கறை.

அமெரிக்காவில் 1973 முதல் 1983 வரையில் போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களில் 87% பேர் போலியோ தடுப்பூசியினால் பாதிக்கப்பட்டவர்களே என்பது தெரிய வந்துள்ளது. 1961 க்குப் பிறகு ஏற்பட்ட அனைத்து போலியோ பாதிப்புகளுக்கும் காரணம் போலியோ தடுப்பூசியே என்பதையும் அதைக் கண்டுபிடித்த ஜோன்ஸ் சால்க் அமெரிக்க பாராளுமன்றத்தின் துணைக் குழுவில் ஒப்புக் கொண்டுள்ளார். போலியோ வைரஸினால் பாதிப்புகளற்ற நாடுகளில் கூட போலியோ தடுப்பூசியினால் இந்நோய் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஆரம்பத்தில் போலியோ தடுப்பூசியினால் இந்நோய் குறைந்தாலும், பின்னர் அதே தடுப்பூசியினால் படிப்படியாக அதிகரித்து இப்போது அனேகமாக எல்லா போலியோ பாதிப்புகளும் தடுப்பூசியின் காரணமாக உருவாக்கப்



படிப்பகம்

www.padippakam.com

படுவதாக உள்ளது. போலியோ மருந்தின் உடனடி பாதிப்புகளாக காய்ச்சல், வாந்தி, பேதி, இறப்பு முதலியவை இருப்பினும் நீண்டகால பக்க விளைவு களாக புற்றுநோய், நரம்பு மண்டல பாதிப்பு, ஒவ் வாமை மற்றும் கவனக்குறைபாடு முதலியவை ஏற்படக் கூடும். மேலும் போலியோ மருந்தைக் காக்கப் பயன் படும் வேதிப் பொருள்கள் விஷத்தன்மை வாய்ந்தவை யாகும்.

Hepatitis 'B' தடுப்பூசிக்கு ஏகப்பட்ட பிரச்சாரங்கள் செய்யப்படுகிறது. இதைப் போட்டுக் கொள்ளாதவர் கள் கண்டிப்பாக நோய்த்தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் என்ற பொருள் பொதிந்த விளம்பரங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. ஆனால் இந்நோய் பாதித்த தாய்மார்களின் குழந்தைகளுக்கு மட்டும் இந்த தடுப்பூசி போதுமானது. இவ்வியாதியினால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய உண்மை திரிக்கப் பட்டு மக்கள் மத்தியில் ஒருவித பயப்பிராந்தி உருவாக் கப் பட்டுள்ளது. மனித உயிர்களின் மீதான ஒட்டு மொத்த அதிகாரத்தை தங்களது மருத்துவ சொல்லா டல்களுக்குள் அடிமை கொண்ட மெத்தப் படித்த அறிவுசீவிகள்தான் ஊழல் மயமாகிப்போன நம் மருத்துவர்கள்.

மேற்கத்திய குளிர் நாடுகளின் தேவைகளுக்காக வெப்ப மண்டலப் பயிர்களை மலிவு விலையில் பெறும் நோக்கத்துடன் இந்தியா போன்ற வெப்பமண்டல நாடுகளின் விவசாய உற்பத்தி முறை கட்டுப்படுத்தப் பட்டதன் பின்விளைவாக இந்நாடுகளின் விவசாய உற்பத்தி முறை மற்றும் உணவு முறைகள் பெரும் மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. பயறு வகைகளின் போதாமை மற்றும் புரதச் சத்துகள் குறைந்த இன்றைய உணவு முறையால் நோய்யெதிர் திறன் சீர்குலைவுக் குள்ளானதுடன், உற்பத்திப் பெருக்கத்திற்கான உரம் உணவில் விஷத்தன்மையைக் கூட்டியுள்ளது.

யாரும் தப்பியோடிவிட முடியாத அளவில் சூழல் விஷமாக்கப்பட்டுவிட்டது. உலகமக்கள் தொகையில் 5% மக்கள் தொகை மட்டுமே உள்ள அமெரிக்காவில் 24% கார்பன்-டை-ஆக்சைடு வெளியிடப்படுகிறது. உயிர்சூழல் (Biosphere) தக அமையும் தொழில்நுட்பம் பேச்சளவிலேயே உள்ளது. உலக வங்கியிடம் நிதி பெற்றுச் செயல்படும் திட்டங்களின் வாயிலாக மட்டும் உலக காலநிலையை முன்பிருந்த நிலையுடன் ஒப்பிடும் போது 100 மடங்கு சீர்கெட்டிருப்பதாக நச்சுவாயுக் களை வெளியிடும் திட்டங்களுக்காக நிதி தந்த உலக வங்கியை அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட் ஃபார் பாலிஸிஸ் கண்டித்துள்ளது.

II. அரசியல் வியாதி

பொருளாதாரக் கொள்கையைப் பொருத்தளவில் தலையில் டர்பன் அணிந்திருப்பது தவிர மன்மோக னுக்கும், வாஜ்பாய்க்கும் வேறுபாடு எதுவும் இருக்கப் போவதில்லை என்பது ஏற்கனவே பலரும் அறிந்த விஷயம்தான். கணவனுக்கு துரோகம் செய்தல் மற்றும் கூத்தியாள் வைத்திருத்தல் முதலிய எதிர்க்கட்சிக்காரர் களின் தனிமனித ஒழுக்கங்கள் குறித்தெல்லாம் மிக நுணுக்கமான தரவுகளை வழங்கி மக்களின் கவனத்தை ஈர்க்கவல்ல மாபெரும் அரசியல் இயக்கங்களெல்லாம் பாராளுமன்றத்தின் ஒப்புதலோ, விவாதமோ எதுவு மின்றி அன்றைக்கிருந்த அரசு உலகமய ஒப்பந்தங் களில் கைநாட்டு வைத்தது பற்றி மௌனமாகவே இருந்துவிட்டன. எதிர்கட்சியினரின் தனிமனித ஒழுக் கங்களை எவ்வளவுதான் விமரிசித்துக் கொண்டிருந்தா லும் மறந்தும் கூட ஒருவர் மற்றவரின் சுவிஸ் பேங்க் பாணி விஷயங்களை வெளியிடுவதில்லை என்பது கவனிக்கத்தக்கது. இதற்குப் பெயர்தான் தொழில் தர்மம் அல்லது இலட்சுமண ரேகை. 'இந்தியாவின் தலையில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் கடன். கஜானா தங்கமெல்லாம் அடமானத்திற்கு வைக்கப்பட்டபின் வேறு வழியின்றி எடுக்கப்பட்ட முடிவுதான் உலகமயம். ஒரு உண்மையான தேசபக்தன் கட்சி வேறுபாடு இன்றி இதை ஆதரிக்கத்தான் வேண்டும் என்பது இப்போ தைய நியதி. ஆனால் வங்கிகளுக்கு பெரும் புள்ளி களால் தரப்பட வேண்டிய கடன் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மற்றும் இந்தியாவில் உள்ள கருப்புப் பணம் பதினோரு இலட்சம் கோடி ரூபாய் (தினமணி செய்தி). ஆகமொத்தம் பன்னிரெண்டு இலட்சம் கோடி ரூபாய் என்ற கூட்டல் கணக்கெல்லாம் தெரிந்தவர்கள் உண்மையான தேசபக்தர்களாக இருக்க முடியாது.

உலகமய ஒப்பந்தங்களின் பேரில் அரசு உற்பத்தித் துறைகளில் (productive) முதலீடு செய்வதை உடனடி யாக நிறுத்திவிடவும் மற்றும் உள்கட்டமைப்புகளில் மட்டும் தீவிர முதலீடு செய்ய வும் ஒப்புக் கொள்ளப்பட் டது. இதன்படி பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்திப் பொருட்களை எளிதாக எடுத்துச் செல்லவும், நுகர்வு வெறியை அதிகரிக்கவும் ஏதுவாகும். கட்டமைப்பு சார்ந்த ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒப்பந்தங் களும் பெருமுதலாளிகளைச் சென்றடையும். தங்க நாற்கர சாலையும், செல்போன்களுமாக இந்தியா ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. உலகவர்த்தக அமைப்பு மற்றும் பன்னாட்டு நிதியத்தின் இச்சாதனைகளை யார் வேண்டுமானாலும் உரிமை கொண்டாடிக் கொள்ள லாம். இதற்கு அறிவுசார் சொத்துரிமைக் கட்டுப் பாடெல்லாம் கிடையாது. எந்த கட்சி அரசாக இருந்தாலும் இதைத்தான் செய்ய வேண்டும். பெரு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கும் கரும்புத் தின்னக் கூலி கிடைக்கும் வாய்ப்புகளை யாரும் வேண்டாமென்று சொல்லப்போவதில்லை.

விவசாயத் துறையில் முழுச்சீர்திருத்தம் நடைபெற வில்லை எனப் பொருமிக் கொண்டிருந்தவருக்கு நிதிய மைச்சர் பதவி, சூரியன் FM முதலாளிக்கு FM துறை, கப்பல் கம்பெனி முதலாளிக்கு கப்பல் துறை, விமான கம்பெனி முதலாளிக்கே விமானத் துறை என சம்பந்தப்பட்டவர்களுக்கே நேரடியான அந்தந்த துறையை ஒதுக்கி விடுவதன் மூலம் இது இடைத் தரகர்களற்ற வெளிப்படையான அரசு என்பது உணர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தனியார் துறைகளில் இடஒதுக்கீடு அளிப்பது அன்னிய மூலதனத்தை பாதிக்கும் என்று முன்னாள் அழித் தொழிப்புத்துறை அமைச்சர் அருண் சௌரி



படிப்பகம்

www.padippakam.com

இப்போதே மிரட்டுகிறார். இட ஒதுக்கீட்டுத் திட்டத்தை அறிவிக்கும் பட்சத்தில் ஷேர்மார்கெட் தடாலென சரிந்து, பின் எப்பொழுதும் மீளமுடியாத சோகத்தில் மாட்டிக்கொள்ள நேரிடலாம். பன்னாட்டுக் கம்பெனி முதலாளிகளைவிட அவர்களின் இந்திய கூட்டாளிகளும், உள்நாட்டு ஷேர்மார்க்கெட் புரோக்கர்களும்தான் இடஒதுக்கீட்டுக் கொள்கையை ஏற்கமுடியாதவர்களாக இருப்பார்கள். ஏனென்றால் அனைவரும் இந்திய சுதேசிகள். பில்கேட்ஸின் Micro soft நிறுவனங்களிலேயே ஒடுக்கப்பட்ட இனங்களுக்காக இடஒதுக்கீட்டுக்கு இணையான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்பது உலக பாசிச வரலாற்றைக் கரைத்துக்குடித்த, அருண் சௌரி மற்றும் குருமூர்த்தி ஆகியோர் அறியாததல்ல.

III. தொழிற்சங்க வியாதி

சமூக மாற்றங்களுக்கு சிறிதளவும் பங்களிக்காத தொழிற்சங்கங்கள் தொழிற்கொள்கை வடிவாக்கங்களில் எவ்வித பங்குமின்றி புறந்தள்ளப்பட்டுள்ளன. பஞ்சப்படி கேட்டுப் போராடிய காலம் போய் சங்க அங்கீகாரம் கேட்டுப் போராட வேண்டிய இழிநிலை. வேலை போய்விடும் என்கிற பயத்தின் காரணமாக உலகமயமாக்க எதிர்ப்பு. வங்கி மறுசீரமைப்புக் குழு என்கிற பெயரில் வங்கிகளில் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாத முதலாளிகளைக் கொண்ட கமிட்டி ஒன்றை அரசு அமைத்தது. வங்கிகள் தவறான நடைமுறை காரணமாக திவாலாகி விட்டதாகவும், எனவே இழுத்து மூடிவிடாலாமென்றும் அந்த கமிட்டி 'கடிந்துரை' செய்தது. ஊழலுக்கு எதிராக மூச்சடக்கி சும்மா இருந்த தொழிற்சங்கங்கள் வேலையிழப்பு அச்சத்தின் காரணமாக பதில் தாக்குதல் கொடுத்தன. வங்கிகளில் கடன்பெற்று திரும்பச் செலுத்தாத பெரும் புள்ளிகளின் பட்டியல் வெளியிடப்பட்டது. இழுத்துமூடல் பற்றிய பேச்சு இப்போது இல்லை. வெளியிடப்பட்ட பட்டியல் குறித்த தொழிற்சங்கங்களின் தொடர் நடவடிக்கை பற்றிய மூச்சும் இல்லை. கூட்டுபேரம் என்பதை கூட்டுக் களவாணி பேரமாக நடத்திவரும் தொழிற் சங்கங்களோ SC/ST நலச்சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதாக அடிக்கடி குறைபட்டுக் கொள்கின்றன.

சிக்காக்கோ நகரில் உயிர்விட்ட தியாகிகளின் நினைவாக 'மே-1' கொண்டாடப்பட்டாலும், பெரும்பாலான தொழிற்சங்க தோழர்கள் 'மே-1' விடுமுறையை வீட்டிலிருந்து என்ஜாய் பண்ணிவிட்டு பின்பு வசதிப்படும்போது மே தினம் (அது ஒரு ஜூன் தினமாகக் கூட இருக்கலாம்) கொண்டாடும் வழக்கம் அதிகரித்துள்ளது. விடியற்காலையில் வேலை தொடங்கினால் சூரியன் மறையும்வரை உடலுழைக்க வேண்டும் என்பது கல்விக்கு தடைவிதிக்கும் மரபான இந்துத்துவ தொழில் சட்டம். ஏனெனில் இங்கு அடிமட்ட பாட்டாளி வர்க்கமாக தலித் மக்கள் மட்டுமே பெரும்பான்மையாக இருக்கிறார்கள். உலக முழுவதிலுமான தொழிலாளர் வர்க்கக் கிளர்ச்சிகள் மற்றும் சிவில் சமூக வளர்ச்சி என எதுவும் இந்தியாவில் நிலவும் இந்துத்துவ தொழில் சட்டத்தில் பெரிதாக எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தி விடவில்லை. பிரிட்டிஷ்காரர்களின் தயவில் தொழில்மயமாகத் தொடங்கிய அடிமை இந்தியாவில் பாட்டாளி வர்க்கத் தொழிலாளிகளின் பெயரில் நடுத்தரவர்க்க சாதி இந்துக்கள்தான் தொழிற்சங்கவாதியானார்கள். பெரும் போராட்டங்கள் மற்றும் உயிரிழப்புகளுக்குப் பின் சாதிக்கப்பட்ட '8 மணிநேர வேலை' என்பது இந்தியாவில் எவ்வித சிரமமுமின்றி, உயிரிழப்புகளுமின்றி (?) அம்பேத்கரின் தயவால் உரித்து ஊட்டிவிடப்பட்டது. அவருக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டாக 'மே' தினத்தை அம்பேத்கர் தினமாகக் கொண்டாடாவிட்டாலும் பரவாயில்லை. மேடையில் அவரை முதலாளித்துவ வாதி என்று திட்டிவிட்டு மேடைக்குப் பின்புறம் கருங்காலி என்று திட்டுகிற நன்றி கெட்டதனம்தான் ஒரு உண்மைத் தொழிற்சங்கவாதியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அம்பேத்கரை "சட்டவாதி" என கண்டுபிடித்த நடுத்தர வர்க்க பாட்டாளிகளுக்கு (இடதுசாரிகளுக்கு) அவரின் 'எட்டு மணி நேர வேலை' என்ற சட்டவாதத்தினால் கிட்டிய பலன் அளவிடற்கரியது. ஆனால் நாளொன்றுக்கு ரூ.20 கூலிக்கு வேலை செய்யும் தலித் தொழிலாளிக்கோ விவசாயத்தின் எந்திரமயமாக்கலின் காரணமாக நிலைமை மேலும் சிக்கலாகப் போய்க் கொண்டி ருக்கிறது. பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அரசின் குறைந்த பட்ச பொது செயல்திட்டத்தில் அதற்கான சரத்துகளை இணைத்துள்ள இடதுசாரிகள் விவசாய எந்திரமயமாக்களின் காரணமாக தகர்வுறும் அடிமட்ட பாட்டாளி வர்க்கத் தொழிலாளிகளுக்கு என்ன அதிகபட்ச செயல்திட்டம் வைத்திருக்கிறார்களோ!

**விவசாயத் துறையில் முழுச்சீர்திருத்தம் நடைபெற வில்லை எனப் பொருமிக் கொண்டிருந்தவருக்கு நிதியமைச்சர் பதவி, சூரியன் FM முதலாளிக்கு FM துறை, கப்பல் கம்பெனி முதலாளிக்கு கப்பல் துறை, விமான கம்பெனி முதலாளிக்கே விமானத் துறை என சம்பந்தப்பட்டவர்களுக்கே நேரடியான அந்தந்த துறையை ஒதுக்கி விடுவதன் மூலம் இது இடைத் தரகர்களற்ற வெளிப்படையான அரசு என்பது உணர்த்தப்பட்டுள்ளது.**

Ref:


1. தடுப்பூசி பற்றிய தக்க தகவல்கள் - Dr. புகழேந்தி
2. இந்திய வேளாண்மை மறுகாலனித்துவத்தை நோக்கி - உட்சா பட்னாயக்
3. Technorama - (IEI)




படிப்பகம்

www.padippakam.com



# சித்திரமும் கைப்பழக்கும்

■ முனிமா



தமிழகத்தின் புகழ்பெற்ற ஓவியரும் சென்னை கவின் கலைக் கல்லூரியின் ஓவியப் பேராசிரியருமான சந்ரு அவர்களின் ஓவியக் கண்காட்சி சென்னை பலாசே ஆர்ட் கேலரியில் ஜூலை 15 முதல் 30 தேதி வரை நடைபெற்றது. புகழ்பெற்ற ஓவியர் திரு. சந்தான ராஜ் அவர்கள் ஓவியக் கண்காட்சியைத் துவக்கி வைக்க, திரு. கிருத்துதாசு காந்தி IAS, திருமதி. சிவகாமி IAS ஆகியோர் வாழ்த்துரைக்க துவக்க விழா நிறைவுற்றது.

தொடர்ந்து, புதிய கோடாங்கி 'ஓவியங்களுடன் உரையாடல்' என்ற பெயரில் கண்காட்சியில் இடம் பெற்ற ஓவியங்களின் விமர்சனத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. துவக்க விழாவில், சந்ருவின் மாணவர் தி. புருஷோத்தம் தொகுத்த சந்ருவின் நேர்க்காணல் 'சித்திரமும் கைப்பழக்கம்' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது.

பொதுவாகக் கலை விமரிசகர்கள், ஓவியர்கள் பயன்படுத்திய ஓவியங்களை மரபுக்கலை, நவீனக்கலை, அரூபக்கலை என வகைப்படுத்தியும் அல்லது இதுவரை உள்ள குறிப்பிடத் தகுந்த ஓவியங்களின் ஓவிய முறைமைகளோடு வகைப்படுத்தியும் அல்லது ஓவியர்கள் பயன்படுத்திய ஊடகப் பொருட்கள், வண்ணங்கள் இவற்றைப் பற்றிக் குறிப்பிட்டும் அதைக் கலை விமரிசனம் எனச் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் ஓவியர் சந்ருவின் ஓவியங்கள் இவ்வகைப் பாடுகளின் எல்லைகளை மீறி சமூகப் பரிமாற்றத்திற்கு ஊடகமாக, காட்சிகளின் நுட்ப வெளியில் சகமனிதருடன் உரையாடுவதாக உள்ளது. அதையே புதிய கோடாங்கியின் விமரிசனமாக முன்வைக்கிறோம்.

புதிய கோடாங்கி ஏற்பாட்டில் நடந்த 'ஓவியங்களுடன் உரையாடல்' என்ற நிகழ்வில் ஆர்ட் டைரக்டர் J.K., சந்ருவுடன் பயின்ற ஓவியர் மார்க்கபந்து, மாணவர்கள் தி. புருஷோத்தம், நட்ராஜ், ஆய்வாளர் டி. காந்திராஜன், எழுத்தாளர் கௌதம சன்னா ஆகியோர் சந்ருவின் பன்முகப் பரிமாணங்களை விளக்கினர். இந்தியக்கலை மரபை சரியாக விளங்கிக்கொண்டு, புதுவகையான விளக்கங்களை அளித்தவர், கோவில் சிற்பங்களை சமூக வரலாற்றுப் பார்வையுடன் கலை நுணுக்கங்களுடன் விளக்குவதில் வல்லவர், வரலாற்றுக் கால குகை ஓவியங்களை அலைந்து திரிந்து படித்து, பாதுகாக்க உதவியர், தொல்லியல் மற்றும் மானுடவியல் சார்ந்த விளக்கங்களை மீறி ஓவியத்தை தொடர்பு சாதனமாகவும், பண்டைய வாழ்வியல் கருத்தாகவும் விளக்கமளித்தவர் என்று ஆய்வாளர் காந்திராஜன் கூறினார்.

தி. புருஷோத்தம், சந்ருவின் ஆசிரியத் திறன் குறித்தும், மாணவர்கள் மகுடிக்கு மயங்குவது போல் மயங்கிக் கிடப்பர் என்றும், மாணவர்கள் மத்தியில் மிகவும் ஆளுமையுடன் திகழ்ந்தவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்றும், வித்தியாசமான கனிவான அணுகுமுறைகளுடன், மற்ற ஓவியர்கள் தங்கள் வண்ணக் கலவைகளைக்கூட வியாபாரம் கருதி ரகசியமாக வைத்திருந்த வேளைகளில் என்றும் மங்காத தன் படைப்புத் திறனில் நம்பிக்கைக் கொண்ட சந்ரு, மாணவர்களுக்கு எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி சுயநலமின்றி கற்றுக் கொடுக்கும் மாண்பு மிக்கவர் எனவும் போற்றினார். அவர் மாணவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். சந்ரு ஒரு ஆலமரம். அதன் நிழலில் நிரந்தரமாக நாம் தங்கமுடியாது. அந்த



படிப்பகம்

www.padippakam.com

ஆளுமையில் மயங்கிவிடுவோம். ஆகையால் சற்று நேரம் இளைப்பாறி (கற்றுக்கொண்டு) வெளியே வந்துவிட வேண்டுமென்றார்.

ஓவியர் J.K.-வும் மார்க்கபந்துவும் விரிவான உரையாற்றி சந்ரு ஓவியர்களுக்கெல்லாம் ஆசிரியர் எனச் சொல்லப்படும் அளவில் ஒரு ஓவியமேதை, அரிய கலைத் திறனும் படைப்புத் திறனும் கொண்டவர், அவருடைய பாதிப்பு எங்களில் பலபேருக்கு உண்டு என்றனர்.

நடராஜ் சந்ருவின் ஓவியம் வரையும் பாங்கு, சளைக்காமல் எப்போதும் மாணவருடன் உரையாடுவது, நுட்பமான செயல்பாடுகள் குறித்துப் பாராட்டினார்.

கலையும் சாதியும் என்ற தலைப்பில் உரையாற்றிய எழுத்தாளர் குடியரசு இந்தத் தளத்தில் இவ்வளவில் உரையாற்றினால் போதுமானது என்று தனக்குத் தானே முடிவு செய்து சாதி பற்றிய நேரடி உரையாடலைத் தவிர்த்து, பௌத்தக் கலை மரபு அதிகம் விவாதிக்கப்படவில்லை, புத்தரது சிலைகள் யாவும் இந்நாட்டில் அங்கஹீனம் செய்யப்பட்டதாகவே உள்ளன. இனியாவது பௌத்தக் கலைமரபை விசாரிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்றார். ஓவியர் சந்ருவிடம் புத்தர் சிலையை வடிவமைக்க வேண்டுகோள் வைத்தார். இந்நிலையில் ஆய்வாளர் காந்திராஜன் தமிழ்நாட்டில் பௌத்தக்கலை மரபை ஆய்வு செய்தவர் திரு. சந்ரு மட்டுமே. அமராவதி சிற்பங்களை ஆய்வு செய்து கட்டுரைகள் எழுதியுள்ளதாகத் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து எழுத்தாளர் சிவகாமி 'பன்முகத்தின் வேர் - தலித்' எனும் தலைப்பைத் தானே தேர்ந்தெடுத்ததாகக் கூறி உரையாற்றினார். அவரது உரையின் தொடக்கத்தில் சந்ருவைப் பொறுத்தவரையில் கதைகளுக்கு illustration என்பது கதையில் வரும் ஒரு காட்சி என்பதாகவன்றி ஆண் பெண் சித்தரிப்புகள் என்றில்லாமல் கதையின் நீட்சியாகவோ, கதையின் விமரிசனம்/விளக்கமாகவோ, சமயங்களில் எதிர் கதையாகவோ இருக்கும். அவ்வகையில் தனது சிறுகதைகளுக்கும் நாவலுக்கும் தொடர்ந்து illustration செய்து தந்த அவருக்கு நன்றி கூறினார். புதிய கோடாங்கியின் கருத்தியல் வடிவமைப்பு, அட்டை, விளக்கப் படங்கள் என ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்து தொடர்ந்து பங்காற்றி வந்ததற்கும் நன்றி கூறினார். மேலும் நடைபெற்ற நிகழ்வில் பங்குகொண்ட எல்லோரும் அவரது கலைத்திறனையும், கடின உழைப்பையும் பாராட்டுகின்றனரே தவிர, ஓவியப்படைப்பை சரியான முறையில் விமரிசிக்கவில்லை என்றவர் அவரது ஒரே ஒரு படத்தை மட்டும் விமரிசனம் செய்தார். திருமால் பள்ளிகொண்டிருந்த ஓவியத்தில் சுவற்றில் காத்திரமான பல்லி ஒன்று மேய்வதாக உள்ள அந்தப் படம் தனக்கு அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தில் கொல்ல வேண்டிய நபர் உள்ள வீட்டில் பெருக்கல் குறியிட்ட சமாச்சாரத்தை நினைவூட்டுவதாகக் கூறினார். இந்தியக் கலைமரபின் நுணுக்கங்களை ஆய்வு செய்த சந்ரு, காமத்தின் ஆக்ரோஷமும் குரோதமும் தவிர்த்த மென்மையை கரும்பு கொண்டு மன்மதனாக வடிவமைத்த மரபைப் பாராட்டிய அதே வேளையில் இந்துமதத்தின் சாதியப் படிநிலைகளைச் சாடும் விதமாக அதன் புனிதங்களைக் கட்டுடைத்தார் என்றார்.

இவ்வாறு இந்தியக் கலை மரபை கலைநுணுக்கம் சார்ந்து போற்றியும், சாதி மரபைக் கட்டுடைத்தும் தன்னை ஒரு பொதுவான நபராக நிறுத்திக் கொள்கிறாரா என்ற கேள்வி எழுகிறது. ஆண் சார்ந்த கருத்தியல் பெண் சார்ந்த கருத்தியல் இவற்றில் பொதுக் கருத்தியல் எது? ஒடுக்குமுறையை அளவுகோலாக வைத்து நியாயத்தின் பக்கம் நிற்பதே முறை. அந்த வகையில் தொடர்ந்து சாதி-மத ஒடுக்குமுறையை எதிர்ப்பதிலும், மனித உறவு இயற்கை சூழல் பாதுகாப்பு என்ற செயல்பாடுகளிலும் ஓவியர்களுக்கிடையில் மிகப்பெரிய போராளியாக இருக்கிறார் சந்ரு. சாதி ஒடுக்குமுறையை எதிர்ப்பவரும்கூட, இங்கு சாதி அடையாளத்துக்குள் முடக்கப்படுவர். ஆனால் அந்தத் தடைகளை மீறி அனைத்து மாணவர்களும் போற்றும் வகையில் மிகப்பெரிய சக்தியாக விளங்குகிறார் சந்ரு என்றார்.

இடையே ஏற்புரையாக சந்ரு பதிலிறுத்த வண்ணமிருந்தார்.

எழுத்தாளர் கௌதம சன்னா தொகுத்து உரையாற்றி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இனி கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த அவரது ஓவியங்களில் சில பற்றி...

ஏறக்குறைய இருபது வருடங்கள் கழித்து வைக்கப்பட்ட கண்காட்சி என்பதனால் ஒவ்வொரு நாளும் அதிக அளவில் பார்வையாளர் வந்திருந்தனர். ஓவியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானது. வண்ணங்கள் கூட கறுப்பு, சாம்பல், ப்ரவுன், ஆரஞ்சு, பச்சை, தளிர் பச்சை, நீலம், மஞ்சள் என ஒவ்வொன்றும் பிரதானமாகின்ற அளவில் ஏற்றுக் கொண்ட பொருளுக்கேற்றவாறும் - நுட்பத்தை வெளிப்படுத்தும் வகையிலும் தேர்வு செய்யப்பட்டிருந்தன.

கொஞ்சும் பூக்கள் சிதறிய பளிச்சென்ற ஆரஞ்சுப் பின்வண்ணத்தில் (back ground) ஒய்யாரமாக் காமதேனு. அதன் அப்பாவியான, அள்ளிக்கொடுக்கும் தோற்றத்தில். அது சிலையாகி ஒரு மரப்பலகை மேல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னம் பகுதியில் சாணம். மாடு சாணி போடத்தான் செய்யும் - இது தேவையில்லையே என துவக்க விழாவுக்கு வந்த சந்தான ராஜ் முணுமுணுத்தார். எல்லாப் புனிதங்களும் அசுத்தம் நிரம்பியவைதான் என்று இந்துமதக் கட்டமைப்பை எடுத்து உரைத்ததும் அவருக்கே உரிய வகையில் ஒகே ஒகே என்றார்.

திருமால் பரிவாரங்கள் சூழ பாம்பு பஞ்சணையில் படுத்திருக்க, கொப்பூழிலிருந்து உயரெழுந்த தாமரையில் பிரும்மாவும், அருகில் சரஸ்வதியும் லட்சுமியும்



படிப்பகம்

www.padippakam.com

அமர்ந்திருக்க, பிற பரிவாரங்கள் புடைசூழ பக்தி பரவசமூட்டும் இந்தப் பள்ளியெழுச்சியில், சுவரில் இருவிரல் பருமன் கொண்ட பல்லி என்ன செய்து கொண்டிருக்கிறது? பள்ளி - பல்லி வார்த்தை விளையாட்டும் சேர்ந்து கொள்ள படம் ஏக ரகளை!! வைஷ்ணவ ஹிந்து நாளிதழுக்கு, வைத்திருந்த படங்களிலே இது ரொம்பப் பிடித்துப் போக, எடுத்து செய்தித் தாளில் பிரசுரித்திருந்தார்கள்!

அடுத்து மாடு. இதற்கும் கேலியான தலைப்பிடல். மாடு - மாட்டு - மாக்கு என்று. ஒரு வட்டம் போட்டு அந்த வட்டத்தையே ஒரு மாடாக்க முயற்சித்த அற்புதமான நுட்ப விளையாட்டு. மாட்டைப் பொடித்துத் தூளாக்கும் அளவுக்கு அதன் வாழ்வியலையும் அங்க அசைவுகளையும் கற்றுத் தேர்ந்த லாவலகம் வெளிப்பட இதை வரைய வேண்டிய அவசியம் தனக்கு ஏன் நேர்ந்தது என்ற கேள்விகளுடன் வெளிப்பட்டுள்ளது.

பல்வேறு அடுக்கிலான பல வண்ணங்களிலான பாறைகளிலிருந்து ஓணான் போன்ற ஏதோ ஒரு ஜந்து உயிர்பெற்று எழுகிறது. பல்லாயிரமாண்டுகள் ஆயிற்று பாறையிலிருந்து ஒரு ஜந்து உருவாக, புல்லாகி பூவாகி கனிந்து மனிதன் உருப்பெற எத்துணை மில்லியன் வருடங்கள்!! ஆனால் க்ஷணப்பொழுதில் உயிரைப் போக்கிவிடும் கொலைக் கருவிகளை இந்த மனித இனம் மட்டுமே கண்டுபிடித்து வைத்துள்ளது. உயிரின் அருமையும் மனிதனின் அறியாமையுமாக இவ்வோவியம்!

தெளிந்த ஸ்படிக நீர்நிலை. இடையில் குறுக்கிடும் சிறுமணல் பகுதி. அதன் எச்சமாக சொட்டுநீர் தேங்கிய இன்னொரு பகுதி. எறும்புக்குழிகள், மணல் வரிகள், பாறைகள். இந்த இயற்கைக் காட்சியில் மனம் பறிகொடுத்து நிற்கும் அதே வேளை அதன் மீது ஆட்சி செலுத்த வேண்டும் என ஏன் மனித மனம் அலை பாய்கிறது? நுட்பமும் அழகும் ஒரு சேர அமைந்த ஓவியம்.

வெள்ளைக் கொம்புகள் முளைத்து, பொங்கும் மார்பகமுள்ள ஒரு பெண் இயக்கத்தில். பாலுறவில் மேல்நிலையாக்கத்தில், பெண்ணும், அங்கே பூ வடிவமாக உள்ள தேவைதையுமென ஓவியம். வழக்கத்திற்கு மாறாக, பெண் மேல் நிலையாக்கத்தில் தோன்றும் அச்சம் - ஆச்சரிய உணர்வுடன் கலவியின் லயமுமாக ஆழ்ந்த பச்சையில் சிறப்பானதொரு ஓவியம்.

இவ்வாறு ஒவ்வொரு ஓவியமும் பார்வையாளர்களிடம் வினாக்களை தோற்றுவித்து பரிமாற்றத்தை விளைவித்து, அழகின் நுட்பமாய் இருந்தது.

ஆக்கல் x அழித்தல் என இரு கூறுகளிலும் இயற்கை சக்தியாக காளி. காளி கொல்பவள். அதே சமயத்தில் உருவாக்கும் சக்தி. கொல்பவனாக வீரனும், காப்பவனாக சாதுவும் இரு சட்டங்களில் நின்று கொண்டு மையத்தின் கரும்பரப்பில் மண்டையோடுகளால் மலையிட்ட காளியை நோக்கி கைகூப்பி நிற்கின்றனர். நமது முரண்களோ தொடர்கின்றன. யாரிடம் எப்போது நேய பாவத்துடனும், யாரிடம் எப்போது கொல்லும் பாவத்துடனும் இருப்பதில் தெளிவாக இருக்கும் நாம், தெரியாதவர்போல் திருவுளச் சீட்டைப் போட்டுப் பார்த்து பாவனையில் ஈடுபடுகின்றோம். நமது கடவுள் வழிபாடும் இத்தகையதுதான் என்பதைக் குறிக்கும் முகமாக ஒரு ஓவியம்.

இப்படி ஓவியங்கள் அதனளவில் உயிருள்ள ஓவியங்களாக, சமகாலத்தவருடன் உரையாட விருப்பங்கொள்பவையாக உள்ளன.

இவைகள் விற்றுத் தீர்ந்தனவா என்பது போகப் போகத்தான் தெரியும்.

புதிய கோடாங்கி தொடர்ந்து இவ்வகை ஓவியப் பரிமாற்றங்களை நிகழ்த்த வேண்டும்.

# நீ...

■ V. சந்தரலிங்கம்

நீ சா'தீ'யில் காட்டும்
வேகத்தை
சாதிப்பதிலும் காட்டு!

பொருளாதாரத்தில் நீ
பொங்கி வழிந்தால்
பொலிவு பெறும் சமூகம்!

சாதியை ஒழிக்க வேண்டுமா?
நீ சாதனையாளனாக மாறு... இந்த
சகாப்தங்கள் எல்லாம்
மண்டியிடுமே உன் முன்னால்! ஆம்

நீ முயற்சி கொள்... உன்னிடம்
வானமும் வசப்படும்!

உன் முயற்சிதான்
உன் சமூகத்தின் முன்னேற்றம்!

அன்று ஒரு
பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர்
என்றால்...
இன்று நீயாக இருக்க
முயற்சி கொள்...

நாளை உன் சந்ததியாக இருக்க
சபதம் கொள்...

சரித்திரத்தில் நீயும் ஒரு
சாதனையாளன்தான்!

வீழ்ந்தது நாமாயினும்
எழுவது நம் சமூகமாகயிருக்கட்டும்!

ஆயுதத்தால் சாதிப்பதை விட
அகிம்சையில் சாதிப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

■ டாக்டர் கே.ஏ. குணசேகரன்

# வேய்ந்திருக்கும் கூரைகளும் வெந்து மடிந்தோர் குரல்களும்

தமிழகத்தின் கும்பகோணத்தில் மூன்று மாடிக் கட்டிடத்தில் வேயப்பட்டிருந்த கூரைக் கொட்டகையில் தீப்பிடித்து 90-க்கு மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் கருகி மடிந்த சோகம் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை. கூரையால் வேயப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என்னும்படியான செய்திகளை ஊடகங்கள் பிரச்சாரம் செய்து கொண்டுள்ளன.

இப்பிரச்சாரங்களை அறிந்த மாத்திரத்தில் ஆங்காங்கு கூரைகளால் வேயப்பட்டு நடத்தப்படும் பள்ளிகளில் கூரைகளை அகற்றிவிட்டு சிமெண்ட் தகடுகள் (ஆஸ்பெஸ்டாஸ் கூரை) வேயும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று கட்டிடங்களின் மேல் தளத்தில் கூரைபோட்டுப் பள்ளிகள் நடத்திக் கொண்டிருக்கின்ற நிறுவனங்கள் அனைத்தும் பெரும்பாலும் தனியார் பள்ளிகளே ஆகும். இவை யாவும் பெரும்பாலும் ஆங்கில வழிக் கல்வியைக் கற்பிக்கும் பள்ளிகளாக இருப்பது கூடுதலாகக் கவனிக்கத் தக்கதாகும். இம்மாதிரி ஆங்கில வழிக் கல்வி போதிக்கும் பள்ளிகளை நிறுவிய யாருக்கும் பெரிய நட்டம் ஏற்பட்டு விட்டதாகக் கூற இயலாது. மாறாக, இவர்கள் ஆண்டு தோறும் மாணவர்களின் வெற்றி விழுக்காடுகளை விளம்பரப்படுத்தி, பள்ளிக் கட்டணங்களையும், நன்கொடைகள் எனும் பெயரில் தொடர்புடைய பிற கட்டணங்களையும் கூடுதலாக வசூலித்து வந்தவர்கள்.

ஆங்கில வழிக் கல்வியைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் பெற்றோர்களும் பேரார்வம் காட்டியதால் கல்விக் கட்டணச் சுமையைப் பொருட்படுத்தாது தங்கள் பிள்ளைகளைப் பேரெடுத்த பள்ளிகளில் சேர்ப்பதிலேயே மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள். பிள்ளைகளின் புத்தகச் சுமை பற்றிய கவலை பெற்றோர்களுக்குச் சிறிதும் இல்லை. பிள்ளைகளின் கலாச்சாரம், விளையாட்டுணர்வு, கலை வழியிலான கல்வி, சமூகச் சிந்தனை, மனித நேயம், தன்முயற்சி போன்ற கூறுகளை அடக்கிய கல்வியைத் தங்கள் குழந்தைகள் பெறுகின்றனரா என்பதைச் சிந்திப்பதைக் காட்டிலும் தங்கள் குழந்தைகள் பெறுகின்ற மதிப்பெண் விழுக்காடுகளை மட்டுமே பெற்றோர்கள் கவனத்தில் கொண்டுள்ளனர். வகுப்பறையில் மாணவர்கள் இயல்புக்கு மாறாகக் கூடுதலான எண்ணிக்கை கொண்ட வகுப்பறை பற்றிய கவலையோ, இயற்கைச் சூழலற்ற, காற்றோட்டம் இல்லாத வகுப்பறைகள் பற்றியே கவலைகளோ கொள்ள வில்லை. மாணவர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் கல்வி பற்றிய சீர்தூக்கலை மேற்கொள்கின்ற அளவிற்கான கல்வியை ஆங்கில வழிக் கல்விக் கொள்கை அளிக்கத் தவறிவிட்டது.

கல்வி நிலையங்களுக்கு உரிமம் வழங்கும் கல்வித் துறை அதிகாரிகளும் அரசும் இதுபற்றிக் கவனம் கொள்ளவில்லை. பெற்றோர்களும் இது குறித்து அக்கறை காட்டவில்லை. ஆங்கில வழிக் கல்வியை நடத்தும் இதுபோன்ற கல்வி நிறுவனங்கள் குழந்தைகளின் பெற்றோர்களுக்கும்கூட நேர்முகத் தேர்வு நடத்தும் எழுதப்படாத உரிமைகளைப் பெற்றிருப்பது இங்கு வருத்தத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. பிற அனைத்திலும் கூடுதல் கவனம் செலுத்தி வந்த இக்கல்வி நிறுவனங்கள், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியம் முறையாக வழங்குவதில்லை. ஆங்கில வழிக் கல்வி போதிக்கும் பள்ளி உரிமையாளர்கள் கூடுதலான வருவாய் பெருக்கத்திற்கு மேற்கொண்ட வழிமுறைகளில் ஒன்றாகவே கூரை வேய்ந்த வகுப்பறைகள் அமைந்திருந்தன.

அந்தக் காலப் பள்ளிகள், குறிப்பாக கிராமங்களில் இருந்த பள்ளிகள் அனைத்தும் பெரும்பாலும் தென்னை அல்லது பனை ஓலைகளால் வேயப்பட்டவையாகவே அமைந்திருந்தன. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் ஓலைக் குடிசைகளிலேயே வாழ்ந்து வந்தன. இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஊடகங்கள் தந்த கருத்துக்களின் தாக்கத்தில் மக்களிடையே இன்று 'கூரையே கூடாது' என்னும் தவறான கருத்தியலைப் பரப்பி வருவது வருந்துதற்குரியது. அந்தக் கால பரண்சாலைகளும், ஆசிரமங்களும், குடிசைகள் யாவும் கூரைகளிலேயே அமைந்திருந்தமை எண்ணுதற்குரியது. இந்தியாவில் உள்ள கிராமங்கள் யாவும் கூரை வேய்ந்த குடிசைகள் என்றே அடையாளங்காட்டி விளங்குவதை நாம் இன்றளவும் காண முடியும். இந்திய மலையின மக்கள் அனைவரும் இன்றளவும் கூரைவேய்ந்த குறுங்குடில்களில் வாழ்ந்து வருவது இன்றளவும் கண்கூடு. இந்தியாவின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப அந்தக் கால மக்கள் அன்றே கண்டு பிடித்த குடியிருப்புகள் ஓலைகளால் வேயப்பட்டவைகளாகவே இருந்தன. மழைக் காலங்களில் வெதுவெதுப்பாகவும் கோடைக்காலங்களில் குளிர்ச்சியாகவும் இன்றைக்கும் விளங்குவது குடிசைகளே ஆகும். சுற்றுச் சூழல் அடிப்படையில் இந்தியாவில் கூரை வேய்ந்த குடிசைகளே பொருத்தமானவைகளாக உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

உலகமயமாதலின் வீச்சில் இன்று விதவிமான கட்டிடங்கள், விளைநிலங்களையெல்லாம் ஆக்கிரமித்த வெறிப்பார்வையோடு, டாம்பீகத்தையும் செல்வச் செழிப்பையும் காட்டுகின்ற அடையாளங்களாக நிமிர்ந்து நின்கின்றன.

அவ்வப்போது சாதியக் கலவரங்களில் சுட்டெரிக்கப்பட்டு சாம்பலாகிப்போன தலித் மக்களின் குடிசைகள் ஏராளம். பலியாகிப்போன உயிர்கள் ஏராளம். இந்தியாவின் பல்வேறு பாகங்களில் நிகழும் அன்றாட நிகழ்ச்சிகளாகக் குடிசைகள் தீ வைத்துக் கொளுத்தப்படுவது வழக்கமாகி வருகிறது. இவ்வாறு தலித்துகளின் குடிசைகள் எரிக்கப்பட்டபோதெல்லாம் குடிசைகளுக்கு மாறாகக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் எனும் கருத்தை யாரும் முன்வைக்கவில்லை. எரிந்துபோன தலித் மக்களுக்கு அனுதாபம் காட்ட ஊடகங்கள் கும்பகோண நிகழ்வில் காட்டிய அளவில கொஞ்சம்கூட காட்ட முன் வந்ததில்லை, வருவதுமில்லை.

மகாமகம் நடக்கும் புண்ணியத் தளம் என அறியப்பட்டுள்ள கும்பகோணத்தில் நிகழ்ந்த கூரைகள் எரிந்த சம்பவம் என்பதாலும், கோயில் நகரம் (Temple City) என்பதாலும், நடுத்தர மக்கள் மற்றும் உயர்தர மக்களுக்கு ஆங்கில கல்வி தரும் பள்ளி என்பதாலும், 90-க்கும் மேற்பட்ட பிஞ்சுக் குழந்தைகளின் சோகத் துயரம் என்பதாலும் இச்சம்பவம் உலக அளவில் பேசப்பட்டுள்ளது. பல்வேறு தரப்பினரும், நிதி உதவிகளையும் அனுதாபங்களையும் தந்து கொண்டுள்ளனர். இது உலக மனித நேயப் பண்பாட்டிற்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது எனலாம்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" எனப் படித்த நினைவு.

"எல்லா உயிரும் சரிநிகர் ஆனவையே." தீ விபத்துக்குள்ளாகும் அனைத்து உயிர்களைப் பற்றியும் அக்கறை கொள்வது மனித நேயப் பண்பல்லவா?

பள்ளிக் கூரைகளை இனிக் காண இயலாது. தீ விபத்துக்கள் இனி நேரலாகாது. நேரக் கூடாது. கும்பகோணம் அருகிலுள்ள தஞ்சைக் கீழவெண்மணியில் 40-க்கும் மேற்பட்ட தலித்துகள் கூரை வீட்டுக்குள் வைத்துத்தான் தீயுட்டி எரித்துக் கொலை செய்யப்பட்டனர்.

மக்களின் கூரைக் குடிசைகளும், கிராமங்களில் வாழும் தலித் மக்களின் கூரைக் குடிசைகளும் எரிந்து சாம்பலாகாமல் தக்க நடவடிக்கை எடுக்க நமது சமூகம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது. இனிமேலாவது கூரைகள் எரியாமல், உயிர்கள் பலியாகாமல் முன் நடவடிக்கை எடுக்க முன்மொழிவதே மனித நேயப் பண்பாளர்களின் தலையாயக் கடமையாகும், உயிர்களிலும் தீண்டாமைப் பார்வையா? •

## விண்ணிலிருந்து விரைந்து வா...

■ செல்வகாந்தன்

"பார்ப்பானை ஐயன் என்ற
காலம் போச்சே"
என்ற பாரதியே
நீ
தாழ்த்தப்பட்டோனை
தேவமகனென்று
ஒரு வெண்பா
பாடியிருக்கக் கூடாதா?

"ஆணுக்குப் பெண்
சரிநிகர் சமம்"
என்றாயே,
அவசரத்தில் கிறுக்கினாயோ
இல்லை
அனுதாபத்தில்
கவிதை செதுக்கினாயோ
யானறியேன்!

அதிகபட்சமாய்
ஆணைக் காட்டிலும்
பெண்
ஆயிரம் மடங்கு உயர்ந்தவள்
என்று
ஒரு அளபெடை
பாடியிருக்க மாட்டாயா?

காணி நிலம் வேண்டுமென்று
கடவுளிடம் மனு போட்டவனே
எம் கன்னிப் பெண்களின்
கற்பினை களவாடும்
கயவர்களின் கண்களை
கருநாகம் பிடுங்கிடல் வேண்டுமென
காத்திருந்து
வரம் பெற்றிருக்கலாமே!

ஏச்சுகளுக்கு கோபிக்காதே
நீயும் நானும்
நெருங்கிய சொந்தம் தானே
வறுமை எனும் உறவு முறையால்

உறவை புதுப்பிக்கலாமா
கடவுளையே
கட்டிக்கொண்டு கிடக்காதே!

கவிராசனே
முன்பு
கலைமகளோடு
வந்து வாழ்ந்தவனே
இப்போது
கண்ணி வெடிகளையும்
கொண்டுவா!

உனக்குத் தெரியுமா
காலம் மாறிவிட்டதடா
விஷக் காளான்கள்
விண்முட்டுமளவிற்கு
வளர்ந்து நகைக்குதடா!

நாமிருவரும் சேர்ந்து
கவிதையால்
அவைகளை வீழ்த்தப் பார்ப்போம்
இல்லையேல்
கண்ணி வெடிகளால் தகர்ப்போம்!

விரைந்து வா
விண் முட்டிய விஷக்காளான்கள்
விண்தாண்டி வளர்ந்தாலும்
வளர்ந்துவிடும்
விரைந்து வா...
விரைந்து வா...


படிப்பகம்

www.padippakam.com

■ முத்துக்கந்தன்

# புதிய கோடாங்கியின் கலந்தாய்வுக் கூட்டம்

தலைமை : கௌதம சன்னா

சிறப்புரை : சிவகாமி

கோடாங்கி இதழ் பற்றி : நிகழ் அய்க்கண்

கோடாங்கி முகாம் பற்றி : குடியரசன்

நன்றியுரை : தக்கோலம் ரகுவரன்

**தயாளன், *அருந்ததியர் விடுதலை முன்னணி* :** தலித்துகளுக்கான பத்திரிக்கையாக விளங்கும் புதிய கோடாங்கி, கள ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்வது சிறப்பு. 'மாத்தம்மா' நிகழ்வை கோடாங்கி சிறப்பாக பதிவு செய்துள்ளது. இப்படிப்பட்ட கலந்தாய்வுக் கூட்டம் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெற வேண்டும்.

**மழைமேனிப் பாண்டியன் :** கோடாங்கி தரமாக உள்ளன. கருத்துக்கள் சிறப்பாக உள்ளது. கிராமங்களின் ஒவ்வொரு பெட்டிக் கடைகளிலும் "கோடாங்கி வாங்கிப் படியுங்கள்" என்று தொங்கவிடப்பட வேண்டும்.

**செந்தில்:** கோடாங்கியின் எழுத்துக்கள் சிரமப்பட வேண்டி உள்ளது. எழுத்துக்களை எளிமைப்படுத்த வேண்டும்.

**புஷ்பா :** தலித்முரசு, தாய்மண் போன்ற தலித் இதழ்களை விட 'கோடாங்கி' கூடுதலான சிறப்பைப் பெற்றுள்ளது. சிரிப்புக் கொத்து, கேலித் துணுக்கு தேவை. அட்டைப்படம் வண்ணப்படமாக இருக்க வேண்டும்.

**தமிழினியன் (விடுதலை இயக்கம்) :** கோடாங்கி இலக்கியத் தரம் மிகுந்துள்ளது. ஒவ்வொரு அம்பேத்கர் மன்றங்களிலும் 5 உறுப்பினர்களை சேர்த்து, கோடாங்கியை விரிவுபடுத்தலாம். அரவாணிகளைப் பற்றி எழுதுவது வரவேற்கத்தக்கது.

**ரவிகெங்கன் :** குமுதம், ஆனந்த விகடன் போன்ற வணிக இதழ்களை எதிர்ப்பதுதான் கோடாங்கி. ஒவ்வொரு இதழையும் ஒருவர் படித்து இன்னொருவருக்கு அறிமுகப்படுத்தி, சந்தாதாரர்களாக்க வேண்டும். கட்டுரைகளை இன்னும் எளிமைப்படுத்த வேண்டும்.

**செல்வம் :** நாடகம் போன்ற கலைத்துறையின் மூலமாக கோடாங்கியை முன்வைத்து பரவலாக்கலாம். பெரும்பாலும் அரசு ஊழியர்கள் பத்திரிக்கை படிப்பது கிடையாது. ஆகவே மாவட்டம், வட்டம் என்று அரசு ஊழியர்களை ஒன்றிணைத்து கோடாங்கியைப் பற்றி பேசி, தொடர் வாசகர்களாக்க வேண்டும்.

**ஆல்கா :** அரவாணி அல்லாதவர்கள் அரவாணிகளைப் பற்றி எழுத முன்வரவேண்டும்.

**பாஸ்கர் :** எயிட்ஸ் நோயாளிகளாக இருக்கும் அரவாணிகளின் பிரச்சினைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பாக்கியராஜ் :** எழுத்துக்கள் மக்களுக்குப் புரியும்படி இருத்தல் வேண்டும். ஒரே பகுதியிலிருந்து மட்டும் இராமல் வேறுவேறு மாவட்டங்களிலிருந்தும் செய்திகள் வரவேண்டும். மாணவர்களுக்கென்று தனிப் பக்கம் ஒதுக்க வேண்டும்.

**ஜே.பி. நாகபூசணம் :** கோடாங்கியை ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு செல்ல வேண்டும். அரசு சலுகைகள் பற்றி கோடாங்கியில் தெரியப்படுத்த வேண்டும்.

**க.வா. கன்னியப்பன் :** கல்லூரி மாணவர்களுக்கான பக்கமாக ஒன்றை ஒதுக்கி மாணவர்களை எழுத வைக்க வேண்டும்.

**பேரா. பு. ஜார்ஜ் :** இலக்கியத் தரப்பில் அறிவு ஜீவிகளுக்கு எதிரான போட்டி தேவையாக இருக்கிறது. ஆகவே கோடாங்கியை பரவலாக்க வேண்டும்.

**நிகழ்அய்க்கண் :** கோடாங்கியின் ஆரம்பகால முதல் தற்போது நிகழ்ந்த தலித்-பழங்குடியினர்-அரவாணிகள் முதல் மாநில மாநாடு வரை விளக்கினார்.

**அருணா :** அரவாணிகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது புதிய கோடாங்கிதான். ஆகவே அரவாணிகளுக் கென்று ஒரு பக்கத்தை ஒதுக்கி வைக்க வேண்டும்.

**க. பஞ்சாங்கம் :** புதிய கோடாங்கியின் தற்போதைய வளர்ச்சி திருப்தி அளிப்பதாக உள்ளது. தலித்துகளுக்கான பத்திரிக்கையாக தொடங்கி இன்று பழங்குடியினர், அரவாணிகள் என்று நகர்ந்திருப்பது கோடாங்கியின் பரிணாம வளர்ச்சியாகும். எங்கெல்லாம் மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் கோடாங்கி செல்கிறது. தற்போதைய மூன்று ஆண்டுகளாக கோடாங்கி பெரும் வளர்ச்சியை எட்டியுள்ளதற்கு அதன் அறக்கட்டுமானமே காரணமாகும். கோடாங்கியில் புனைவு அதாவது நாவல் தொடராக எழுதப் பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

கோடாங்கியின் எடிட்டர் கதை, கட்டுரை, கவிதைகளில் கை வைக்க வேண்டும். புனிதங்களை உடைப்பதுதான் பத்திரிக்கை. கோடாங்கி எதார்த்தத்தோடு புனைவாகவும் இருத்தல் வேண்டும்.

மோகன் : அம்பேத்கர் நூற்றாண்டு விழாவிற்குப் பிறகுதான் தலித்துகளைப் பற்றி பேச்சு வளர்ந்தது. புதிய கோடாங்கிக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது.

ஆம்ஸ்ட்ராங் : கோடாங்கியில் மொழிபெயர்ப்புகள் வரவேற்கப்பட வேண்டும்.

நடராஜ் (ஓவியர்) அழிந்துவரும் நாட்டார் கலைகளை பதிவு செய்தல் வேண்டும்.

குடியரசன் : புதிய கோடாங்கி நடத்திய முகாம்களைப பற்றியும் அதில் தனக்கேற்பட்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

சிவகாமி : அமெரிக்க அனுபவத்தையும், 'மே' மாதத்தில் நடைபெற்ற மாநாட்டு அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார்.

புதிய கோடாங்கியின் கலந்தாய்வுக் கூட்டத்தின் வாயிலாக இதழை எளிமைப்படுத்த வேண்டும், புனைக் கதைகளை சேர்க்க வேண்டும், நாட்டார் கதைகளை (கலைகள்) பதிவு செய்ய வேண்டும், நாடகத்தின் வாயிலாக பரவலாக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பரிமாறப்பெற்றன.

# கனவும் சாம்பலும்...

■ ஜனாசுகிர்தன்

நீ கனவு
உனக்குள் மென்கனவுகள்
முளைத்த முதலாவது கணங்களில்
உனது கூரை வீட்டின் மீது
குண்டுகள் விழுந்தன.

வாத்துகளின்
நடையை சுவைத்த
உனது இரு விழிகளில்
ஒன்று
கருகியது சாம்பலாகியது

ஒரு விழியால் மட்டுமே
உன்னால் பின்னர்
போரைப் பார்க்க முடிந்தது
நிலத்தில் சிதைந்து கிடந்த

உனது கூந்தல்
ஏன் நரைக்கின்றது என்று
உன்னிடம் கேட்காதே

நீ ரசிக்கின்ற
திரைப்படக் கதாநாயகிகளிடமோ
கதாநாயகர்களிடமோ
கதாசிரியர்களிடமோ
இயக்குநர்களிடமோ
பாடகர்களிடமோ
கேட்காதே!

போ!

கடலைத் தழுவும்
அலைகளைத் தேடி!

அழு!

அலைகள்
உனது கதைகளை
கடல்களின் வாசிப்பிற்குக்
கொண்டு செல்ல

நரைக்கும்

உனது கூந்தல்
நாளை படமாகும்
பாடலாகும்
கதையாகும்
கவிதையாகும்

நிமிர்!
உனது விழிகள்
வாள்களாகும்
உனது கூந்தல்
சிவப்பாகும்.


படிப்பகம்

www.padippakam.com

■ புஷ்பா

# இளைஞர்கள் விழிப்புணர்ச்சி முகாம்

புதிய கோடாங்கி மாத இதழும், அனித்ரா ட்ரஸ்ட்டும் இணைந்து கடந்த 5.6.2004 சனிக்கிழமை யன்று திருத்தணி அருகேயுள்ள முருக்கம்பட்டியில் இளைஞர் விழிப்புணர்ச்சி முகாமினை நடத்தியது.

நிகழ்வின் துவக்கமாக எழுத்தாளர் குடியரசன் பேசும்போது, டாக்டர் அம்பேத்கர் இறந்து 48 ஆண்டுகளாகியும், நாம் இன்றும் அவர் பெயரை மட்டுமே சொல்லி போராடும் அளவுக்கு அவரின் கடும் அர்ப்பணிப்பு நம்மை நகர்த்திச் செல்கிறது. அம்பேத்கரை முதன்மைப் போராளி என நம்பும் நாம் அவரின் கருத்துக்களை உணராமல் இருப்பது, நம் களப்பணியில் வீரியம் கொண்ட நகர்வை தவிர்த்ததாகவே அமைவதை அனுமதித்து விடும் என்றார். அடுத்து உரையாற்றிய எழுத்தாளர் வேலுச்சாமி அவர்கள், அரசியல் சட்டத்தின் மூலம் தலித் மக்களுக்கு சம உரிமைகள் கிடைக்கப் பெற்றாலும் ஆதிக்க சாதியினரால் திட்டமிட்டு தடுக்கப்படுவது பற்றியும், இவர்களால் நாளும் நடக்கும் வன்கொடுமைகளுக்கு எதிராக அணிதிரள வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துக் கூறினார்.

அடுத்து உரையாற்றிய சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த தோழர் அயன்புரம் இராசேந்திரன் அவர்கள், சினிமாவில் தலித்துகளுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. ஊர்-சேரி என்றிருப்பது போல் சினிமாவிலும் தலித்துகள் ஓலைக் குடிசையிலும் - பிறசாதிக்காரர்கள் மாளிகையிலும் இருப்பது போன்று காண்பிக்கிறார்கள் என்றார்.

நிகழ் அய்க்கண் அவர்கள் பேசுகையில் வெகு ஜன இதழ்களும் - ஊடகங்களும் - ஆதிக்கச் சாதியினர் நலன்களை முன்னிருத்தியே செயல்படுவதையும், உண்மை செய்திகளையறிய தலித் இதழ்களை வாங்கி படிக்கவும், அதிலிருந்து வெகுஜன ஊடகங்கள் தலித் மக்களுக்கு எதிராகச் செயல்படுவதை அறியலாம் எனவும் கூறினார்.

அரக்கோணம் வழக்கறிஞர் வீரராகவன் அவர்கள் தலித் மக்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றியும். இதனை எதிர்த்து தலித் மக்கள் அணி திரளும்போது பொய் வழக்குகள் பின்னப்பட்டு சித்திரவதை அனுபவிப்பதையும் குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய சரவணன் அவர்கள், தலித் மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டி அவ்விஷயத்தை வலியுறுத்திப் பேசினார். மேலும் படித்து முன்னேறிய தலித் இனத்தவர்கள் தலித் சமூகத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளையும் சுட்டிக்காட்டினார்.

சிறப்புரை ஆற்றிய திருமதி. சிவகாமி அவாகள் "நம் தலித் மக்கள் மிகவும் விழிப்புடன் இருந்து தங்கள் மீது நிகழ்த்தப்படும் பொருளாதாரச் சுரண்டல், சாதிய ஒடுக்குமுறை ஆகியவற்றை பல்வேறு நெறிப்படுத்தப்பட்ட வடிவில் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

குறைந்தபட்ச ஊதியம், வேலைநேரம் பற்றி நாமே ஒரு முடிவை எடுத்து அதை நாம் குழு - கூட்டுறவு வகைகளில் நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும். நம் தலித் மக்களுக்கு தமிழக அரசு ஒதுக்க வேண்டிய தொகை ரூ.1500 கோடி. இந்தப் பணம் மிகச் சரியாக செலவிடப்பட்டால் நம் சமூகம் என்றோ மேம்பட்டிருக்கும்.

கிராமத்தை அண்டியிருக்கும் வகையில் சேரிகள் முழுமையாகப் போய்விடக்கூடாது. நம் சேரியைப் போலவே அனைத்துச் சேரிகளும் பல்வேறு ஒடுக்குமுறையை சந்தித்துக் கொண்டிருப்பதால், சேரிகளெல்லாம் கருத்தியல் மற்றும் வாழும் முறையில் ஒன்றிணைய வேண்டிய தேவை முகிழ்த்துள்ளது. இதை 'சேரிகளுக்கு தனி பஞ்சாயத்து' மூலம் அடைந்திட வியலும்.

நாம் சாதி இந்துக்கள் போல யாரையும் ஒடுக்க நமக்கான தனிப் பஞ்சாயத்து கோரவில்லை. மாறாக பல ஆண்டுகளாக நம்மீது நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒடுக்குமுறையில் இருந்து வெளியேறி பகுத்தறிவு பூர்வ வாழ்வு வாழவே நாம் தனிப் பஞ்சாயத்து கோருகிறோம். தனிப்பஞ்சாயத்து மூலம், நாம் நமக்கான நலத்திட்டங்களுக்கு நேரடி நிதியை ஒதுக்கிக் கொள்ளலாம்.

இந்த சேரிகளுக்கான தனிப் பஞ்சாயத்து, அம்பேத்கர் முன்வைத்திட்ட Seperate Electorate மற்றும் Seperate Settlement போலத்தான். இதைக் குறித்து நாம் நீண்ட கருத்தியல் விளக்கத்தை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும்" என்றார்.

இந்நிகழ்வில் அருந்ததியின நல்வாழ்ச் சங்கத்திலிருந்து அந்தோணிராஜ், வழக்கறிஞர் ரகு, அனித்ரா டிரஸ்ட் குழுவினர், திருத்தணி பகுதியில் தலித் மக்களுக்காகப் போராடி வரும் தங்கவயல் வாணிதாசன், திருமதி புஷ்பா ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வின் முடிவில் அனித்ரா டிரஸ்டிலிருந்து தோழர் இன்பகுமார் நன்றி கூற, நிகழ்வுகள் முடிவுற்றன. ●



படிப்பகம்

www.padippakam.com

■ முனிமா

# கேள்வி பதில்

அநியாயமாக மழலைகளைப் பலிகொண்ட கும்பகோணம் கோர தீ விபத்திற்கு யார் காரணம்?

- பாரதி, சென்னை

கும்பகோணம் தீ விபத்தை பலதரப்பினரும் தீ மிதித் திருவிழா போல் கொண்டாட ஆரம்பித்த இந்தச் சூழ்நிலையில் கும்பகோணம் தீ விபத்திற்கு யார் பொறுப்பு எனக் கேட்கிறீர்கள்.

பள்ளிகள் வியாபாரத் தலங்களாகிவிட்டன என்பது யாருக்கும் தெரியாததல்ல. பணம் வாங்கிக் கொண்டு அனுமதி வழங்குவதும், காளான்கள் போல் ஆங்கில வழிக் கல்வி நிலையங்களுடன் பிற கல்வி நிறுவனங்களும் பெருகுவதையும் நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள்தான்? அதை நமது வளர்ச்சியின் சின்னமாகவும் கருதி வந்திருக்கிறோம்.

அடிப்படை வசதிகள் எதுவுமில்லாது பல கல்வி நிலையங்கள் இயங்குவது இப்போதுதான் அரசுக்கு தெரியவந்தது போல் தய்யத்தக்காவென குதித்து ஆரம்பப் பள்ளி கல்வி இயக்குநரையும் இன்னும் கீழதிகாரிகளையும் சஸ்பென்ட் செய்தும் அரெஸ்ட் செய்தும் ஏதோ பள்ளிக் கல்வியில் அக்கறை உள்ளது போல் நடிக்க ஆரம்பித்து விட்டது.

மேலை நாடுகளில் அந்தந்த வட்டாரங்களில் அரசு நடத்தும் ஒரே வகையான பள்ளிக்கூடங்கள்தான் உள்ளன. Public School என்றழைக்கிறார்கள். நல்ல பள்ளிக்கூடம் பொல்லாத பள்ளிக்கூடம் என்ற பிரிவுகள் ஏதும் கிடையாது. அந்தந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள், அந்தப் பகுதியில் உள்ள பள்ளிக்குத்தான் தங்கள் பிள்ளைகளை அனுப்ப முடியுமே தவிர, வேறெங்கும் அனுப்ப முடியாது. இதனால் கல்வியின் தரம் ஒரே படித்தாகவும், அடிப்படை வசதிகள் ஒரே தரத்தினதாகவும் உள்ளது. இத்தகைய அணுகு முறைகள் இன்றி சத்துணவு ஆயா, தன்னலமிக்க ஆசிரியர்கள் என்று பழிபோட்டுவிட்டு தார்மீக அடிப்படையில் பதவி விலக வேண்டிய ஜெயலலிதாவும் சரி, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் சரி உதார்விட்டுக் கொண்டு கவாலி (போட்டிப்பாட்டு) பாடிக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிக்கைகளும் இதையெல்லாம் சனங்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக மழலைகளுக்கு கண்ணீர் அஞ்சலியும் போட்டோ அஞ்சலியும் செய்து கொண்டிருக்கின்றன.

ஒரே படித்தான, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய பள்ளிகள் துவங்கப் பெற வேண்டும், உயர்கல்விக்கும் விசேஷ படிப்புகளுக்கும் மட்டுமே தனியார் துறையை அனுமதிக்க வேண்டும் என்று போராட வேண்டிய பொதுமக்கள் / பாதிக்கப்பட்டவர்கள், ரஜினி வந்து ஆறுதல் சொல்லவில்லையே, விஜயகாந்த் துக்கம் விசாரித்தார் என்று தங்கள் சுய அழுகையில் கரைந்து போயிருக்கிறார்கள்.

கல்வித்துறையின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய கருத்துக்களை மூடிமறைத்துவிட்டு புதைகுழிகளுக்கு பூத்தூவிக் கொண்டிருக்கிறார்கள். துயரங்கள் தணிந்த பிறகாவது இதைத் குறித்து பேசவேண்டியுள்ளது.

கலைகளுக்கு சாதி உண்டா?

ராமன், மதுரை.

கலைகளுக்கு சாதியில்லையெனினும் கலைஞர்களுக்கு உண்டு. சமூக வாழ்க்கைப் போராட்டங்கள் கலை இலக்கியத்தில் நுழைந்துவிடக்கூடாது, கலை தூயதாகவும் மகானுபாவமான ஆத்மார்த்த விளையாட்டாகவும் இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பவர்கள் காமத்திற்கும் பக்திக்குமான மெல்லியக் கோட்டில் நின்றுகொண்டு கலை இலக்கிய வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது பிழைப்பு வாதம். போராட்டங்களை எதிர்கொள்ள துணிவற்ற செயல் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் உபாயம் தவிர வேறொன்றுமில்லை. கலைஞனையும் கலையையும் பரிந்து பார்க்கும் நேரம்தான் எது? சாதி, மதம் இவற்றைத் துச்சமாக எண்ணி அதனை வெற்றி கண்டுவிட்டதாக கலைஞன் எண்ணிக்கொள்வது அவன் அது குறித்த பிரச்சினைகளில் நேரடியாக சம்பந்தப்படவில்லை என்பதைத்தான் காட்டுமே அன்றி சாதி இல்லையென ஆகிவிடாது. நிகழை ஏற்றுக்கொண்டு அதை விமர்சிப்பதே, ஒடுக்கு முறையை எதிர்ப்பதே கலையும் அதற்கான அழகும்.

தனியார் துறையில் இடஒதுக்கீடு தலித்துகள் கேட்டதற்கும் பிற்படுத்தப்பட்டவர்கள் கேட்டதற்கும் என்ன வேறுபாடு?

முகுந்தன், ராணிப்பேட்டை.

எப்போதுமே தலித்துகள் இவ்வகைப் போராட்டங்களில் முன் கை எடுத்தவர்கள். அம்பேத்கரின் அறப்போராட்டத்தின் விளைவாக இடஒதுக்கீடு



படிப்பகம்

www.padippakam.com

துவங்கப்பட்டது. அதுவரை தலித்துகளுடன் அவர்களது கோரிக்கைகளில் இணைந்து செயல்படாதவர்கள் தலித்துகளுக்கு கிடைத்ததுமே அதை முன்மாதிரியாக வைத்து அதைவிட பெரிய லாபத்தை அடைந்தார்கள்.

முதலில் ஆதி-திராவிட நலத்துறை துவக்கப்பட்டது. அதனை முன்மாதிரியாக வைத்து தங்களுக்கான துறையைக் கேட்டு அதைவிட பலமடங்கு அதிகமாக நிதிஒதுக்கீடு பெற்றார்கள்.

உதாரணமாக ஆதி-திராவிட நலத்துறை மூலமாக தலித் பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் சலுகை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு ரூ.14 கோடி செலவாயிற்று. இதற்குப் பல எதிர்ப்புகளும் விமரிசனங்களும் கிளம்பின. இந்தத் தூசு அடங்கிய பின் நோகாமல் இதுபோன்று நான்கு மடங்கு தொகையில் பிற்படுத்தப்பட்ட இனத்து பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்படி தலித்துகள் தனியாக நின்று போராடியோ அல்லது பலத்த எதிர்ப்புக்கிடையில் அரசின் மூலமோ பெற்றுக்கொண்ட சில சில்லறை சலுகைகள் யாவும் அடுத்திருந்து சுலபமாகப் பெற்றுக்கொள்கின்றனர். சேர்ந்து போராடவேண்டிய அவசியத்தை உணராதவர்களாயிருக்கிறார்கள். இப்போது தனியார் துறையில் இடஒதுக்கீடு!

**✍ பழங்குடியினருக்கு சாதிச் சான்று வழங்குவதில் ஏன் கால தாமதம்?**

**- மருதம், உதகமண்டலம்.**

பழங்குடிகள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மொத்தம் முப்பத்தி ஆறு வகையினர். இவர்கள் பதின்மூன்று மாவட்டங்களில் சிதறி வாழ்கின்றனர். இவர்களது ஜனத்தொகை தமிழகத்தின் மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம் மட்டுமே. பல இனங்கள் 800 சனத்தொகை தொடங்கி சில ஆயிரங்களே உள்ளன. கல்விநிலையில் மிகவும் பின்தங்கியுள்ள இவர்கள் அரசாலும் ஆதிக்க சக்திகளாலும் தொடர்ந்து சுரண்டப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கான பழங்குடி இனச் சான்றுகளை தெலுங்கு பேசும் நாயுடுகளும், ரெட்டிமார்களும் முறையே காட்டு நாய்க்கன், கொண்டா ரெட்டி என்றும் பணம் கொடுத்து சான்று பெற்றுக் கொள்ளும் விஷயமும், குறும்பக் கவுண்டர்கள் தங்களை குறும்பர் என்றும் குருமன்ஸ் என்றும் கூறி பொய்ச் சான்று பெறும் விஷயமும் அரசின் கவனத்திற்கு வரவே அரசு இவ்வகைச் சான்று வழங்கும் முறையை கடினமாக்கியுள்ளது.

அதாவது முதலில் டெபுடி தாசில்தாரால் கொடுக்கப்பட்டு வந்த சான்றிதழ் இன்று இரண்டு படிகளைத் தாண்டி R.D.O. எனும் உயரதிகாரியால் விசாரணை செய்யப்பட்டுத் தரப்பட வேண்டும் என்று மாற்றியுள்ளது. R.D.O. தனது பல வேலைகளுடன் இவ்வேலையைச் செய்வதில் சுணக்கம் ஏற்படுகிறது. ஸ்தல விசாரணை செய்வதில் கால தாமதம் ஆகிறது. மேலும் குரலற்ற பழங்குடியினரை மெத்தனமாக நடத்தும் போக்கும் உள்ளது.

அதுவன்றி பழங்குடியினரல்லாத பலர் தாங்கள் பழங்குடிகள் என்று அறிவிக்க முயற்சித்து வருவதால், சிதறி வாழும் உண்மையானப் பழங்குடிகளை இனம் காணுவதிலும் சிரமம் உள்ளது. ஆனால் பழங்குடிகளுக்கு உதவ வேண்டும் - அது தலையாய கடமைகளில் ஒன்று என்று நினைக்கும் எந்த அதிகாரியும் - அரசும் சுலபமாகச் சான்று வாங்க முடியும் என்பதே உண்மை.

**✍ புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி பயங்கரத் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகளின் திருச்சி மாவட்டச் செயலர் சேட்டுவும் அவரது சகாக்களும் பட்டப்பகலில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். தலித் அமைப்புகளை ஒழிப்பது என முடிவு செய்து விட்டார்களா?**

**கோவிந்தன், திட்டக்குடி.**

சேட்டு கொலைக் கேஸில் சம்பந்தப் பட்டிருப்பதால்தான் வெட்டிக் கொல்லப்பட்டார் என்று தினமணி நியாயப்படுத்தி எழுதியுள்ளது. தினமலரோ திருச்சியில் ரவுடிகள் வெட்டிக் கொலை எனச் செய்திக்கு தலைப்பிட்டிருக்கிறது. புதிய தமிழகக் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி மாஞ்சோலை கொலை வழக்குக் காரணமாக தாக்கப்பட்டார் என்று பிற இதழ்களும் ஹிந்துவும் பூடகமாக எழுதியுள்ளன. ரவுடிகள் சமூகப் போராளிகளைத் தாக்கியது கிடக்கட்டும். சாதி இந்து தினசரிகள் சமூகப் போராளிகளை ரவுடிகளாக சித்தரிப்பது கடுமையான கண்டனத்திற்குரியது. ரவுடிகளுக்கு சாதகமாக எழுதும் ரவுடி பத்திரிக்கைகளைக் கண்டிக்க வேண்டும். தலித் அமைப்புகள் எதிர் கொண்ட இத்தாக்குதலுக்கு அனைத்து தலித்துகளும் கண்டித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டும்.

**✍ இயக்குனர் சேரன் மற்றும் தங்கர் பச்சான் மீது திருச்சியைச் சேர்ந்த பெண்மணி கற்பழிப்பு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். உண்மை என்ன?**

**மங்கைநல்லாள், சோமங்கலம்.**

சேரனும், தங்கர் பச்சானும் வெற்றிப் படங்களின் இயக்குநர்கள். சினிமா உலகில் வித்தியாசமானவர்கள். நன்னடத்தையில் நற்பெயர் வாங்கியவர்கள். இருவரும் குற்றச்சாட்டை கடுமையாக எதிர்த்துள்ளனர். உண்மை நிலை என்ன என்பது விரைவில் தெரியும்.

**✍ தமிழ் செம்மொழி என அறிவித்ததால் தலித்துகளுக்கு என்ன நன்மை?**

**- பிரிட்டோ, பாண்டிச்சேரி.**

மொழியும் இங்கே சாதி இந்துக்களின் ஆயுதம். மொழியைப் பேசுவது மட்டுமே இங்கே போதுமானதல்ல. மொழியைப் படித்துப் புலமை பெறுவதும் போதுமானதல்ல. புத்தகங்கள் அச்சிட்டு விற்பனை, செய்வதும், மொழியை சட்டம் ஆட்சி வாயிலாக அதிகாரமாகப் பிரயோகம் செய்வதும் சாதி இந்துக்



படிப்பகம்

www.padippakam.com

களே. அவர்களுக்கே இதன் பயன் கிட்டும். தமிழகத்தின் தலித்துகளுக்கு எந்த நன்மையுமில்லை. ஏன் தமிழகத்திற்கே எந்த நன்மையுமில்லை.

நாங்கள் பதினைந்து பேர் துளையிடுநராக ஒரு அரசு அலுவலகத்தில் பணியாற்றுகின்றோம். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த உடல் ஊன முற்றவர்கள். நாங்கள் SC/ST சங்கம் வைத்தவுடனேயே பல ஊர்களுக்கு பல அலுவலகங்களுக்கு மாறுதல் செய்யப்பட்டோம். கடும் முயற்சியினால் இரண்டாண்டு காலம் அலைச்சலுக்குப் பிறகே கணிசமானோர் தாய்த் துறையில் மீண்டும் சேர்க்கப் பட்டோம். இங்கு அதிக அளவில் பணியாற்றும் பிராமணர்களும், தலித்தல்லா தார்களும் எங்களிடம் பேசுவதில்லை. என்னைப் பற்றியும் என் குடும்ப வாழ்க்கைப் பற்றியும் என்னுடன் பணியாற்றும் தலித் சிநேகிதியிடமும் அவளைக் குறித்து என்னிடமும் விசாரிக்கின்றனர். தனித்து விடப்பட்ட நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றோம். நீங்களாவது ஆறுதல் சொல்லுங்களேன்.

ஜெயலட்சுமி, கூத்தனூர்.

அம்மா, நீங்கள் அலுவலகத்திற்கு செல்வது பணியாற்றவே. பணியில் கவனம் செலுத்தி கண்ணும் கருத்துமாக செயலாற்றுங்கள். புத்தர் கூறியது காட்டில் தனித்து உண்ணும் யானையைப் போல தைரியத்துடனும் மனநிறைவுடனும் இருங்கள். அலுவலகத்தில் வீணே அடுப்படிக் கதைகளும் கிசுகிசுக்களும் பேசுபவர்கள் அவர்களாகவே விலகியிருக்கும் பட்சத்தில் நல்லதாய்ப் போயிற்று என்றெண்ணி ஓய்வு நேரத்தில் பயனுள்ள புத்தகங்களைப் படிப்பதில் காலம் கழியுங்கள். உங்கள் வருத்தம் அகலும். சந்திக்க முடியாத இணைகோடுகளென வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

# எங்கச் சாமி!

■ பாரதி நிவேதன்

தூர மலையிலிருந்து எந்த அறிகுறியுமில்லாது
குறுகிய பாதையில் சமவெளி பொசித்து
கண்மலர்த்துவாய் இலைமினுக்கி குளிரை மணத்தை

அறியாதவர்களும் எந்த அறிகுறியுமில்லாது
குறுகிய பாதையில்
நீவர தவமேற்றிருக்கிறார் வெடிப்பில்

சடைக் கற்றைகளில் துடிக்கும் நரம்புப்பிசிறு
கண்மையில் இருளின் அகாலம்
விழியில் விடியல் வண்ணம்
அதிர்வேட்டுக் குரலின் அணத்தலும்
நெருங்கிடா கம்பீரமும்

அதிசயமான உன் குகையில் தவறி நுழைய
கட்டறுத்து களை தின்ன காத்திருக்கும் விலங்குகள்
உன் சொடுக்கலுக்காக

காடுகரை மக்கமனுசரை அடைகாத்து
வழிவழியாகத் தலையெடுக்கப் பண்ணும் உனக்காக
உன் மேனியில் இளமையூறவும் பனிக்குடம் பூக்கவும்
விடாய் நாஸினையும் பசி நாவினையும் யாம் எண்ணி
படைத்திடுவோம் ஆடு மாடு கோழி.

விசயம் கசித்து பரப்பும் நிகழில்
பழைய விஷம் களிம்பூர

உடைந்துபோன கதவுகளின் வழியாக
உள்ளறைகளை படம் எடுத்துப்போன பிறகு
வனமேனி உரிகிறது

தீயறிந்த தொன்மணின்
அறுந்து தொங்கும் வலையிலிருந்து தப்பி
இரைதேடும் சிலந்தியை
சீண்டும் உன் உள்பிரதி

நிறரேகைகளை காணலற்றிருப்பாய்
இளைப்பாறுதலற்றத் துகளை
கழுவேற்றும் முன்பாக

கரிபிடித்த பூஞ்சை எண்ணெய்
கழுவி
மாடந்துலக்கி பளீரித்து
கரிபிடித்த பூஞ்சை எண்ணெய்

துகளே பெரும்பரப்பின் அடிக்கல்லென்று
விசயம் கசித்து பரப்பு
எடுத்த புகைப்படங்களோடு.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தேசியமும்

■ வி. ஏழுமலை

**சாதிய நெறிமுறைகளை
எந்த கட்சி உண்மையிலே
ஒழிக்க முன்வருகின்றதோ
தலித் மற்றும் தலித் இயக்கங்களின்
வளர்ச்சிக்கு எந்த கட்சி பாடுபடுகின்றதோ
அந்த கட்சிக்குத்தான் எங்கள் ஆதரவு
என்று எந்த தமிழக தமிழர்
இயக்கமாவது கூறுமா?**

# தலித் தேசியமும்

தமிழ்குடி என்பது கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி என்பார்கள். அந்த மூத்தக் குடியிலும் முதல் குடி எது என்றால் அது தலித் குடிதான். ஆனால் இந்த பூர்வக் குடிமக்களை புறந்தள்ளிவிட்டு மற்ற அனைத்துக்குடி மக்களும் சேர்ந்து கொண்டு நாங்கள் மட்டும்தான் தமிழர்கள், தலித்துகள் எங்களுக்கும் கீழானவர்கள், எனவே தீண்டாத மக்களுக்கெல்லாம் தமிழர் என்கின்ற தன்மான அடையாளத்தை வழங்கிவிட முடியாது. இந்த தமிழ் தமிழர் அமைப்புக்கள் அனைத்தும் எங்களுக்கு மட்டுமே சொந்தம். இதில் நாங்கள் மட்டுமே தலைமை வகித்து எங்கள் பிரச்சினைகளை மட்டுமே பேசி தீர்த்துக் கொள்ளுவோம் என்கின்ற நிலையை இன்றைய தமிழர்களும் தமிழ் இயக்கங்களும் உருவாக்கி வருகின்றன. இது மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒரு நிலைப்பாடுதான். தலித்துக்களை தவிர்த்துவிட்டு இங்கே யாரும் தமிழ்தேசியம் பற்றி பேசிவிட முடியாது. அதேபோல் சாதி ஒழியாமல் தமிழ் தேசியம் வளர்ந்துவிட வழியும் கிடையாது. தமிழர் என்கின்ற உணர்வு வந்துவிட்டால் சாதி உணர்வு மறைந்து போகும் மறந்து போகும் என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலம்தான். இங்கே தமிழன் என்பவன் பல்வேறு ஆதிக்க சாதிப் பிரிவுகளைக் கொண்டவனாகத்தானே இருக்கின்றான். இந்(து)த சமூக ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக் கொண்டவனுக்கு எப்படி நாம் அனைவரும் தமிழர்கள் என்கின்ற சமத்துவ எண்ணம் வரும். அப்படி அவனுக்கு தலித்துகளும் தமிழர்கள் என்கின்ற உணர்வு வர வேண்டும் என்றால் அவனை பிரி(டி)த்து வைத்திருக்கின்ற சாதி ஒழிய வேண்டும். ஆனால் இங்கே உள்ள தமிழர்களுக்கு தமிழ் தமிழர் உணர்வை விட தமது ஆதிக்க சாதி உணர்வே மேலோங்கி நிற்கின்றது. எனவேதான் இங்கே நடக்கும் சாதிக் கலவரங்களிலும் அடக்கு முறைகளிலும் ஒவ் வொரு தமிழனும் தான் ஒரு ஆதிக்க சாதி வெறியன் என்கின்ற தமது சாதி உணர்வை நிலை நாட்டவே விரும்புகின்றான். சாதிக் கட்டமைப்பில் கடைசியில் உள்ள தலித்துக்கள் கூட தமக்கு கீழே உள்ள அருந்ததியினரையும் மலைவாழ் மக்களையும் ஒடுக்க முனைகின்ற நிலைதான் உள்ளது. ஒவ்வொரு சாதிக்குள்ளே இருக்கும் உட்சாதிப் பிரிவுகளும் இன்று தமக்குள்ளே யார் உயர்ந்தவன் என்று ஒரு சாதிக்குள்ளேயே உள்சாதி ஒடுக்கு முறைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இங்கே சாதியின் பெயரால் ஒடுக்குபவனும் தமிழனே, ஒடுக்கப்படுபவனும் தமிழனே. சாதியை வகுத்துக் கொடுத்தது பிராமணர்கள் என்றால் அதனை இன்றும் தமது வாழ்வில் நடைமுறைப்படுத்தி அதற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருப்பது இந்த தமிழன்தானே?

இந்தத் தெய்வத்தமிழ் திருநாட்டில் மட்டும் பதினைந்தாயிரம் கிராமங்களில் இன்றும் இன்னும் இரட்டைக் குவளை முறை உள்ளது. இதனை ஒழிக்க எந்த தமிழர், தமிழ் இயக்கமாவது முன்வருமா?

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஊரையும் சேரியையும் இணைக்க எந்த தமிழ் தமிழர் இயக்கமாவது முனையுமா?

கீரிப்பட்டியிலும், பாப்பாபட்டியிலும் உள்ளாட்சி மன்ற தேர்தலை நடத்திய பிறகுதான் தமிழ்நாட்டில் பொதுத் தேர்தலையே நடத்த வேண்டும் என்று எந்த தமிழ், தமிழர் இயக்கமாகவது உண்ணாவிரதம் இருக்குமா?

சாதிய நெறிமுறைகளை எந்த கட்சி உண்மையிலே ஒழிக்க முன்வருகின்றதோ, தலித் மற்றும் தலித் இயக்கங்களின் வளர்ச்சிக்கு எந்த கட்சி பாடுபடுகின்றதோ அந்த கட்சிக்குத்தான் எங்கள் ஆதரவு என்று எந்த தமிழ் தமிழர் இயக்கமாவது கூறுமா?

சாதிக் கலவரங்களை தூண்டுபவர்களையும் சாதியின் பெயரால் அடக்குமுறை செய்பவர்களையும் மிகவும் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று எந்த தமிழக தமிழர் இயக்கமாவது எச்சரிக்கை செய்யுமா? தமிழ்நாட்டில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை கட்டாயம் மிகவும் சரியான முறையில் அமல்படுத்த வேண்டும் என்று எந்த தமிழ் தமிழர் இயக்கமாவது தீர்மானம் இயற்றுமா?

இவைகளெல்லாம் இவர்களால் முடியாத காரியங்கள்தான். ஏன் என்றால் இங்கே உள்ள தமிழ் தமிழர் இயக்கங்களெல்லாம் சாதி சங்கங்களின் ஆதரவிலும், சாதி சங்கங்கள் தமிழ், தமிழர் இயக்கம் என்ற போர்வையாலும் இயங்க வேண்டிய சூழ் நிலையில்தான் உள்ளன. மேலும் இவர்களின் பார்வையில் இது தமிழர்களின் பிரச்சினையல்ல, தலித்துகளின்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினை. இந்தியாவிற்கும் பக்கத்து நாட்டிற்கும் சண்டைவரும்போது நீ இந்தியனாக இரு தமிழ் நாட்டிற்கும் பக்கத்து மாநிலத்திற்கும் பிரச்சினை வரும்போது நீ தமிழனாக இரு. ஆனால் தமிழர்களுக்குள் தமிழ் நாட்டிற்குள் கலவரம் வரும்போது மட்டும் நீ ஆதிக்க சாதி வெறியனாக இரு. இதுதான் இன்றைய தமிழர்களின் தாரக மந்திரம்.

மனிதக் கழிவை மனிதர் சுமக்கும் நிலை மாறி தமிழன் மலத்தை தமிழனை தமிழனே தின்ன வைக்கும் நிலைக்கு தமிழகமும், தமிழர்களும் இன்று முன்னேறி வந்துள்ளனர். இங்கே மலத்தைத் தின்று சிறுநீரைக் குடித்தவன் தமிழனா, இல்லை மலத்தைத் தின்ன வைத்து சிறுநீரைக் குடிக்க வைத்தவன் தமிழனா. இவர்கள் மலத்தைத் தின்று சிறுநீரைக் குடிக்க வைத்த ஆதிக்க சாதி தமிழர்களாகவே இருக்க விரும்புகிறார்கள்.

தன்னை ஒரு தமிழ் இனப் போராளி என்று அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு அரசியல் கட்சியின் நிறுவனர் தமிழ்நாட்டில் எங்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்கின்றார். அப்படியானால் இவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் தின்னியம் கிராமத்தில் கருப்பையாவை மலம் தின்ன வைத்தலும் கவுண்டன்பட்டியில் சங்கரன் வாயில் சிறுநீர் கழித்தலும் நடந்ததோ என்று நமக்கு நினைக்கத் தோன்றுகின்றது.

தலித்துகள் காலணி அணியக் கூடாது கருவறைக்குள் நுழையக் கூடாது. தேர் இழுக்கக் கூடாது தேர்தலில் நிற்கக் கூடாது. என்று அடக்கு முறைகளை ஏவியது யார்?

கடற்கரையில் கண்ணகி அகற்றப்பட்டதற்காக கண்ணீர் வடிக்கும் இந்த தமிழ் தமிழர் இயக்கங்கள் சாதியின் பெயரால் தலித் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வது மட்டும் எந்த விதத்தில் நியாயம். தமிழ் பெண்களின் கற்பை விட தலித் பெண்களின் கற்பு எந்த விதத்தில் குறைந்துவிட்டது. இதனை எதிர்த்து இதுவரை எந்த தமிழ் தமிழர் இயக்கமாவது கேட்டதுண்டா? அப்படி கேட்டுவிட்டால் அந்த தமிழர் இயக்கத்தில் உள்ள ஆதிக்க சாதி தமிழர் வெளியேறி விடுவார்களே என்கின்ற பயம் அவர்களுக்கு. தமிழ் நாட்டில் இதுவரை நடந்த சாதிக் கொடுமைகளின் வரலாற்றை கொஞ்சம் திருப்பிப் பாருங்கள். தலித் தமிழர்களின் உயிர், உடமை, உரிமை இவற்றை சேதப்படுத்தியது இந்த ஆதிக்க சாதி தமிழர்கள்தான் என்கின்ற உண்மை புரியும். இதற்காக இவர்கள் ஒருபோதும் வெட்கப்படுவதில்லை.

அரசியல் கட்சிகள் எப்படி தலித்துகளை கொடிதூக்கவும், குரல் கொடுக்கவும், அடிமைகளாகவும், அடியாட்களாகவும் வைத்திருக்கின்றார்களோ, அதே நிலையில்தான் இவர்களை இந்த தமிழ், தமிழர் இயக்கங்களும் வைத்திருக்கின்றன. எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். கடுகு சிறியதாக இருந்தாலும் காரம் போகாது என்பார்கள். கட்சி எதுவாக இருந்தாலும் சாதி உணர்வு மறையாது. இதுதான் உண்மை. சாதி ஒழிப்பை முன் வைத்து ஆரம்பிக்கப்பட்ட திராவிட கட்சிகள் இன்று தனது அரசியல் ஆதாயத்திற்காக தமிழர்களுக்குள் பல ஆதிக்க சாதி சங்கங்களை உருவாக்கி அதனை தமது வாக்கு வங்கியாக வைத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள் இன்று சங்கம் வைத்து சாதி வளர்க்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

இணையும் தமிழ் தமிழர் இயக்கங்கள் இதே நிலையில் நீடித்தால் அரசியல் கட்சிகள் எப்படி தலித்துகளை புறந்தள்ளியதால் அவர்கள் தமக்கென ஒரு தலித் இயக்கங்களை உருவாக்கிக் கொண்டார்களோ அதேபோல் நாளை இந்த தலித் தமிழர்கள் தமது மொழி, கலை, இலக்கியம் பண்பாடு இவற்றை பாதுகாத்துக் கொள்ள தலித் தமிழர் பேரமைப்பு ஒன்றை தனியாக துவங்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். அப்போது இன்றிருக்கும் இந்த ஆதிக்க சாதி தமிழ், தமிழர் இயக்கங்கள் காலசூழலில் கரைந்து காணாமல் போய்விடும்.

●

## அறிவிப்பு

பெரியார் நாடகம் யாருக்காக (ஏப். 2004, பு.கோ.) என்ற கேள்வி பதிலுக்கு எதிர்வினையாக தமிழ் ஓவியா அவர்களின் கட்டுரை களத்து மேடு இதழில் வெளியானது. பு.கோ-விலும் வெளியானது. இதைத் தொடர்ந்து மா. வேலுச்சாமி அவர்களின், ஈ.வெ. ராமசாமி துணை? கடவுளாகும் பெரியார்... என்ற கட்டுரைக்கு நீண்டதொரு மறுப்புரையை கட்டுரையாக தமிழ் ஓவியா அவர்கள் எழுதியிருந்தார். இது கடந்த இதழ் மாநாட்டு சிறப்பிதழாக வெளியிடப்பட்டதால் இடம் பெறவில்லை. கட்டுரை வெளியீட்டில் அவசரம் காட்டிய தமிழ் ஓவியா அவர்களின் கட்டுரையை வெளியிட இவ்விதழில் பக்கம் ஒதுக்கி இருந்த நிலையில் அதே கட்டுரை "களத்துமேடு ஜூன் 15" இதழில் வெளிவந்துள்ளது. எனவே ஆர்வமுடைய வாசகர்கள் அவ்விதழைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், இவ்விதழில் அக்கட்டுரை வெளியிடப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# சென்னை நகர அரவாணிகள்

## ஓர் அலசல்

■ வை. இராமகிருஷ்ணன்

மனிதன் தோன்றிய கால முதல் இன்றுவரை, ஆண் பெண் என்ற உறவுமுறை நிகழ்ந்து வருகிறது. இங்ஙனம் அன்றி, தன்னை ஆணென்றும் பெண்ணென்றும் சிலர் கூறியும்/கூறாமலும், வாழ்ந்து வருகிறவர்கள் அரவாணிகள். இம் மனித இன கூறுகள் கொண்டவர்கள் மக்களிடத்தில் ஏதோ ஒரு வகையில் உறவும் வைத்து வருகின்றார்கள். மூன்றாண்டு காலம் அரவாணிகளுடன் கொண்ட உறவின் ஊடாக உருப்பெற்றதே இக்கட்டுரையாகும்.

அரவாணிகள் யார் என்ற வினாவின் ஊடாக அரவாணிகளை மூன்று கால கட்டமாகக் கொண்டு, பின் அறிவியல் கண்ணோட்டம், கோயில் சடங்குகள், அரவாணிகள் பற்றிய நம்பிக்கைகள் சார்ந்து அவதானிக்கின்ற முறைகள் ஆகியவற்றுடன் அரவாணிகளின் இன்றைய நிலையும் அவர்களின் உரிமைகளும் விளக்கப்படுகின்றது.

ஆண், பெண் என்று நம்மால் கட்டமைக்கப்பட்டுள்ள தன்மையிலிருந்து விலகி, மூன்றாம் தன்மையினை கொண்டுள்ளவர்களே அரவாணிகள். இவ்வாறு அன்றி ஆண் தன்மை (அ) பெண்தன்மை ஆகியவற்றை முழுமையாகப் பெற்று, ஆண் ஆணையும் பெண் பெண்ணையும், விரும்புகின்ற ஒரு சிலரை எப்பாலினத்தில் சேர்ப்பது? என்ற கேள்வி எழுகிறது. அவர்களை அரவாணிகள் என்று கூற முடியாது. அவர்கள் ஏதோ ஒரு விபத்தில் ஆட்கொள்ளப்பட்டு, பின் அதே தன் பாலியல் உறவு என நினைத்து அடிமைப்பட்டு உள்ளவர்கள் பிரிவில் சேர்க்கலாம்.

### முதல் காலகட்டம்

தமிழ்ச் சூழலில் நாம் முதன்மையாகக் கருதுகின்ற தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே, மூன்றாம் தன்மை கொண்டவர்கள் இருந்து வந்துள்ளார்கள். முதல் காலகட்டமென்பது பிறப்பு முதல் பதினைந்து வயதுவரை உள்ள தன்மையினை கூறுகிறது. சில குழந்தைகள் பிறப்பு முதலே மூன்றாம் தன்மை கொண்டே பிறக்கின்றார்கள். இம் மூன்றாம் தன்மை கொண்ட குழந்தைகளின் ஆண்/பெண் உறுப்பு இணைந்து காணப்படுகிறது. ஆண் உறுப்பு மேலும், ஆனால் விதைகள் இல்லா நிலையும் சிலருக்கு இருந்தும் உள்ளது. இத்தன்மை கொண்ட குழந்தைகளைப் பெற்றோர்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஆண்/பெண் என்ற ஏதாகிலும் ஒன்றினை வைத்து, மற்றொன்றினை மருத்துவர்கள் அகற்றி விடுவார்கள். இந்நிலை உள்ள குழந்தைகளை சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் காணலாம். பல மருத்துவங்கள் செய்தும் இக் குழந்தைகள் மூன்றாம் தன்மை கொண்டே விளங்குகின்றார்கள். இது தொடக்கத்தில் தெரியக்கூடிய ஒன்றாகும்.

சில சிறார்கள் மூன்று வயது முதலோ, அதற்கு மேற்பட்டோ தன்னுடைய நடை, உடை, பாவனை அனைத்தும் மூன்றாம் தன்மை கொண்டவர்களாக காணப்படுவார்கள். எடுத்துக்காட்டாக தான் விளையாடுகின்ற பொம்மைகள் அல்லது பொருட்கள். இவர்கள் பெண்கள் விரும்புகின்றப் பொருட்களையே விரும்புவார்கள் பெண் பொம்மைக்கு பாவாடை, தாவணி, மேலாடை, உள்ளாடை ஆகியவற்றை அவர்கள் கையினாலேயே தைத்து பொம்மைக்கு அணிவித்து அழகு பார்ப்பார்கள். தனது குடும்பத்தில் உள்ளவர்களின் பெண் உடைகளை வீட்டிற்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ அணிந்து கண்ணாடி முன்நின்று அழகு பார்ப்பார்கள். இத்தன்மை படிப்படியாக வளர்ந்து தன்னை சூழ்ந்துள்ள பெண்கள் என்ன செய்கின்றார்களோ, அதனை சிறார்களும் செய்யத் தொடங்குகின்றார்கள்.இவ்வாறு செய்வதைக் கண்ட உறவினரால் அல்லது வீட்டாரால் ஒதுக்கப்படுகின்றார்கள். அல்லது இவர்களுக்கு வீட்டினைப் பிடிக்காது வெளியேறுகின்றார்கள். இந்நிலை முதல் கட்டமாகும்.

### இரண்டாம் காலகட்டம்

வீட்டினைப் பிடிக்காது ஓடி வருகின்றவர்கள் அடைக்கலமாக இவர்களை ஒத்த மூன்றாம் தன்மை கொண்டு இருப்பவர்களிடமே சேர்கின்றார்கள். இந்நிலை பதினைந்து வயதுக்குப் பிறகு முப்பது வயது வரை கொண்ட காலகட்டமாகும். இந்நிலையில் அன்றாடம் வாழ்க்கையை கழிப்பதற்கு பணம் மிக முக்கியமான ஒன்றாக உள்ளது. பணத்தேவைக்கு வேலைக்குப் போகவேண்டிய சூழ்நிலை, ஆனால் வேலை என்பது இவர்களுக்கு எட்டாக் கனியாகவே இருக்கின்றது. வேலை கிடைக்காத காரணத்தால், அரவாணிகள் கடைக்கு கடை சென்று கை தட்டி காசினைப் பெறுவார்கள். அல்லது பாலியல் உறவில் ஈடுபடுவார்கள். இதன் மூலம் கிடைக்கும் பணத்தினைக் கொண்டு வாழ்வினை நடத்துவார்கள்.அடுத்து தானொரு



படிப்பகம்

www.padippakam.com

முழுமையான பெண்ணாக மாற வேண்டும் என்ற எண்ணம் உருவாகின்ற நிலையில்தான் பாலுறுப்பை அகற்றி மாற்றுறுப்பை வைத்துக் கொள்கின்றார்கள். இது இவர்களின் வாழ்க்கையில் பெரும் ஆசைகளில் ஒன்றாகும். பெரும்பாலும் மும்பையில் அறுவை சிகிச்சை செய்துகொள்கின்றார்கள். ஒரு அரவாணியைப் பார்த்து மற்றொருவர் "நீ பாம்பே போய் வந்தாச்சா?" என கேட்டால் மாற்றுறுப்பு வைத்து விட்டாயா? என்ற பொருளினைக் குறிக்கும்.

ஒரு சிலர் தான் வாழும் சூழல் கொண்டும் மூன்றாம் தன்மைக்கு தள்ளப்படுகின்றார்கள். எடுத்துக் காட்டாக கரகாட்டத்தில் பெண் வேடமிட்டு ஆடுகின்ற ஆண் நாட்கள் செல்ல, செல்ல பெண் தன்மையினையே அடைந்து விடுகின்றார். இங்ஙனம் நடப்பதை அண்ணாமலை அமைதி அரசு இயக்கிய 'ஏழுமலை' என்ற நாடகம் பிரதிபலிக்கிறது. இதுபோன்ற நிகழ்வு/விபத்துதொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது.

மேற்கூறிய அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஆணுடன் திருமணம் செய்து நிரந்தரமாக வாழும் ஏக்கம் உருவாகிறது. இம்மனநிலையில் அரவாணிகள் இருக்கும் பொழுது, மனிதத்தன்மை அற்றவர்களின் ஆசைப்பேச்சுக்கு இணங்கி/மயங்கி அவர்களுடன் சேர்ந்து விடுவார்கள். ஆண்கள் அரவாணிகளை அவர்களின் பொருளாதாரத் திற்கும், சில நேர பாலியல் உறவிற்கும் விரும்புகின்றார்கள்.

ஆண்களுடன் அரவாணிகள் சேர்ந்த சில காலத்திற்குப் பிறகு அவர்களிடம் பணத்தினை அல்லது பொருட்களைப் பிடுங்கிக் கொண்டு, குடித்துவிட்டு, கொடுமைப்படுத்தி துரத்திவிடுகின்றார்கள். ஒருசிலர் குடும்பமாக நடத்தி வருகின்றார்கள்.

### மூன்றாம் காலகட்டம்

முப்பது வயதுக்கு மேற்பட்ட அரவாணிகள் தங்களது வாழ்வில் துன்பங்களை அனுபவித்து, துறவு நிலைபோன்று மீண்டும் தன்னையொத்தவர்களுடன் சேர்கின்றார்கள். எடுத்துக்காட்டாக சென்னை தீவுத்திடல் எதிரில் கல்லறை என்ற பகுதியில், கலைவாணர் என்பவர் வீட்டில், பல அரவாணிகள் கூட்டாக வாழ்ந்து வருகின்றார்கள். இச்சமுதாயம் அரவாணிகளை ஒதுக்கிப்பார்க்கும் நிலையில் உள்ளபோது திரு. கலைவாணர் அவர்கள் தங்குவதற்கு வீடு கொடுத்திருப்பது பாராட்ட வேண்டிய தாகும். அரவாணிகள் சென்னையில் அவர் அவருக்கு ஒரு பகுதியைப் பிரித்துக்கொண்டு கடைகளுக்குச் சென்று கை தட்டி காசினை வசூல் செய்வார்கள். ஓட்டல்களில் எடுப்பு சாப்பாடு வாங்கி சேர்ந்து உண்பார்கள். ஒருசிலர் மது அருந்துவார்கள். இவ்வாறு தொடர்ந்து வாழ்ந்து வருகின்ற நிலையினைக் காணலாம். இவ்வரவாணிகள் பற்றிய அறிவியல் கண்ணோட்டம் பின் வருமாறு.

### அரவாணிகள் பற்றிய அறிவியல் கண்ணோட்டம்

மனித செல்லிலுள்ள 23 இணை குரோமசோம்களில் கடைசி 23-வது குரோமசோம் இணையே ஒருவர் ஆணா அல்லது பெண்ணா என்பதைத் தீர்மானிக்கிறது. பெண்ணின் கருமுட்டை பெண்பால் தன்மைகளை ஏற்படுத்தக்கூடிய X குரோம்சோம் மட்டும் கொண்டுள்ளது. ஆணின் விந்து பெண்பால் தன்மையை ஏற்படுத்தக்கூடிய X குரோமசோம் அல்லது ஆண்பால் தன்மையை ஏற்படுத்தக் கூடிய Y குரோமசோம் இரண்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டதாக இருக்கிறது. XX என்ற இணைச் சேர்க்கை பெண்ணாகவும் XY என்ற இணைச் சேர்க்கை ஆணாகவும் உருவாகிறது. மரபணு உருவாக்கத்தின் போது ஏற்படும் சில எதிர்பாராத மாற்றங்களால், பெண் கருமுட்டையிலேயே ஒரு X குரோமசோம் அதிகமாகவோ அல்லது ஆணின் விந்திலிருந்து வரும் Y குரோமசோமுடன் மேலிதிமாக ஒரு X குரோமசோமோ அல்லது Yகுரோமசோமோ கருவில் இணைந்து விட்டால் பிறக்கும் குழந்தை ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இரண்டும் இல்லாமலும் இரண்டுமாகவும் அதாவது

**ஆண்கள் அரவாணிகளை அவர்களின் பொருளாதாரத்திற்கும், சில நேரம் பாலியல் உறவிற்கும் விரும்புகின்றார்கள்.**

அரவாணியாக பிறக்கும். *(தொகுப்பு: அ. மார்க்ஸ் ; பொ. வேல்சாமி: ப. 91:1998.)*

### அரவாணிகள் கோயில் சடங்குகளில் பங்கு

பாம்பே, விழுப்புரம்-கூவாகம் ஆகிய இடங்களில் நடக்கும் விழா அனைவருக்கும் ஊடகங்கள் மூலம் அறியப்படும் நிகழ்வாகும். சென்னை நகரில் குடிசைவாழ் மற்றும் நடைபாதை மக்கள் வாழுமிடங்களில் சிறு தெய்வங்கள் உள்ளன. இச்சிறு தெய்வ வழிபாட்டு விழாவில் அரவாணிகள் அதிக பங்கு வகிக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக சென்னை பூங்கா நகரில் வால் டாக்ஸ் சாலை உள்ளது. (சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில்) இங்கு ஜம்ரான் தோட்டம்-காளப்ப தெருவும் வால்டாக்ஸ் சாலையும் இணையும் இடத்தில் சிறு மண்டபம் போன்று 'அங்காள பரமேஸ்வரி' பெயரினைக் கொண்ட அம்மன் கோயில் உள்ளது. இவ்வம்மனுக்கு ஆடி மாதம் முதல் வார வெள்ளிக்கிழமை காப்புக் கட்டுவார்கள். அம்மாதத்திலேயே மூன்று அல்லது ஐந்தாம் மாதம் காப்பு அறுப்பார்கள். காப்பினைக் கட்டும் பொழுதும் காப்பு அறுக்கும் பொழுதும் அரவாணிகளின் பங்கு அதிகமாக இருக்கும். காப்பு அறுப்பதை மிக விமர்சையாக நடத்துவார்கள். காப்பு அறுக்கும் அன்று பத்து மணிக்கு தொடங்கும் நிகழ்வு விடியற்காலை மூன்று அல்லது நான்கு மணிக்கு முடிவடையும். இதனை நடத்துகின்றவர்கள் சாலையோர மக்களாக இருந்தாலும் அரவாணிகள் இவ்விழாவினை முழுமையாக நிகழ்த்துவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

வெளியூர்களிலிருந்து அழைப்பின் பேரில் வந்து பம்பை, உடுக்கை, மேளம் ஆகிய இசைக் கருவிகள் கொண்டு இசையுடன் அம்மன் பாடலைப் பாடுவார்கள். இதற்கு அரவாணிகள் ஒவ்வொருவ ராக நடனம் ஆடுவார்கள். ஆடி சோர்ந்து உச்ச நிலையை அடை வார்கள். ஆடத்தொடங்கும்முன் வயது முதிர்ந்த அரவாணி ஒருவர் இதற்கு பூசாரியாக இருப்பார். நடனம் ஆடும் அரவாணிகளுக்கு முதலில் மஞ்சள் தண்ணீரை தெளிப்பார். கையில் ஒரு பிரம் பினை கொடுப்பார். இப்பிரம் பினை வைத்துக்கொண்டே ஒருவர் பின், ஒருவராக அரவாணிகள் நடனம் ஆடுவார்கள். இதனைப் பற்றிய செய்திகளை வயது முதிர்ந்த அரவாணிப் பூசாரியிடம் கேட்ட பொழுது நாங்கள் கடவுள் பிறவி, அதுவும் எங்களுக்கு அம்மனும் அர்த்தநாரீஸ்வரரும் பிடிக்கும் என்கிறார்.

அரவாணிகள் - மக்கள் நம்பிக் கைகள்

சென்னை நகர வடநாட்டுக் காரர்கள், குறிப்பாக மார்வாடிகள், அரவாணிகளிடம் பாலியல் உறவு வைத்திருந்தால் வியாபாரம் நன் றாக நடக்கும் என்ற நம்பிக்கை வைத்துள்ளார்கள். அரவாணி களும் தன்னிடம் பாலியல் உறவு வருபவரிடம், தனது பாலுறுப்பை அவர்களின் கண்களுக்கு காட்ட மாட்டார்கள். அப்படிக் காட்டி னால் பாலியல் உறவுக்கு வருபவர் கள் விருத்திக்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை அரவாணிகளிடம் உண்டு. அரவாணிகளிடம் குழு சொற்களாக பலசொற்கள் உண்டு. அரவாணிகள் கை தட்டிக் கொண்டு வரும்பொழுது காசினை கொடுத்து விடுவார்கள். அப்படி கொடுக் கவில்லை என்றால் வியாபாரம் நன்றாக நடக்காது என்ற நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஒரு சிலர் அரவாணிகளை தெய்வத் தன் மைக்கு ஒப்பாக நினைப்பார்கள்.

அரவாணிகளின் இன்றைய நிலை

தொல்காப்பியத்தில், மாணிக்க வாசகர் பாடலில், நா. காமராசு வின் கருப்பு மலர்கள் கவிதையில், சு. சமுத்திரத்தின் வாடா மலர்கள் நாவலில், இரயில் பயணங்கள் திரைப்படத்தில் அரவாணிகள் பற் றிய பதிவுகள் இடம் பெற்றுள்ளன. தலித்துகள் தங்களது உரிமைகளை இன்றுவிழிப்புணர்வுடன் தட்டிக் கேட்கத் துணிந்துள்ளார்கள். இதனைப் போன்றே அரவாணி களும் விழிப்புணர்வு பெற்றுள் ளார்கள். எடுத்துக்காட்டாக நாளி தழ்களில் இட ஒதுக்கீடு, மூன்றாம் தன்மை பாலினப்பிரிவு, வேலை வாய்ப்பு, ஓட்டுரிமை ஆகிய உரிமைகளை கேட்கின்றார்கள். அரவாணிகளுக்கு 'ஆதித்தியா' என்பவர் வழக்கறிஞராக உள்ளார். ஸ்டார் விஜய் (13.3.2004) சின்னத் திரையில் இவர்கள் பற்றிய காட்சி கள் இடம்பெற்றன. 'இரண்டாம் பிறவி' என்ற ஆவணப் படத்தில் இயக்குநர் அருண்மொழி அர வாணிகளைப்பற்றிய பதிவுகளை பதிவு செய்துள்ளார். இதுபோன்ற பல பதிவுகள்/காட்சிகள் இருந்தும் மாட்சியடையா வண்ணம் (அர வாணிகள்) இன்னும் வாழ்ந்து வருகின்றார்கள்.

முடிவுரை

அகமதாபாத்தில் முன்னாள் துணைப்பிரதமர் அத்வானிக்கு எதிராக தேர்தலில் அரவாணி ஒருவர் மனுத்தாக்கல் செய்துள் ளார். இவ்வாறான நிகழ்வுகளை காணும்பொழுது அரவாணிகள் விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்பது புலனாகிறது. ஆனால் இது மட்டும் அவர்களின் வாழ்க் கைக்குப் போதாது. பின்வரும் சில உரிமைகளை அரசோ அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவ னமோ ஏற்று நடத்தினால் அர வாணிகளுக்கு நல்வாழ்வு பிறக்கும்.

1. வேலைவாய்ப்பு போன்ற அனைத்துத்துறைகளிலும் மூன்றாம் தன்மை கொண்டவர்களுக்கு இட ஒதுக்கீடு.
2. அரவாணிகள் வாழ்க்கை நடத்துவதற்கு அடிப்படை யான ஊதியம் அல்லது வேலைவாய்ப்பு கொடுத்தல் வேண்டும்.
3. அரவாணிகளாகப் பிறப்போரை அரசாங்கம் தத்தெடுத்துக்கொள்ள வேண்டும்.
4. அரவாணிகளுக்கு அரசும், வெகுமக்களும், தொண்டு நிறுவனங்களும் ஆதரவு தர வேண்டும்.
5. வெகுமக்கள் அரவாணி களை ஏளனமாக பார்க் கும் தன்மையை முற்றிலும் ஒழித்திட வழிவகை செய் தல் வேண்டும்.
6. முன்கூறப்பட்ட பாலியல் விபத்திற்கு உட்பட்டவர் கள் சிலர் அரவாணிகள் போன்ற வேடமிட்டு பாலியல் உறவில் ஈடுபடு வதை தடுத்து, அரவா ணிகளுக்கு இழிவு ஏற்படுத்தாவண்ணம் தடை செய்தல் வேண்டும்.●

புதிய கோடாங்கி
பதிப்பகம்

**புதிய கோடாங்கி
பதிப்பகத்தின்
முதல் வெளியீடாக
எழுத்தாளர் சிவகாமி
எழுதி வெளிவந்த**

**'அப்னா பஞ்சாயத்து'**

**என்னும் கட்டுரை
தனியாக சிறு
புத்தக வழவில்
வெளியிடப்பட்டுள்ளது.**

**தேவைப்படுவோர்
கோடாங்கியின்
முகவரிக்கு தொடர்பு
கொள்ளவும்**

**(தொலைபேசி:
98404-49204)**

**நன்கொடை ரூ.10/-**



படிப்பகம்

www.padippakam.com

■ செந்தில் (அரவாணி)

# நானும் தான் பார்த்தேன் வேலை

இன்றுதான் புதுசா வேலைக்கு சேர்ந்தேன்! எத்தனை நாள் செய் வேன்னு கேளுங்க. ஏன்னா இது என்னுடைய 17-வது இடம், கஜினி முகம்மது மாதிரி. ஆனால் என் வயதென்னவோ 22 தான்!

போராட்டமான வாழ்க் கையை கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் போராட்டமே வாழ்க்கை என்றால் அது என்னைப் போன்ற வர்களுடையதுதானோ?

நான் 9-ஆம் வகுப்பு படிக்கும் போதே ஒரு கிளினிக்கில் பார்ட்-டைம் வேலை பார்த்தேன். முதன் முதலில் வேலையென்று போன தால் எனக்கு வெளி அனுபவமே கிடையாது. நான் பள்ளிக்கு போகும்போது என்னை சிலர் ஒன்பது என்று சொல்வார்கள். நான் மணியையோ அல்லது என் கையில் உள்ள புத்தக எண்ணிக் கையோ என்று நினைப்பேன். ஆனால் பின்னால்தான் தெரிந்தது, அது என்னுடைய நம்பர் என்று. இதைத் தவிர வேறு எதுவும் எனக்கு நடக்கவில்லை.

ஆனால் கிளினிக்கில் அந்த பாஸ்கர் டாக்டர் என்னை நான் யார் என புரிய வைத்தார். அதோடு நிற்கவில்லை. வேறு 'எதையெ தையோ' புரிய வைக்க ஆரம்பித் தார். எனக்கும் பிடித்துப் போகவே அதையே தொடர்ந்தேன். இவர் கிளினிக் வர கொஞ்சம் தாமதமா னால் நான் பேஷண்ட்டுக்கெல் லாம் டோக்கன் கொடுத்து வரிசை யில் உட்கார வைத்து, யாராவது அடிபட்டு வந்தால் டிரெஸ்ஸிங் கும் செய்து விடுவேன். ஆனால் இவர் உள்ளே நுழையும்போது ஆண்கள் யாருடனாவது நான் பேசிக்கொண்டிருந்தால்...

என்ன அவனை 'டிரை' பண்றியா? என்பார். என் மனது கஷ்டப்படும். ஆண்கள் யாருக்காவது பின் புறத்தில் ஊசி போடும் போது ஒரு ஓரக்கண்ணில் என்னைப் பார்ப் பார்!. அவர்கள் சென்றவுடன் என்ன பார்த்தியா? நல்லாயிருக்கா? என விரசமாயும் அதே சமயம் சந்தேகத்துடனும் கேட்பார். நான் அங்கிருந்து நின்றுவிட காரணம் இதனால்தான் என்று என் வீட்டில் சொல்ல முடியவில்லை. வேறு எதையோ சொல்லி சமாளித்தேன். ஆனால் அடி வாங்கியதை தடுக்க முடியவில்லை.

தொடர்ந்து வேலை தேடும் படலம்...

ஒரு 'லேத்து' பட்டறையில் வேலைக்கு விட்டார்கள். அங்கு நேரிடையாகவே என்னிடம் கிண் டலும், கேலியும் நடத்தினார்கள். என்ன செய்வது... எல்லாம் தெரிந்த படித்த டாக்டரே அப்படி நடந்து கொள்ளும்போது இவர்கள் எம் மாத்திரம் என நானும் மௌன மாகவேயிருப்பேன். மற்ற பையன் களை வெர்னியர், மைக் எப்படிப் பார்ப்பது என கையைப் பிடித்து சொல்லித் தருவார்கள் டர்னர்கள். ஆனால் என்னை மட்டும் வாய் வழியாகவேதான் சொல்லித் தருவார்கள். நாளடைவில் 'வாய் வழியேயும்' சொல்லித் தர ஆரம்பித்தார்கள்.

நான் சனிக்கிழமை கூலி வாங்கினால், நான்தானே உன் புருஷன் எனக்கு ஏதாவது கொடு என்பார்கள். "என் விஷயத்தில் யார் ஆம்பிள்ளை" என்று எனக் குப் புரியவில்லை. இவர்களின் தொல்லையால் நான் ஆறு மாதம் வேலை பார்த்தும் ஒரு முன் னேற்ற மும் இல்லை. டிரில் போடவோ, செக்கு மாட்டவோ, டூல் செட் பண்ணவோ என எந்த அடிப் படையும் தெரியாமல் ஓனரால் வேலையை விட்டு விரட்டப்பட் டேன். மறுபடியும் என் வீட்டில் பிண்ணி எடுத்தார்கள். இப்போ தும் நான் என் அம்மாவிடம் சொல்ல முடியவில்லை. காரணம் என் வீட்டில் எங்கள் பெற்றோர் கள் மிகவும் கண்டிப்பானவர்கள். இதைத்தான் பேசனும் என்ற விதிமுறை நாங்களாய் விதித்துக் கொண்டதால் வந்த விதி.

மூன்றாவதாய் ஐந்து பேர் மட்டும் வேலை பார்க்கும் ஒரு சிறு chit funds நிறுவனத்தில் ஆபீஸ் பாயாக நுழைந்தேன். எல்லோரும் ஓரளவு படித்தவர்கள். ஐந்து பேரும் ஆண்கள். நல்ல அழகாய் இருப் பார்கள். படு சுறுசுறுப்பு (ஓட வசதி யானவர்கள்). இது நமக்கு நிலை யான வேலை என நான் முடிவு செய்தேன். ஆனால் அந்த Chit fund நிலையில்லை என்பதை மறந்தேன். அங்கும் பாஞ்சாலி ஆக்கப்பட் டேன். கொஞ்ச நாட்களில் அவர் கள் ஒரு பக்கமும், நான் ஒரு பக்க மும் ஓட நேர்ந்தது. ஆனால் நான் மட்டும் வெறும் கையுடன் ஓடி வந்ததேன்.



படிப்பகம்

www.padippakam.com

இப்போது மட்டும் வீட்டில் அடிக்கவில்லை. மாறாக அந்த chit fund-இல் member-ஆக இருந்த சிலர் என்னை ரோட்டில் பார்த்து இரண்டு போட்டனர்.

அடுத்ததாக ஒரு ஸ்டார் ஹோட்டலில் யார், யாரையோ, எதையெதையோ பிடித்து ஹவுஸ் கீப்பிங் வேலைக்கு சேர்ந்தேன். நன்றாய் அடக்க ஒடுக்கமாய் வேலை பார்த்தேன். ஏற்கனவே இருந்த அனுபவத்தால் என் நடையுடைகளை அடக்கி வாசித்தும், யாருடனும் பேசாமலும் 15 நாட்கள் ஓட்டினது பெரும் ஆச்சரியம். அங்கு மட்டும் விட்டதா என்னை விதி. ஒரு நாள் மீட்டிங் ஹாலில் நடிகர் சங்கக் கூட்டம் நடந்தது. சுற்றிலும் எல்லாக் கதவையும் சாத்தியிருந்தார்கள். உள்ளே 'என் கனவுக் காதலன்' அரவிந்தசாமி வந்திருப்பதாய் கேள்விப்பட்ட நான் அந்த கதவின் மேல் பகுதியில் உள்ள கண்ணாடி வழியே ராஜாவைப் பார்க்க ஒரு ஸ்டூலைப் போட்டு ஏறியதுதான் தாமதம், உள் தாழ்ப்பாள் போடாத கதவு 'டமால்' என திறந்து நான் தலை குப்புற உள் பக்கமாய் விழுந்தேன்.

என்னை தாமுவும், வையாபுரியும் ஓடிவந்து கையைப் பிடித்து தூக்கினார்கள். மறுபக்கம் ஹோட்டல் மேனேஜரும், ஹவுஸ் கீப்பிங் இன்சார்ஜரும் என் காலையும் சேர்த்துப் பிடித்து இரண்டு சுற்று சுற்றி ரோட்டில் வீசி எறிந்தனர்.

வீட்டிற்குப் போன நான் முதுகைத் திருப்பிக் காட்டி கால் மணி நேரம் கண்ணை மூடிக் கொண்டேன். தவில் வித்வான்களாய் ஆன என் அம்மா-அப்பா ஓய்ந்தனர். இனி இவனுக்கு தகுந்த இடம் இதுதான் என ஒரு PCO வைத்து உட்கார வைத்தனர். ஓனரானேன். ஒரு சில மாதம்தான். சம்பந்தமே இல்லாத ஒருவன், 3, 4 முறை போன் செய்ய வந்தான். மனம் தடுமாற்றமடைந்தது. அவனுக்கும் பணம் தடுமாற்றம் போல. எனக்கு காதல் அரும்பியது. அவனுக்கு அதிர்ஷ்டக் காற்று திரும்பியது.

கல்லாவின் சாவியையே அவன் கையில் கொடுத்தேன். சில்லரை சேர்ந்ததும் இரண்டு மாத வசூலுடன் ஜில்லாவிலேயே இல்லை என் காதலன். மறுபடியும் 'மத்தளமானேன்.' என் முதுகு என்னை ஏசியது நீயும் மனுஷன்தானா, உனக்கு மட்டும் ஏன் இப்படி வெறி என்று? நானும் பதில் சொன்னேன், "உன் கீழே இருக்கிறானே அவனைக் கேள்" என்று.

இன்னும் எங்கெங்கோ வேலை பார்த்து ஓய்ந்து, கடைசியாய் இந்த கம்பெனியில் வேலைக்கு சேர்ந்திருக்கிறேன்.

"நாங்கள் (கோத்திகள்) தடம் மாறியதால் ஆண்களைப் பார்த்து தடுமாறுகிறோம். ஆகவேதான் இத்தனை இடம் மாறி நின்றோம்..." தேவையா கோத்திகளே (அரவாணிகளாக வாய்ப்புள்ள வர்களே)! •

# இரத்த உறவுகள்...

■ புதிய மாதவி

அடிபட்டபோது
வலிக்கவில்லை
பொங்கிவந்த ரத்தம்
கட்டுகளை
உடைத்து
கசிந்து உடைந்ததில்
வலித்தது
கட்டுகளின் அடியில்
கீறிப்பிளக்கும் காயம்.

மீண்டும் ஒருநாள்
காயம்படாமலேயே
சொட்டுச் சொட்டாக
ரத்தம்
தசைத்துணிப் பிழிந்து
சிந்தியது தரையில்
சோபாவில்
பள்ளிக் கூடத்து பெஞ்சில்
பார்க்கில்
தியேட்டரில்...

எங்கிருந்து
பொங்கித்துடித்து
சிதறி
வழிகின்றது ரத்தம்
என் சிறகுகள்
அறுத்து
என் கால்களின் ஓடையில்
என் கைகளுக்கு விலங்காய்
என் பிறப்பின் காயத்திலிருந்து
கசிகின்றதா...?
எங்கிருந்து...?

ரத்தம்...
ரத்தம் உறவாமே
உறவுகளின் கதவுகள்
திறவுகோலில்லாதக் கதவுகள்
வாசலில்லாதச் சிறைகள்

அப்போதும்...
சிவப்பு ரத்தம்
வெள்ளை ரத்தமாகி
வீங்கிப் பருத்த
மார்பகத்திலிருந்து
எதைத் தேடி ஓடுகின்றது...?

படைப்பின் சிருஷ்டி
தோல்வியில் அழுகின்றான்
வெள்ளை ரத்தம்
வெற்றி நடையுடன்...! •



படிப்பகம்

www.padippakam.com

# அம்மாசி

■ வலம்புரி ஜான்

குடிமகன் (நாவிதன்) கிழக்கே கல்லறைத் தோட்டம் முதற்கொண்டு மேற்கே முள்ளிக்கரை வரை டமாரம் அடித்துவிட்டான். நாளை மாலை ஐந்து மணிக்கு ஊர்க் கூட்டம். பள்ளி மாணவர்கள் கழிவறைகளில் படம் வரைவது போல சிலவேளைகளில் தங்கள் பெயர்கள் சக மாணவிகளோடு எழுதப்படுவதைப் பார்த்து கொதித்துப் போகிறவர்களும் உண்டு. அதைக் கண்டு குதூகலம் அடைகிறவர்களும் உண்டு. அந்த ஊரில் இந்த பெயர் எழுதும் விவகாரத்தில் சின்னதான அடிதடி முதல் கொஞ்சம் பெரிதான கலவரம் வரை வந்திருக்கிறது.

இப்போது முதல் முறையாக அந்த ஊர் பங்குத் தந்தை பிரான்சிஸை ஒரு கன்னியாஸ்திரியோடு இணைத்து சுவர்களில் எழுதப்பட்டிருக்கிறது. பெரும்பாலானவர்கள் என்ன இருந்தாலும் ஒரு சாமியாரை ஒரு கன்னியாஸ்திரியோடு இணைத்து எழுதியதை விரும்பவில்லை. நாளைய ஊர்க் கூட்டத்தில் எல்லாம் முடிவாகிப் போகும். ஜோசப்பின் என்ற இந்த கன்னியாஸ்திரிதான் முதன் முறையாக அந்த ஊருக்கு வந்த டாக்டர் கன்னியாஸ்திரி. அடிக்கடி அவர்களை அழைத்து தனது தீராத ஒரு நோய் பற்றி கூறிக் கொண்டு இருப்பார் சாமியார். பக்கத்து ஊர்களில் ஆண் டாக்டர்கள் இருக்கிறபோது இவர் ஏன் எப்போது பார்த்தாலும் படுக்கையில் கழிந்து போகிற வெள்ளை வேர்வை பற்றி, டாக்டராக இருந்தாலும், ஒரு பெண்ணிடம் பேசுகிறார் என்று ஸிஸ்டர் ஜோசப்பினுக்கு விளங்கவில்லை.

சாமியாரையும்,கன்னியாஸ்திரியையும் இணைத்து எழுதியதே அம்மாசிதான் என்பதில் சாமியார் உறுதியாக இருந்தார்.

ஒரு நாள் வாலிபர் கூட்டத்தில் அசிஸ்ட பண்டம் (புனிதப்பொருள்) என்றால் என்ன என்று அம்மாசி சாமியாரைக் கேட்டான். புனிதர்கள் பயன்படுத்துவது அச்சிஸ்ட பண்டம் என்று சாமியார் சொன்னார். உடனே அம்மாசி போப் அச்சிஸ்டவரா என்று கேட்டான். சாமியார் ஆம் என்றார். அப்படி என்றால் அவர் மூத்திரத்தைப் பிடித்து அச்சிஸ்ட பண்டம் என்று ஊருக்கு ஊர் விற்பனை செய்யலாமா? என்று அம்மாசி கேட்டதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

வேறு ஒரு நாள் ஞான உபதேச வகுப்பில் சாமியார் பாவிகள் எல்லாம் நரகத்துக்குப் போவார்கள், அங்கே சாத்தான்கள் ஈயத்தைக் காய்ச்சி காதில் ஊற்றுவர் என்றார்.

உடனே அம்மாசி நமது ஊரில் ஈயம் பித்தளைக்கு பேரிச்சம் பழம் தருகிறார்கள். நரகத்துக்குப் போனால் எளிதாக வியாபாரம் நடக்குமே என்று கேட்டான். வேறு சில கேள்விகளும் கேட்டான். அவைகள் எழுதுகிற மாதிரி இல்லை.

இது மாதிரி நினைவுகளை சாமியார் அசைபோட்டுக் கொண்டிருந்தார். கூட்டம் தொடங்கியது. பங்கு குருவானவரை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து இருந்தார்கள். நல்ல வேளை கன்னியாஸ்திரியை அழைக்கவில்லை. அம்மாசி நின்று கொண்டு இருந்தான். கூட்டம் கலவரத்தில் முடியுமோ என்ற அச்சம் இருந்தது. ஏன் என்றால் அம்மாசிக்கு தாய்மாமன்களே பத்து பேர் இருந்தார்கள். என்ன இருந்தாலும் சாமியாரை கன்னியாஸ்திரியோடு இணைத்து சுவரில் எழுதியிருக்கக் கூடாது என்று வருத்தப்பட்டார்.

முதலாவதாக உபதேசியார் எழுந்தார். சாமியாருக்கு திக் என்றது. உபதேசியார் நன்றாகக் குடித்து விட்டு வந்திருந்தார். தலைகிரங்க குடித்து வந்தாலும் நிதானத்தை இழக்காத நீதிமானவர்.

"முந்தாநாள் இரவு உங்களுக்கு எத்தனை பெண் குழந்தைகள் என்று சாமியார் என்னைக் கேட்டார். அதுகளுக்கு திருமணம் செய்து வைப்பது என் பொறுப்பு என்றார். பத்து பைசா தருமம் செய்ய பத்து நாள் யோசிக்கிற சாமியாருக்கு என் மேல் திடீர் அக்கறை எதற்காக, கொஞ்சம் சிந்திக்கனும்.

'மே தினம் கொண்டாடுரீங்க, போப்பாண்டவர் பதிமூன்றாம் சிங்கராயரின் தொழிலாளர் சாசனம் பற்றி எல்லாம் பேசிரீங்க, ஆனா பதினைந்து வருஷமா எனக்கு மாதம் ஆயிரம்தான் சம்பளம் தரீங்க'ன்னு கேட்டேன். அதுக்கு சாமியார், 'அடுத்த மாசத்திலிருந்து உனக்கு மூனாயிரம் சம்பளம்' என்றார். என் மீது இந்த திடீர் அக்கறை எதற்காக? கொஞ்சம் சிந்திக்கனும்.

முந்தானாள் இராத்திரி சாமியார் பெயரையும் கன்னியாஸ்திரி பெயரையும் எழுதிட்டாங்க. சாமியார்



படிப்பகம்

www.padippakam.com

அம்மாசியை குற்றம் சொல்றாரு. அவனுக்கு எழுதவே தெரியாது. இத சொன்னா அவன் வேறு ஆள வெச்சு எழுதிட்டான்னு சாமியார் சொல்லலாம். அந்த ஆள் யாருன்னுதான் கேள்வி. கொஞ்சம் சிந்திக்கனும்.

நேற்று காலையிலேயே ஆளுக சுவத்துல எழுதியிருந்ததை பார்த்துட்டாங்க. இத உடனே அழிக்கிறது தானே சரி. ஏன் சாமியாரு அழிக்கவிட மாட்டங்காரு, கொஞ்சம் சிந்திக்கனும்.

'சாய்ங்காலம் கூட்டத்துக்கு வராதே. வெளியூர் போய்டு'ன்னு சொல்லி எனக்கு முன்னூறு ரூபாய் கொடுத்தாரு. ஊர்ல கொல பாதகம் நடந்துரக் கூடாது என்றதுக்காக நான் வெளியூர் போகல. நான் எதுக்காக வெளியூர் போகனும். கொஞ்சம் சிந்திக்கனும்.

கடந்த பத்து வருஷமா எனக்கு ராத்தி தூக்கம் கிடையாது. ராத்தி முழுவதும் ஊரை சுத்திகிட்டு இருப்பேன். இவவுங்க எல்லாருக்கும் தெரியும். கொஞ்சம் சிந்திக்கனும். நான் நல்லததான் சொல்றேன். இதுக்கு மேல சொன்னால் நல்லா இருக்காது. கொஞ்சம் சிந்திக்கனும்."

கூட்டத்தில் சர்வ நிசப்தம் நிலவியது. கூட்டத்தில் குடித்திருந்த ஒருவன் அப்போது எழுந்து "அப்ப உபதேசியாரே, சாமியாரே அவர் பேரையும் கன்னியாஸ்திரி பேரையும், எழுதிட்டாரா"ன்னு கேட்டான். பதில் சொல்லாத உபதேசியார் கள்ளுக்கடைக்கு விரைந்து கொண்டிருந்தார். பதிலேதும் பேசாத சாமியார் வியர்க்க விருவிருக்க கோவிலுக்குப் போனார்.

மறுநாள் காலை அந்த சாமியாரின் வீட்டுச் சுவர் வெள்ளையடிக்கப்பட்டிருந்தது.

சாமியார் பெட்டி படுக்கைகளோடு ஜீப் ஒன்றில் தூத்துக்குடிக்கு பயணமாகிக் கொண்டிருந்தார். அந்தப் பங்கின் நூற்றி ஐம்பது வருட வரலாற்றில் சாமியாரே இல்லாமல், அந்த விசுவாசிகள் ஆராதனையைத் தொடங்கினார்கள்.

இதுவெல்லாம் நடந்து பதினைந்து வருடங்கள் ஆகின்றன. அந்த பங்கிற்கு சாமியார் இப்போது இல்லை. ஆனால் கடந்த பதினைந்து ஆண்டுகளாக அந்த ஊர் சண்டை சச்சரவுகள் இல்லாமல் அமைதியாக இருக்கிறது.

# தியான மண்டபம்

■ தேவதேவன்

சும்மா அப்படியே காலார கோயிலுக்குப் போய் வரலாமே என்று கிளம்பினேன். கர்ப்பக் கிரகத்தைச் சுற்றி பிரகாரம் வரைக்குமாய் ஒரே நெரிசல்; புழுக்கம். உள்ளே எட்டிப் பார்த்ததோடு சரி.

நல்ல காற்றும் வெளிச்சமுமான கல்தளமிடப்பட்ட வெளி. பிரம்மாண்டமாய் நிற்கும் ஒன்றிரண்டு விருட்சங்கள். 'ஆ' வென்று பரந்திருந்த் வானத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்தபடி கவலைகளற்றிருந்தது வெளிப்பிரகாரம். ரொம்பப் பரவசத்தோடு சுற்றிக் கொண்டிருந்தேன்.

அப்புறத்திலிருந்து நந்தவனத்தின் நடுவில், மேற் கூரையையும் கீழ்க்கூரையையும் (தளம்) இணைக்கும் தூண்கள் மட்டுமே கொண்ட ஒரு சிறிய மண்டபம். அதிலே யாரோ ஒரு முக்கியமான ஆள் அமர்ந்திருப்பதுபோல் தெரிய. ஈர்க்கப்பட்டவனாய் நந்தவனத்தின் கதவு திறந்து உள் நுழைந்தேன்.

"வேய்! நீர் என்ன, இங்கே இருக்கிறீர்? உம்மைத் தேடி, ஜனம் அங்கே நெருக்கியடித்துக்கொண்டு சாகிறது!"

"அந்த இருட்டுக்குள்ளே நான் என்றைக்கு இருந்தேன்? யார் அவர்களை அங்கேபோய் என்னைத் தேடச் சொன்னது?"

"இருந்தாலும் நீர் ரொம்ப மோசம், வேய்!"

"என்னை என்னத்தை செய்யச் சொல்கிறீர்? நானும்தான் எவ்வளவோ சொல்லிப் பார்த்துக்கிட்டே தானே இருக்கேன்?"

அதற்குள் அங்கே பூக் குடலையோடு வந்த ஒரு குருக்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுப் பயந்தவர்போல் சொன்னார். "இந்தப் பக்கமெல்லாம் மனுஷாள் வரவேண்டியதில்லை..."



படிப்பகம்

www.padippakam.com

# அநாதி காலம்

ஆசிரியர் : தேன்மொழி
வெளியீடு : குமரன் பதிப்பகம்
விலை : ரூ. 40

■ பொன்குமார்

ஒவ்வொரு கவிஞருக்கும் ஒவ்வொரு மொழிநடை. அவ்வாறு தனித்த மொழியுடன் கவிதை உலகில் பிரவேசித்திருக்கும் புதுக் கவிஞர் தேன்மொழி. இவரின் முதல் தொகுப்பு 'இசையில்லாத இலையில்லை.' முதல் தொகுப்பே மூன்று விருதுகளைப் பெற்றது, தொகுப்பின் தனித்துவத்துக்கான சான்று. அண்மையில் வெளிவந்துள்ளது கவிஞர் தேன்மொழியின் இரண்டாம் தொகுப்பு 'அநாதி காலம்.' 'இசையில்லாத இலையில்லை'யின் தொடர்ச்சியாகவே இரண்டாம் பாகம் தெரிகிறது. கவிஞர்கள் இயற்கையைப் பாடுவது இயல்பு. தேன்மொழி இயற்கையை மட்டுமே இயல்பாக கொண்டுள்ளார். இயற்கையைப் பாடுவது ஜப்பானிய ஹைக்கூவின் தன்மை ஆகும். தமிழில் கவிஞர் மித்ரா ஹைக்கூவில் இயற்கையை பல்வேறு கோணங்களில் படம் பிடித்துள்ளார். இதைத் தொடர்ந்து தேன்மொழி புதுக்கவிதையில் பாடியிருப்பது சிறப்பு. முதல் கவிதையே வானம், மரம், செடி என இயற்கையாலே கட்டமைக்கப்பட்டுள்ளது.

"காலை வானம்
சிவந்து பரவுகையில்
தேங்கி நிற்கிற கலவை
திரும்பத் திரும்பப் பார்க்கிறேன்"

இது சாதாரண பதிவு என்னும் 'தேங்கி நிற்கிற கலவை' என்பதே கவிதை.

கவிஞர் உவமையைக் கொண்டு கூறும் போதும் இயற்கையை அழகாகவே கையாண்டுள்ளார்.

மணிக்குறிப்பு-வில்

"மான் தின்ற மலைப்பாம்பு
மரம் சுற்றி நெளிவது மாதிரி
என் உணர்வுகளை
எனக்குள்ளேயே
சட சடக்க விடுகிறேன்"

என்பது ரசிக்கத் தக்க உவமை. இதே தொனியிலேயே அமைந்துள்ளது 'காத்திருப்பின் கணங்களில்' கவிதையும். இயற்கைகூட தன்னை தனிமையில் விடுவதில்லை என காட்டுகிறது 'காலை வெளி'. தேன்மொழி பெண் எனினும் பெண்ணியம் குறித்த கவிதைகள் குறைவு. சில எண்ணங்கள் பொதுவானதே. இலை, தழை, செடி, கொடி என எழுதியவர் சில கவிதையில் 'அமிலம்' என்ற இரசாயணப் பொருளை உவமையாக பயன்படுத்தி அறிவியல் அறிவையும் காட்டியுள்ளார். தேன்மொழி கிராமத்தவர் என்பதால் பலவிதமான சத்தங்களை கவிதையில் ஒலிக்கச் செய்துள்ளார்.

கவிதைகளில் சத்தம் பல கேட்டது போலவே வாசங்களும் பல வீசுகின்றன. கிராமத்து வாசமே தனி.

அவருக்கும் 'பெயர் தெரியாத மரம்' (பிரியம்) 'பெயர் தெரியாத பறவை' (காத்திருப்பின் கணங்களில்) ஆகியவை உண்டு.

"பெயர் தெரியா
பறவையின்
கூவலுக்காக
காத்திருக்கிறேன்"

என்கிறார். கூவுவது குயில்தானே?

மருத்துவமனைப் படிக்கட்டுகளில்:

"எல்லாத் துப்பாக்கிகளும்
தொலைந்துபோனால்
நலமாயிருக்கும்"

என்னும் வரிகள் கவிஞரின் எல்லை தாண்டிய அன்பை, நேசத்தைக் காட்டுகிறது.

"என் மேல் சுற்றியிருந்த
உயிர்க்கொடி அறுத்து
சாதிக் கொடி போர்த்திய போது
நான் தூங்கியிருக்கக் கூடாது"

என்னும் கவிதை கவிஞரின் சாதி மறுப்பு கொள்கைக்கு எடுத்துக்காட்டு. கவிஞருக்கு கடைசி ஆசையும் ஒன்று உண்டு.

"என் கல்லறைக்கான வாசகம்
தேட வேண்டியதில்லை
நட்டு வையுங்கள் என் மீது
ஒரு பூமரத்து நாற்றை"

இறந்தாலும் இயற்கையை நேசிப்பவராக உள்ளார். இயற்கையைப் பதிவு செய்த தேன்மொழி இடை இடையே மனிதர்களின் வட்டார பேச்சு மொழியையும் பதிவு செய்துள்ளார். கிராமத்து மனிதர்களுக்கு காடே தெய்வம். மண்ணே செல்வம். மேற்குத் தொடர்ச்சி மலையில் மணலாறு என்னும் தேயிலைத் தோட்டப் பிரதேசத்தில் பிறந்த தேன்மொழியின் கவிதையில் மரம், செடி, கொடி, பூ, மலை, மண், காடு, வாசம், வான், பறவை என பாடு பொருள்கள் இருப்பதே கவிதைக்கும் அழகு, தொகுப்புக்கும் கனம். கவிஞர் தேன்மொழியை "பசுமைப்பெண்" என்னும் பட்டம் தந்து அழைக்கலாம். 'இசையில்லாத இலையில்லை' என்னும் தொகுப்பு பெற்ற வெற்றியை 'அநாதி காலம்' பெறும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. ●



படிப்பகம்

www.padippakam.com

# தற்கொலைக்குத் தூண்டும் கல்வித்துறை

அண்மையில் தமிழக அரசு கலைக் கல்லூரிகளில் 1250 சிறப்பு (கௌரவ) விரிவுரையாளர் பணியிடங்களுக்கு தொடர்புடைய கல்லூரி முதல்வர்களே நேரடியாக தகுதி திறமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள அனுமதித்து ஆணையிட்டது. இதில் தமிழக அரசு தன் பங்குக்கு இடஒதுக்கீட்டுக் கொள்கையை குழிதோண்டிப் புதைத்தது. அனைத்து இடங்களுக்கும் பொதுப் போட்டியிலேயே விரிவுரையாளர் தேர்வு நடத்தப்பெற்றது.

தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கு (19) விரிவுரையாளர் பணியிடங்களுக்கு நியமனம் 1.7.2004 அன்று நடந்தது. தேர்வுக்குழு கூடி தேர்ந்தெடுத்த 19 பேரில், பொருளாதாரப் பாடப் பிரிவுக்கு மூன்று பேரைத் தேர்வு செய்தது. முதலாமவர் அழகரசன், இரண்டாமவர் ராஜ்குமார், மூன்றாமவர் நாகேஷ்வரன்.

மூவரில் இருவர் பிற்படுத்தப்பட்டவர்கள், ஒருவர் தாழ்த்தப்பட்டவர். இவர்கள் மூவரும் இடஒதுக்கீட்டு அடிப்படையில் தேர்வு பெற்றவர்கள் அல்ல. பொதுப் போட்டியில் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரும் 2.7.2004 அன்று காலை 10 மணிக்கு கல்லூரியில் பணியில் சேர்ந்து, அன்றே வகுப்பு எடுக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

மூன்றாமவரான தலித் நாகேஷ்வரன் 2.7.2004 அன்று காலை 10 மணி 10 நிமிடத்துக்கு கல்லூரிக்கு வந்து முதல்வரை சந்திக்கிறார். பத்து நிமிடம் தாமதமாக வந்ததால், அவரது (நாகேஷ்வரன்) பணி நியமனம் ரத்து ஆகிவிட்டதாகவும், அவரது இடத்தில் வேறொருவர் நியமனம் செய்யப்பட்டுவிட்டதாகவும் கல்லூரியின் (பொறுப்பு) முதல்வராக இருந்த முகமது இஸ்மாயில் கூறிவிட்டார்.

முதுகலைப் பட்டம் பெற்ற தலித் இளைஞர் நாகேஷ்வரன் கெஞ்சுகிறார், வாதாடுகிறார், தனது தரப்பு தவறுக்காக - ஆம்! 10 நிமிட தாமதத்துக்காக வருந்தி எப்படியாவது பணியில் சேர்க்குமாறு போராடுகிறார், மன்றாடுகிறார். 11 மணி வரை முதல்வரிடம் எவ்வளவோ எடுத்துப் பேசியும், அவரது கோரிக்கை முதல்வரால் மறுக்கப்படுகிறது.

ஏழை தலித் சிறு விவசாயியின் மகனான நாகேஷ்வரன் உடைந்த உள்ளத்தோடு விரிவுரையாளர் பணி வாய்ப்பை இழந்து விட்டோமே என்கிற குமுறலோடு நெஞ்சம் துடிக்க, கண்ணீர் பணிக்க, கல்லூரியை விட்டு தன் சொந்த ஊரான, பட்டுக் கோட்டை அருகேயுள்ள களத்தூருக்குச் சென்று, அன்று பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து இறந்து போகிறார்! பெற்றோர் - உற்றார் - உறவினர் கதறியபடி கிராமப்புற அறியாமையில், பயத்தில் அவரது பிணத்தை போலீசுக்குத் தகவல் தெரிவிக்காமல் எரித்துவிடுகின்றனர்.

அநியாயமாக ஒரு தலித் முதுகலைப் பட்டதாரி இளைஞர் சாவுக்கு யார் காரணம்? ஒரு தலித் பொதுப்போட்டியில் மூன்றாவது இடத்தில்கூட தேர்வாகமாட்டார் என்பதே தமிழக அரசின் தேர்வுக் குழுவின் எதிர்பார்ப்பு! நேரடி, மதிப்பெண் ஆய்வால் தலித் நாகேஷ்வரன் தேர்வாகி விட்டார். அப்போதே தேர்வுக்குழுவுக்கு வயிற்றெரிச்சல் தொடங்கிவிட்டது. இவரை பணியில் சேரவிடாமல் தடுக்க அவர்களுக்கு ஒரு காரணம் தேவைப்பட்டது. அதுதான் பத்து நிமிட தாமதம்.

*நாம் எழுப்பும் வினாக்கள்?*

- பலரும் பணி வாய்ப்புக்காக காத்திருப்பது நாகேஷ்வரனின் தவறு அல்ல! அது நமது சமூக அமைப்பின் அவலம்!
- நாகேஷ்வரன் முதல் நாளே பணியிடத்துக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றவர். அவரது வருகை பத்து நிமிடம் தாமதமானதால், 10 நிமிட இடைவெளியில் தேர்வுக் குழு கூடி நாலாமாவரை அவசர அவசரமாக தேர்வு செய்ததின் உள்நோக்கமென்ன?
- இடஒதுக்கீட்டு அடிப்படையில் தேர்வு செய்யாததால் முழுக்க முழுக்க பொதுப் போட்டியில் தேர்வு பெற்ற ஒரு தலித் இளைஞரை புறந்தள்ளிவிட்டு, (சீனியா ரிட்டி) காத்திருப்பு வரிசையில் நான்காவது நபரை தேர்வு செய்தது சமூக அநீதியில்லையா?
- வெறும் 10 நிமிடத் தாமதத்தைச் சுட்டிக் காட்டி, நாகேஷ்வரனுக்கு பணிவாய்ப்பு மறுக்கப்பட்டதால் ஒரு அரிய உயிர் பறிக்கப்பட்டுவிட்டது. நடந்தது தற்கொலைதான் என்றாலும், பொறுப்பு முதல்வர் முகமது இஸ்மாயில் உள்ளிட்ட தேர்வுக் குழுவின் உளவியல் தூண்டலால், வன்கொடுமையால், சாதி, ஊழல், அதிகாரத்துவ திமிரால்தான் இந்தக் கொலை நடந்துள்ளது.

எனவே

- தலித் இளைஞர் நாகேஷ்வரன் கொலைக்கு காரணமான கல்லூரி பொறுப்பு முதல்வர் முகமது இஸ்மாயில் மீது தாழ்த்தப்பட்டோர் மீதான வன் கொடுமைத் தடுப்புச் சட்டம் மற்றும் தற்கொலைக்குத் தூண்டிய குற்றப்பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- நாகேஷ்வரன் தற்கொலை மரணத்தை கொலை வழக்காக மாற்றி சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு ஆணையிட வேண்டும்.

தமிழக மனித உரிமைக் கழகம்
தஞ்சாவூர் மாவட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# உடல் மொழி

■ சிவகாமி

## தலித் பெண்ணியம்

சாதியின் மூலக்கூறுகளைப் பற்றி அறியாதவர்களாலும், சாதிக்கொடுமைகளைப் பற்றி அக்கறையில்லாதவர்களாலும், இந்து மரபு வழி வந்தவர்களாலும் கட்டமைக்கப்பட்டதே இந்தியப் பெண்ணியம். இப் பெண்ணியவாதத்தின் நோக்கம், மேல் தட்டுப் பெண்கள், ஆண்களுக்கு நிகராக அதிகாரத்தைத் துய்ப்பதே. மேலும் மாறிவரும் காலத்திற்கேற்ப தங்கள் வாழ்சூழலில் சில சீர்திருத்தங்களைச் செய்து தங்கள் நிலையை மேம்படுத்திக் கொள்வது மட்டுமே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உடன் கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம் இவற்றுக்கு எதிராகத் தொடங்கிய சீர்திருத்த நடவடிக்கைகள் விதவை மறுமணம், பெண் கல்வி என வளர்ந்து, பெண்களுக்கு சமவேலை வாய்ப்பு என்றும் முப்பத்திமூன்று சதவிகித ஒதுக்கீடு என்றும் கோரிக்கைகள் வைத்து, சாதி ஒடுக்குமுறையைக் காப்பாற்றும் அரசியல் கட்சிகளோடு இணைந்து, தங்களுக்கு தொடர்ந்து அதிகாரம் பெறும் வழிகளில் நிலை பெற்றிருக்கிறது.

- இவ்வகைப் பெண்ணியம் பார்ப்பனியக் கருத்தியல்களை ஏற்றுக் கொண்டுள்ளது. பிறப்பின் அடிப்படையிலான பெண்களின் இரண்டாம் நிலையை எதிர்க்கும் வேளையில் பிறப்பின் அடிப்படையிலான சாதியப் படிநிலைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

- பெண்களுக்கான முப்பத்தி மூன்று சதவிகிதம் இட ஒதுக்கீட்டினை வலியுறுத்தும் இது, சமூகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை (மண்டல் கமிஷன் எதிர்ப்பு) எதிர்க்கிறது.

- தகுதி, திறமை அடிப்படையில் இல்லாது பெண்களுக்கு சமவாய்ப்புகள் கோரும் இது, தலித்துகளுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வாய்ப்புகள் தகுதி திறமை அடிப்படையிலேயே வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறது. அதாவது பெண்களுக்கு முப்பத்தி மூன்று சதவிகித ஒதுக்கீடு அமல்படுத்தப் படும் நிலையில், பெண்களில் தகுதி, திறமை பெற்றவர்களே அதைத் துய்க்க வேண்டும் என்கிறது. அதில் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கான இட ஒதுக்கீடு தேவையில்லை என்பதை மிகக் கடுமையாக முன்வைக்கிறது.

- மிருக நேயம் கொண்டுள்ள (பசுவதை தடுப்பு, கோமாதா வழிபாடு) இப்பெண்ணியம், சமூகத்தில் தொடர்ந்து ஒரு சாராரே கடுமையான உடலுழைப்பில் ஈடுபட்டு வரவேண்டும் என வலியுறுத்துகிறது.

இவ்வாறு, பகுத்தறிவற்ற இந்துமத மூடநம்பிக்கைகளில் ஊறித் திளைக்கும் முரண்களின் கலவையாக விளங்கும் சுயநலமிக்க பெண்ணியமே இந்திய - இந்து சாதியப் பெண்ணியம்.

இவற்றிலிருந்து சற்றே வேறுபட்டது இந்து-சாதி-மார்க்ஸியப் பெண்ணியம். இவர்களின் விசித்திர விநோதமான செயல்பாடுகளைக் காண்போம். மார்க்ஸிய விஞ்ஞானம் என்னும் அரிய வகை வாசனைத் தைலத்தை சாதிப் பிணங்களின் மீது தெளித்து இன்னமும் பாதுகாத்து வைத்திருப்பது எனும் பெருமைக்குரியது. பார்ப்பனியம் - சாதி இவற்றை மார்க்ஸியக் குடைக்குள் மடக்கி மறைத்துக் கொண்டு திரிபவர்கள்! இவற்றைப் பற்றி பகிரங்கமாக விவாதிக்காமல் இவற்றை ஒழித்துவிடக் கிளம்பிய செயல்வீரர்கள்!

பார்ப்பனிய - சாதிப் புண்ணுக்கு புனுகு தடவி வருபவர்கள். அதாவது காவல் நிலைய கற்பழிப்பு எதிர்ப்பு, ஆபாச சுவரொட்டி கிழிப்பு, ஆபாச சினிமாவுக்கு எதிர்ப்பு, பெண் சிசுக்கொலை எதிர்ப்பு, ஆன்-பெண் சம வேலைவாய்ப்பு, சம ஊதியம் என்று ஆங்காங்கே அவ்வப்போது சிற்சில செயல்பாடுகளில் இறங்கியவர்கள்.

சமீப காலங்களில் இவர்களது செயல்பாடுகளில் பெருகிவரும் தலித் எழுச்சி காரணமாக சில மாற்றங்கள் வந்துள்ளன என்பது உண்மை. மூன்றாண்டுகளுக்கு முன்பாக சென்னை காமராஜர் திடலில் நடந்த அவர்களுடைய மாநாட்டில் தலித் பிரச்சினைகளை விவாதித்தார்கள். மாநாட்டுப் பங்கேற்பாளர்களை பல பிரிவுகளாகப் பிரித்து, அவர்களின் இயக்கத்திலுள்ள தலித் பெண்களை திருப்திப் படுத்தும் விதமாக, தலித் பெண்கள் பிரிவில் இவ்விவாதம் நடத்தப் பெற்றது ஒரு வகையில் வரவேற்கக் கூடியதுதான் எனினும் அவர்களுடைய சாதி சித்தாந்தத்தில் இன்னும் மாறுதல் வரவில்லை.

அதாவது, சாதி என்பது சாதிக் கொடுமையினால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நடத்தப்படுகின்ற விவாதமே அன்றி அக்கொடுமையை நிகழ்த்துபவர்கள் மத்தியில் நடத்தப்பட வேண்டிய அவசியத்தை, சாதி ஒழிப்பை மெய்யப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்களாக மாறவில்லை என்பதே அது. சாதி ஒடுக்குமுறையை, பார்ப்பனியத்தின் ஊடுருவலை மறுத்து, தங்களது இருப்புக்காக 'பாட்டாளி சர்வாதிகாரம்' எனும் மாய மந்திரமே போதுமானது எனும்



படிப்பகம்

www.padippakam.com

வகையில் சுயநலமிகளாக இருந்து வருகிறார்கள். சாதிகுறித்த உரையாடலை பெருமளவில் நடத்தாமல், தலித் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்கொடுமை களை அவர்களைத் தனிநபர்களாக்கி போலீஸ் ஸ்டேஷன் வரை எடுத்துச் சென்று கோர்ட்டுப் படியேறி வாதாடி வெற்றி பெறுவதன் மூலம் தடுத்து நிறுத்த முடியும் என்று நம்புகிறார்கள். தலித் பெண்களை விசுவாசமிக்க மார்க்ஸிய ஊழியர்களாக மாற்றவே இந்நடவடிக்கைகள் பயன்பட்டு வருகின்றன. இந்து-சாதி-மார்க்ஸியப் பெண்ணியத்தில் தலித் பெண் களுக்கும் இடம் உண்டு என்று நம்பிக்கையளிக்கும் விதத்தில் இவர்கள் செயல்பாடுகள் அமைந்துள்ளன. மார்க்ஸிய விஞ்ஞானத்தின் ஒளியில் நிலவிவரும் பிற்போக்கான சமூகக் கட்டமைப்பைத் தகர்க்கும் கருத்தியல்களை உருவாக்கும் பணியிலல்லாது, இவர்களின் மகளிர் செயல்பாடுகள் சமூகசேவை அடிப்படையில் அமைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

இங்கே வர்க்கமும் சாதியும் மத ஆசாரங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளதை கணக்கில் கொள்ளாது அவற்றைக் கேள்விக்குட்படுத்தாது செயற்கைத்தன மான பாட்டாளி வர்க்க ஒற்றுமையை விதைப்பதில் ஆர்வமாக உள்ளார்கள்.

சமீபத்தில் மீஞ்சூர் அருகே உள்ள பட்டமுந்திரி கிராமத்தில் புதிய கோடாங்கி குழுவினர் இளைஞர் களுக்கான தலித் எழுச்சி முகாம் நடத்தினர். அதில் மார்க்ஸிய கட்சி இளைஞர்களும் கலந்து கொண்ட னர். தலித் பிரச்சினைக்கு மார்க்ஸியம் சர்வபோக நிவாரணம் என்றும் தலித்துகளுக்கான தனி அரசியல் இயக்கம் தேவையில்லை என்றும் கூறினர். அப்போது பேசிய எழுத்தாளர் குடியரசு, இது தலித் இளைஞர் களுக்காக நடத்தும் பயிற்சி முகாம், தலித்துகளுக்கு தனி இயக்கம் தேவையா இல்லையா என்பதை தலித் இளைஞர்கள் முடிவு செய்யட்டும் என்றார். அதற்கு அவர்கள் நாங்களும் தலித்துகள்தான் என்றனர். உடனே குடியரசு அவர்கள் “அப்போ, நீங்கள் மார்க்ஸி யர்கள் இல்லையா?” என்ற வினாவெழுப்பினார். அவர்களோ நாங்கள் மார்க்ஸியர்கள் என்றாலும் அடிப்படையில் தலித் உணர்வுள்ளவர்கள் என்றனர். உடனே குடியரசுக்கு சந்தேகம் வந்தது. நீங்கள் மார்க்ஸியர்கள் என்றாலும் எப்படி அடிப்படையில் தலித் உணர்வு உள்ளவர்கள் என்று கூறுகிறீர்களோ அதே போல் உங்கள் இயக்கத்தில் உள்ளவர்கள் தாங்கள் மார்க்ஸியர்கள் என்றாலும் அடிப்படையில் பிராமண உணர்வுள்ளவர்கள் என்று கூறலாமல்லவா? என்று தனது சந்தேகத்தைப் பகிரங்கமாக வெடித்ததும் அவர்களில் இருவர் குடியரசுவை தாக்கும் மன நிலைக்கு வந்து ஒருமையில் திட்டினர். இது சுட்டிக் காட்டப்பட்டதும் சகோதரப் பாசத்திலும், உரிமை யின் அடிப்படையிலும் அப்படிப் பேசியதாகவும், அதற்காக பிறகு மன்னிப்பும் கேட்டனர்.

ஏறு-இறங்கு வரிசையில் உள்ள பல்வேறு சாதி களைச் சேர்ந்தவர்களை, சாதிக் கருத்தியலை உடைக் காமல் அவர்களை ஒத்த உணர்வுள்ளவர்களாக, ஆக்கப்பூர்வமான செயல்பாட்டுக்காக ஒருங்கிணைக்க முடியாது என்பதையே இங்கேயுள்ள மார்க்ஸிய நடை முறைகள் உணர்த்துகின்றன. அவர்களுடைய பெண் ணியச் செயல்பாடுகளும் இத்தன்மை உடைத்தனவே.

இந்துக் கலாச்சார முறைமைகளில் பங்கெடுத்த வண்ணம், குடும்பம், திருமணம் போன்ற நிறுவனங் களைப் போற்றிப் பாதுகாத்த வண்ணம் பெண் விடுதலையை வென்றெடுக்கும் எண்ணம் கொண்ட வர்கள். நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியப் பாரம்பரியத்தைத் தூக்கிப் பிடிக்கும் போக்கு இவர்க ளுடையது.

தேர்தல் அரசியலில் பங்கெடுத்து அரசின் ஒரு அங்கமாகச் செயல்படும் மார்க்ஸியக் கட்சிகளின் செயல்முறைகள் அரசின் செயல்முறைகளை ஒத்த தாகவே உள்ளது. உழைக்கும் வர்க்கத்திற்கென ஒரு துறையேற்படுத்தி அவர்களுக்கான பிரச்சினைகள் சட்ட முறைகளைப் பின்பற்றி அணுகுதல், பெண்களுக் கென ஒரு துறையேற்படுத்தி அதை மொத்தத்துவத்தின் ஓர் அங்கமாக மாற்றி சில நிவாரணங்களை வழங்குதல் என்ற அடிப்படையிலேயே இவர்கள் பாட்டாளி வர்க்கத்தையும் பெண்களையும் அணுகுகிறார்கள். மார்க்ஸிய கட்சிகளின் துணை அமைப்புகளாகச் செயல்படும் மகளிர் அமைப்புகள், இவ்வழியில் பெண்களை அணி திரட்டவே பயன்பட்டுக்கொண்டி ருக்கின்றன.

இந்திய-இந்து-சாதிப் பெண்ணியத்திற்கும், இந்து-சாதி-மார்க்ஸியப் பெண்ணியத்திற்குமுள்ள ஒரே வேறுபாடு முதலாவதானது பகிரங்கமாக இந்துத்து வாவை உயர்த்திப் பிடித்து சாதி அமைப்பை ஆதரிக் கும்போது இரண்டாவதானது மௌனமாக இருந்து மறைமுகமான ஒத்துழைப்பை வழங்குகிறது என்பது. ஒரே குட்டையில் ஊறிய இரு வேறு மட்டைகள்.

மூன்றாவது வருகிறது திராவிட-இந்து-சாதி-தமிழ்ப் பெண்ணியம். திராவிடப் பெருங்கதை யாடலை மெல்லத் தவிர்த்து தமிழ் அடையாளத்தில் இந்து சாதிப் பெண்ணியம் தமிழகத்தில் வேரூன்றி யுள்ளது.

இதன் தாரக மந்திரம் தமிழ். பண்டைத் தமிழரின் தலைவன்-தலைவி-தோழி என்ற த்ரீ டைமென்ஷனில் பரத்தையர் உலகம் நிறைத்து, சீதை சாவித்திரிகளை செந்தமிழில் வடிவமைத்து, களவு வழி - கற்பு வழி பண்பாட்டைத் தூவி, பௌத்த சமணக் காப்பியங் களைப் புதைத்து, ஆழ்வார் நாயன்மார்களின் பக்திப் பரவதில் சைவ வைணவக் கொழுந்தாக விளைந்து, என் பேரில் அனைத்து மகா ஜனங்களும் ஒன்றுபடுங்கள் என்று நம்முள் அச்சமூட்டி நிற்கிறது தமிழ்.

தமிழால் அனைத்துத் தமிழச்சிகளும் ஒன்று படுங்கள். தனித் தமிழ்நாடு காண்போம், தமிழர்தம் துயர் துடைப்போம் என்ற கோஷங்களில் தமிழுக்கு அமுது படைத்துவிட்டு தலித்துகளுக்கு அல்வா கொடுப்பதே இதன் நோக்கம். முந்தையப் பெண்ணி யங்கள் போலல்லாது பெரியாரை அடியொற்றி கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு என்று இந்து



படிப்பகம்

www.padippakam.com

மதத்தில் தமக்கு சாதகமல்லாதக் கூறுகளை மட்டும் எதிர்த்துவிட்டு இந்து மதத்தில் இருந்துகொண்டேவும், சாதியைத் தக்கவைத்துக் கொண்டேவும் அடிமைச் சின்னமான தாலி மறுப்பு திருமணம் (அதுவும் இப்போது அரிதிலும் அரிதாகிவிட்டது) மற்றும் பார்ப்பனரல்லா தாருக்கு வேலைவாய்ப்பு என்றளவில் இயங்கிக் கொண்டு வருகிறது. இது அடிப்படையில் பார்ப்பனரல்லாதார் இயக்கம்.

வீட்டில் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் பேசிக்கொண்டு, சிறுபான்மையினர் என்றளவில் கல்லூரிகளையும் இதர நிறுவனங்களையும் அம்மொழியாள்களுக்கு நிறுவிக்கொண்டு அதன்மூலம் தொடர்ந்து பயனடைந்து கொண்டு மேடைகளில் மட்டும் தமிழ் முழக்கம் செய்கின்ற சாதி இயக்கங்களே அவை. இவர்கள் யாவரும் பிராமணரல்லாதார். சாதி-இந்து இயக்கங்கள் தங்களை வசதியாக மறைத்துக் கொள்ள அவர்களுக்கு தமிழ்ப்போர்வை தேவைப்படுகிறது. தெலுங்கு, கன்னடமொழி பேசுபவர்களெல்லாம் உள்ளடக்கிய திராவிட இயக்கங்கள் தமிழ் தலித்துகள் மீது வன்முறை நிகழ்த்துவது இது ஒரு சாதிய இயக்கம் என்பதையே நிரூபிக்கிறது.

இரட்டைக்குவளை, ஊர்-சேரி என இரட்டைக் கிராமம், இரட்டைச் சுடுகாடு பேணிவரும் இயக்கங்களே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து கொண்டு கீழ்வெண்மணி, தாமிரவருணி, கொடியங்குளம், மேலவளவு, இராமநாதபுரம், சங்கரலிங்கபுரம் என வரிசையாக தொடர் வன்முறைகளை தலித்துகள் மீது நிகழ்த்தி வருகின்றன. திண்ணியம் இதன் உச்ச பட்ச வெளிப்பாடு. தலித் பெண்கள் மீதும் பழங்குடிப் பெண்கள் மீதும் பாலியல் வன்கொடுமை நிகழ்த்துவதும் இவையே. தமிழ் உண்ணும் சமூகம் மீது சாதிக் கத்திகளைச் சுழற்றியவாறு இவர்கள் நடிக்கும் நாடகமே தமிழ் பெண்ணியம்.

இப்பெண்ணியலாளர்கள் வலியுறுத்துவது தமிழின் பெயரால், பெரியாரின் பெயரால் நிபந்தனைகளற்ற ஒற்றுமை. தொடர்ந்து இவர்கள் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்க தமிழின் பெயரால் ஆதரவு.

இவர்களின் நடவடிக்கைகள்

- தலித்துகளுக்கான இடஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்தாதது;
- மத்திய அரசின் பரிந்துரைகளை ஏற்று தலித்துகளுக்கு மாநில நிதியை ஒதுக்காதது;
- தலித்துகள் மீதான வன்கொடுமையைக் கண்டும் காணாமல் இருப்பது, கொலையாளருக்கு பாதுகாப்பாகச் செயல்படுவது;
- குறைந்தபட்ச ஊதியச் சட்டம், கொத்தடிமை ஒழிப்புச் சட்டம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டம், இவற்றை விரைவாகவும் தீவிரமாகவும் செயல்படுத்தாது ஆதிக்க சாதிகளுக்குத் துணைபோவது;
- கண்துடைப்புக்காக சுடுகாட்டு கொட்டகைக்கு மேல்கூரை வேய்வது, சமபந்தி போஜனம் நடத்துவது, சமத்துவபுரம், சாதிமறுப்பு மணங்களுக்கு குறைந்தபட்ச அன்பளிப்பு கொடுப்பது, ஏழைகளுக்கு பொங்கல் பை கொடுப்பது, தமிழைச் செம்மொழியாக்கி சுயலாபம் அடைவது

ஆகிய இவைகள். இச்செயல்பாடுகள் மூலம் சமத்துவத்தையும் பெண்விடுதலையையும் வென்றெடுக்க முடியும் என போதித்து வருகிறார்கள். இவ்வாறு முரண்களும் சுயநலமும் மிகுந்தது இவர்களது திராவிட-இந்து-சாதி தமிழ்ப்பெண்ணியம்.

- தொடரும்.

# எருது

■ தேவதேவன்

அமர்ந்து அசைபோடும்
மரநிழலையும் மறந்து
வானமும் பூமியுமாய் விரிந்த
நிலக் காட்சியில் ஒன்றிவிட்டனை!

ஏது தீண்டிய அரவம்
உன் தோள்பட்டைச் சதையில்
திடீரென்று ஏற்பட்ட சிலிர்ப்பு?

நொய்மைக்குள் நுழைந்துவிடும்
அந்த வலுமைதான் யாரோ?

சொல்,
மெய்ம்மையை அறிந்து கொண்டதனால்தானோ
ஊமையானாய்?

எங்களை மன்னித்துவிடு,
எங்கள் மொழியில்
உன்னை ஒரு வசைச் சொல்லாய் மட்டுமே
வைத்திருந்ததற்காக.

இன்று பார்க்கத் தொடங்கிவிட்டோம் நாங்கள்
கால் மடக்கி அமர்ந்திருக்கும் உன் பாறைமையை,
காட்டில்
சிங்கத்தினை எதிர்க்கும் உன் உயிர்மையினை,
உன் நடையும் நிதானமும் வாலசைவும்
பறைபோல் ஒலிக்கும் உன் குரலும்
அமைதியாக எமக்குப் போதித்துக்
கொண்டிருக்கிறதை! ●



படிப்பகம்

www.padippakam.com

■ பு. ஜார்ஜ்

# பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும்

## 5

பாரதியின் பௌத்த வெறுப்பு ஒன்றும் புதிதானது அல்ல. அதற்கு ஒரு நீண்ட பாரம்பரியம் இருக்கிறது. பிராமணர்கள் தீண்டப்படாதவரை வெறுத்தது போலவே தீண்டப்படாதவரும் பிராமணரை வெறுத்தார்கள் என்பதை ஏற்கனவே கண்டோம். இந்த வெறுப்புணர்வுக்கு அடிப்படைக் காரணமாக ஓர் ஊகத்தை அம்பேத்கர் விளக்குகிறார்.

*சிதறுண்ட மக்கள் பௌத்தர்களாக இருந்தனர் என்பதுதான் அந்த ஊகம். இதனால் அவர்கள் பிராமணர்களை உயர்வாக மதிக்கவில்லை; தங்களுடைய மதகுருக்களாக அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை; அவர்களைத் தூய்மையற்றவர்களாகவே அவர்கள் கருதினர். அதேசமயம் பிராமணர்களும் சிதறுண்ட மக்களை வெறுத்தனர்; அவர்கள் பௌத்தர்களாக இருந்ததே இதற்குக் காரணம்; அவர்களுக்கு எதிராக விஷமத்தனமான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர்; வெறுப்பையும் துவேஷத்தையும் உமிழ்ந்தனர்; அவர்களை அவமதித்தனர். ஏளனம் செய்தனர். இதன் விளைவாக, சிதறுண்ட மக்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப்படலாயினர்.*

*இந்தச் சிதறுண்ட மக்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு நேரடியான சான்று ஏதும் இல்லை. பெரும்பாலான இந்துக்கள் பௌத்தர்களாக இருந்த நிலைமையில் இத்தகைய சான்று ஏதும் தேவையில்லை. எனவே சிதறுண்ட மக்கள் பௌத்தர்கள்தான் என்று ஏற்றுக் கொள்வதில் சிரமம் ஏதும் இருக்க முடியாது.*

*பௌத்தர்களுக்கு எதிராக இந்துக்கள் மனத்தில் பெரும் வெறுப்பும் பகைமையும் குடிகொண்டிருந்தன அவர்கள் மனத்தில் இந்த நஞ்சை ஊட்டியவர்கள் பிராமணர்கள்தான் என்பதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை.*

*நீலகண்ட் தமது பிராயசித் மயூகாவில் (கோர்புரே (ப.ஆ.):95) பின்கண்ட சுலோகத்தை மேற்கோள் காட்டுகிறார்.*

*"ஒருவன் ஒரு பௌத்தனையோ அல்லது பசுபத் மலரையோ, லோகாயதனையோ, நாத்திகனையோ, மகாபாதகியையோ தொட்டால் நீராடி தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்."*

*அபரார்கரும் தமது ஸ்மிருதியில் (ஸ்மிருதி சம்முச்சயா. ப.118) இதே சித்தாந்தத்தையே உபதேசித்தார். விரத ஹரித் இன்னும் ஒரு படி மேலே சென்று, பௌத்த விகாரத்தில் நுழைவதையே ஒரு பாவமாகப் பிரகடனம் செய்கிறார்; தூய்மைப்படுத்தும் சடங்காகக் குளித்து இந்தத் தீட்டைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று உபதேசம் செய்கிறார்.*

*புத்தரைப் பின்பற்றியவர்களுக்கு எதிராக வெறுப்பும் துவேஷமும் கோபாவேசமும் எந்த அளவுக்கு உக்கிரமாக வளர்ந்திருந்தன என்பதை சமஸ்கிருத நாடகங்களில் இடம் பெற்றிருந்த காட்சிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பௌத்தர்களுக்கு எதிராக இந்தப்போக்கு எந்த அளவுக்கு உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது என்பது மிருச்சகடிகம் எனும் சமஸ்கிருத நாடகத்தில் தெள்ளத் தெளிவாகக் காணமுடியும். இந்த நாடகத்தின் காட்சி VII-இல், கதாநாயகன் சாருதத்தனும் அவனுடைய நண்பன் மைத்ரேயனும் நகரத்திற்கு வெளியே உள்ள பூங்காவில் வசந்தசேனைக்காகக் காத்திருப்பதாகக் காட்டப்படுகிறது. வசந்தசேனை அங்கு வரத் தவறிவிடுகிறாள். அப்போது சாருதத்தன் பூங்காவைவிட்டு வெளியேற முடிவுசெய்கிறான். அவர்கள் அங்கிருந்து வெளியேறும்போது சம்வா ஹாகர் என்ற பௌத்த பிட்சு வருவதைப் பார்க்கிறார் கள். அவரைக் கண்டதும் சாருதத்தன் பின்வருமாறு கூறுகிறான்.*

*"நண்பா மைத்ரேயா, நான் வசந்தசேனையைச் சந்திக்க மிகுந்த ஆவலோடு இருக்கிறேன். வா, நாம் போவோம். (சிறிது தூரம் நடந்து பிறகு) ஆ! எவ்வளவு*



படிப்பகம்

www.padippakam.com

அபசகுனம், ஒரு பௌத்த பிட்சு நம்மை நோக்கி வருகிறான். (சிறிது நேரம் யோசித்த பிறகு) நல்லது, அவன் இந்த வழியாக வரட்டும், நாம் அதோ அந்த வழியாகச் செல்வோம். (வெளியே போகிறார்கள்)"

அடுத்து காட்சி VIII-க்கு வருவோம். மன்னரின் மைத்துனனான சகரனின் பூங்கா அது. அங்குள்ள ஒரு தடாகத்தில் ஒரு பௌத்தபிட்சு தனது துணிகளைத் துவைத்துக் கொண்டிருக்கிறார். சகரன் விதனுடன் அங்கு வருகிறான். பிட்சுவைக் கொல்லப்போவதாக அச்சுறுத்துகிறான். அப்போது அவர்களிடையே பின்கண்டவாறு உரையாடல் நடைபெறுகிறது.

சகரன் : அப்படியே நில், உணவு விடுதியில் முள்ளங்கிக் கிழங்கை நறுக்குவது போல் இப்போது உம் மண்டையைப் பிளக்கப் போகிறேன். (அவரை அடிக்கிறான்)

விதன் : நண்பனே, இந்த உலகை வெறுத்து, காவி உடை தரித்த ஒரு சந்நியாசியை அடிப்பது முறையல்ல.

பிட்சு : (வரவேற்கிறார்) திருவுளங்கொள்ளுங்கள் இலௌகீக போதகரே.

சகரன் : நண்பா, இவன் என்னை நிந்தனை செய்கிறான், பார்.

விதன் : அப்படி அவர் என்ன சொல்லிவிட்டார்?

சகரன் : என்னை இலௌகீக சகோதரன் (உபாசகன்) என்று திட்டுகிறான். நான் என்ன ஒரு நாவிதனா?

விதன் : ஓ! புத்தரின் பக்தன் என்று உண்மையில் அவர் உன்னைப் புகழ்கிறார்.

சகரன் : அவன் ஏன் இங்கு வந்திருக்கிறான்?

பிட்சு : இந்தத் துணிகளைத் துவைப்பதற்காக.

சகரன் : ஆ! துஷ்ட பிட்சுவே, நானே கூட இந்தத் தடாகத்தில் குளிப்பதில்லை; ஒரே அடியில் உன்னைக் கொல்லுகிறேன் பார்!

மிகவும் அடித்து இம்சித்த பிறகு பிட்சு அங்கிருந்து செல்ல அனுமதிக்கப்படுகிறார். இந்துக்களின் கூட்டத்தினரிடையே சிக்கிக் கொண்டு பெரிதும் அவதிப்படும் ஒரு பௌத்த பிட்சுவின் பரிதாபநிலையை இங்கு காண்கிறோம். அவர் வெறுத்தொதுக்கப்படுகிறார். தவிர்க்கப்படுகிறார். அவர் செல்லும் பாதையைக் கூட வெறுத்தொதுக்கும் அளவுக்கு மக்களின் சீற்றம் உச்சநிலையை அடைகிறது. புத்த பிச்சுவைக் கண்ட மாத்திரத்திலேயே மக்கள் அங்கிருந்து வெளியேறும் அளவுக்கு மக்களின் வெறுப்பு எல்லை மீறுகிறது. ஒரு பௌத்த பிட்சு பிராமணனுக்குச் சமமானவர். பிராமணனுக்கு மரண தண்டனையிலிருந்து விதிவிலக்கு உண்டு. கசையடிபோன்ற தண்டனையிலிருந்தும்கூட அவன் தப்ப முடியும். ஆனால் இங்கோ ஒரு பௌத்த பிட்சு நையப் புடைக்கப்படுகிறார். இதில் தவறேதும் இல்லை என்பதுபோல் அவர் ஈவு இரக்கமின்றி மனச் சான்றின் உறுத்தலின்றி குரூரமாக அடிக்கப்படுகிறார்.

சிதறுண்ட மக்கள் புத்த மதத்தின் ஆதரவாளர்கள், பௌத்தத்தின்மீது பிராமணீயம் வெற்றிகொண்ட போதுகூட அவர்கள் பிராமணீயத்துக்குத் திரும்புவதில் அணுவளவும் அக்கறை காட்டவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்வோமேயானால் ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட இரண்டு கேள்விகளுக்கும் விடை கண்ட வர்களாகின்றோம். சிதறுண்ட மக்கள் தீண்டப்படாதோராக ஏன் கருதப்பட்டார்கள் என்பதற்கும் விளக்கம் பெறுகிறோம்.

(.....................)

பிராமணர்கள் புத்த மதத்தின் பகைவர்களாக இருந்ததால் சிதறுண்ட மக்கள் பிராமணர்களை வெறுத்தார்கள்: சிதறுண்ட மக்கள் புத்த மதத்திலிருந்து வெளியேற மறுத்ததால் பிராமணர்கள் அவர்கள் மீது தீண்டாமையைத் திணித்தார்கள். இதை வைத்துப் பார்க்கும்போது, பௌத்தர்களுக்கு எதிராக பிராமணர்கள் தூண்டிவிட்ட பகைமையும் வெறுப்பும் தீண்டாமையின் ஆணிவேர்களில் ஒன்று என்ற முடிவுக்கு வருவது சாத்தியமாகிது.

(அம். தொகுதி 14: 118-121)

இப்படிப்பட்ட பிராமண நிலைப்பாட்டிலிருந்து தான் பறையரை 'ஹிந்து மதத்தின் பஹிரங்க விரோதிகள்' என பாரதியும் குறிப்பிட்டிருக்கிறார். இதையெல்லாம் அறிந்துதான் பாரதி செயல்பட்டிருக்கிறார் என்பது தெளிவு.

மிஹிரகுலன், சசங்கன் ஆகிய பிராமண அரசர்களால் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்ட பௌத்தர்கள் சிதறுண்டு இஸ்லாத்துக்கு மாறினார்கள். ஆனாலும் இந்துத்துவம் இன்றுவரை அவர்களை வெறுத்துத்தான் வருகிறது. புத்தம் வீழ்ந்ததற்கான வெளிக்காரணம் இதுதான். மேலும் புத்தத்தில் பிராமணர்களின் ஊடுருவல் அதிகரித்ததும் பின்னர் புத்தத்தையும் அவர்கள் நீர்த்துப் போகச் செய்ததும் காரணம் ஆகும்.

இந்தியாவில் தோன்றிய, உலகத்துக்கே தத்துவத்தை வழங்கும் மூலாதாரமாக நின்ற பௌத்தத்தை 'நல்லவேளையாக இந்தியா உதறித்தள்ளிவிட்டது' எனக் கூறுகிறார் பாரதி. இவர்தான் நமது நாட்டுக்குக் காப்புத் தெய்வமாக விளங்கப்போகிறாரா?

எல்லா தர்மங்களைக் காட்டிலும், வேதத்தை நிலைநிறுத்தும் தர்மம் சிறந்ததென்று நான் நினைக்கிறேன். (பாரதி நூல்கள், கட்டுரைகள்: 588)

என்று பாரதியே தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப் படையாகசொல்லியிருக்கிறார்.

பிராமணனுக்கு வேதமோதலே உயர்செயல், மற்றவை தாழ்ந்தவை.

(மனுதர்மம் : 47)



படிப்பகம்

www.padippakam.com

**சாதியையும் தீண்டாமையையும் உயிராகக் கொண்ட இந்துத்துவத்தைச் சிறப்பானதாக பாரதி காண்பதற்குக் காரணம் அவர் பிராமணன் என்பதைத் தவிர வேறு சிறப்புக் காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.**

எனும் மனு தர்மத்தின் 'விதிக்கும் மேலான செயலில் பாரதி உறுதி கொண்டிருக்கிறார் என்பது இதனால் புலனாகிறது. இதுபற்றிய அவரது விளக்கமான குரல் வருமாறு.

*இதர தேசங்களைவிட நமது நாடானது ஒன்று சேர்வதற்கு அநேக காரணங்கள் உள. நடை, உடை பாவனைகளில் மாறுபட்டிருப்பினும், நமது மதக் கொள்கை ஒன்றே எனச் சொல்லலாம். ஹிமாச்சலம் முதல் கன்னியாகுமரிவரையிலுள்ள ஆரியரெனப் பேர் பூண்ட நாம் எல்லோரும் வேதத்தையே நம்பினவர்களன்றி வேறுவேறு கொள்கைகள் உடையவர்களல்லோம்.... ஜப்பான் தேசத்தார் ராஜாங்கத்தையே தெய்வமெனக் கொண்டு தொண்டுபட்டு உழைப்பது போலவே நாமும் நமது வேதங்களைப் படித்து கீர்த்தி பெறச் செய்யுமாறு நமது நாட்டின் நலத்தைத் தேட வேண்டும். இன்னும் தூங்குவோமானால், நமது பூர்வீக நாகரீகமிழந்து வேதத்தின் உயர்வும் நீங்கி அர்த்கிரஹணம் பூர்ண கிரஹணமானது போலாகி ஆரியரிருந்த விடம் தாறுமாறாவதற்கு சந்தேகமில்லை.*

(பாரதி தரிசனம் : 160-162)

*நம்முடைய வர்ணாசிரம தர்மத்தில் பிராமணன் பிச்சையெடுக்க வேண்டுமென்றும், க்ஷத்திரியன் இராஜ்ஜியத்தை ஆளவேண்டுமென்றும், வைசியன் வர்த்தகம் செய்ய வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. ஆனால் இப்பொழுது தேசமானது சீர்கேடு அடைந்திருக்கிறபடியால், நம்முடைய தேசத்து ஸனாதன தர்மத்தைக் காப்போர் ஒருவருமில்லை. ஆகையால் பிராமணர்கள்தாம் முன்நின்று தேசத்திற்கு நன்மை செய்யவேண்டும்.*

(பாரதி புதையல் பெருந்திரட்டு : 479)

வர்ணாசிரம தர்மத்தில் முழுநம்பிக்கையிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பாரதி அத்தர்மத்தின்படி பிராமணன் பிச்சையெடுக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துகிறார். இப்போது இருக்கிற பிராமணர்கள் பிச்சையெடுத்துத்தான் வாழவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் முயற்சியில் பாரதி இறங்கியிருந்தால் அவரது நேர்மையைப் பாராட்டியிருக்கலாம். நாட்டை ஆளும் தர்மம் சத்திரியர்களுக்குரியது, அது பிராமணர்களுக்கு உரியதல்ல (அன்றும் இன்றும்) என்று எங்கும் பாரதி கூறவில்லை. தங்கள் சுயநலத்துக்கு ஏற்ப தர்மத்தை எப்படியும் வளைத்துக் கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டைத்தான் இது காட்டுகிறது. ஆனால் ஒடுக்கப்பட்டவர்கள் என்று வருகிறபோது, அவர்கள் அந்த தர்மத்துக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும் என வற்புறுத்துவது எனும் தந்திரம் இதில் உள்ளது. இதன் வெளிப்பாடாக, சமத்துவக் கொள்கையின் லோககுருவாக பாரதமாதாவைச் சித்தரிக்கும் பாரதி அதற்கு வேதாந்தக் கொள்கையே காரணமென்கிறார்.

*எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவின் நெஞ்சில் வேதாந்தக் கொள்கை ஊறிக் கிடக்கிறது. இந்த வேதாந்தம் லௌகிக அனுஷ்டானத்தில் பரிபூர்ணமான ஸம்பூர்ணமான ஸமத்துவம் ஏற்படுத்தும் இயல்புடையது.*

(பாரதி புதையல் பெருந்திரட்டு : 500, 501)

எனவேதான், வேதத்தின் கொள்கைகளை விளக்கும் பொருட்டாகவே பகவத்கீதை செய்யப்பட்டதாகக் கூறும் இந்த நம்பிக்கையிலிருந்துதான் வேதம் போச்சே நல்லறம் போச்சே என்ற கூக்குரலை பாரதி எழுப்புகிறார். இதில் ஐயப்பட்டதாகத் தெரியவில்லை.

*பிராமணர்கள் ஐயம் எழுவதற்கு இடமே வைக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் மிகவும் விஷமத்தனமான ஒரு கருத்தை மக்களிடையே பரப்பியிருக்கிறார்கள். வேதங்கள் பொய்யாதவை, தவறுக்கிடமற்றவை என்பதே இந்தக் கருத்து. இந்துக்களின் அறிவு வளர்ச்சி நின்றுவிட்டதென்றால், இந்து நாகரிகமும் பண்பாடும் தேக்கமடைந்து முடைநாற்றக் குட்டை யாகிவிட்டது என்றால் இதுதான் காரணம். இந்தியா முன்னேற வேண்டுமானால் இந்தக் கருத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்து ஒழிக்கவேண்டும். வேதங்கள் உதவாக்கரையான படைப்புகள். அவற்றைப் புனிதமானவை என்றோ பொய்யாதவை என்றோ கூறுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. பிராமணர்கள்தாம் அவற்றைப் புனிதம் என்றும் பொய்யாதவை என்றும் போற்றும்படிச் செய்து வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் பிற்காலத்திய இடைச் செருகலான புருஷ சூக்தத்தின் மூலம் வேதங்கள் பிராமணர்களைப் பூமியின் அதிபதிகளாக ஆக்கியுள்ளன. இனக்குழுவின் கடவுளர்களைத் துதித்து, அவர்கள் எதிரிகளை அழித்து, அவர்களின் உடைமைகளைக் கொள்ளையடித்து, தங்களை வழிபடுவோருக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளும் வேண்டுகோள்களைத் தவிர வேறெதுவும் இல்லாத இந்த உதவாக்கரை நூல்களைப் புனிதமானவை என்றும் பொய்யாதவை என்றும் ஆக்கப்பட்டது ஏன் என்று கேட்பதற்கு யாருக்கும் தைரியம் இல்லாமற்போயிற்று. ஆனால் பிராமணர்கள் பரப்பியுள்ள இந்த விவேகமற்ற கருத்தின் பிடியில் இருந்து இந்து மனத்தை விடுவிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இந்த விடுதலை ஏற்படாமல் இந்தியாவுக்கு விடுதலை இல்லை.* (அம். தொகுதி 8:10)



படிப்பகம்

www.padippakam.com

அம்பேத்கர் குறிப்பிடுவது போலவே முடை நாற்றக் குட்டையாக்கும் முயற்சியில்தான் பாரதியின் சிந்தனை இருந்திருக்கிறது.

பாரதி, அதன் மொழிபெயர்ப்பில் கவனம் செலுத்தியுள்ளார். அதில், வேதங்கள் உலகத்துக்கெல்லாம் பொதுவேயாயினும் சிறப்பாக பிராமணர்களுக் குரியது என்கிறார்.

ஆக, பாரதி வேதத்தை நிலைநிறுத்தும் தர்மத்தை எல்லா தர்மத்திலும் சிறந்ததாகக் கருதியதற்கும் வேதக் கொள்கைகளை விளக்கும் பகவத்கீதையை மொழி பெயர்த்ததற்குமான காரணம் மேற்கண்ட அவரது சொற்களாலேயே புலனாகிறது.

சாதியையும் தீண்டாமையையும் உயிராகக் கொண்ட இந்துத்துவத்தைச் சிறப்பானதாக பாரதி காண்பதற்குக் காரணம் அவர் பிராமணன் என்பதைத் தவிர வேறு சிறப்புக் காரணம் ஏதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

*பூமி முழுமைக்கும் பெருந்துணையாக நின்று மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றக் கூடிய ஹிந்து மதத்தின் சார உண்மைகளை நாம் ஒழுக்கத்திலே காண்பிக்கவேண்டும். இங்ஙனம் காண்பிக்கும்படி நம்மவரைத் தூண்டி வழிகாட்டும் கடமையும் தகுதியும் நம்முடைய மாதர்களுக்கே உரியன.*

*(பாரதி நூல்கள்-கட்டுரைகள் : 241)*

என்ற பாரதியின் குரல் இந்துத்துவத்தைக் காப் பாற்றுவதற்கான கருவியாகப் பெண்களை பாரதி கண்டதைக் காட்டுகிறது.

பௌத்தம் பெண்ணடிமை செய்ததாகக் கற்பனை செய்து அதனைச்சாடும் பாரதி, கிறித்துவம் பெண்க ளுக்கான விடுதலையை இந்தியாவில் நடைமுறைப் படுத்தியதற்காகவும் மாதர் விடுதலை குறித்து தான் சிந்திக்கக்கூட அது காரணமாயிருந்தது என்பதற் காகவும் தோன்றியிருக்கவேண்டும். அதுவுமில்லை. இதன்மூலம் பாரதிக்குப் பெண்விடுதலை முக்கிய மில்லை, இந்துத்துவம்தான் முக்கியம் என்பது பெறப் படுகிறது.

பிரம சமாஜம், ஆரிய சமாஜம் ஆகியவற்றின் தாக்கத்துக்கு பாரதி உட்பட்டிருந்ததையும் இவ்விரு பிரிவுகளுக்கும் மூலாதாரமான தத்துவார்த்த வட் டத்தை முற்றாக விட்டு விலக முடியாத, அவற்றின் ஞானபுத்திரராக பாரதி இருந்ததையும் குறிப்பிடும் பேராசிரியர் கைலாசபதி,

*பாரதியைப் பற்றிப் பொதுவாக நாம் கொண்டி ருக்கும் எண்ணங்களின் அடிப்படையில் சிந்திக்கும் பொழுது உய்த்தறிமுறையில், அவர் சீர்திருத்தப் போக்கை வற்புறுத்திய பிரமசமாஜத்தையே பெரிதும் போற்றியிருப்பார் என்று கருதத்தோன்றும். ஆயினும் நுணுகி நோக்கின் பாரதி ஆரிய சமாஜத்தின் செல்வாக் குக்கு ஆளாகியிருந்தார் என்பது புலனாகும்.*

*ஆரிய சமாஜத்தினரோ, ஐயமெதுவுமின்றி வேதங் களைச் சிக்கெனப் பிடித்தனர். தெய்வத்தை நம்புவதுபோல வேதங்களை நம்பினர். இத்தளரா உறுதி பாரதிக்கு ஏற்றதாயிருந்தது எனலாம். கலப்பற்ற தூய்மையையே பாரதி ஆதர்சமாகக் கொண்டிருந்தார்.*

*(பாரதி ஆய்வுகள், 1987: 139, 140)*

**கலப்பற்ற இந்துத் தூய்மைக்குள்ளிருந்துதான் பெண் விடுதலையைப் பாரதி பேசுகிறார் என்பது மறைக்கவியலாத உண்மையாகிறது**

என மதிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மேலும், பாரதியாரின் 'இந்தியா' பத்திரிக்கைக் கட்டுரைகளின் பதிப்பாசிரியர் ஸி.எஸ். சுப்பிரமணியம் தமது முதற்பதிப்பு முன்னுரையில் (33) பாரதியின் இந்துமதப் பற்றை உறுதிசெய்து, அந்தப் பற்றுக்கான காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

*பாரதியாரின் தேசியப்பற்று திலகர் கட்சியின்வழி வந்தது. எனவே அது ஓரளவுக்கு இந்து சமய மறு மலர்ச்சித் தன்மை உடைத்ததாக, இந்துமதப் பற்றுடை யதாக இருக்கிறது.*

தீவிர விடுதலை வேட்கையுடையோராய்த் திகழ்ந்த ஆரிய சமாஜத் தொடர்புடைய திலகரைக் குருவாகக் கொண்ட பாரதியார் ஆரிய சமாஜக் கொள்கையுடை யவராய் இருந்ததில் வியப்பில்லை எனும் கைலாசபதி, பாரதிக்கு இருந்த துறவிகள் தொடர்புக்குக் காரண மாக ஆரிய சமாஜத்தின் கொள்கையைச் சுட்டுகிறார். மேலும், ஆரிய சமாஜம் இந்தியாவை முதலிற்கொண்டு அதன்மூலம் உலகை நோக்கியது. அதாவது இந்தியாவே உலகம் என்றது என்றார். பாரதியின் எழுத்துக்கள் இதை உறுதி செய்கின்றன.

நடைமுறை வழிபாட்டில் சாக்க மதத்தின் வீரிய பண்புக்கு பாரதியார் ஆட்பட்டிருந்தமையைச் சுட்டும் கைலாசபதி, அதுவே அவரை ஆரிய சமாஜ வட்டத்தில் நிறுத்தியது என்பதையும் தெளிவு செய்கிறார். மேலும், வ.வே.சு. ஐயருக்கும் இது பொருந்தும் என்கிறார். ஏனெனில் அவர் இந்து தீவிரவாதம், தூய்மைவாதம் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்திருந்தார். பாரதியும் வ.வே.சு. ஐயரும் நெருங்கிய நண்பர்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது கலப்பற்ற இந்துத் தூய்மைக்குள்ளிருந்துதான் பெண் விடு தலையை பாரதி பேசுகிறார் என்பது மறக்கவியலாத உண்மையாகிறது. இந்த விஷயத்தில் விவேகானந்தர் கருத்துக்களை அப்படியே உள்வாங்கிக் கொண்ட வராக பாரதி காணப்படுகிறார். விவேகானந்தர் குறித்து சுதேசமித்திரனில் பாரதி எழுதிய இரு கட்டுரைகள் இதற்குச் சான்று. (பாரதி புதையல் பெருந்திரட்டு : 221, 243) பௌத்தம் குறித்த விஷயத்திலும் விவேகானந்த ரையே பாரதி பின்பற்றுகிறார். (விவேகானந்தர்



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவில் பேசும்போது பௌத்த விஷயங்களைத்தான் இந்தியாவின் பெருமையாகப் பேசினார் என்பதும், அதுவும் இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டது என்பதும் வேறு விசயம்) காந்தியையும் இதில் சேர்க்கலாம். விதவைகளின் மறுமணம் குறித்துப் பேசுகையில் விவேகானந்தரையும் (பாரதி புதையல் பெருந்திரட்டு : 232, 233) காந்தியையும் (பாரதி புதையல் பெருந்திரட்டு:70,71) கடுமையாக மறுத்து எழுதியிருக்கிறார். இவர்கள் இருவரையும்விட உத்வேகமாக இந்துப் பெண்களின் விடுதலையைப் பேசுகிறார். எனவே, பாரதி பேசியது உத்வேகமிக்க தூய இந்துப் பெண் விடுதலை எனலாம்.

இந்த உத்வேகம் திலகரிடமிருந்து வந்த கொடை. எனவேதான் பெண்விடுதலை குறித்துப் பல திட்டங்களை கூறிவிட்டு நமது தேசத்தில் பூர்வீக ரிஷிபத்தினிகள் இருந்த ஸ்திதிக்கு நமது ஸ்திரீகள் வர இடமுண்டாகும் எனத் தமது புரையோடிப்போன இலட்சியத்தை வெளிப்படுத்துகிறார்.

*ஓ இந்தியனே! சீதை, சாவித்திரி, தமயந்தி இவர்களும் இன்னும் இவர்களைப் போன்ற ஸ்திரீ ரத்தினங்களும் உன் பெண்மணிகளாவர். ஒழுக்கத்திற்கு அவர்களை நமக்கு முன் மாதிரியாக வைத்துக் கொள்ளலாம்.*

*(பாரதி புதையல் பெருந்திரட்டு : 379)*

விவேகானந்தரின் பின்வரும் வார்த்தைகளில் இதன் விளக்கத்தைக் காணலாம்.

*இந்தியப் பெண்கள் சீதையின் அடிச்சுவட்டைப் பின்பற்றவேண்டும். சீதை ஒப்பற பெண்ணரசி. இந்தியப் பெண்மையின் இலட்சிய வடிவம். இவள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் தூய ஒழுக்கத்துக்கும், எத்தனை துன்பங்கள் மேலிடினும் அசையாமல் பொறுக்கும் சக்திக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறாள். இந்த இலட்சியம் நமது இந்தியப் பெண்ணின் மரபுகளில் வழி வழியாக நாடி நரம்புகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதை எவரேனும் மாற்ற முயன்றால், நமது பெண்குலத்திலிருந்து சீதையின் இலட்சியத்தை அகற்றிவிட்டால், அது முன்னேற்ற மல்ல. பெருந்தோல்வியே ஆகும்.*

*(ராஜம்கிருஷ்ணன், இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை : 113)*

இருபாலருக்கும் கற்பு என்பது பொதுவாக வைக்கப்பட்டிருந்தாலும் அது நடைமுறைக்கு அறிவுறுத்தப்படாத நிலையை கேள்விக்குள்ளாக்குகிறார் ராஜம் கிருஷ்ணன். தனது கற்பின் தூய்மையைச் சீதை நெருப்பில் புகுந்து நிரூபித்திருந்தபோதிலும், தான் நாடாளும் அரசன் என்ற ஏகாதிபத்திய ஆணவத்தை முதன்மைப்படுத்தி மிக நயவஞ்சகமாக *(அம்பேத்கர், ராமனின் நயவஞ்சகத்தை மிக விரிவாக விளக்கி சீதையின் சோகத்தையும் துன்பத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார், காண்க: (அம் தொகுதி : 449-487)* சீதையைக் காட்டில் விடச் செய்கிறான் ராமன். ஆனால் இராமனின் வனவாசத் தனிமையில் அவனது தூய்மை குறித்த கேள்வியே எழவில்லை என்பதையும் ராஜம் கிருஷ்ணன் நினைவுபடுத்துகிறார்.

*இந்த மரபைப் பின்பற்றித்தான் ஆண் ஆதிக்கம் இன்றும் தன் வலிமையை மெய்ப்பிப்பது வந்து கொண்டிருக்கிறது. பெண் கல்வி என்பது இன்னமும் செல்லாக் காசாக, அதே தொண்டடிமை நிலையில் தான் வைத்திருக்கிறது. எனவே, விடுதலைக்கு முன் பேசப்பட்ட பெண் கல்வி, தேசியம் என்ற வகையில் பெண்ணுக்குச் சம உரிமை என்று காட்டப்படுவதற்காகத் தலைவர்களால் வற்புறுத்தப்பட்டதுதான்.*

*(மேலது : 114)*

என சம உரிமைப் பேச்சில் இருக்கும் போலித்தனத்தையும் அடையாளங்காட்டுகிறார். பாரதிக்கு இது முழுமையாகப் பொருந்தும். இந்த பழமை போற்றும் மரபில் பெண்ணின் தனித்த ஆளுமை ஆற்றல் மையப் படுத்தப்படவில்லை என்பதையும் பெண்களுக்குச் சுயச்சார்பும், சமஉரிமையும் அளிக்கும் கல்வியைப் பெண்களுக்கு அளிக்க வகையில்லை என்பதையும் ராஜம் கிருஷ்ணன் சுட்டுகிறார். பாரதி போற்றும் இந்த சீதை மரபு பற்றிய அந்த அம்மையாரின் (ஒரு பெண் என்கிற வகையில்) எதிர்ப்புணர்வின் கனலைக் கீழே காணலாம்.

*சொந்த மண்ணிலிருந்து பெயர்த்து எடுத்து வந்து அறிவு வெளிச்சமும் சுதந்திரக் காற்றும் புகாத சூனியத்தால் அவள் உழைப்பையும் பிள்ளை பெறும் புனித ஆற்றலையும் கொச்சைப்படுத்தி ஆளும் ஆணாதிக்க வரலாறுதான் இந்தியப் பெண்ணின் சமூக வரலாறு. இராமாயணத்தில் பூரணமான கற்புநெறி, புளுகுப் புராணங்களில், எத்தனை நூற்றாண்டுகள் தேய்ந்த போதிலும், புதிய வடிவங்களில் அவளை மட்டும் பிணிக்கும் நெறியாக வலிமை பெற்றிருக்கிறது. தாயாகி நின்றபெண், வெறும் உடைமைப் பொருளாக களங்கத்தைக் குத்தி வீசியெறியப்படும் நிலைக்கு இழிந்து போனாள்.*

*இந்த இரண்டாம் நிலை நிராகரிப்பு, கருப்பிணியாகச் சீதை நடுக்காட்டில் விடப்படும் கொடுமை, அரசு, ஏகாதிபத்தியம் என்ற விரிந்த நிலையில் முன்னேறி நின்ற தந்தை நாயகத்தின் உச்சகட்டத்தைப் பிரதிபலிக்கிறது.*

*(மேலது பக்கம் 50)*

மரபு சார்ந்த ஆண் மனோபாவத்தின் வெளிப்பாடாகவே பாரதியின் குரல் அமைந்துள்ளது என் பதை தமிழரசியும் (பெண்ணியமும் பாரதியும்: 51-60) வெளிப்படுத்தியுள்ளார். ஆக, பாரதி பேசிய இந்துப் பெண் விடுதலையில்கூட உண்மையில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

●

- தொடரும்.



படிப்பகம்

www.padippakam.com

■ குடியரசன்

# மக்கள் அறியாத அம்பேத்கர்

**பத்திரிக்கை நடத்துவது என்பதும், நூல்கள் கொண்டு வருவதும் ஓர் அறிவார்ந்த நிலை. மக்களை உண்மையாக நேசிப்பவன் தன் கருத்துக்களை ஒரு துண்டறிக்கையிலாவது கொண்டுவர நினைப்பான்.**

'மக்கள் அறியாத அம்பேத்கர்' தொடர் எழுத நான்

1. மகாராஷ்டிர அரசின் வெளியீடுகள்
2. 1956-ஆம் ஆண்டிற்கு முன் வெளிவந்த ஆங்கிலப் பத்திரிக்கைகள் (வட இந்தியா)
3. பீம் பத்திரிகாவின் சில வெளியீடுகளை நான் ஆதாரமாகக் கொள்கிறேன்.

இதைப்போலவே,

4. N.C. ரட்டு, அம்பேத்கரின் தனி உதவியாளர்
5. திரு. வசந்த் மூன், அரசின் (1-17 தொகுதிகள்) தொகுப்பாளர்.
6. Thus spake Ambedkar நூல்களைத் தொகுத்த பகவான்தாஸ்
7. ஜோதிபா காட் பூலே, அக். 14, 1956, உலகப் புகழ்பெற்ற தீட்சா பேரணியின் பொதுச் செயலாளர்

ஆகியோரை நான் சந்தித்து திரட்டிய தகவலும், இத்தொடரின் அடிப்படையை நெறிப்படுத்துகிறது.

திரு பகவான்தாஸ் அவர்களின் Thus Spake Ambedkar தொகுதிகள் மட்டுமே அம்பேத்கரின் நிலைப்பாட்டை நமக்கு விளக்கும் நூல்களாக இந்திய நாடு முழுவதும் 1990 வரை கொண்டிருந்தது. இவரின் Thus Spake Ambedkar தொகுதிகள், நாட்டில் எல்லோராலும் அம்பேத்கரைப் பற்றிய விவரங்களுக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டது. 1994-ஆம் ஆண்டிற்குப் பிறகு, திரு. பகவான்தாஸ் அவர்களை நானும் அறிஞர் பொன்னோவியமும் சென்னை மகாபோதி சொசைடியில் சந்தித்தோம். அம்பேத்கரின் நூல்களை தொகுதிகளாக வெளியிட அவர் எடுத்துக்கொண்ட சிரமத்தை விவரித்தார். பொன்னோவியம் மூத்த அறிஞர் என்பதாலும், பகவான்தாஸ் ஏற்கனவே அவருக்கு அறிமுகமானவர் என்பதாலும், இருவரும் கிட்டத்தட்ட சம வயதினை உடையவர்கள் என்பதாலும் அவர்கள் இருவரும் வெகுநேரம் பேசிக் கொண்டனர். சமூகப் பணியிலும், வயதாலும், அனுபவத்தாலும் என்னைவிட மிகவும் மூத்தவர்கள் என்பதால் என்னால் அவரின் உரையாடலுடன் கலந்து பேச துவக்கத்தில் அச்சமாக இருந்தது. என்னுடைய தயக்கத்தைப் புரிந்து கொண்ட பகவான்தாஸ் அவர்கள், என்னை ஊக்கப்படுத்தும் வகையில், குடியரசன் என்றால் என்ன பொருள் என்று, என்னுடைய பெயர் காரணத்தைக் கேட்டார். பொன்னோவியம் அவர்கள் அதற்கு Republic King என்று தன் கருத்தைத் தெரிவித்தார். பகவான்தாஸ் அடிப்படையில் ஒரு வழக்கறிஞர் ஆதலால், இந்திய அரசியல் சட்டத்தையும், அதை தான் பயின்றது, அம்பேத்கரின் எழுத்துக்களில் நிபுனத்துவம் பெறுவதற்காக மட்டுமே என்றார்.

"அம்பேத்கரைப் புரிந்து கொண்டவர்கள், எப்பொழுதும் நிம்மதியாக இருப்பார்கள். அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களின் 'அரசியல் விடுதலை'யை தன் காலத்தில் துவங்கி வைக்கத்தான் இயலும். அதன் வெற்றியை நாம் பெற குறைந்தது 50 ஆண்டுகளாவது உழைக்க வேண்டியிருக்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். தன் காலத்தில் அரசியல் வெற்றி என்பது இந்த அளவில்தான் இருக்கும் என்ப தையும், முடிவு இப்படித்தான் இருக்கும் என்பதனையும் அம்பேத்கர் நன்கு புரிந்து வைத்திருந்தார். நேருவின் மந்திரி சபையிலிருந்து வெளியேறி, நம் மக்களைச் சந்தித்து, தேர்தல் அரசியல் மூலம் காங்கி ரசை வீழ்த்தி, புதிய மந்திரிசபை அமைத்திடவியலும் என்று அம்பேத்கர் நம்பிடவில்லை. ஆனால் அதற்கான தேவை இருப்பதை உணர்ந்திருந்தார். காங்கிரசு கட்சியை எதிர்த்து அரசியல் நடத்திட வேண்டிய தேவையையும் மிகக் குறுகிய காலத்தில் அதில் வெற்றி காண இயலாது என்பதையும் நன்கு உணர்ந்த அம்பேத்கர், காங்கிரசு கட்சியையும் அதன் உள்ளீடான பார்ப்பன-இத்துத்துவ அரசியலையும் எதிர்த்து அரசியல் காய்களை நகர்த்தினார். இதில் ஏற்பட்ட தோல்வி இழப்பு அல்ல. மாறாக அது எதிர்பார்க்கப்பட்ட தேவை. அம்பேத்கரின் அன்றைய செயல் நமக்கு நம் கால்களில் நாம் தனித்து அதே நேரத்தில் ஆதரவு சக்திகளை இணையாகக் கொண்டு இயங்க வேண்டியதை வலியுறுத்துகிறது" என்றார் பகவான்தாஸ்.

இதே கருத்தை வலியுறுத்திய பொன்னோவியம், அம்பேத்கர் காலத்தில் M.C. ராஜா, ரெட்டமலை சீனிவாசன் போன்ற துணிச்சல் மிகு போராளிகள் நம்மிடம் இருந்தனர். இருக்கும் இன்றைய தலைவர்கள் அதிகம் உழைக்க வேண்டியுள்ளது என்று கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

நான் கூறினேன் தலைவர்கள் என்றால் ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவனும் தலைவன்தான். நாம் தொடர்ந்து இந்துத்துவ - பார்ப்பன சக்திகளை எதிர்த்துக் கொண்டு வருவதனால்தான் தாழ்த்தப் பட்டுள்ளோம் என்று அம்பேத்கர் கூறியுள்ளபோது, இந்த எதிர்ப்பை நிகழ்த்தும் நெஞ்சுரம் பெற்ற நாம் எப்படி துணிச்சல் அற்றவர்கள் ஆவோம் என்றேன்.

இந்துத்துவ - பார்ப்பனியத்தை நாம் எதிர்க்கி றோமா? அல்லது அந்த தீய சக்திகளால் நாம் ஒடுக்கப் படுகிறோமா? என்றார் பகவான்தாஸ். நாம் எதிர்க்கி றோம். ஆனால் ஒடுக்கப்படுகிறோம் என்றார் பொன்னோவியம். நான் கேட்டேன், ஐயா நாம் எதிர்க்கிறோம், அதனால் நாம் ஒடுக்கப்படுகிறோம் என்னும் போது, நம் எதிர்ப்பு அவர்களை ஏதும் செய்யாதா? முடியும். நாம் இந்துத்துவத்தை எதிர்ப் பது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் நமது பூர்வ வரலாற்றை உணர்ந்து வைத்திருப்பது. நான் பாபா சாகேப் அம்பேத்கருக்கு முன்னரே அவர் கட்டளைப்படி பவுத்தம் தழுவிக் கொண்டுவிட்டவன். இந்துத்துவ கூட்டு மதம் என்னை அச்சமுற வைப்ப தில்லை. மாறாக அவைகளை நான் ஏளனமாகப் பார்க்கிறேன். பிரச்சினை என்ன? தீர்வு எங்குள்ளது என்பதில் நான் தெளிவாக உள்ளேன். இது பொன் னோவியம். இந்துத்துவம் பிரச்சினை, பவுத்தம் தீர்வு - இது பகவான்தாஸ். சரியாச் சொன்னீங்க என்று பொன்னோவியம் குரல் தந்தார். நான் இன்றைய தாழ்த்தப்பட்ட மக்களையும் அவர்களின் அரசியல் தலைவர்களையும் உண்மையாக நம்புகிறேன். அவர்களின் உழைப்பு வேகமாகிறது. அவர்கள் பாபா சாகேப் நூல்களைப் படித்தால் இன்னும் வேகத்து டனும் தெளிவுடனும் போராட முடியும். என்றார் பொன்னோவியம். படித்தால் போராட முடியும் என்று சொல்கிறீர்கள். ஆனால் இதையெல்லாம் படித்து விட்டு, அறையில் அமர்ந்து கொண்டு பேசிக்கொண்டு தானே அம்பேத்கரைப் படித்தவர்கள் என்று கூறு பவர்கள் உள்ளனர் - இது நான்.

தவறு. நீங்கள் கூறுவது தவறு. அம்பேத்கர் நூல்களைப் படித்தவர்கள் அதை உணர்ந்து படித்த வர்கள் அறைக்குள் அமர்ந்து வீண் பொழுது போக்க மாட்டார்கள். கண்டிப்பாக சமூக வளர்ச்சியில் அவர் களது பங்களிப்பு இருக்கும் - இது பொன்னோவியம்.

படித்த எல்லோரும், சமமாக இருக்கும் வகையில் புக் போடுறாங்க. பத்திரிக்கை நடத்துறாங்க . இலகு வான வகையில் அம்பேத்கர் - புத்தர் பற்றி மீட்டிங் நடத்துறாங்க - இது நான். பொன்னோவியம் பதறிப் போனார். குடியரசன் இங்க பாருங்க. சிறு வயதில் அம்பேத்கர், தான் மாட்டுவண்டியில் இருந்து தள்ளப் பட்டதை மனதில் ஆழமாக நிறுத்திக் கொண்டார். தன் மீது நிகழ்த்தப்பட்ட சாதி வன்கொடுமையை அவர் அன்று ஒரு தனிச் செயலாய்ப் பார்க்கவில்லை. சமூகத்தில் ஆழமாக ஊடுருவிப் போயிருக்கும் இந்துத்துவ - பார்ப்பன கொடுமையின் வெளிப் பாடாகப் பார்த்தார். தன் மீது நிகழ்த்தப்பட்ட செயல் என்று மட்டுமே அவர் அதை நம்பியிருந்தால், அவர் அக்கொடுமையின் கடுமையை பிறரிடம் புலம்பி தன்னுடைய கோபத்தை தணித்துக் கொண்டிருப்பார். ஆனால் பாபா சாகேப் அவ்வாறு செய்யவில்லை. சாதி - தீண்டாமை என்பன இந்து கூட்டு கொடுமையின் வடிவங்கள் என்பதை மக்களுக்கு தெளிவாக்க,

1. சாதி பற்றி ஆழமான நூல் ஒன்று எழுதியுள்ளார்.
2. சாதியின் கொடுமை பற்றி அதற்கான மாற்று வழிகள் பற்றி மூக்நாயக் உள்ளிட்ட பத்திரிக்கைகள் நடத்தியுள்ளார்.
3. எண்ணற்ற அரங்க கூட்டங்களை நடத்தியுள்ளார்.
4. சர்வதேச அளவில் பத்திரிக்கைக்கு தகவல் கொண்டு சென்றுள்ளார்.
5. அரசியல் சட்டத்தில் தீண்டாமையை குற்றம் என வரையறுத்துள்ளார்.

இப்படிச் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். பத்திரிக்கை நடத்துவது மிகக் கடினம். அதுவும் பழங்குடி மக்களின் (தாழ்த்தப்பட்ட) அரசியலை முன்னெடுத்து பத்திரிக்கை நடத்துவது அவ்வளவு எளிதானது அல்ல. எனக்குத் தெரிந்து எத்தனையோ பழங்குடி அமைப்புகள் (தாழ்த்தப்பட்ட), பத்திரிக்கை நடத்தி ஓரிரண்டு இதழ்களோடு நிறுத்தியுள்ளதை நான் அறிவேன். அவர்களின் மனத்துயரை நான் நன்கு அறிவேன். தனக்கு கிடைக்கும் சொற்ப வருவாயில் பத்திரிக்கை ஓர் இதழ் கொண்டு வருவதற்குள் அவர்கள் படும் துன்பம் சொல்லில் அடங்காது. நண்பர்களிடம் கடன் வாங்கி, பெண்டு பிள்ளைகளின் நகைகளை அடகுக் கடையில் வைத்து, மீதம் தொகைக்கு press-காரரிடம் கடன் சொல்லி - சொல்லும்போதே பொன்னோவியம் கோபம் அடைந்தார்.

பத்திரிக்கை நடத்துவது என்பதும், நூல்கள் கொண்டு வருவதும் ஓர் அறிவார்ந்த நிலை. மக்களை உண்மையாக நேசிப்பவன் தன் கருத்துக்களை ஒரு துண்டறிக்கையிலாவது கொண்டுவர நினைப்பான். ராமாயணம் - மகாபாரதம் என்று இந்துத்துவ - பார்ப் பனிய கருத்துக்கள் மக்களை குரூர சிந்தனையாளர் களாக மாற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில், அதிலி ருந்து மக்களை தெளிவுபடுத்திட பத்திரிக்கைகள், நூல்கள் கொண்டுவருவது என்பது போராளியின் கடமை என்று நான் நம்புகிறேன். அதன் தொடர்ச்சி யாகத்தான் என் பங்களிப்பாக அறவுரை நடத்தி வருகிறேன். என்னால் தொடர்ச்சியாக கொண்டுவர இயலாத நேரங்கள் பல. ஆனால் அம்பேத்கரின் தத்து வங்களை முறைகேடான வகையில் விமர்சனம் செய்யும் எல்லாப் பத்திரிக்கைச் செய்திகளுக்கும் நான் பதில் தருவதற்கான தளமாக அறவுரை பத்திரிக் கையைக் காண்கிறேன். பொன்னோவியம் அமைதி யானார். *(பின்னாளில் அருண்சோரி அம்பேத்கரைப் பற்றி அவதூறு பரப்பி தினமணியில் வந்த கட்டுரை களுக்கு சரியான பதில் தர அறவுரையை அறிஞர் பயன்படுத்தியதை நான் நன்கு அறிவேன்.)*



படிப்பகம்

www.padippakam.com

அறிஞரின் வாதம் என் மனக் கண்முன் இன்றும் உயிராக உள்ளது. வீட்டிற்கு வந்தார். அப்பொழுது நான் சென்னை சேத்துப்பட்டில் வசித்து வந்தேன். அறிஞர் அயோத்திதாசப் பண்டிதருக்கும், ரெட்ட மலை சீனிவாசனுக்கும் அரசியல் ரீதியில் உள்ள அணுகுமுறை வித்தியாசம் என்ன தெரியுமா? பண்டி தரும், ரெட்டமலை சீனிவாசனும் உறவுக்காரர்கள் தானே? - நான். ஆமாம் - பொன்னோவியம்.

ரெட்டமலை சீனிவாசன், பாபா சாகேப்புடன் வட்டமேஜை மாநாடு வரை சென்று வந்தவர். இந்திய நாடு முழுவதும் பல களங்கள் கண்டவர். பின் ஏன் அவர் அம்பேத்கர் போல பிரபலம் அடையவில்லை. - இது பொன்னோவியம்.

வட்டமேஜை மாநாடு - லண்டனில் நடந்தது. இந்தியப் பத்திரிக்கைகள் அதை சரியாகப் பதிவு செய்யவில்லை. அதனால்தான் ரெட்டமலை சீனி வாசன் அம்பேத்கர் அளவிற்கு இல்லாவிட்டாலும் கூட குறிப்பிடும் அளவிற்கு இந்திய நாடு முழுமையும் புகழ் பெற இயலாமற் போனது - இது நான்.

சரி. உங்கள் வாதப்படியே வருவோம். பண்டிதர் லண்டன் எல்லாம் செல்லவில்லை. பின்னர் அவர் எப்படி நம்மால் அறியப்படுகிறார்? - இது பொன்னோ வியம்.

அம்பேத்கர் அளவிற்கு ஒன்றும் பண்டிதர் அறியப்படவில்லையே. - இது பொன்னோவியம்.

ஐயா, எனக்கு இதுபற்றி ஒரு கருத்து இருக்கிறது. இருந்தாலும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? - இது நான்.

திரு. பகவான்தாஸ் ஏதேனும் களப்பணி செய்துள்ளார் என்று நீங்கள் அறிவீரா? - இது அறிஞர்.

இல்லை.

சரி, பின்னர் எப்படி, பகவான்தாஸ் சென்னை வருகிறார் என்றவுடன் நீங்கள் நான் எப்படி அவரைப் பார்க்க வந்தோம்?

அவர் அம்பேத்கரின் நூல்களை "Thus Spake Ambedkar" என்று 6-க்கும் மேற்பட்ட தொகுதிகளை நமக்கு தந்தவராயிற்றே!

இதனால் நமக்கு என்ன நன்மை? - இது நான்.

என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்கள். இந்தத் தகவலைத் திரட்ட அவர் பட்ட சிரமங்கள் எவ்வளவு தெரியுமா? - இது அறிஞர்.

ஒத்துக் கொள்கிறேன்.

பண்டிதர் ஆதிவேதம் உள்ளிட்ட நூல்களை நமக்கு தருவதற்கு அவர் மேற்கொண்ட போர்த் தந்திரங்கள் - அதுவும் அந்தக் காலத்தில் - சாமான்யப் பட்டதில்லை. அவரின் பதிவுகளால் தான், இன்று நாம் பவுத்தத்தின் தென்நாட்டு வரலாற்றை அறியமுடிகிறது. - இது அறிஞர்.

பொன்னோவியம் மேலும் தொடர்ந்தார்.

தேர்தல் அரசியல் நடத்த வேண்டுமென்றால், நாம் பிற கட்சிகளோடு ஏதோ ஒரு வகையில் இணைந்தோ அல்லது எதிர்த்தோ உறவுகொள்ள வேண்டியுள்ளது. அதனால் நமது பேச்சிலும், செயல்பாட்டிலும் பல compromise செய்து கொள்ள வேண்டியுள்ளது. மற்ற கட்சிகளை புறக்கணித்துவிட்டு தேர்தல் அரசியல் நடத்தவியலாது. ஆனால் பத்திரிக்கை - எழுத்து என்பது அப்படி அல்ல. நாம் யாருடனும் சேர்ந்து எழுது வதில்லை. எனவே தேர்தல் அரசியல் போல எத்தகைய compromise - ம் பத்திரிக்கை எழுத்து உலகிற்கு நிர்பந்தம் இல்லை.

பண்டிதரின் compromise - யை அவருடைய எழுத்தில் காணலாம். ரெட்டமலை சீனிவாசனின் போராட் டத்தை அவரின் செயலில் காணலாம். அம்பேத்கர் இந்த இரண்டு களத்தையும் ஒருங்கிணைத்துச் சாதித்தவர். அதனால்தான் அம்பேத்கர் எல்லோ ரையும் விஞ்சி - உயர்ந்து வாழ்கிறார்.

சரிங்க ஐயா. எல்லோரும் எழுதப் போயிட்டா, யார் போராட வர்றது? - இது நான்.

இந்த உலகில் எழுதும் வல்லமை படைத்த சமூகம் என்றும் தாக்குதலுக்கு ஆளானதில்லை. நாம் எல்லோரும் எழுதும் காலம் வரும்போது அதாவது கருத்தியல் தளத்தை நாம் கைப்பற்றும்போது, நம்முடைய போர்த் தந்திரம் வேறு வகைப்பட்டதாக இருக்கும். - இது அறிஞர்.

எப்படி - இது நான்.

இன்னும் சில ஆண்டுகளில், தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மாபெரும் கருத்தியல் படைப்பாளியாக தமிழக அளவில் பண்டிதர் இருப்பார். தமிழகத்து தாழ்த்தப்பட்ட மக்களின் தேர்தல் அரசியல் கருத்து நமது பண்டிதரின் கருத்தோடு ஒத்துப் போவதாகவோ அல்லது முரன்படுவதாகவோ மட்டுமே அமையும். பண்டிதரின் கருத்தை விமர்சனம் என்ற அளவிலாவது தாழ்த்தப்பட்டோர் அரசியல் முன்னெடுக்கும். இவ ரின் கருத்தியலை தொடாமல், இனி வருங்காலங்களில், தாழ்த்தப்பட்டோர் கருத்தியல் அசைவு பெறாது. எதிர்ப்பும் இருக்கலாம். அல்லது இணக்கம் இருக்க லாம். ஏதோ ஒரு வகையில் பண்டிதரின் கருத்து நம்மைச் செப்பனிடும்.

அறிஞர் பொன்னோவியத்தின் கணிப்புகளை இன்று நாம் நடைமுறையில் காண்கிறோம். பண்டி தரின் நூலைப்படிக்கும்போது நமக்கு அவருடைய உழைப்பைப் பற்றி வியப்பு மேலிடுகிறது. அறிவியல் வளம் இல்லாத அக்காலத்திலே, இவ்வளவு தகவலைத் திரட்டி, ஒரு வரி ஆத்திச் சூடிக்கும், இருவரி குறளுக்கும் இதுவரை யாரும் தந்ததில்லை. இந்த மாதம் அறிஞர் பொன்னோவியத்தின் நினைவு நாள் மாதம் என்பது இங்கு நாம் நினைவு கூறத்தக்கது.

கருத்தியல் தளத்தில் போராடும் களப்பணியாளர் களின் உழைப்பை காலம் தாண்டி பாதுகாக்கும் ஓர் அரிய பணியை அறிஞர் செய்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

நாம் இந்துத்துவத்தை எதிர்ப்பது
எவ்வளவு முக்கியமோ
அதைவிட முக்கியம்
நமது பூர்வ வரலாற்றை
உணர்ந்து வைத்திருப்பது.
நான் பாபா சாகேப் அம்பேத்கருக்கு
முன்னரே அவர் கட்டளைப்படி
பவுத்தம் தழுவிக் கொண்டுவிட்டவன்.
இந்துத்துவ கூட்டு மதம் என்னை
அச்சுறுத்த வைப்பதில்லை.
மாறாக அவைகளை நான்
ஏளனமாகப் பார்க்கிறேன்.

அடுத்ததாக, திரு. பகவான்தாஸ் அவர்களிடம் நான் அம்பேத்கரின் நூல்களின் சிறப்பினை அறிந்து கொண்டதை விவரிக்க விரும்புகிறேன்.

அம்பேத்கர் அடிப்படையில் ஒரு போராளி. அவர் நாடு முழுவதும் பயணப்பட்டு மக்களைச் சந்தித்து அவர்களிடம் தன்னுடைய கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளார். பம்பாய் பகுதிகளில் பேசும்போது, அவரின் பேச்சு மராத்தியிலும் இருந்துள்ளது. இந்த மராத்திய உரையை இந்தியில், மூக் நாயக் பத்திரிக்கை பதிப்பிற்காக, இந்தியில் இரண்டாவது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதை மூன்றாவதாக ஆங்கிலத்தில் திரு. பகவான்தாஸ் மொழி பெயர்த்திருக்கிறார். ஆக பகவான்தாஸ் அவர்களின் படைப்புகளாக Thus Spake Ambedkar மூன்று மொழியாக்கங்களைச் சந்தித்த பதிவு. இதில் மொழிபெயர்ப்பு மாறுதல் மற்றும் மொழி பெயர்ப்பு பிழைகள் வருவதற்கு இயல்பான சாத்தியங்கள் சில உண்டு. இதையும் கருத்தில் கொண்டுதான் Thus Spake Ambedkar தொகுதிகளை நாம் அணுக வேண்டியுள்ளதை "அம்பேத்கர் தானே ஆங்கிலத்தில் வெளியிட்ட தொகுதிகளைப் படிக்கும்போது" உணர்ந்தேன். குறிப்பாக, அம்பேத்கர் தன்னுடைய அமைச்சரவை ராஜினாமா கடிதத்தை நாடாளுமன்றத்தில் வாசித்தல், பத்திரிக்கைகளில் வெளியிடுதல் ஆகிய விவரங்களை பகவான்தாஸ் பிழையாக பதிவு செய்துள்ளார். முதல் சங்கராச்சாரியார் ஒரு பவுத்தர் என்ற தகவலை அம்பேத்கர் பேசியுள்ளதாக ஒரு நீண்ட கட்டுரையை பகவான் தாஸ் பதிவு செய்துள்ளார். ஆனால் Riddles of Hinduism என்ற அம்பேத்கரின் மூல நூல் இதிலிருந்து முழுமையாக முரண்படுகிறது.

தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமையை வலியுறுத்தி பத்திரிகை நடத்திவரும் V.T. ராஜசேகர், தன்னுடைய Dalit Voice பத்திரிக்கையின் "அம்பேத்கர் பக்கம்" திரு. பகவான்தாஸ் அவர்களின் தொகுப்பாகிய Thus Spake Ambedkar - இல் இருந்துதான் வெகுகாலம் எடுத்தாளப்பட்டது. கிட்டத்தட்ட 1992-ஆம் ஆண்டு வரை இதுவே நடைமுறையில் இருந்தது.

அம்பேத்கரின் 17 தொகுதிகளையும், அவர் பற்றிய பிறர் எழுதிய நூல்களையும் முழுமையாகக் கற்றுணர்ந்து ஓர் அரசியல் வெளியீட்டை வெகுமக்கள் பெற இயலாமல், 1991 வரை அவரது நூல்கள் மக்களுக்கு கிடைக்காமல் இருந்தது.

திரு. வசந்த் மூன் அவர்களின் கடும் முயற்சியால் இன்று நாம் அம்பேத்கரின் 17 தொகுதிகளையும் ஆங்கிலத்தில் கைவரப் பெற்றுள்ளோம். இவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையே. வசந்த் மூன் தனிப்பட்ட வகையில் முயற்சி எடுத்து அம்பேத்கரின் பதிவுகளை நமக்கு 17 தொகுதிகளாகத் தந்துள்ளார்.

நான் வசந்த் மூன் அவர்களை நேரில் சந்தித்த போது, Buddha and His Dhamma - Vol.II தொகுதி பற்றி சில விவரங்கள் வேண்டும் என்றேன். அங்கு நடந்த உரையாடல் இவ்வாறு சென்றது.

அம்பேத்கரின் எல்லா தொகுதிகளும் பல அடிக்குறிப்புகளோடு அதாவது குறைந்தது பக்கத்திற்கு ஓர் அடிக்குறிப்போடு உள்ளது. ஆனால் தொகுதி 11-இல் அதுபோல எத்தகைய அடிக்குறிப்போ. நூல் ஆதாரமோ அம்பேத்கர் ஏன் தரவில்லை என்று என் சந்தேகத்தைக் கேட்டேன்.

உங்களுடைய சந்தேகம்தான் என்ன என்று வசந்த் மூன் என்னிடம் கேட்டார். உலகமே, சித்தார்த்தன் - புத்தர் ஆனதற்கான காரணங்களாக பிணி, மூப்பு, சாக்காடு (அயோத்திதாசப் பண்டிதர் உட்பட) வரையறுக்கும்போது, அம்பேத்கர் மட்டும் "ரோகினி நதி நீர்ச்சிக்கல்" தான் காரணம் என்ற முடிவிற்கு அவர் வரக்காரணம் என்னவாக இருக்கும்? அதற்கான ஆதாரத்தை அவர் எங்கிருந்து திரட்டினார் என்பது ஏதும் அந்தத் தொகுதியில் காணப்படாததால், உலக மகா போதி சோசைட்டி முதல் கொண்டு, இந்திய மகாபோதி சொசைடிகள் வரை,

1. அம்பேத்கரின் நூலான புத்தரும் அவர் தம்மமும் நூல் தம்மத்தை "தம்மம் அல்ல" என்றும் தம்மம் அல்லாதவற்றை தம்மம் என்றும் குறிப்பிடுகிறது.
2. இந்த பிழைக்குக் காரணம், அம்பேத்கரின் அரசியல் மற்றும் சூழல் காரணங்கள்.
3. இந்நூலின் தலைப்பை "அம்பேத்கரும் அவர் தம்மமும்" என்று பெயரிட வேண்டும்.
4. இந்நூல் தடைசெய்யப்பட வேண்டும்

என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. நான் அம்பேத்கரின் தொகுதிகளாக உங்கள் தொகுப்பு களைத்தான் ஆதாரமாகக் கொண்டு என் கருத்துக் களை பேசியும் பகிர்ந்தும் வருகிறேன்.

புத்தரும் அவர் தம்மமும் என்ற நூல் அம்பேத் கரின் மரணத்திற்குப் பின் வெளியானதை நாம் அறிவோம். எனவே அந்நூல் மீது வைக்கப்பட்டுள்ள விமர்சனத்தை உடைக்க, அம்பேத்கர் அன்று உயி ருடன் இல்லை. அம்பேத்கரின் மாணவர்களும் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை மறுதலிக்கவில்லை. அம்பேத்கர் உயிருடன் இருந்தபோதே, புத்தரும்



படிப்பகம்

www.padippakam.com

**அம்பேத்கர், காங்கிரசு கட்சியையும் அதன் உள்ளீடான பார்ப்பன-இத்துத்துவ அரசியலையும் எதிர்த்து அரசியல் காய்களை நகர்த்தினார். இதில் ஏற்பட்ட தோல்வி இழப்பு அல்ல. மாறாக அது எதிர்பார்க்கப்பட்ட தேவை. அம்பேத்கரின் அன்றைய செயல் நமக்கு நம் கால்களில் நாம் தனித்து அதே நேரத்தில் ஆதரவு சக்திகளை இணையாகக் கொண்டு இயங்க வேண்டியதை வலியுறுத்துகிறது**

அவரின் தம்மமும் 10 படிகள் அச்சிடப்பட்டு, அம்பேத்கரால் நேருவிடம், "இந்திய அரசு வெளியீடு" சார்பில் வெளியிட தரப்பட்டது. அந்தப் பிரதிகளில் ஏதேனும் குறிப்புகள் இருந்தனவா? என்பதும் இதுவரை தெரியவில்லை. இதை நீங்கள் ஆய்வு செய்து, "ஒரு தனி நூலாக" வெளிக்கொணர வேண்டும் என்று தெரிவித்தேன்.

அதற்கு வசந்த் மூன், எனக்கு அம்பேத்கரின் நூல்களைத் தொகுக்க மட்டும்தான் பணி தரப்பட்டுள் ளது. சொந்தமாக ஒரு நூல் அம்பேத்கரின், புத்தரும் அவரின் தம்மத்திற்கு அடிக்குறிப்பு நூல் வெளியிட உரிமை எனக்கு இல்லை. ஆனால் நீங்கள் கூறுகிறபடி, அந்தப் பதிவு மிகவும் அவசியம் என்பதை நான் உணர் கிறேன். பாபா சாகேப் அவர்களின் நூல்களை தொகுத் தவன் என்ற வகையில், என்னால் ஓரளவு அடிக்குறிப்புகளைத் திரட்டி நூலாகத் தரவியலும் என்று நம்புகிறேன். என்னுள் இருந்த நோக்கம், உங்களிடமும் உள்ளது அறிந்து, நான் உங்களைப் பாராட்டுகிறேன் என்றார்.

அவர் தந்த வார்த்தை நான் pali and other sources of the Buddha & his Dhamma with an indedx" என்ற Vol II-ன் supplement-டை பார்க்கும்போது, நான் உண்மை யானதைப் பார்க்கும்போது உணர்ந்தேன். இந்தத் தொகுதி "மட்டும்தான்" அம்பேத்கரின் Buddha and Dhamma-க்கு ஆதாரமாக உள்ள உலகளாவிய ஒரே நூல்.

இவ்வளவு முக்கியத்துவம் உடைய இவரை நான் சந்தித்து உணர்ந்த உண்மைகள் இந்தக் கட்டுரைத் தொடரின் ஆழத்திற்கு வலு சேர்க்கிறது.

இவர் இறந்தவுடன் தலித் முரசில், சங்கமித்திரை என்ற புனைப்பெயரில் "வசந்த் மூன்" பற்றிய கட்டுரை ஒன்றை எழுதியுள்ளேன். இக்கட்டுரை The Dalit என்ற ஆங்கிலப் பத்திரிக்கையில் மீனா கந்தசாமி என்ற இளம் பெண் பத்திரிக்கையாளரால் மொழியாக்கம் செய்யப் பட்டு, பதிவு செய்யப்பட்டது. இதற்காக தலித் முரசு ஆசிரியர் திரு. புனிதபாண்டியன் அவர்கட்கு நான் நன்றி கூறுகிறேன்.

புத்தரைப் பற்றி எப்படி வெவ்வேறு தகவல் நமக்கு கிடைக்கிறதோ, அப்படியே அம்பேத்கரைப் பற்றியும் நமக்கு உணர்வு மட்டும் மேலோங்கும் வகையிலான தகவல் நம்மிடம் உலவி வருகிறது. இடையே பார்ப்பன சமூகத்தைச் சார்ந்த தனஞ்செய் கீர் என்பவர், அம்பேத்கரின் வரலாற்றை "The Life and Mission" என்ற நூலாக எழுதியுள்ளார். இன்றும் இந்திய அளவில் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறாக இந்நூல் நம்மை ஏமாற்றி வருகிறது. இந்நூலின் பின்புலத்தை நாம் இங்கு காண்போம்.

இந்நூலாசிரியர் தனஞ்செய் கீர் ஒரு பார்ப்பனர். பத்தாம் வகுப்புவரை மட்டுமே படித்துள்ள இவர், முதன் முதலாக எழுதிய நூல் RSS அனுதாபியும், அதன் செயல் திட்டங்களை முன்னெடுத்து நம் மக்களை ஒடுக்கிய வீரசாவர்கர் என்பவரின் வாழ்க்கை வரலாற்றைத்தான். வீரசாவுர்கர் ஒரு அப்பட்டமான இந்து வெறியன். இந்திய நாட்டை இந்துத்துவ நாடாக்க சுதந்திரம் பெறுவதற்கு முன்பே இவர் அகண்ட பாரதம் இந்து ராஸ்டிரம் வேண்டி பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்.

இரண்டாவது நூலாக, தனஞ்செய் கீர், The Prophet of Ahimsa (அகிம்சையின் தூதுவன்) மகாத்மா காந்தி என்ற நூலை எழுதினார். காந்தியைப் பற்றி நாம் நன்கு அறிவோம். இந்த இரண்டு நூல்களால் பெரும் பண இழப்பைச் சந்தித்த இவர், பணம் பெற வேண்டியும் அம்பேத்கர் மீது இந்துத்துவ சாயம் பூச வேண்டியும் எழுதப்பட்டதே The Life and Mission என்ற தனஞ்செய் கீர்-ன் மோசடி நூல்.

இந்த நூல் முழுவதும், அம்பேத்கரை வீர சாவர்கரோடு ஒப்பிட்டு இவர் எழுதியுள்ளார். அதுவும் போதாதென்று, அம்பேத்கரின் இளமைக் கால ஆசிரியர் "அம்பேத்கர்" என்பவர் ஒரு பார்ப்பன ஆசிரியர் என்ற பொய்யை முதன்முதலில் பரப்பியவர் இந்த தனஞ்செய்கீர்தான். இந்தப் பொய் சாண்டில்யன் என்ற பார்ப்பனனின் மகன் Dr. பூவண்ணன் வரை இன்று காக்கப்பட்டு, நம் குழந்தைகளின் பாட புத்தகங்களில் வலம் வருகிறது. தனஞ்செய் கீர், அம்பேத்கர் இறந்தபிறகுதான் இந்நூலை வெளிக் கொணர்ந்தார் என்பதால், பெரிய மறுப்பை யாரும் வெளியிட இயலாமற்போனது. W.N. குபேர் மற்றும் அருன்சோரி போன்ற பார்ப்பனர்களின் நூல்களைப் போல இந்த நூல் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகாத தன் காரணம் இதுதான். அருன்சோரி என்ற பார்ப்பனன் நேரடியாக குறை கூறி அம்பேத்கரைப் பற்றி எழுதினார். ஆனால் தனஞ்செய்கீர் இந்துத்துவ பொய்யை மறை முகமாக இணைத்துள்ளதால், இவர் போன்ற நபர்களிடம் நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தனஞ்செய்கீரின் நூல், தமிழிலும் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது நமக்கு முதல் சவால்.

கோடாங்கி வாசகர்கள் அம்பேத்கரின் கருத்தி யலை அறிந்து கொள்வதைப் போல, நம் எதிரிகளின் நிலைப்பாடுகள், அதை எதிர்கொள்ள நம் போராளி கள் சந்தித்த களங்கள் பற்றியும் அறிய இந்த விவரங்கள் உதவும் என நம்புகிறேன்.

அம்பேத்கர் பற்றிய பிற நூல்களின் தகுதியையும், கூடுதல் விவரத்தோடு அடுத்த இதழில்.



படிப்பகம்

www.padippakam.com



# எதிர்மறை – இந்திய தேசியம்

■ கௌதம சன்னா

**இடது சாரிகளின் இந்த வரையறுப்புகளிலிருந்து, பார்ப்பனீய நிலஉடமையையும், இந்துமத அடிப்படையும்தான் இந்திய தேசியத்தின் அடையாளங்களாக காண்கிறோம். இவ்வடையாளங்களை பொருளியல் சார்ந்த அடையாளங்கள் என்பதைவிட பண்பாட்டு அடையாளங்கள்தான் என்பது கூறாமலே விளங்கும்.**

இந்திய தேசியத்தை வரையறுப்பதில் உள்ள இடர்பாடுகளை இதுவரை வலது போக்கின் அடிப் படையில் பார்த்தோம். இனி இடதுசாரி சிந்தனை களின் மூலமும் அதையொத்து காணப்படும் இதர முற்போக்கு மற்றும் இந்திய தேசிய எதிர்ப்பாளர்கள் சிந்தனைகளையும் காணவேண்டும்.

இடது சாரிகளில், இந்திய துணைக் கண்டம் முழு வதும் இயங்கும் சுமார் 30-க்கும் மேற்பட்ட இடது சாரி கட்சிகள், கட்சி சார்பற்று இயங்கும் மிதவாத மற்றும் தீவிரவாத சிந்தனை கொண்ட அறிவுஜீவிகள், அவர் களை சார்ந்து இயங்கும் சிறு சிறு குழுக்கள் என பல பிரிவுகள் இருக்கின்றன. இவை அத்தனை பேரின் கருத்துக்களையும் தொகுத்துப் பார்ப்பதென்பது தற்போதைக்கு இயலாத காரியம். எனினும் இதில் அடிப்படையான வேறுபாட்டைக் காணமுடியும் இடதுசாரிகளில். இந்திய தேசியத்தை ஏற்றுக் கொண்ட வர்கள், மற்றது அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என இரண்டாகப் பிரித்துக்கொள்ள முடியும்.

அ. இந்திய தேசியத்தை ஏற்றுக் கொண்ட கட்சி களில் இரண்டு வகைப் போக்கு இருக்கிறது.

1. இந்தியாவில் தேசிய இனப்பிரச்சினையை இனி எழுப்பப் போவதில்லை என முடிவெடுத்துள்ள கட்சிகள் (சி.பி.எம்., சி.பி.எம் (மா))

2. இந்திய தேசிய அளவிலான கட்சியைக் கொண்டே, இந்தியாவில் உள்ள மொழிவாரி தேசிய இனங்களின் விடுதலையை ஆதரிக்கும் கட்சிகள். (இ.பொ.க. (மா.லெ))

இவைகளில், முதல்வகைக் கட்சிகள் இந்திய தேசியத்தை, காலனியப் பிரச்சினையாக அணுகி வந்தனர் என்ற குற்றச்சாட்டு பிற இடதுசாரிகளால் முன் வைக்கப்படுகிறது. இது உண்மை என்றாலும், இது மட்டுமே அவர்களது வரையறுப்பு அல்ல. இந்தியா வின் ஒற்றுமையைக் காப்பது என்பது அந்தக் கட்சி களின் முக்கிய கொள்கையாக தீர்மானிக்கப்பட்டு விட்டதால், 'ஒற்றுமை' என்று அவர்கள் வலியுறுத்தும் போதே, வேற்றுமைச் சக்திகளை எதிர்மறையாக அங்கீகரித்துள்ளனர் என்று பொருள். எனவே, இதைக் குறித்து விரிவாக காண்பதை விட, பிற இடதுசாரிகள் 'இந்திய தேசியத்'தை எப்படி வரையறுக்கின்றனர் என்பதைப் பார்ப்போம்.

இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி (மா.லெ) (தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி) 1976 டிசம்பர் 31-1977 ஜனவரி 1 இல் நடைபெற்ற முதலாவது பிளீனத்தில் வைக்கப்பட்ட திட்ட நகல் ஏற்கப்பட்டது. இதில் 1997 வரை திருத்தங்கள் செய்யப்பட்டது. அத்திட்ட அறிக்கையிலிருந்து,

"முதலாளித்துவ தொழில் உற்பத்தியின் தவிர்க்க இயலாத விளைவால் 'இந்திய தேசம்' உருவாக வில்லை. ஆங்கிலேயே காலனியவாதிகள் நமது நாட்டின் பல்வேறு தேசிய இனங்களையும் பலாத் காரமாக இணைத்து இந்தியாவை ஒரே நாடாக் கினர். எனவே இந்தியா பல்வேறு தேசிய இனங் களின் சிறைக் கூடமாயிற்று. (பக்: 3)"

"நாட்டு ஒருமைப்பாடு என்ற பெயரில் இணைத்து தேசிய இனங்களின், தேசிய மதச் சிறுபான்மை யினரின் நியாயமான உரிமைகளை ஆளும் வர்க்கங் கள் நசுக்குகின்றன. நாகர்களுக்கும், குக்கிகளுக்கும், மிசோக்களுக்கும், காஷ்மீரிகளுக்கும் சுயநிர்ணய உரிமையை அவர்கள் மறுக்கிறார்கள். அனைத்து மொழிகளுக்கும் சமஉரிமை மறுக்கப்படுகிறது. விடுதலைப் போராட்டக்காலத்திலிருந்து இந்தி மொழி பேசாத மக்களின் மீது *(அவர்கள்)* விருப்ப மின்றி சமஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்தி, தேசிய மொழியாக திணிக்கப்படுகிறது. இந்து (பார்ப் பனியம்) - இந்தி - இந்தியா என்ற சித்தாந்த பண்பாடு அடிப்படையில் தனது 'தேசியத்தை' கட்டியமைக்க முயல்கிறது.

இந்த இரண்டு கருத்துக்களில் இந்திய பொதுவுடை மைக் கட்சி இரண்டு கருத்துகளை வலியுறுத்து கிறது.

1. இந்தியா காலனியவாதிகளால் உருவாக்கப் பட்டது.

2. இந்தியா, இந்து - (பார்ப்பன) இந்தி-இந்தியா என கட்டமைக்கப்பட்டு வருகிறது. குறித்துச் சொல்வதெனில் பார்ப்பனீய இந்தியா.



படிப்பகம்

www.padippakam.com

இவைதான் இ.பொ.க. முன்வைக்கும் இந்திய தேசியத்தின் மையச்சரடு ஆகும்.

இனி, இடது சாரி இயக்கத்திலேயே, இந்திய தேசியத்தை ஏற்றுக் கொள்ளாத, பிராந்திய பொதுவுடைமைக் கட்சிகளில் ஒன்றிலிருந்து ஒரு சான்றினைப் பார்ப்போம்.

தமிழ்நாடு பொதுவுடைமைக்கட்சி, 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், கட்சி சீரமைப்பு குழுவின் முன் வைத்த ஒரு அறிக்கை விவாதிக்கப்பட்டும், திருத்தப்பட்டும் 1990 மார்ச்சில் வெளியிடப்பட்டது. இந்திய பொதுவுடைமை இயக்கத்தின் அரசியல் தோல்வியைக் குறித்து விரிவாக ஆராயும் இவ்வறிக்கை *'தமிழகத்தில் இந்திய அராஜகவாதத்திற்கு எதிராக'* என தலைப்பிடப்பட்டு சிறு நூலாக வெளியிடப் பட்டது'

இந்திய அரசியல் விடுதலையை பெற்றக் காலத்திற்கு பிறகு தெலுங்கானாவில் தீவிர இடதுசாரிகளின் அணியத்தினால் உழவர் புரட்சி தீவிரமடைந்திருந்தது. இதை அன்று ஒன்றுபட்ட இந்திய பொதுவுடைமை கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை, என்பதோடு அவ்வெழுச்சியை தனி தேசிய இன எழுச்சியாகவும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிகழ்வை சுட்டி, இ.பொ.க. மீது மேற்கண்ட அறிக்கை குற்றம் சுமத்து கிறது. அதில்.

> "(இ.பொ.க) போலியான வல்லரசிய 'இந்திய தேசியம்' பேசி தெலுங்கானா புரட்சியை, அதன் வளர்ச்சி நிலையினை தெலுங்கு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை, இந்திய மைய அரசுக்கு காட்டிக் கொடுத்து துரோகமிழைத்தது.. இதன் மூலம் அது தத்துவ வழியில் இந்திய தேசியத்தின் அடிக்கல்லான, இந்து மதவாதத்திற்கும், அதன் பாதுகாவலனாகிய பார்ப்பனீயத்திற்கும் புரட்சியை அடகு வைத்தது." இதன் வெளிப்பாடே அது உழவர் புரட்சியின் நலன்களை சாதிய நிலவுடைமையாளர்களிடம் இந்திய தேசியத்தின் நலனுக்காக விட்டுகொடுக்க கோரியதாகும். (பக். 24)

இடது சாரிகளின் இந்த வரையறுப்புகளிலிருந்து, பார்ப்பனீய நிலஉடமையையும், இந்துமத அடிப்படையும்தான் இந்திய தேசியத்தின் அடையாளங்களாக காண்கிறோம். இவ்வடையாளங்களைபொருளியல் சார்ந்த அடையாளங்கள் என்பதைவிட பண்பாட்டு அடை யாளங்கள்தான் என்பது கூறாமலே விளங்கும்.

இந்திய வரலாற்றினை ஆராய்ந்த அல்லது இந்திய வரலாற்றினைத் தொகுத்த எந்த இடது சாரி சிந்தனையுள்ள வரலாற்றியலாளரும் கூட இந்த கருத்தினை மையமாகக் கொண்டிருந்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு.

இதே போல, இந்திய தேசியத்தை எதிர்த்த பிராந்திய இயக்கங்களின் வரையறுப்புகளிலும் இதே போன்ற கருத்துக்கள் மையச்சரடாக இழையோடுவதைக் காணமுடியும்.

இந்திய தேசியத்தை கடுமையாக எதிர்க்கும் தமிழ் தேசியவாதிகள், அவர்களின் இயக்கத்தினர் கூட, இந்திய தேசியத்தை பார்ப்பனீய, இந்து இந்தியாவாகத்தான் அடையாளம் காண்கிறார்கள்.

தமிழ் தேசியத்தின் தலைவராகக் கருதப்படும் பெரியார் ஈ.வெ.ரா-வின் சிந்தனைகள் நாடறிந்தது. இவரின் இந்திய எதிர்ப்பு என்பது பார்ப்பனீய இந்தியாவின் எதிர்ப்பாகவும், இந்துமதத்தின் அரசு மைய அமைப்பு எதிர்ப்பாகவும் இருந்ததற்கு சான்றுகள் உள்ளது.

19.9.1937-இல் கொல்லம்பாளையத்தில் பெரியார் ஈ.வெ.ரா. இப்பிரச்சினை குறித்து விரிவானதொரு சொற்பொழிவாற்றினார். 'இந்தியா ஒரு நேஷனா' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய சொற்பொழிவில், இந்திய தேசியம் ஒன்று இல்லை என்பதை நிருபிக்க பல்வேறு ஆதாரங்களை முன்வைத்து, இந்தி மொழி என்பது பார்ப்பனர்களுக்கு சுலபமான மொழியாக இருப்பதால் அதை தேசிய மொழியாக்க துடிக்கின்றனர் என்று குற்றம் சுமத்துகின்றார். (காண்க. ஈ.வெ.ரா. சிந்: தொ: 2: 445-55) இந்தியா என்பதை இந்து, ஆரிய, பார்ப்பனீய இந்தியா என்பதை பெரியார் வலியுறுத்தி எதிர்க்கிறார்.

இந்த கருத்துக்கள் அனைத்திலும் இந்திய தேசியத்தை அதன் ஆதிக்கப் பண்பாட்டு அடிப்படையிலேயே கட்டமைக்கின்றனர். இந்தியாவிற்கு ஒரு பொது மொழி, பொதுவான பண்பாடு, பொதுவான பொருளாதார வாழ்க்கை என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, இக்கருத்துக்கள் எதிர்மறையாகவே இந்திய தேசியத்தை கட்டமைத்து இருந்தாலும், இந்த ஒரு அம்சத்தினாலேயே இந்தியா தேசமாகிவிடவில்லை. ஆதிக்க சமூகம் - வர்க்கம், தன்னையே ஒரு தேசமாக முன்னிருத்தும் என்ற வரலாற்று அனுபவத்தை இங்கே நடைமுறையாகக் காண்கிறோம். எனினும், இந்த நடைமுறையிலேயே இந்திய தேசம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. பண்பாட்டு - பாரம்பரியப் புகழினை வலியுறுத்தும் இந்திய தேசியத்திற்கு மேலும் சோதனைகளை வைக்க முடியும். அம்பேத்கர் வகுத்த சில கோட்பாடுகளை இங்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் அவை,

- துயரங்களைப் பகிர்ந்து துய்த்தல்
- கடந்தக் காலப் புகழை மறக்காதிருத்தல்
- தங்களை தேசிய இனமாகக் கருதிக்கொள்ளல்

இந்த மூன்று சோதனைக் கருவிகள் இதற்கு முன் பார்த்த வரையறுப்புகளுக்கு இணையானவை. இவை கோட்பாடு மற்றும் நடைமுறை சார்ந்தவை என்பதை இதைப் படிக்கும் வாசகர் உணரக்கூடும்.

இவைகளை விரிவாக இந்திய தேசியத்திற்குப் பொருத்தி, இதுவரை பார்த்த அத்தனை வரையறுப்பு சோதனைகளை நமது அண்மையில் இருக்கும் ஒரு தேசிய இனத்துடன் பொருத்திப் பார்ப்போம்.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில் முகம்

மாநாட்டுக் கட்டுரைகள் மற்றும் அது குறித்தான தொகுப்பு அருமை. மிகவும் சிறப்பு. “பெரியாரும் திராவிட இயக்கமும்” கட்டுரை மிகத் தெளிவாகவே பெரியாரைக் கண்டுள்ளது. எவ்வித வெட்டுமின்றி வெளியிட்டமைக்கு நன்றி. மேலும் எடுத்துப் போடும் வரிகளில் பெரியாரைத் தாக்கும் வரிகளை மட்டுமே உருவி எடுத்துப் பயன்படுத்தி உள்ளீர். இது சரிதானா? ‘தலித் ஆதரவாளர்’ பற்றிய அரா. - வின் கட்டுரையும் சிறப்பு. மேலும் மா. வேலுச்சாமி அவர்கள் முன்னர் சொன்ன விமர்சனங்களையே மீண்டும் மீண்டும் பெரியார் மீது வைப்பது சோர்வைத் தருகிறது. பெரியாருக்குப் பின்னாளில் தி.க., தபெதிக ஆகியவை செயலாற்றிய விதம் பற்றிய கருத்துக்களை வெளியிடலாம். அது ஆரோக்கியமான விவாதமாகவும் அமைவது நல்லது.

மற்றபடி ‘உடல்மொழி’ பற்றிய சிவகாமியின் கட்டுரை மிகச் சிறப்பு. இவற்றை தொகுத்து நூலாக வெளியிடுவீர்களா?

B. மணிமாறன், வல்லம்.

தலித் - பழங்குடியினர் - அரவாணிகள் முதல் மாநில மாநாடு செய்திகளும், உரைச்சுருக்கமும் கலந்து கொள்ளாதவர்களுக்கு நல்லவாய்ப்பு. மாநாட்டின் வெற்றியில் மேடம் சிவகாமி, எழுத்தாளர் விழி.பா. இதயவேந்தன், கவிஞர் அன்பாதவன் ஆகியோரின் வெற்றி குறிப்பிடத்தக்கது. ம. மதிவண்ணனின் ‘பெரியார்’ குறித்த பார்வை பெரியாரின் தலித் எதிர்ப்பாளர்களுக்கு பதிலாய் இருந்தது. இக்கட்டுரைக்கு எதிராக இருந்தது மா. வேலுச்சாமியின் பெரியார் யாருக்கு பெரியார்! எனினும் ம. மதிவண்ணன் ‘குணா’ போன்ற நிஜ எதிரிகளை அடையாளம் காட்டி உள்ளார். ‘கிளிகளின் மொழியை இசையெனப் புகழ்ந்த காலமொன்றுண்டு. தன் குரலைப் பொன் குரலாகப் பதிவு செய்யுமிது காக்கைகளின் காலம்’ என்னும் அன்பாதவனின் வரிகள் சுட்டிக் காட்டத்தக்கவை. ‘தலித் இலக்கியமும் ஆதரவாளர்களும்’ என்னும் க. பஞ்சாங்கம் அவர்களின் கட்டுரை ஒரு புதிய சிந்தனையை ஒரு புதிய பார்வையை வைத்துள் ளது. முனைவர் பத்மாவதி விவேகானந்தன் தலித் பெண்கள் உள்பட ஒட்டுமொத்த பெண்களுக்கும் குரல் கொடுத்துள்ளார். முனிமாவின் பதில்களும் மெல்ல மெல்ல இலக்கியம் ஆகி வருகின்றன.

பொன். குமார், சேலம்.

எச். பீர் முகம்மது எழுதிய ‘நவீன இஸ்லாமும் ஒழுங்கும்’ கட்டுரை படித்தேன். புதிய விவாதங்களை எழுப்பியுள்ளார். நன்றி மகிழ்ச்சி.

அண்டை வீட்டுக்காரர் பசியோடிருக்க தாம் மட்டும் புசிப்பதை மதம் விரும்பவில்லை. தனக்கு விருப்பமானதையே பிறருக்கும் விரும்புமாறு மதம் விழைகிறது. மதம் சிவில் சமூகத்தை வடிவமைக்கிறது. பாதுகாக்கிறது. அங்கீகரிக்கிறது.

லிபரல் இஸ்லாம், கிளாசிக்கல் இஸ்லாம், பனெடிக் இஸ்லாம் (Fanatic) என்று தரம் பிரிப்பது அவரவர் அனுபவம், மனப் போக்கினையே பிரதிபலிக்கிறது. மனித நேயத்தையும், ஆதிக்க எதிர்ப்பையும் ஜாடை காட்ட வார்த்தை சொல்லாடல்கள் பயன்படாது. எதிர் விளைவு, இறுதி இலக்கு மட்டுமே சரியான அர்த்தப் பதிவுகளாகும்.

போதனை எதுவாகயிருந்தாலும் ஆதிக்க சக்திகளை வேரறுக்க வேண்டும். விலக்கி வைக்க வேண்டும். நிரந்தரமாக மனித பண்புகளை திணிக்க வேண்டும். இதற்குரிய வடிவினையே அரசமைப்பு என்றும் வாதிடலாம்.

“உலக விவகாரங்களில் அதிக அறிவுடையோராக” (நபியை விட) எனும் மேற்கோள் இந்திய அருண் ஷோரிக்களின் திரிபுவாத மேற்கோளாகும். பெரும்பாலும் தவறாக, குறுகிய நோக்கில் ஒருவரை இழிவு படுத்தும் வகையில் கையாளப்படுவதாகும்.

இஸ்லாமிய நாடுகளுக்கு ஜனநாயக அரசுகள் தேவை. மறுப்பதற்கில்லை. இதற்குரிய, இத்திசையில் பயணிக்க வேண்டிய அவசியங்களை ஃபாசிஸ்டுகள், உலக ரவுடிகள் முழங்கும்போது ஐயம் விரிகிறது.

பிறர் பொருளை, மண்ணை, வளத்தை, அரசை அடக்கி, அபகரிக்கச் செய்வதை வாழ்வின் லட்சியமாகவே கொண்டு செயல்படும் சர்வதேச ஆதிக்க சக்திகள் அவ்வப்பொழுது எழுப்பிவரும் ஜனநாயக முழக்கங்கள், இஸ்லாமிய நாடுகளை நெறிப்படுத்துவதற்குப் பதிலாக புதிய புதிய இறுக்கங்களையே தோற்றுவித்து விடுகின்றன.

பொருளாதாரத் தடை என்பதெல்லாம் நவீன காட்டுமிராண்டித்தன நடவடிக்கையாக கருதப்பட வேண்டும்.

சவூதி அரேபிய அரசு, முன்னுதாரண அரசு அல்ல. சிறப்பான அரசும் அல்ல. உலகின் மிகச் செழிப்பான அரசு. அவ்வளவுதான். வேறு முக்கியத்துவங்களை சவூதிக்கு வழங்க இயலாது.

அமெரிக்க எஜமான்களுக்கு இணங்கி செயல்படும் பினாமி, போலி இயக்கங்கள் உலகில் உண்டு. அதேபோல் சவூதி பெட்ரோடாலருக்கு ஏற்ப செயல்படும் போலி இயக்கங்களை எளிதில் அடையாளப் படுத்த இயலும். இவை வெகுஜன இயக்கங்கள் அல்ல. தகவல்மயம், உலகமயமாக்கல், நாகரீக உணர்வு மிகுந்த காலகட்டத்தில் இத்தகைய இயக்க நடவடிக்கைகளுக்கு ஆயுசு அற்பம். பூவுலகின் 650 கோடி மாந்தர்



படிப்பகம்

www.padippakam.com

களை நிரந்தரமாக கட்டுக்குள் இவர்களால் வைத்திருக்க முடியவே முடியாது.

ஜூன் மாதம் 28 மற்றும் 29 தேதிகளில் சென்னை பெரியமேட் ஹஜ் ஹவுஸ் வளாகத்தில் "ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை" சார்பில் மாநாடு நடைபெற்றது. தமிழகத்தின் இஸ்லாமிய அறிவுஜீவிகள், பிரச்சாரகர்கள், மத்ரசா பேராசிரியர்கள், மாணவர்கள் 5000 பேர் பங்கேற்றனர். இதில் துவக்கவுரையாற்றிய முஃப்தி சயீத் அஹமது கூறிய மேற்கோள், அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும், போலித்தனங்களுக்கும் விடையளிக்கவல்லது.

"குர்ஆன், நபி போதனை வெளிச்சத்தில் இஜ்மா, கியாஸ் உருவாக வேண்டும். இஜ்மா என்பது அறிவு ஜீவிகளின் கலந்தாய்வு, கியாஸ் என்பது கருத்துருவாக்கம்."

இன்னும் புரிந்துகொள்ள பெரியவர் கூறிய உவமானத்தை அப்படியே முன் வைக்கிறேன்.

"மூன்று தேக்சாக்கள் நம் முன் வைக்கப்பட்டுள்ளன. (தேக்சா - 15 படி அரிசி பிரியாணி சமைக்க பயன்படும் பெரிய பாத்திரம்) தேக்சாவில் உள்ள பதார்த்தங்களை - அரிசி, கொதிநீர், ஆட்டுக்கறி, மசாலா - நன்கு கிளற, கிண்ட, கலக்க நீண்ட கரண்டி தேவை." மூன்று தேக்சாக்கள் முறையே குர்ஆன், நபி போதனை, கலந்தாய்வு. அறுசுவை உணவினை நன்கு சூட்டில் கிளறி, வெளியே எடுத்து பரிமாற 5 அடி உயர கரண்டி உதாரணம் கியாஸ் 'கருத்துருவாக்கம்' என சுட்டிக் காட்டப்படுகிறது.

இஸ்லாத்தின் அடிப்படை நான்கு - அதாவது குர்ஆன், நபி போதனை, இஜ்மா, கியாஸ் என புரிதல் அவசியம்.

20 படி , 25 படி அரிசி பிரியாணி அடுப்பில் சரிசம அளவுக்கு கிளற வேண்டும். இல்லையேல் அரிசி நரகலாகிவிடும். பேதி அடிக்கும். கறி நன்கு வேக வைக்கப்பட வேண்டும். இஞ்சி, பூண்டு, தக்காளி, நெய், குங்குமப்பூ, உப்பு, மசாலா வேண்டிய அளவு கொதிநீர் இவையே சுவைமிக்க பிரியாணியின் காரணிகள். அதற்கு பயன்படும் கரண்டியை எல்லோராலும் நெருப்பு அடுப்பில் நின்று சுழற்ற முடியாது. கலை நுட்பம், அனுபவ நேர்த்தி, மிகுந்த திறன், நடப்பு அறிவுப் பூர்வ உதாரணம் இது.

எச். பீர் முகம்மது கட்டுரையின் ஊடே எழுப்பப்பட்டிருக்கும் அனைத்து வினாக்களுக்கும் விடை மிக எளிது. முஸ்லிம் சமூகத்தில் அப்பொழுது தோன்றும் பிரச்சினைகளுக்கு அறிவு ஜீவிகளின் கலந்தாய்வு மற்றும் புதிய கருத்துருவாக்கம் மிக முக்கியம். இந்த இரண்டு நடவடிக்கைகளும் குர்ஆன், நபி போதனையின் அடிப்படையில் அமைய வேண்டும். இதற்கு தயக்கம் தேவையில்லை.

பெட்ரோலிய வருமானம், சுரண்டல், சுழற்சி, ஆதிக்கம், அவசியம் குறித்து கட்டுரை மவுனம் சாதிக்கிறது. இன்றைய சர்வதேச முஸ்லிம் கொந்தளிப்பு கோளாறுகளை பெட்ரோலிய டாலருடன் இணைத் துப் பார்க்க வேண்டும். தீர்வு அப்போதுதான் சாத்திய மாகும்.

A.M. ரசூல் மொஹிதீன், சென்னை - 93.

'புதிய கோடாங்கி' ஜூலை இதழ் சிறந்த கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. திரு. மதிவாணன், திரு. அ. இராமசாமி அவர்களின் கட்டுரை கவனத்துகுரியன. ஒருவர் எந்த வர்க்கத்தில் அல்லது சமூகத்திலிருந்து வருகிறார் என்பது முக்கியமில்லை. எந்த வர்க்கம் அல்லது சமூகத்திற்காக குரல் கொடுக்கிறார் என்பது முக்கியம். அந்த வகையில் பெரியார் ஆகட்டும் அயோத்திதாச ராகட்டும் புறக்கணிக்கப்பட முடியாதவர்கள். தமிழகச் சூழலில் பெரியாரை மறுத்தும், நேச சக்திகளை புறக்கணித்தும் தலித் அரசியலை வளர்ப்பதும், வெற்றி பெறுவதும் சாத்தியமாகுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சங்கர மடத்தில் தலித் விடுதலையை தேடும் தலித் தலைவர்களையும் அமைப்புகளையும் நாம் எந்த வகையில் சேர்ப்பது. இதை அம்பேத்கரியத்தின் தோல்வி என்று கொள்ள முடியுமா? சுரண்டல் அமைப்பின் சுய நலவாதிகளின் போக்கு என புரிந்து கொள்ளலாமா? சிந்திப்போம். விவாதிப்போம்.

முனிமாவின் பதிலில் கூர்மையும் முதிர்ச்சியும் வெளிப்படுகின்றன. உடல்மொழி தொடர் புத்தகமாய் வரவேண்டும்.

சிந்தனை தளத்தை விரிவடையச் செய்யும் கட்டுரைகள் வெளியாகியுள்ள கவிதைகளும் நன்று.

- கார்க்கிராசன், சென்னை.

'புதிய கோடாங்கி' தொடர்ந்து வாசித்து வருகிறேன். இதழின் எல்லா ஆக்கங்களும் எளிமையும், ஆழமும் கொண்டு அறிவுஜீவித் தன அலட்டல்களின்றி, ஒடுக்கப்பட்ட அனைத்து மக்கள் மீதான உண்மை யான அக்கறையோடும், செயலூக்கத்தோடும் வருவதும், தங்களின் களப்பணிகளும் முன் மாதிரியாகக் கொள்ளத்தக்கன.

தலித் - பழங்குடிகள் - அரவாணிகள் முதல் மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. பாராட்டுக் கள்.

அரவாணிகளின் போராட்ட வாழ்வு படைப்பிலக்கியங்களில் சரிவர பதியப்படாதது குறித்த சிவகாமி அவர்களின் ஆதங்கம் உண்மையானது, நியாயமானது.

தினமணி கதிர் நடத்திய AIDS விழிப்புணர்வு சிறுகதைப் போட்டியில் நான் 'புதியவன்' என்ற பெயரில் எழுதியுள்ள 'கிருமி' என்ற சிறுகதை தேர்வாகியுள்ளது. ஜூலை 25, 2004 இதழில் வெளிவர உள்ள இச்சிறுகதை அரவாணிகளின் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதப்பட்டது. புதிய கோடாங்கியின் விமர்சனத்தை எதிர்பார்க்கிறேன்.

- R. உமாபதி, ஒசூர்.



படிப்பகம்

www.padippakam.com

# கெய்க்வாட் – கள்

கெய்க்வாட் என்ற பெயர் வட இந்தியாவில் மிகவும் பரவலாக வழங்கப்படும் பெயர். அம்பேத்கர் காலத்தில் வாழ்ந்த கெய்க்வாட், அம்பேத்கரின் நம்பிக்கைக்குரிய தளபதியாக இருந்தார் என நாம் அறிகிறோம். ஆனால் ஒரு தகவலைச் சொல்லும் போது கெய்க்வாட் என்று மட்டும் சொல்வதனால், கெய்க்வாட் என்ற மனிதரின் பேச்சில், செயல்பாட்டில் பல்வேறு முரண்கள் இருப்பதாக கோடாங்கி வாசகர் கள் நம்மிடம் நேரடியாக தெரிவிக்கின்றனர். அவர் களுக்கு நாம் சொல்வது இதுதான். கெய்க்வாட் என்ற பெயரில் ஐவர் அம்பேத்கர் காலத்தில் வாழ்ந்துள்ளனர். இவர்களின் தனித்தனி கருத்துக்களை போட்டு சிக்கிக் கொண்டு, ஒரே மனிதர் பல முரண்தரும் கருத்துக்களை கொண்டிருந்ததாக வாசகர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இந்த ஐந்து கெய்க்வாட்களையும் இனிஷியல் வாரியாகப் பிரித்து அவர்களைக் குறித்து சிறு விளக்கத் தையும் நாம் இங்கு தருகிறோம்.

கெய்க்வாட் **B.R.**

இவர் அம்பேத்கருடன் வாழ்ந்தவர். அம்பேத் கரின் நம்பகமான தளபதி. 1933-ஆம் ஆண்டு அம்பேத்கரின் பிறந்தநாள் விழாவை தலைமை யெடுத்து நாசிக்கில் விழா எடுத்தவர். இவரது முழுப் பெயர் பாபுராய் கெய்க்வாட். இவரை பாபுசாகேப் கெய்க்வாட் என்றும் அழைப்பதுண்டு. தாழ்த்தப்பட்ட மக்களின் உட்பிரிவுகளில் ஒன்றான MANG (மாங்) சமூக மக்களை அம்பேத்கர் தலைமையில் இணைந்து போராட பெரும் முயற்சி எடுத்து வெற்றி கொண்டவர். சார்பற்ற தொழிலாளர் கட்சி (Independent Labour Party)-யில் ஆக்கபூர்வமாக பணியாற்றியவர். பம்பாய் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவர். வாடன்தார் நிலப் பிரச்சினையில் தீர்விற்கு முக்கியப் பங்காற்றியவர். 1941-ஆம் ஆண்டு அம்பேத்கருக்கு வைசிராய் கவுன்சில் உறுப்பினர் பதவி தரப்படாதபோது, அதைக் கண் டித்து நாசிக் முழுவதும் கண்டனக் கூட்டங்கள், போராட்டங்கள் முன்னெடுத்தவர்.

1. இந்திய சட்ட வரைக்குழுவிற்கு அம்பேத்கரை நியமிப்பது.
2. இந்து மசோதாவை ஆதரிப்பது
3. பந்தர்பூர் இந்து சநாதனவாதி ஜெரி சாஸ்திரி அம்பேத்கரை விமர்சித்ததை கண்டிப்பது
4. கிராம பணியாளர்கள், சம்பள படிகள் படி ஊதியம் பெறத் தகுதியானவர்கள்

ஆகிய நான்கு கோரிக்கைகளுக்காக மாநாடுகளை நடத்தியவர்.

Scheduled Caste Federation நிலப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர். அப்பொழுது அவர் MLA-ஆக இருந்தார். (1954) என்பது குறிப்பிடத்தக்கது. அம்பேத்கர் மறைந்தபோது அவரின் இறுதிச் சடங்கின் ஒரு நிகழ்வாக, வந்திருந்தவர்களுக்கு பவுத்த தீட்சை எடுக்கும்படி கூறி அதை தானும் ஏற்றவர். ஆனந்த கௌசல்யன் என்ற பிக்குவின் தலைமையில் அம்பேத் கருக்கு டிசம்பர் 9, 1956-இல் பரிநிப்பான அஞ்சலி செய்தவர். இதில் இரண்டு லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். அம்பேத்கரின் தத்துவங்கள் மட்டுமே மக்களை உண்மையான மகிழ்ச்சி நிறைந்த விடுதலை வாழ்வை அளிக்கும் என்பதில் தளராத நம்பிக்கை கொண்டவர். இவர் மக்களாலும் அம்பேத்கராலும் தாதா சாகேப் கெய்க்வாட் என்று அன்புடன் அழைக் கப்பட்டார்.

கெய்க்வாட் **RS**

இவர் 1920-களில் பகிஷ்கிரத் கிதகரனி சபையை நிர்மானித்து நடத்திவந்தார். இந்த சபையில் அம்பேத் கர் உறுப்பினராகச் சேர்ந்தார். இந்த கெய்க்வாட்டின் முழுப்பெயர் ராம்ஜி சக்காராம் கெய்க்வாட் ஆகும். இவரின் பணி 1920 உடன் முடிவடைகிறது.

கெய்க்வாட் **SB**

இவர் 1941-இல் பம்பாய் பல்கலைக்கழக மாணவர். அம்பேத்கர் பொன்விழாக் கூட்டங்களில் கலந்து கொண்டு செயல்பட விரும்பியவர். அம்பேத்கர் பொன்விழாக் கூட்டங்களில் கலந்துகொண்டு சொற் பொழிவாற்றியவர். 1942-ஆம் ஆண்டுவரை அம்பேத் கருடன் இவர் தொடர்பில் இருந்தவர். இவர் அம்பேத் கருடன் பழகிய நாட்கள் இரண்டு ஆண்டுகள் மட்டுமே.

கெய்க்வாட் **SR**

அம்பேத்கர் பிறந்தநாள் விழா(1941) இல் நடை பெற்ற இரண்டு மைல் தூர பேரணியில் கலந்து கொண்டு பேசியவர். இவர் ஒரு நிகழ்விற்குப் பிறகு அம்பேத்கருடன் எவ்வித தொடர்பும் கொண்டிருக்க வில்லை.

கெய்க்வாட் **ST**

தாட்வாதி, மஜ்கவுன் ஆகிய இடங்களில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களின் அமைப்பான "சோம்வம்சிய ஹிதகரக சமாஜ்" சார்பில் கலந்துகொண்டு அம்பேத் கரை வாழ்த்திப் பேசியவர். (1938). இவரின் முழுப் பெயர் சம்பாஜி துக்காராம் ஆகும். இவர் அம்பேத் கருடன் 1938-ஆம் ஆண்டுவரை தொடர்பில் இருந்தவர்.

Published, Printed and owned by Audrey Jannet Joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41
. Printed at Sri Lakshmi Printers, 20 , Big Street, Anakaputhur, - 600 070. Editor : AUDREY JANNET JOSEPJH

படிப்பகம்

www.padippakam.com





அயோடின் கலந்த

அரசு உப்பு

IODISED

ARASU SALT

அயோடின் கலந்த உப்பு!
அறிவுத் திறனை வளர்க்கும் உப்பு!

- முன் கழுத்துக் கழலையிலிருந்து காக்கவும்!
- கருச்சிதைவைத் தடுக்கவும்!
- கருவிலுள்ள சிசுவின் மூளை வளர்ச்சிக்கும்!
- குழந்தைகளின் அறிவுதிறனை வளர்க்கவும்!
- உடல் மற்றும் மனவளர்ச்சிக்கும் உதவும்!
- அயோடின் கலந்த உப்பை உபயோகிப்பீர்!




தயாரிப்பாளர்

தமிழ்நாடு உப்பு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

எல்.எல்.ஏ. கட்டிடம், 735, அண்ணாசாலை, சென்னை - 600 002.

தீண்டாமை ஒழிக! மத ஒற்றுமை ஓங்குக!


Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்